
9வது வார்டு
கோட்டயம் புஷ்பநாத்
தமிழில் : சிவன்

# முன்னுரை

கோட்டயம் புஷ்பநாத்தின் மற்றுமொரு நாவல். ஹாரர் எனப்படும் பயங்கரம் மற்றும் மாந்திரீகம் கலந்த சமூக நாவல்.

இந்தியாவில் மிக அதிகமாக விற்பனையாகும் 'மலையாள மனோரமா' பத்திரிகையில் 1990-ஆம் ஆண்டு வெளியான நாவல் இது. 'பிரசவ வார்டு' என்ற பெயரில் இருபத்தைந்து வாரங்கள் வெளிவந்த தொடர்.

ஏறத்தாழ தொண்ணூறு தொடர்களுக்கு மேல் மலையாளப் பத்திரிகைகளில் எழுதியிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத். நிச்சயமாக இது ஒரு சாதனைதான்! தமிழிலும் இவரது இருபதுக்கும் மேற்பட்ட தொடர்கள் இதுவரை மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன.

தொடர்கதை எழுதும் கதாசிரியர்களில் கோட்டயம் புஷ்பநாத் அவர்களுக்குத் தனி இடம் உண்டு. மனத்தில் திட்டமிட்டுள்ள ஒரு கதையை, வாராவாரம் ஒவ்வொரு பகுதியாக சுவாரஸ்யமாகவும், திருப்பங்களுடனும், விறுவிறுப்பாகவும் எழுதுவதில் தேர்ந்தவர் அவர். கடந்த நாற்பது ஆண்டுகளாக, மலையாளத்தின் ஜனரஞ்சகமான எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்க இடம் பெற்றிருப்பவர். கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழ்ப் பத்திரிகைகளுக்காகவே தொடர்கதைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்.

தொடராக வெளிவராமல் நேரடியாகப் புத்தகமான இவரது நாவல்கள் சுமார் பதினைந்து. எனக்குத்

தெரிந்து கடந்த பத்து ஆண்டுகளில் இந்த அளவுக்கு அதிகமான புத்தகங்கள் வெளியான பிறமொழி எழுத்தாளர்கள் வேறெவரும் இல்லை!

சுவாரஸ்யமான ஒரு திகில் நாவலுக்குத் தேவையான எல்லா அம்சங்களும் நிறைந்த நாவல் இந்த 'ஒன்பதாவது வார்டு.'

இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்க அனுமதி அளித்த ஆசிரியர் கோட்டயம் புஷ்பநாத், வெளியிடும் திருமகள் நிலையம், வாங்கி ஆதரிக்கும் வாசகப் பெருமக்கள் ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகிறது.

சென்னை-78. தோழமையுடன்
தொலைபேசி: 24837681 **சிவன்**

# ஒன்பதாவது வார்டு

## 1

டாக்டர் மெர்ஸி ஜார்ஜ், போலீஸ் சர்ஜன் டாக்டர் ராமச்சந்திரனுடன் பேசிக் கொண்டிருந்த போதுதான் தொலை பேசியில் அந்தத் தகவல் வந்தது.

"அங்கு வரும் கேஸை உடனடியாக அட்டெண்ட் செய்து, முடிந்த விரைவில் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டைக் கொடுத்து அனுப்பவும்!" -க்ரைம் பிராஞ்ச் டி.ஐ.ஜி.-யின் உத்தரவு.

இரவு நேரம். எட்டு மணியாவதற்குப் பத்து நிமிடங்கள் இருந்தன.

"ச்சே... எனக்கு இன்னிக்கு ஏற்கெனவே ஒரு எங்கேஜ் மெண்ட் இருக்கிறது!" டாக்டர் ராமச்சந்திரன் முணுமுணுத் தார்.

டாக்டர் மெர்ஸி ஜார்ஜுக்கு இன்றுடன் இருபத்தொன்று வயது முழுமையடைகிறது. அழகி. நல்ல நிறம். தசைப் பிடிப்பான உடல். சுருளாத தலைமுடியைப் பின்புறத்தில் ஒரு கிரீடம் மாதிரிக் கட்டி வைத்திருந்தாள். கவர்ச்சிகரமான கண்கள்.

எப்படிப்பட்டவரையும் சட்டென்று வசீகரிக்கும் உடல் வாகு.

பள்ளி- கல்லூரி நாள்களிலேயே பலரது கனவுக் கன்னி யாகவும் மானசீகக் காதலியாகவும் விளங்கியவள். எவருக் கும் கட்டுப்படாத இயல்பு. அதனாலேயே இந்த விநாடி வரையில் திருமணத்தைப் பற்றி யோசிக்காமல் இருந்தாள்.

மெர்ஸியின் அப்பா, டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சர்ஜரி பிரிவின் சீஃபாக இருந்தார்.

அவரின் நான்கு பையன்களில் இரண்டு பேர் டாக்டர்கள், ஒருவர் இன்ஜினீயர், கடைக்குட்டி- லெக்சரர்.

அவர் மனைவியும் பட்டதாரிதான். புகழ்பெற்ற- பணக் காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் நான்ஸி ஜார்ஜ்.

"என்ன கேஸ் அது?" -டாக்டர் மெர்ஸி ஜார்ஜ், தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தவாறே, டாக்டர் ராமச்சந்திரனிடம் கேட்டாள்.

"வேற வேலையே இல்லாம ஊர்க்காரங்க திரும்பக் கிளறி யிருக்குற கேஸ். கல்லறையைத் தோண்டி எடுத்து வந்திருக் காங்க. எந்த நிலைமையில இருக்கோ... கடவுளுக்குத்தான் தெரியும்." சற்று நேர யோசனைக்குப் பிறகு அவரே தொடர்ந் தார்: "அசிஸ்டெண்ட்ஸ் யாரும் இல்லை. இஃப் யூ டோன்ட் மைன்ட்... கொஞ்சம் ஹெல்ப் பண்ணினீங்கன்னா, சீக்கிரமா முடிஞ்சுடும்."

"கண்டிப்பா உதவுறேன்!" -டாக்டர் மெர்ஸி மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டாள்.

போஸ்ட்மார்ட்டம் அறையின் வெளியே போலீஸ் அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் முகத்தில் ஏதோ ஒருவித ஆவலும் பரபரப்பும் தென்பட்டன.



அறையின் வெளித் தாழ்ப்பாளைத் தள்ளித் திறந்து கொண்டு ராமச்சந்திரன் உட்புறம் நுழைந்தார். மெர்ஸியும் அவரைப் பின்தொடர்ந்தாள்.

பளபளப்பான மேற்பரப்பின் மீது கிடத்தப்பட்டிருந்த உடல், ஆடைகளைப் பிடிவாதமாகத் தவிர்த்திருந்தது. மல் லாந்தபடி கிடந்த அந்த உடலில் சட்டென்று எந்த விதமான பிரத்தியேகத் தன்மையும் தட்டுப்படவில்லை. இயல்பாகவே ஓரளவு சிதைந்திருக்க வேண்டியதுகூட நிகழ்ந்திருக்க வில்லை. அது ஓர் இளம்பெண்ணின் அழகான கட்டுட லாகவே இருந்தது

கூறு போட வேண்டிய கருவிகளுடன் அட்டெண்டர்கள், தள்ளாட்டமின்றி நின்று கொண்டிருந்தனர்.

"மெர்ஸி நோட் பண்ணிக்கிறீங்களா?" என்று கேட்ட ராமச் சந்திரன் அந்த உயிரற்ற உடலை மிக நெருங்கி மேலிருந்து கீழ் வரை ஒரு தடவை பார்த்தார்.

"கண்ணிமைகளில் எந்த ஒரு சிதைவும் இல்லை... ஆச்சரி யம்தான்!" ராமச்சந்திரன் சற்றுச் சந்தேகத்துடன் இழுத்தபோது மெர்ஸி அந்த முகத்தை ஒரு தடவை பார்த்தாள்.

அவளுக்கும் ஏதோ சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும். மறுபடி பார்த்தாள்.

'என்ன!' இடது கையைத் தன் நெற்றியில் அழுத்திப் பதித்தாள். தலை சுற்றுவது போல் தோன்றியது அவளுக்கு.

உயிரற்ற அந்த உடல் தன்னை வெறித்துப் பார்க்கிறது!

"மெர்ஸி... மெர்ஸி..." டாக்டர் மெர்ஸி முணு முணுத்த வாறே தரையில் விழுந்து விடாதிருக்க மிகவும் சிரமப் பட்டாள். ஒரு வழியாகத் தன் கையிலிருந்த ஸ்கிரிப்பிலிங் பேடை அட்டெண்டர் ஒருவரின் கையில் திணித்துவிட்டு, கதவைத் திறந்து கொண்டு அங்கிருந்து பாய்ந்தாள்.

அவள் ஓடினாள் என்பதுதான் சரி. ஒய்வெடுக்கும் அறைக்கு வந்த பிறகுதான் அவள் சரியாக மூச்சு விடத் தொடங்கினாள்.

தான் கண்ட காட்சியை அவளால் நம்ப முடியவில்லை! யாரால்தான் இதை நம்ப முடியும்?

சரியாகப் பத்து வருடங்களுக்கு முன்னால் இறந்து போன மெர்ஸி ஜானின் உடம்புதானா அது!

அவள் இறந்து போனவள் கூட அல்ல.

கொலை செய்யப்பட்டவள்!

அவளைக் கொன்றது யார்?

எதற்காகக் கொல்லப்பட்டாள்?

இந்தக் கேள்விகளுக்கான பதில் டாக்டர் மெர்ஸி ஜார்ஜுக் குத் தெரியும். முழுசாகவே தெரியும்!

தனக்காகத்தான், தன் சிநேகிதியான மெர்ஸி ஜான் கொடூர மாகக் கொல்லப்பட்டாள். அவளைச் சீரழித்துக் கொலை செய்த பிறகு தூக்கு மாட்டிக் கொண்டது போல் கட்டித் தொங்க விட்டனர்.

கடந்த கால சம்பவங்கள் திரையில் பதிந்து மறையும் சினிமா மாதிரி டாக்டர் மெர்ஸி ஜார்ஜின் மனத்தில் உயிர் பெற்றன.

முதல் வகுப்பிலிருந்தே பள்ளித் தோழிகள் மெர்ஸி ஜார்ஜும், மெர்ஸி ஜானும். படிப்பில் முதல் ராங்க் மெர்ஸி ஜானுக்குத்தான். மெர்ஸி ஜார்ஜ் அந்த அளவுக்கு இல்லை.

ஃபர்ஸ்ட் ராங்க்கில் மெர்ஸி ஜான் பத்தாம் வகுப்பில் தேறியபோது, இப்போதைய டாக்டர் ஒருவிதமாக அந்தக் கண்டத்திலிருந்து தப்பித்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். மெர்ஸி ஜான் மெரிட்டில் செகண்ட் குரூப்பில் இடம்



பிடித்தாள். டாக்டரான ஜார்ஜின் கடுமையான பின்பலத்தில் மெர்ஸி ஜார்ஜ் அதே குரூப்பில் தொற்றிக் கொண்டாள்.

மகளையும் எப்படியாவது ஒரு டாக்டர் ஆக்குவது என்பதுதான் ஜார்ஜ் செபாஸ்டியனின் லட்சியம். ஆனால், அவள் பிளஸ் டூவைத் தாண்டியதே 'உன்னைப்பிடி... என்னைப் பிடி' என்றுதான். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மெர்ஸி ஜான் அப்போதும் முதல் வகுப்பில் தேறினாள்.

பி.எஸ்ஸி.யின் போதும், மானேஜ்மெண்ட் கோட்டாவில் ஜுவாலஜி மெயின் வாங்கிக் கொடுத்தார். ஆனால், அங்கும் மாதா கோயிலில் மணியடிக்கும் ஜானின் மகள் மெர்ஸி சுலபமாக நுழைந்தாள்.

அதன் பின்னர் முதல் வருடம், இரண்டாம் வருடம், மூன்றாம் வருடத்திலும் எந்த வித மாற்றமும் இன்றி நிலைமை அப்படியே தொடர்ந்தது.

ஃபைனலும் முடிந்தது.

டாக்டர் ஜார்ஜும் அவரது குடும்பத்தினரும் மகளுக்காகக் கவலைப்பட்டனர்.

அவரது வீட்டுப் பிள்ளைகள் எல்லோருமே படிப்பில் பிலோ ஆவரேஜ்தான். டாக்டரின் பல 'பலங்கள்' பின்னணியில் இருந்ததால் 'டாக்டர்', 'இன்ஜினீயர்' பட்டங்களைப் பெற முடிந்தது. பிற்பாடு அவையெல்லாம் வெவ்வேறு பிரச்சினைகளாக வடிவெடுத்தாலும், டாக்டரின் கெட்டிக்காரத்தனத்தில் அவை எல்லாமே அடங்கிப் போயின.

அதனாலேயே மகளது கல்வியில் சிக்கிக் கொள்ளாத அளவுக்கு எதையாவது செய்து எதிர்காலத்தைப் பத்திரப் படுத்த விழைந்தார்.

அதற்காக அவர் முதலில் அணுகியது காலேஜ் கிளார்க்கிடம்தான். இளைஞனான விஜயனும் தனக்குத் தெரிந்த ஒரு திட்டத்தை அவர் முன் கடை பரப்பினான்.

"வேற ஒண்ணுமே பண்றதுக்கு இல்லை. நீங்க கெட்டிக் காரர்தான்னு, நிரூபிக்கணும். அதுக்கு ஒரே வழிதான். ரெண்டு பேர்ல ஒருத்தர் இல்லாமப் போகணும்!"

"அது எப்படி?" ஜார்ஜ் செபாஸ்டியன் கேட்டார்.

அவரை அருகில் அழைத்த விஜயன் மெதுவான குரலில் என்னென்னவோ கூறினான். மார்க் லிஸ்ட்- சர்ட்டிஃபிகேட்- சிண்டிகேட் உறுப்பினர் என்பது போன்ற வார்த்தைகள் நடு நடுவே கேட்டன.

டாக்டர், அந்தத் தகவலைத் தனது வீட்டாரிடம் கூறினார்.

மூத்த மகன் டோமியும், ஷிபுவும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இருவருமே மருத்துவக் கல்லூரி மாணவர்கள். ராகிங் செய்த குற்றத்துக்காக இரண்டு முறை சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்களும் கூட.

"அப்பா, ரெண்டு மூணு நோட்டுக்கட்டை இப்படித் தள்ளுங்க... மத்ததை நாங்க பாத்துக்கறோம்." டோமி உறுதி யளித்தான்.

கட்டு என்று அவன் குறிப்பிட்டது நூறு ரூபாய் நோட்டுக் கற்றையை. அவர்கள் கேட்டுக் கொண்டபடியே எடுத்துக் கொடுத்தார்.

மகன்கள் இருவரும் விஜயனுடன் திருவனந்தபுரத்துக்குப் போனார்கள்.

சிண்டிகேட் உறுப்பினரான மிஸ்டர் நாயரைச் சந்தித் தார்கள். நோட்டுக் கற்றை ஒன்று இடம் மாறியது.

அவர் அடுத்த கட்டத்துக்கு வழி காட்டித் தந்தார்.

தொலைபேசியை நெருங்கியவர், யார் யாரையோ தொடர்பு கொண்டு கட்டளைகள் வழங்கினார்.



சரியாக இரண்டு நாள்களுக்குள் எல்லாம் சரியாகி விட்டன. மெர்ஸி ஜான், மெர்ஸி ஜார்ஜாக எழுத்துகளில் மாறினாள்.

திரும்பி வரும்போது ஷிபு, விஜயனிடம் சொன்னான்: "இப்ப துருப்புச் சீட்டு உங்க கையிலதான் இருக்கு!"

"மெர்ஸி ஜான் உயிரோடு இருந்தால் கண்டிப்பாக புகார் எழும்பும். அதைத் தடுக்க வேண்டியது உங்க பொறுப்பு விஜயன்!" -ஷிபு நினைவூட்டினான்.

"அடுத்த வாரம் மார்க் லிஸ்ட்டும், சர்ட்டிஃபிகேட்டும் வரும்னு சொல்லியிருக்காரே. அதுக்கு முன்னால ஒரு லீவு நாள்ல அந்தப் பொண்ணை காலேஜுக்கு வரவழைச்சா நல்லது." டோமி தனது நோக்கத்தைக் கோடி காட்டினான்.

வரும் சனிக்கிழமையன்று நாளும் குறிக்கப்பட்டது.

சர்ட்டிஃபிகேட் மற்றும் மார்க்ஷீட்டை வந்து வாங்கிச் செல்லுமாறு மெர்ஸி ஜானுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

அவள் கல்லூரிக்கு குறிப்பிட்ட நாளன்று வரவும் செய் தாள். அது ஒரு இரண்டாம் சனிக்கிழமையும் கூட.

அந்தப் பகுதியிலேயே ஆள் நடமாட்டம் இல்லாதிருந்தது.

"வந்துட்டீங்களா... நல்ல வேலை செஞ்சீங்க. சொன்னபடி எல்லாத்தையும் கொண்டு வந்திருக்கீங்க இல்லையா?" -விஜயன் கேட்டான்.

"கொண்டு வந்திருக்கேன்!" -என்றபடி மேஜை மீது அவற்றையெல்லாம் எடுத்து வைத்தாள் மெர்ஸி ஜான்.

"இங்கேயே ஒரு நல்ல வேலை இருக்கு. அதை உங்க ளுக்கே கிடைக்க ஏற்பாடு செய்யலாம்னுதான். முயற்சி பண்றேன்" விஜயன் அவற்றை எடுத்துக் கொண்டு மற்றோர் அறைக்குள் நுழைந்தான்.

சற்று நேரம் கழித்து அந்த அறையில் இருந்து விஜயனின் குரல் கேட்டதும், "இந்தாம்மா உங்களோட சர்ட்டிஃபி கேட்ஸ்...."

மெர்ஸி ஜான் ரெக்கார்டு அறைக்குள் நுழைந்தாள்.

அங்கு விஸ்கி பாட்டில் மற்றும் கண்ணாடி தம்ளர்களுடன் டோமியும், ஷிபுவும் இருந்தனர்.

"யாரு மெர்ஸியா இது! நீ படிப்புல புலின்னு எல்லாரும் சொல்றாங்களே... எங்கே அது உண்மையான்னு பார்த்துட லாம்!" டோமி சட்டென்று பாய்ந்து வந்தான்.

"நீ அதையெல்லாம் பரிசோதனை பண்ணிட்டிரு. நான் அந்தப் பக்கமா உட்கார்ந்திருக்கேன்." ஷிபு, ஒரு காரணத்தை ஏற்படுத்திக் கொண்டு அங்கிருந்து நழுவினான்.

அத்துடன் அந்த அறையின் கதவு வெளிப்புறமாக இழுத்து மூடப்பட்டது. தாழ்ப்பாள் போடும் சத்தமும் கேட்டது.

"உன் கெட்டிக்காரத்தனத்தை நானும்தான் பார்க்கிறேனே!" டோமி அவளை நெருங்கி, தோள் பகுதியில் இருந்த அவளது புடவையை இழுத்தான்.

தப்பிக்க முயன்று திமிறி விலகியவளை விஜயன் தன் முரட்டுக் கரங்களால் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான். அவள் அவன் கைப்பகுதியைக் கடித்தாலும் அவன் பிடியைத் தளர விடவில்லை.

ஒரு கையால் அவள் தலையைப் பின்புறமாகச் சற்றுச் சரித்த டோமி, அவள் வாய்க்குள் விஸ்கி பாட்டிலைத் திணித்து நிமிர்த்த முற்பட்டான். பாட்டிலில் இருந்த திரவம் சரசரவென அவள் தொண்டைக்குள் இறங்கியது.

ஒரு சில நிமிடங்களுக்குள் அவள் தன்னிலை இழந்து தடுமாறத் தொடங்கினாள்.



அதன் பிறகு மூன்று மனித மிருகங்களும் இணைந்து அவளைச் சின்னாபின்னப்படுத்தின. கல்லில் துவைத்தெடுத்த பூங்கொத்து போலானாள் அவள்.

மாலை நேரத்துக்குள் அவளது கடைசி மூச்சும் பிரிந்து போனது.

அன்றிரவு அவளது வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள மாமரக் கிளையிலேயே அவள் கட்டித் தொங்க விடப்பட்டாள்.

டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனின் செல்வாக்கு அதை ஒரு தற்கொலையாக மாற்றியது. அன்றைக்கும் போலீஸ் துறையின் சர்ஜனாக இருந்தவர் இதே ராமச்சந்திரன்தான். அவர்தான் மெர்ஸி ஜானின் உடலையும் போஸ்ட் மார்ட்டம் செய்தவர்.

புடவையைக் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு இறந்த தாக ரிப்போர்ட்டும் வழங்கியிருந்தார்.

ஏறத்தாழ இருபதாயிரம் ரூபாய்க்குள், அந்தக் கொலை ஒரு தற்கொலையாக மாறியது.

நடந்த ஒவ்வொரு சம்பவமும் மெர்ஸி ஜார்ஜுக்கு முழுமையாகத் தெரியும்.

"டாக்டர் மெர்ஸி ஜார்ஜ்!" குரலைக் கேட்ட அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

அவளுக்கு முன்பாக டாக்டர் ராமச்சந்திரன் நின்று கொண் டிருந்தார். அவர் கையில் இருந்த குறிப்புப் புத்தகம் நடுங்கு வதாக அவளுக்குத் தோன்றியது.

"என்ன டாக்டர்?" அவள் கேட்டாள்.

"பிணம் மாறிப் போயிருச்சுன்னு தோணுது... அதனால என்ன பண்ணணுமோ அதைப் பண்ணிட்டேன்!" ராமச்சந் திரன் பதற்றத்துடன் பேசினார்.

“நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியவில்லை. என்ன நடந்தது?” மெர்ஸி ஜார்ஜ் கேட்டவாறே உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முயன்றாள். ஆனால், முடியவில்லை.

“இது பத்து வருஷத்துக்கு முன்னால நான் போஸ்ட் மார்ட்டம் செஞ்ச அதே பெண்ணோட உடம்புதான். ஆளுங்க பிரச்சினை பண்ணி தோண்டியெடுக்கச் சொன்னது இவளோட கல்லறைக்குப் பக்கத்துல இருக்கிற பிணமா இருக்கலாம். ஒரு பெண் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டாள் அல்லது விஷம் கொடுத்துக் கொலை செய்யப்பட்டாள்ங்கிறது கேஸ். அந்த உடலை மறுபடி போஸ்ட்மார்ட்டம் செய்ய வேண்டும் என்பதுதான் உத்தரவு. ஆனால், பிணத்தை எடுத்தவர்கள் கல்லறை மாறி, பத்து வருடங்களுக்கு முன்னால் புதைக்கப்பட்ட உடம்பை எடுத்திருக்கலாம். அது எப்படி இருந்தாலும் பத்து வருடங்கள் கடந்த பிறகும் அந்த உடல் கொஞ்சம் கூட சிதையாமல் இருப்பது ஆச்சரியம்தான்!” ராமச்சந்திரன் வியப்புடன் பேசினார்.

“நீங்க சொல்றது உண்மைதானா?” மெர்ஸி ஜார்ஜ் கனவில் பேசுவது மாதிரி கேட்டாள்.

“சந்தேகமே இல்லை. இவள் உங்க பிரச்சினையில சம்பந்தப்பட்ட பெண்ணேதான்! வயிற்றுப் பகுதியில நான் அன்னிக்குப் போட்ட தையல்கூட அப்படியே இருக்கு. அன்னிக்கு உறைஞ்சு போன ரத்தம் கூட அப்படியே ஒட்டிட்டு இருக்கு. என்ன ஒரு பயங்கரம்! ஹாரிபிள்...” ராமச்சந்திரன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைக்க முயன்றும் முடியவில்லை. கைகள் நடுங்கின.

“கூடவே புத்திசாலித்தனமான ஒரு வேலையும் செய்திருக்கேன். இனிமேல் அந்த முகத்தை யாரும் அடையாளம் கண்டு பிடிக்க முடியாது” -முகத்தில் வடிந்த வியர்வையை கர்ச்சீப் பால் ஒற்றியபடி கூறினார்.



அப்போது தொலைபேசி மணியடித்தது.

இருவருமே சற்று நேரம் அமைதியாக இருந்தனர்.

மணியடித்துக் கொண்டே இருந்தது.

ராமச்சந்திரன் ரிசீவரை எடுத்தார்.

ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு அவர் ரிசீவரை, கிராடிலில் வைத்தார்.

“ஏற்கெனவே எனக்கு ஒரு எங்கேஜ்மெண்ட் இருக்கிறதா சொன்னேன் இல்லையா! மணி ஒன்பதாயிடுச்சு. அவங்க காத்திருப்பாங்க... நான் கிளம்பட்டுமா?” என்றவர் மறு பிரேதப் பரிசோதனை அறிக்கையை அவசர அவசரமாக முடித்து, கவருக்குள் போட்டு, சீல் வைத்து விலாசம் எழுதினார்.

சொல்லியனுப்பியது போல் சரியாக அந்த நேரம் பார்த்து இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார்.

“இந்தாங்க ரிப்போர்ட்!”

“மெர்ஸி... இப்ப நீங்க கிளம்பப் போறதில்லையே... அப்ப நான் வர்றேன்” அதன் பிறகு ராமச்சந்திரன் அங்கு காத்திருக்கவில்லை.

மெர்ஸி ஜார்ஜ் அந்த இடத்தை விட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

மறுபடி தொலைபேசி கிர்ர்ரியது.

டியூட்டி நேரம் முடிந்தும் காணாததால் வீட்டிலிருந்து அம்மாதான் பேசினாள்.

“இதோ கிளம்பிட்டிருக்கேன்மா!” என்றவள் வெளியே வந்து காரில் ஏறி ஸ்டார்ட் செய்தாள்.

மேம்பாலத்தைக் கடந்து இடது புறமாகத் திருப்ப மறந்து போனாள். பிறகு ஞாபகம் வந்தும் திருப்பவில்லை. மேட்டைக் கடந்து ஜங்க்ஷனை அடைந்தாள்.

நகரின் அகலமான சாலை வழியாகக் கிழக்குத் திசையில் கார் விரைந்தது.

நகரின் கிழக்குப் பகுதியில் இருந்தது வீடு.

மனம் முழுக்க போஸ்ட்மார்ட்டம் டேபிளில் பார்த்த உரு வத்திலேயே பதிந்திருந்தது. போதாக்குறைக்கு ராமச்சந்திரன் வேறு ஏகத்துக்கும் விசிறிவிட்டுப் போயிருந்தார்.

இடதுபுறமிருந்த பெட்ரோல் பங்கைத் தாண்டியதும் ஒரு பெண் கைகாட்டி லிஃப்ட் கேட்டாள்.

அவளையும் மீறி, கால்கள் பிரேக்கை அழுத்தின. விசை யுடன் சட்டென்று கார் நின்றதும், அந்தப் பெண் கதவைத் திறந்து கொண்டு காருக்குள் அமர்ந்ததும் கம்ப்யூட்டர் புரோ கிராம் போல் துல்லியமாக நிகழ்ந்தது.

மெர்ஸி ஜார்ஜ் தலையை இடதுபுறமாகத் திருப்பிப் பார்த்தாள்.

திடுக்கிட்டாள்!

போஸ்ட்மார்ட்டம் டேபிளில் படுத்துக் கிடந்த மெர்ஸி ஜான் காருக்குள் அமர்ந்திருந்தாள்!

## 2

முதலில் மோசமான ஒரு கனவு என்றுதான் டாக்டர் மெர்ஸி நினைத்தாள். டாக்டர் ராமச்சந்திரன் சொன்ன தெல்லாம் நம்ப முடியாத ஒன்றாகத்தான் இருந்தது.

ஒருவேளை, அதெல்லாம் உண்மையாகவே இருந்தால் நான் என்ன?



ஒரு சில மனித உடம்புகள் அழுகிப் போகாமல் இருக்கும் என்று அவளும் கேள்விப்பட்டிருந்தாள். ஒரு டாக்டராக இருந்து அதையெல்லாம் நம்ப முயன்றதில்லை.

ஆனால், தான் ஒதுக்கித் தவிர்த்த விஷயம் இப்போது உடல் மற்றும் உயிருடன் அருகில் வந்து உட்கார்ந்திருக் கிறது!

டாக்டர் மெர்ஸியின் கைகள் தானாகவே நடுங்கத் தொடங் கின. ஸ்டீயரிங் அவளது கட்டுப்பாட்டிலிருந்து முற்றிலும் விலகி விட்டதாகவே தோன்றியது.

"பயப்பட வேண்டாம்... வண்டிக்கு எதுவும் ஆகாது! நான் பார்த்துக்கிறேன். எங்களுக்கென்று ஒரு சில சக்திகள் இருக்கு" பக்கத்தில் அமர்ந்திருக்கும் பிணம் (?) பேசியது.

உடம்பிலிருந்த ஒட்டுமொத்த ரத்தமும் அப்படியே உறைவது போல் டாக்டருக்குத் தோன்றியது.

"நீயும் உன்னோட ஆளுங்களும் இதெல்லாம் ரொம்பச் சுலபமா முடிஞ்சுடும்னு நெனைச்சுட்டீங்க இல்லையா... ஆனா, என்னிக்காவது ஒரு நாள் கல்லறையைத் திறப்பாங் கன்னு நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். கல்லறையை மாத்தித் தோண்டினதும் நல்லதாப் போச்சு... ஹ... ஹ... ஹா..."

எலும்புகளை ஊடுருவும் ஒரு சிரிப்புச் சத்தம் உயர்ந்தது.

"என்னை நல்லாப் பார். இப்ப என்னை முழுசாப் பார்க்க லையே" -இடது புறத்திலிருந்து நீண்டு வந்த கை டாக்டர் மெர்ஸியின் தோளில் பதிந்தது.

நத்தையின் சில்லிப்புள்ள ஒரு கை!

டாக்டர் சட்டென்று திரும்பினாள்.

அவள் உடல் மொத்தமும் இப்போது நடுங்கத் தொடங் கியது.

பக்கத்தில் உட்கார்ந்திருந்தவளின் இரு கடைவாய்ப் பகுதிகளிலும் வளைந்த கூர்மையான பற்கள்.

ரத்தம் போல் சிவந்த உதடுகள்.

அவை சிரித்துக் கொண்டிருந்தன.

"ஹஹ்ஹா... ஹஹ்ஹா..."

"......"

"நான் இனிமேல் எங்கேயும் போகப் போறதில்லை. நானும் டாக்டர் ஆகணும், டாக்டர் மெர்ஸி ஜான்!"

சட்டென்று கதவைத் திறந்து கொண்டு அந்த உருவம் இறங்கியது.

காரின் விரைவுடன் அந்த உருவமும் அந்தரத்தில் விரைந்து கொண்டிருந்தது -மெர்ஸி ஜார்ஜின் வீட்டின் முன்புற கேட் வரையிலும்!

எப்படியோ காரை ஷெட்டுக்குள் கொண்டுபோய் நிறுத் தினாள். தன்னுடன் அப்போதும் அந்த ஆவி(?) இருப்ப தாகவே டாக்டர் மெர்ஸி உணர்ந்தாள்.

"ஏன் இவ்வளவு லேட்?" அம்மா விசாரித்தாள்.

"திடும்னு ஒரு போஸ்ட்மார்ட்டம் கேஸ். டாக்டர் ராமச்சந்திரன் சாருக்கு ஹெல்ப் பண்ண வேண்டியதாயிடுச்சு!" மெர்ஸி பதிலளித்தாள்.

"ராத்திரி நேரத்துல என்ன போஸ்ட்மார்ட்டம்?"

"அது ஒரு எமர்ஜென்ஸி கேஸ். அது வந்து..." -மெர்ஸி நடந்த சம்பவங்களைச் சொல்ல முற்பட்டாள். பிறகு ஏனோ மனத்தை மாற்றிக் கொண்டு, வேண்டாம் என்று தீர்மானித் தாள். இந்த மாதிரியான சம்பவங்களைக் கேட்டால் அம்மா வின் மனத்திலிருந்து பயத்தை மாற்றுவது சுலபமல்ல. மட்டு மின்றி, அது வேறு சில சிக்கல்களையும் ஏற்படுத்தும். கேள்வி



களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். அதையெல்லாம் அவர் நம்ப வேண்டும்.

ஆனால், எப்படி இருந்தாலும் அப்பாவிடம் இதைச் சொல்லி வைப்பதுதான் நல்லது.

"அப்பா எங்கேம்மா?"

"அவர் எங்கே இங்க இருக்கார்? இந்நேரம் பம்பாய்ல இருப்பார். மெடிக்கல் கான்ஃபிரஸுக்குப் போயிருக்கார். மறந்துட்டியா?"

"அவரோட ரொட்டீன் புரொகிராம்" மெர்ஸி தனக்குத் தானே பேசிக்கொள்வதுபோல் சொல்லிக் கொண்டாள்.

டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் மாதத்தில் இரண்டு தடவை யாவது இப்படி டூர் அடிப்பார். இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் அவருக்காகவென்றே ஏதாவது இப்படிப்பட்ட கான்ஃபிரன்ஸுகள் இருக்கும். எல்லாம் மருத்துவத் துறை நிபுணர்கள் கலந்து கொள்வதாக இருக்கும்.

"சாப்பாடு போட்டிருக்கேன்" அம்மா நினைவூட்டினாள்.

மெர்ஸி, டைனிங் டேபிளை நோக்கிச் சென்றாள்.

மூடியிருந்த பிளேட்டின் தட்டை எடுத்துவிட்டு, ஒரு கவளம் எடுத்து வாய்க்கு அருகே கொண்டு சென்றபோது... பாத்திரங்களுக்கு அருகில்- எதிரில்- டைனிங் டேபிளில் மெர்ஸி ஜான் காலை நீட்டிப் படுத்திருந்தாள். உடையெதுவு மின்றி... மட்ட மல்லாக்கப் படுத்திருந்தாள்!

டாக்டர் மெர்ஸி, நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்தாள்.

இதுவரை ஏற்படாத ஓர் அனுபவம். அவள் இதுவரை எத்தனையோ போஸ்ட்மார்ட்டங்களின்போது பக்கத்திலேயே இருந்திருக்கிறாள். ஆரம்பத்தில் அவள் பணி புரிந்தது மாவட்ட மருத்துவமனையில் என்பதால், இதெல்லாம் தவிர்க்க முடியாததாக இருந்தது.

இப்போது மெர்ஸியின் வேலை பெரும்பாலும் பிரசவ வார்டுகளில்தான். பிரசவ வேளைகளில் எத்தனையோ பேர் துடிதுடித்து இறந்திருக்கிறார்கள்... எத்தனை குழந்தைகள்... அப்போதெல்லாம் தோன்றாத உணர்வு!

எத்தனையோ விகாரங்களுடன் குறைப்பிரசவம் மற்றும் ஊனமுற்ற குழந்தைகள் பிறந்துள்ளன... ஆனால், அப்படிப் பட்டவை கூட மனத்தில் தங்கி இப்படியெல்லாம் பயமுறுத்தியதே இல்லை. இது மட்டும் ஏன் இப்படி?

மெர்ஸி எழுந்து கை கழுவினாள்.

"என்ன சாப்பிடாமலே கைகழுவுறே?"

"பசிக்கலம்மா!"

டாக்டர் தனது படுக்கையறைக்குள் நுழைந்து கதவை மூடித் தாழிட்டாள். படுக்கையில் சரிந்தாள்.

பைபிள் மற்றும் ஜெபமாலையை எடுத்துத் தலையணையின் கீழ் வைத்துக் கொண்டாள்- பயப்படாமல் இருப்பதற்காக. உறக்கம் வருவதாகத் தெரியவில்லை.

இரண்டு மாத்திரைகளை எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

மறுநாள் காலையில் சற்றுத் தாமதமாகத்தான் கண் விழித்தாள்.

பெட்காபி சாப்பிடும்போது தினசரிப் பத்திரிகையைக் கையில் எடுத்தபடி லெக்சரரான ரெனி அருகில் வந்தான்.

"மெர்ஸி இந்தச் செய்தியைப் பார்த்தியா... உங்க ஆஸ்பத்திரி நியூஸ்தான்." பத்திரிகையை அவளிடம் கொடுத்தான்.

'மார்ச்சுவரியிலிருந்த பிணம் மாயம்!'

தலைப்பைப் பார்த்தபோதே அவள் இதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது. 'இது குறித்து மேலும் கூறப்படுவதாவது...' பகுதியைத் தாண்டினாள்.



'மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்றிரவு சுமார் எட்டு மணியளவில் போஸ்ட்மார்ட்டம் செய்த இளம் பெண்ணின் பிணம் மாயமாக மறைந்து விட்டது. கொலையை மறைத்ததாக எழுந்த புகாரையொட்டி, ஒரு வருடத்துக்கு முன்னர் அடக்கம் செய்த இளம்பெண் ஒருவரின் உடல் நேற்றுக் கல்லறையிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டது. இதில் ஆச்சரியகரமான தகவல் என்னவென்றால், ஒரு வருடத்துக்குப் பிறகும் அந்த உடல் அழுகாமல் அப்போதுதான் இறந்தது போல் இருந்தது. இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட போஸ்ட்மார்ட்டத்தின் பிறகுதான் அந்தப் பிணம் மாயமாக மறைந்தது...'

டாக்டர் மெர்ஸி ஜார்ஜின் மூளைக்குள் ஆயிரம் வோல்ட்டேஜ் மின்சாரப் பிரவாகம் திடுமென்று பாய்ந்தது போலிருந்தது.

'பிணம் காணாமல் போவதா!

அது பிறகு தனது காரில் அமர்ந்து தன்னுடன் பேசுவதா? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?'

பத்திரிகையில் செய்தி வெளியாகி விட்டதால் தனது அனுபவங்களை இப்போது எவரிடமும் சொல்லாமல் இருப்பதுதான் நல்லதென்று தீர்மானித்தாள்.

சற்று நேரத்துக்குள் டாக்டர் ராமச்சந்திரன் போன் செய்தார்.

"மெர்ஸி, பயப்படறதுக்கு எதுவும் இல்லை. போஸ்ட்மார்ட்டத்துல கலந்துக்கிட்ட லிஸ்ட்டுல உங்க பேரைச் சேர்க்கலை." தகவல் சொன்னார்.

அந்தத் தகவல் அவளுக்குத் தற்காலிகமாக ஓர் ஆறுதலைத் தந்தது.

"அப்பா நாளைக்கு வந்துடுவாரம்மா?"

"நாளைக்கு ராத்திரி வருவார்."

மறுநாள் விடுமுறை.

அதற்கு அடுத்த நாள் பிரசவ வார்டில் வேலை. வார்டில் ரவுண்ட்ஸ் பார்த்துவிட்டு ஓய்வு அறையில் வந்து அமர்ந் தாள்.

நர்ஸ் ரமணி பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

"என்ன ரமணி... என்ன ஆச்சு?"

"பதினாலாம் நம்பர் பேஷண்ட்..." ரமணி வார்த்தைகளை முடிப்பதற்கு முன் மெர்ஸி ஜார்ஜ் நாற்காலியிலிருந்து துள்ளி யெழுந்தாள்.

டாக்டருடன் ஹைஸ்கூலில் படித்த தோழி ஒருத்திதான் பதினாலாம் நம்பர் பெட்டில் அட்மிட் செய்யப்பட்டிருந்தாள். அவளது நிலைமை மிகவும் சிக்கலாக இருந்தது. சிசேரியன் செய்ய வேண்டி இருக்கும் என்று தோன்றியது.

இருவரும் விரைவாகக் குறிப்பிட்ட கட்டிலை அணுகினர். சிறிய சோதனையை முடித்துக் கொண்ட மெர்ஸி, தன் பள்ளிக் கூடத் தோழியை ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினாள்.

"மெர்ஸி நீயும் கூட வந்தால் நல்லது!" தோழி வற்புறுத் தினாள்.

முன்னால் எப்போதோ பேச்சின் நடுவே மெர்ஸி இதற்குத் தலையாட்டியிருந்தாள். பிரசவத்துக்காக ஆபரேஷன் தியேட் டர் போக நேர்ந்தால், தானும் அவளுடன் இருப்பதாக. எனவே, ஆபரேஷன் செய்யும் டாக்டருடன் மெர்ஸி ஜார்ஜும் ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தாள்.

நல்லபடியாக எல்லாம் முடிந்தது.

ஆபரேஷனின்போது பயன்படுத்தும் உடையை மாற்றுவ தற்காக தியேட்டரை ஒட்டிய உடை மாற்றும் அறைக்கு வந்தாள் மெர்ஸி ஜார்ஜ்.



அவளுக்கு முன்னால் மற்றொரு பெண்மணி உடை மாற்றிக் கொண்டிருந்தாள்.

"இதன் மூலமா நான் முதல் தடவையா ஆபரேஷன் தியேட்டருக்குள்ள நுழைய முடிஞ்சது." நர்ஸ் சொன்னாள்.

"முதல் தடவையாவா?" அப்படிப்பட்ட நர்ஸ் யார் என்று தெரிந்து கொள்வதற்காக டாக்டர் மெர்ஸி சட்டென்று தலை யைத் திருப்பிப் பார்த்தாள்.

மெர்ஸி ஜான் நின்று கொண்டிருந்தாள். மாயமாக மறைந்தவள்!

டாக்டர் மெர்ஸிக்குத் தலை சுழல்வது போலிருந்தது. விழாமல் இருப்பதற்காக அருகில் இருந்த சுவரைப் பற்றிய படி அப்படியே நாற்காலியில் அமர்ந்தாள்.

"என்னங்க டாக்டர், ஏன் என்னமோ மாதிரி இருக்கீங்க?" அப்போதுதான் உள்ளே நுழைந்த நர்ஸ் தங்கம்மா கேட்டாள்.

டாக்டர், அவளை ஊன்றிக் கவனித்தாள்.

"இந்த அறைக்குள்ள கொஞ்ச நேரத்துக்கு முன்னால யாராவது வந்தாங்களா?"

"யாரும் வரலையே... அப்படி யாரையும் பார்க்கலையே!" தங்கம்மா பதிலளித்தாள்.

டாக்டர் மெர்ஸி நாற்காலியிலிருந்து எழுந்திருக்க, தங்கம்மா உதவினாள். அங்கிருந்து வெளியேறிய டாக்டரை ஓய்வு அறையில் உட்கார வைத்த தங்கம்மா, ஒரு தம்ளரில் சில்லென்ற தண்ணீரை எடுத்து வந்து டாக்டரிடம் கொடுத் தாள்.

தண்ணீரை ஒரே மடக்கில் குடித்த பிறகும் டாக்டரின் பதற்றம் குறைந்ததாகத் தெரியவில்லை.

"தங்கம்மா, நீங்கதானே தியேட்டர்ல டியூட்டி பார்த் தீங்க?" டாக்டர் கேட்டாள்.

"எனக்குதான் டியூட்டி போட்டிருந்தாங்க. ஆனா, என்னால அட்டெண்ட் பண்ண முடியலை. அதுக்குப் பதிலா வேற ஒருத்தரை தியேட்டருக்கு அனுப்பி வெச்சாங்க."

"உங்களுக்கு பதிலா வந்தது யார்?"

"தெரியலையே..."

டாக்டர் மெர்ஸியின் சந்தேகம் அதிகமானது. அப்படியானால் தங்கம்மாவுக்கு பதிலாக அவள்தான் வந்திருக்க வேண்டும்.

மெர்ஸி ஜானின் உடல்!

எப்படி இதை நம்புவது?

"நான் வரட்டுங்களா?" தங்கம்மா கேட்டாள்.

"போயிட்டு வாங்க."

அவள் போன பிறகும் டாக்டர் சற்று நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். பிறகு மெதுவாக எழுந்து வார்டை நோக்கி நடந்தாள்.

மதியத்தில் வீட்டுக்குச் சென்றவள் பேருக்குச் சாப்பிட்டாள்.

"நேத்துலேர்ந்து நீயேன் ஒரு மாதிரி இருக்கிறே?" -அம்மா கேட்டாள்.

"அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. அப்பா இன்னிக்குத்தானே வர்றார்?"

"நீ எதுக்காக இப்ப அப்பாவைத் தேடுற? முதல்ல அதைச் சொல்லு!"

"சும்மாதாம்மா!" -அவள் நழுவினாள்.

நடந்ததையெல்லாம் கண்டிப்பாக அப்பாவிடம் சொல்லியே தீர வேண்டும்.



மாலை நேரத்தில் மருத்துவ மனையிலிருந்து டாக்டர் ராமச்சந்திரனுடன் பேச விரும்பினாள். அவர் ஃபாரென்ஸிக் டிபார்ட்மெண்ட்டில் இருப்பதாகத் தெரிந்ததும் அங்கு போனாள்.

"மெர்ஸி, நடந்ததெல்லாம் தெரியுமா?" டாக்டர் ராமச்சந்திரன் கேட்டார்.

"பேப்பர்ல படிச்சேன். இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்னு புரியலையே?" ராமச்சந்திரனின் முகத்தைப் பார்த்தபடி கேட்டாள்.

"இதுவரைக்கும் நானும் அந்த மாதிரியெல்லாம் கேள்விப் பட்டிருந்தேன். இப்படி சில கதைகளும் படிச்சிருக்கேன். இப்பத்தான் இந்த மாதிரியான ஓர் அனுபவம். யாராவது மோசடி ஏதாவது பண்ணியிருப்பாங்களோ?"

தனக்கு நேர்ந்தவற்றை அவரிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று டாக்டர் மெர்ஸி ஒரு கணம் யோசித்தாள். பிறகு சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்தாள். அதனால் புதிய சிக்கல்கள் ஏதாவது ஏற்படலாம் என்று பயந்தாள்.

"நீங்க சொல்ற மாதிரியும் இருக்கலாம்..." அவள் அது தொடர்பாக மேற்கொண்டு எதுவும் பேச விரும்பவில்லை.

"வேற ஏதாவது சொல்லணுமா?"

"இல்லை. என் ஃபிரண்ட் ஒருத்தி ஆபரேஷன் முடிஞ்சு படுத்திருக்கிறா. போய்ப் பார்க்கணும்."

"சரி."

மெர்ஸி ஜார்ஜ் அங்கிருந்து கிளம்பினாள்.

மணி பன்னிரண்டு.

டாக்டர் ராமச்சந்திரன் மேஜை மீது தலையைக் குனிந்தவாறு சற்றுக் கண்ணயர்ந்தார். ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் டி.எஸ்.பி.யிடமிருந்து போன் வந்தது. 'காணாமல்

போன பிணத்தைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா' என்று. 'இல்லை' என்று பதிலளித்திருந்தார்.

"டாக்டர் சார்..." யாரோ அழைக்கும் குரலைக் கேட்டுத் தலையை உயர்த்திப் பார்த்தார்.

பார்த்தவர் திடுக்கிட்டார். சட்டென்று பின்னோக்கிச் சரிந்தார்.

அவருக்கு எதிரில் நின்று கொண்டிருந்தாள் மெர்ஸி ஜான்!

போஸ்ட்மார்ட்டம் டேபிளில் பார்த்த அதே வடிவத்தில்...

எந்த ஓர் உடையும் இல்லாமல்!

அவள், அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

டாக்டர் தன் வலது கையை முகத்துக்கு நேராக ஒரு தடவை ஆட்டிப் பார்த்துவிட்டு மீண்டும் பார்த்தார்.

சந்தேகமில்லை... அவளேதான்!

பிணம் எழுந்து நிற்கிறது.

"நான் தற்கொலை பண்ணிட்டதா பத்து வருஷத்துக்கு முன்னால நீங்கதானே ரிப்போர்ட் கொடுத்தீங்க டாக்டர்?" - பிணம் கேட்டது.

"எ... என்ன!" டாக்டருக்குப் 'பக்'கென்றது.

"உண்மையில நான் தற்கொலைதான் பண்ணிக்கிட்டேனா டாக்டர்?" -அவளது கேள்வி, அவர் உடம்பு மொத்தத்தையும் நடுங்க வைத்தது.

அவள் கண்கள் ஜொலித்தன.

"அது உண்மையா டாக்டர்?" இந்த முறை அவள் குரல் சற்றுக் கடுமையாக ஒலித்தது.

"இல்லை... இல்லையே..." டாக்டர் பின்புறமாக நகர்ந்து கட்டிலில் போய் அமர்ந்தார்.

"அப்புறம் எப்படி?" -அவள், அவரை நெருங்கினாள்.



"அவர்கள் பலாத்காரம் செய்து..."

"எப்படி?"

"அது... வந்து..." டாக்டர் பின்புறமாக நகர்ந்தார்.

"அவங்க உங்களுக்குப் பணம் கொடுத்தாங்க... அதனால அவங்க திட்டம் போட்டுச் செய்த கொலையைத் தற்கொலையா மாத்தீட்டிங்க... அப்படித்தானே?"

அவள் கைகள் அவரது சட்டையைக் கொத்தாகப் பிடித்தன. 'டர்...ர்' என்ற சத்தத்துடன் சட்டை தாறுமாறாகக் கிழிந்தது. அவரது பாண்ட்டின் இடுப்புப் பகுதியைப் பிடித்து உயர்த்தினாள். கட்டிலில் போட்டு அடித்தாள்.

டாக்டர் ராமச்சந்திரனின் தலை, கட்டிலின் மரச்சட்டத்தில் மோதியது.

அவள் வலது கை, அவர் முகத்தை நோக்கி நீண்டது.

அந்த விரல்களில் கூர்மையான நகங்கள் தட்டுப்பட்டன.

அவர் மார்புக்குள் ஊடுருவிய அந்த நகங்கள் அப்படியே கீழ்ப்புறமாகக் கிழித்துக் கொண்டு இறங்கின.

டாக்டர் வாயைத் திறந்து அலறினார். ஆனால், சத்தம் அவர் தொண்டையை விட்டு வெளியேறவில்லை.

அவள் முகத்திலும், மார்புப் பகுதிகளிலும் ரத்தம் பீய்ச்சியடித்தது.

உதட்டுப் பகுதியில் தெறித்த ரத்தத்தை நாக்கால் நக்கி உள்ளுக்குள் இறக்கினாள்.

"நான் போஸ்ட்மார்ட்டம் ரூமில படுத்திருந்தது மாதிரி நீயும் படுத்திரு!"

அவள், அவரது பாண்ட்டை உருவிவிட்டு, மேஜை மீது தூக்கிப் போட்டாள்.

"டாக்டர்... டாக்டர்..." டாக்டர் மெர்ஸியின் குரல் மிக அருகில் கேட்டதால் அவள் தலையை உயர்த்தினாள்.

நர்ஸ் ஒருத்தி முதுகைக் காட்டிக் கொண்டு நிற்பது டாக்டர் மெர்ஸிக்குத் தெரிந்தது.

"யாரது?" டாக்டர் மெர்ஸி கேட்டாள்.

"நான்தான்!"

டாக்டர் மெர்ஸி ஜார்ஜுக்கு முன்னால் நர்ஸ் வேடத்தில் மெர்ஸி ஜான்!

அவள் முகத்தில் ரத்தப் பொட்டுகள்...

உதட்டில் ரத்த ஈரம்!

## 3

"என்ன... என்னை இன்னுமா அடையாளம் தெரியலை? என்னோட இன்றைய வேலை முடிஞ்சிடுச்சு. நான் வர்றேன்." -அந்த உருவம் அறையிலிருந்து வெளியேறி இருளில் மறைந்தது.

டாக்டர் மெர்ஸி ஜார்ஜ் என்ன செய்வது என்று புரியாமல் ஒரு கணம் தவித்தாள்.

"என்ன டாக்டர்... என்ன ஆச்சு?" அப்போது அங்கு வந்த நர்ஸ் வல்சம்மா கேட்டாள்.

டாக்டர், அந்த நர்ஸை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு சந்தேகத்துடன் கேட்டாள். "நீங்க வர்ற வழியில நர்ஸ் யாராவது உங்களைக் கடந்து போனாங்களா?"

வல்சம்மா யோசனையில் ஆழ்ந்தாள்.

"உம்... ஒருத்தரைப் பார்த்தேன். மார்ச்சுவரி பக்கமா நடந்து போனாங்க. யாருன்னு அடையாளம் தெரியலை..."



"மார்ச்சுவரி பக்கமா... கடவுளே... இந்த நடுராத்திரியில யார் அந்தப் பக்கமா போகப் போறாங்க?" -மெர்ஸியின் பயம் அதிகரித்தது.

அப்படியானால் தன்னைக் காண வந்த உருவம் மெர்ஸி ஜானினுடையதுதானா?

"என்ன டாக்டர், எதையோ பார்த்து ஏகத்துக்கு பயந்து போன மாதிரி இருக்கீங்க?" வல்சம்மா கேட்டாள்.

"ஒருவேளை அப்படி எனக்குத் தோன்றியிருக்கலாம்" - மெர்ஸி தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

இருப்பினும் அவள் முகத்திலிருந்த கலவரம் குறைய வில்லை. அவள் தன்னைப் பின்தொடர்கிறாள் என்பது டாக்டர் மெர்ஸிக்குப் புரியவே செய்தது. அப்படியானால், நிச்சயம் ஏதாவது பதில் நடவடிக்கை எடுத்தே ஆக வேண் டும். அப்பா அதற்கு ஏதாவது பரிகாரம் செய்வார் என்று நம்பினாள்.

மறுநாள் பொழுது விடிந்த போதுதான் டாக்டர் ராமச் சந்திரன் மரணமடைந்த செய்தி ஆஸ்பத்திரிக்குள் பரவியது.

'யாரோ அவரைக் கொடூரமாகத் தாக்கியிருக்கிறார்கள்' என்ற கருத்தே ஒட்டுமொத்தமாக உயர்ந்தது. அதற்குப் பின்னணியில் ஒரு காரணமும் இருந்தது.

முந்தைய நாள் நடைபெற்ற போஸ்ட்மார்ட்டத்துக்கும், அவரது மரணத்துக்கும் நேடித் தொடர்பு இருப்பதாகச் சிலர் வெளிப்படையாகவே பேசிக் கொண்டனர். பிணம் மாறிப் போனது தெரிந்தும் அதை வெளிக்காட்டாமல் ரகசியமாக போஸ்ட்மார்ட்டம் செய்ததைத் தெரிந்து கொண்டவர்கள்தான் அவரைக் கொலை செய்திருக்க வேண்டும் என்றும் பேசிக் கொண்டனர். ஒவ்வொருவரும் தங்களது கற்பனையின் அள வுக்குத் தகுந்தபடி பேசினர்.

காணாமல் போன உடம்பு, கொலை செய்யப்பட்ட டாக்டர் -இந்த இரண்டையும் தொடர்புபடுத்திப் பத்திரிகைகளில் செய்தி வெளியானது. புலனாய்வுப் பத்திரிகைகள் இதழுக்கு இதழ் ஒரு கதை சொல்லின. இதன் பின்னணியில் ஒரு கூட்டமே இயங்குவதாகச் செய்திகள் சத்தியம் செய்தன.

ஆனால், மெர்ஸி ஜார்ஜின் வலுவான சந்தேகம், மெர்ஸி ஜானின் பிண உருவம்தான் அந்தக் கொலையைச் செய்திருக்கும் என்பது. ஒருவேளை அதன் அடுத்த குறி தானாகவும் இருக்கலாம். இந்த எண்ணம் அவளுக்குள் பீதியை ஏற்படுத்தியது.

விரைவாகச் சாப்பிட்டுவிட்டு அவள் அப்பாவின் அறைக்குள் நுழைந்தாள். அவள் வருகை அப்பா ஜார்ஜ் செபாஸ்டினுக்கு மகிழ்ச்சியளிக்கவே செய்தது. வளர்ந்துவிட்ட குழந்தைகள் தன்னிடம் பேசுவதே குறைந்து விட்டது என்ற வருத்தம் அவருக்குள் சமீப காலமாக உண்டு.

குறைந்தபட்சம் மருத்துவத் துறை ஆலோசனைக்காக வாவது சம்பந்தப்பட்ட பிள்ளைகள் பேச வரலாமே என்று நினைத்தார்.

"என்னம்மா... என்ன விசேஷம்? ஏதாவது காம்ப்ளிகேட்டடு கேஸ் வந்து சேர்ந்திருக்கா?" ஜார்ஜ் செபாஸ்டியன் சிரித்தபடி கேட்டார்.

"ஆமாம் டாடி. பயங்கரமான ஒரு காம்ப்ளிகேட்டடு கேஸ். டெரரானதும் கூட" மெர்ஸி, அப்பாவுக்கு அருகில் அமர்ந்தபடி பதிலளித்தாள்.

அப்பா புன்னகைத்துக் கொண்டார்.

"முதல்ல விஷயத்தைச் சொல்லு!" அதுவரை அவர் படித்துக் கொண்டிருந்த தலையணை போன்ற புத்தகத்தில் அடையாளம் வைத்து மூடிவிட்டு அவள் பக்கமாகத் திரும்பினார்.



'எங்கிருந்து தொடங்குவது, எப்படிச் சொல்வது?' என்ற யோசனையில் ஒரு சில விநாடிகள் கடந்தன.

"அவள் மறுபடியும் வந்திருக்கிறாள்!" மெர்ஸி ஒருவாறாக ஆரம்பித்தாள்.

"யார் வந்திருக்கிறது?" -டாக்டர் திருப்பிக் கேட்டார்.

"மெர்ஸி ஜான்!"

"ம்... ஆமாம், என்ன சொன்ன?" -அவர் முகத்தில் ஆர்வமும் சந்தேகமும் ஒருசேரத் தென்பட்டன.

"உண்மைதாம்ப்பா. அன்னிக்குத் தோண்டியெடுத்து மறுபிரேதப் பரிசோதனை செஞ்சது அவளோட உடம்பைத்தான்!"

"ஓகோ... அசாதாரணமா ஒண்ணு ரெண்டு கேஸ் இப்படி ஆயிடறதுண்டு. வைத்தியத் துறையின் முன்னேற்றத்தை மீறி இப்படியும் சிலதெல்லாம் நடந்திருக்கிறதா நானும் கேள்விப் பட்டிருக்கேன். படிச்சும் இருக்கேன்."

"இது அந்த மாதிரி இல்லப்பா. இப்பவும் அவள் உயிரோட உலாத்துறா!"

"நீ ஏதாவது ஃபெய்ரிடேல்ஸ் படிச்சிருப்ப. ச்சேச்சே... அப்படியெல்லாம் எதுவும் இருக்காது. யாரைப் பார்த்த, எப்படிப் பார்த்த... முதல்ல அதைச் சொல்லு!"

நடந்ததையெல்லாம் மெர்ஸி விவரித்தாள். டாக்டர் ஜார்ஜால் அவள் சொன்ன எதையும் நம்ப முடியவில்லை. இருப்பினும் மகளுக்கு ஆறுதல் சொல்வதற்காகக் கடைசியில் ஓர் உபாயம் சொன்னார்.

"வாம்மா..." -டாக்டர் ஜார்ஜ், தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி எழுந்தார்.

அவர்தான் காரைச் செலுத்தினார்.

"எங்கே போறோம் டாடி?"

"பிஷப் கிட்டத்தான்!"

"எதுக்கு?"

"எல்லாம் அங்கே போன பிறகு தெரியும்!"

மாதா கோயிலின் அருகில் இருந்த பிஷப்பின் வீட்டு வாசலில் கார் நின்றது.

டாக்டர் காலிங் பெல்லை அழுத்தினார்.

இளைஞரான பாதிரியார் ஒருவர் கதவைத் திறந்தார்.

"வாங்க... வாங்க... என்ன டாக்டர் வீட்டுக்கே வந்திருக்கீங்க?" -அவரது வரவேற்பிலிருந்தே அவர்களுக்கு இடையே இருந்த நெருக்கம் தெரிந்தது.

"உங்களைப் பார்க்கலாம்னுதான்."

ஃபாதர் இருவரையும் வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

எழுபது வயதுக்குக் குறையாதவராகத் தென்பட்டார் பிஷப்.

நல்ல உயரம். அதற்கேற்ற உடல். களையான முகம். மழமழவென்று ஷேவ் செய்யப்பட்ட கன்னப் பகுதிகள். மதச் சின்னம் பொறித்த தொப்பியொன்று தலைப் பகுதியை அலங்கரித்தது.

"என்ன வேணும்... சொல்லுங்க." பிஷப் கேட்டார்.

"முக்கியமான ஒரு விஷயத்துக்காக வந்திருக்கோம்..." என்று தொடங்கிய டாக்டர் ஜார்ஜ், மெர்ஸிக்கு நேர்ந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்.

பிஷப் அதையெல்லாம் பொறுமையாகக் கேட்டார்.

கடைசியில் அவர் கூறினார்: "நீங்கள் சொன்ன எதையும் நான் மறுக்கலை. நமக்குத் தெரியாத எவ்வளவோ விஷயங்கள் இந்த பூமியில இருக்கு. நம்மளால முடிஞ்சது, எல்லாத்தையும் கடவுள்கிட்ட ஒப்படைக்கிறதைத்தான்."



உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து பக்கத்து அறை ஒன்றுக்குள் நுழைந்த பிஷப் திரும்பி வரும்போது அவர் கையில் வெள்ளியால் கட்டிய ஜெபமாலை ஒன்று இருந்தது.

"இது நான் ஜெபத்துக்குப் பயன்படுத்துற மாலை. இதை எப்பவும் உங்க கழுத்துலேயே போட்டுக்கணும். அசுத்தமாகாமல் பார்த்துக்கங்க."

பக்தியுடன் அதைப் பெற்றுக் கொண்ட மெர்ஸி ஜார்ஜ் அப்போதே அதைக் கழுத்தில் போட்டுக் கொண்டாள்.

இருவரும் பிஷப்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு அங்கிருந்து கிளம்பினர். அதன் பிறகு மெர்ஸி இரண்டு நாள் ஓய்வு எடுத்துக் கொண்டாள்.

மூன்றாவது நாளன்று வெள்ளிக் கிழமை. இரவு டியூட்டியானதால் ரவுண்ட்ஸை முடித்துக் கொண்டு அறையில் வந்து அமர்ந்தாள். மணி பத்தாகியிருந்தது.

கண், சொக்கிக் கொண்டு வந்தது. யாரோ அழைப்பது போல் தோன்றவே, சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

யாரையும் காணவில்லை!

அப்போது.

"சிக்... சிக்... சிக்..." என்றொரு சத்தம்.

மெர்ஸியின் கண்கள் சுவர்க்கடிகாரத்தின் பக்கம் திரும்பின.

என்ன ஆச்சரியம்! கடிகாரத்தின் விநாடி முள் பின்புறமாகச் சுழன்று கொண்டிருந்தது. வியப்புடன் அதையே பார்த்தபோது அதன் மீதிருந்த பல்லி அவளையே உற்றுப் பார்ப்பது போல் தோன்றியது. பல்லியின் கண்கள் சிவப்பு நிற வைரங்களைப் போல் ஜொலித்தன.

சட்டென்று பல்லி அங்கிருந்து துள்ளிப் பாய்ந்து மறையவும் செய்தது.

அப்போது மெர்ஸிக்கு நம்ப முடியாத அந்தக் காட்சி தட்டுப்பட்டது. கடிகாரம், இப்போது பழையபடி சரியாக ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் பல்லியைத் தேடியபோது அது தட்டுப்படவே இல்லை.

கழுத்தில் போட்டிருந்த மாலையின் மணிகளை வருடிய படியே கவனித்தாள்.

உறக்கம் அவளிடமிருந்து விடைபெற்றுப் போனது.

டாடியிடம் அவள் இதைப் பற்றிப் பேசவே இல்லை. விடியற்காலையில் கண் விழித்தபோது பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டிருந்தது. அன்று மருத்துவ மனைக்குப் போகும் வேலையில்லாததால் அண்ணன் டோமியின் வீட்டுக்குச் சென்றாள்.

அவன் நகரின் தனியார் மருத்துவ மனையில் பணி புரிந்து கொண்டிருந்தான். அவன் மனைவி வேலைக்குச் செல்லாததால் வீட்டில் இருந்தாள். அன்றிரவு வீட்டுக்கு வர முடியாது என்று டோமி ஏற்கெனவே தெரிவித்திருந்தான். அதனால் அவள் அண்ணி லிஸி, மெர்ஸியை அங்கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டாள்.

"இன்னிக்கு என்னமோ ஒரே சோம்பலா இருக்கு" -மெர்ஸி கூறினாள்.

"அதுக்கென்ன... குழந்தையோட விளையாடிட்டிருந்தா எல்லாம் சரியாயிடும்."

சொன்னது போல் குழந்தைதான் அவளது பொழுது போக்காக இருந்தது.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு டி.வி. பார்த்துக் கொண் டிருந்த மெர்ஸி பாத்ரூமுக்குச் சென்றாள்.

வயிறு வலிப்பது போல் தோன்றியதால், பிஷப் தந்த ஜெபமாலையைக் கழற்றி வெண்டிலேட்டர் அருகே வைத் தாள்.



அங்கு எல்லா விதமான வசதிகளும் இருந்தன.

அதன் பிறகு அந்த மாலையை அவள் கையால் தொட வில்லை. இந்த விஷயத்தை அவள் லிஸியிடமும் சொல்ல மறந்து போனாள்.

மறுநாள் வீட்டுக்குத் திரும்பி வந்த போதுதான் ஜெப மாலை நினைவுக்கு வந்தது அப்பாவிடம் மாலை விஷயத் தைச் சொல்ல வேண்டியதில்லை என்று அப்படியே விட்டு விட்டாள்.

அன்றிரவு கட்டிலில் படுத்திருந்தபோது பழைய சம்ப வங்கள் ஒவ்வொன்றாக நினைவில் எழுந்தன.

கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடித்தபோது அவள் திடுக்கிட்டாள். கடிகாரத்தின் மீது தென்பட்ட பல்லியைப் பற்றியே அவள் மனம் நினைத்துக் கொண்டிருந்தது.

"நான் இங்கேதான் இருக்கேன்!" மெர்ஸி ஜானின் குரல் இருளில் தெளிவாகக் கேட்டது.

அந்தக் குரல் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

நெருக்கத்தில்... படுக்கையில்... தன் பக்கத்தில்...

டாக்டர் மெர்ஸி ஜார்ஜின் கண்கள் தானாகவே மூடிக் கொண்டன. அவள் கனவுலகம் ஒன்றில் அமிழ்ந்து போனாள்.

அங்கு அவள், மெர்ஸி ஜானைச் சந்தித்தாள். ஒளி ஊடு ருவக் கூடிய ஓர் உருவமாக... அவளது உடலைக் கடந்து மறுபுறத்தில் உள்ளதைப் பார்க்க முடிந்தது.

அவள் தன்னைக் கட்டியணைப்பதற்காக நெருங்குவதை டாக்டர் மெர்ஸி ஜார்ஜ் உணர்ந்தாள்.

அவள் மிக நெருங்கி நின்றாள்.

பின்புறமாக நகர எவ்வளவுதான் முயன்றும் டாக்டரால் அது முடியவில்லை. அவள் டாக்டரைக் கட்டியணைத்தாள்.

டாக்டரின் ஒவ்வொரு ரோமக் கால்களின் ஊடாகவும் மெர்ஸி ஜான் தனக்குள் ஊடுருவுவதை உணர்ந்தாள். உண்மையில் மெர்ஸி ஜான், மெர்ஸி ஜார்ஜின் உடலுக்குள் புகுந்தாள். இரவு மேலும் இருண்டு விடிந்தது.

காலை நேரத்தில் அம்மா வெகு நேரம் கதவைத் தட்டிய பிறகுதான் மெர்ஸி கண் விழித்தாள். எழுந்தவள் தன் அம்மாவையே வெறித்துப் பார்த்தாள்.

"என்னம்மா இப்படி வெறிச்சுப் பார்க்கிறே?" -அம்மா கேட்டார்.

"ஒண்ணுமில்லை."

"ஹாஸ்பிட்டலுக்குப் போகலையா?"

"போகணும்."-அவள் படுக்கையிலிருந்து எழுந்தாள்.

அவள் குளித்துவிட்டு உடை மாற்றியபோது வெளியே கார் ஸ்டார்ட் ஆகும் சத்தம் கேட்டது.

டாக்டர் ஷிபுதான் காரைக் கிளப்பிக் கொண்டிருந்தான். அவனும் தனியார் மருத்துவ மனையில்தான் பணிபுரிகிறான்.

"கொஞ்சம் இரு... நானும் வந்துடறேன்" மெர்ஸி குரல் கொடுத்தாள்.

"உன் கார்ல போக வேண்டியதுதானே?" ஷிபு, திருப்பிக் கேட்டான்.

"கால் வலிக்குது அதுதான்..."

"அப்படியானா சீக்கிரமா வா. நான் சீக்கிரமா போகணும்!" ஷிபு ஒப்புக்கொண்டான்.

ஒரு சில நிமிடங்களுக்குள் மெர்ஸி வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

"ஹேண்ட் பேகை எடுக்கலையா?" ஷிபு கேட்டான்.

"நல்லவேளை, ஞாபகப்படுத்துன. இதோ ஒரு நிமிஷத்துல வந்துடறேன்."



பேகுடன் திரும்பி வந்தாள்.

"ஆமாம்... இன்னிக்கு ஏன் இவ்வளவு டல்லா இருக்கிற?" ஷிபு கேட்டான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை."

மருத்துவமனை வாசலில் இறங்கிக் கொண்டாள்.

அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் பெயரைத் தேடினாள். அகப்பட்டது. ஒப்பிட்டாள். 'அவ்வளவு துல்லியமாக இல்லை. பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்.' பேனாவை மூடியபடி ஒரு தடவை தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். "டாக்டர் மெர்ஸி ஜான்!" -உதடுகளில் புன்னகை ஒன்று அரும்பியது.

நர்ஸ் வல்சம்மா எதிர்ப்பட்டாள்.

"வல்சம்மாதானே?"

"என்ன டாக்டரம்மா இப்படிக் கேட்குறீங்க?" -டாக்டரை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

"சும்மாதான் கேட்டேன். சரி, ரவுண்ட்ஸ் போகலாமா?"

இதற்கு முன் இப்படியெல்லாம் பேசாத டாக்டரை அவள் வியப்புடன் பார்த்தாள்.

இருவரும் நோயாளிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பினர்.

"பரவாயில்லை... எனக்கு இதுவரையில் எந்தத் தவறும் ஏற்படவில்லை." மெர்ஸி, தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

மணி பதினொன்றரை.

"டாக்டர், நீங்க கார் எடுத்துட்டு வரலையா?" டாக்டர் மாலதி மேனோன் கேட்டாள்.

"இல்லை. கால் வலிச்சது... அதனால்தான்." -மெர்ஸி பதிலளித்தாள்.

"அப்ப, நான் வேணும்னா டிராப் பண்ணிடுறேன்."

மெர்ஸி, அவருடன் நடந்தாள்.

மாலதி காரை ஸ்டார்ட் செய்தாள். மெர்ஸி, அவளுக்கு அருகில் உட்கார்ந்தபடி அவர் காரோட்டுவதையே வேடிக்கை பார்த்தாள்.

"என்ன... டிரைவிங் எப்படின்னு பார்க்குறீங்களா?" -மாலதி கேட்டாள்.

"கெட்டிக்காரர்னு தெரியுதே!"

"உங்களோட மாருதி கார் அளவுக்கு இந்த கார் சௌகரியமா இல்லை. நானும் ஒரு மாருதி வாங்கணும்."

ஒரு வார காலம் மெர்ஸி கார் ஓட்டவே இல்லை.

கால் வலி என்று சொல்லியே அதிலிருந்து நழுவினாள். பிற்பாடு டிரைவ் செய்து பார்த்தாள் பிரச்சினை எதுவுமில்லை.

தனது வாழ்நாளில் ஒரு தடவை கூட காரிலேயே ஏற முடியாத தன்னால், எப்படி இந்த அளவுக்கு கார் ஓட்ட முடிகிறது என்று அவளே வியப்பு அடைந்தாள்.

மாதா கோயிலில் மணியடிக்கும் ஜானின் மகள் மெர்ஸி, கார் ஓட்டுகிறாள். அதுவும் தொண்ணூறாம் ஆண்டு மாடல் மாருதி காரை!

அன்று அவளுக்கு நைட் டியூட்டி. இரவு நேரமானால் அவளுக்கு உற்சாகம் அதிகரிப்பதுதான் இயல்பு.

அவள் அலுவலக அறையில் உட்கார்ந்திருந்தபோது டாக்டர் ஆபிரகாம் வந்தார். கையிலிருந்த புத்தகத்தை அங்கிருந்த டேபிளில் வைத்துவிட்டு முகம் கழுவப் போனார்.

டாக்டர் ஆபிரகாம் சைக்யாட்ரிஸ்ட். முப்பத்தெட்டு வயது. பழகுவதற்கு இனிமையானவர். எப்படிப்பட்டவரும் ஒரு விநாடி நின்று கவனிக்கும் அழகு. யாரோ ஒரு நடிகர், வேடம் போட்டிருப்பதாகவே தோன்றும்.



முகத்தைப் போல்தான் மனமும்.

ஏழைகள் என்றால் அன்பும் அரவணைப்பும் அதிகமாகவே கிடைக்கும். அவர் மனைவி உமாவும் டாக்டர்தான். அவரும் ஏறத்தாழ கணவனைப் போலத்தான்.

டாக்டர் ஆபிரகாம் ஒரு தனி டீமையே உருவாக்கியிருந்தார்- லஞ்சம் வாங்கும் டாக்டர்களுக்கு எதிராக- அவர்களை வெளிப்படையாக எதிர்க்கவும் தயங்காதவர் அவர்.

ஓர் ஏழைப் பெண்ணுக்காக டாக்டர் சைமனைக் கண்டபடி தாக்கியுமிருக்கிறார். ஆபிரகாம் புத்தக வாசிப்பில் அதிக ஆர்வமுள்ளவர்.

மெர்ஸி அந்தப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள். 'தி பவர் ஆஃப் ஈவில்ஸ் (பிசாசுகளின் சக்தி)' என்பது புத்தகத் தலைப்பு. பெயரை வாய்விட்டே வாசித்தாள்.

அட்டையில் மண்டையோட்டின் படம் இருந்தது. கண்களுக்கு பதிலாக இருந்த குழிகளின் ஆழத்தில் பளபளப்புத் தட்டுப்பட்டது.

பின்னட்டையில் புத்தகத்தைப் பற்றிய ஒரு குறிப்பு இருந்தது. அதை வாசிக்கத் தொடங்கினாள்: 'பேய், பிசாசுகளுக்குக் குறிப்பிடத் தக்க சக்திகள் உள்ளன. சட்டென்று எதையும் புரிந்து கொள்ளவும், தொடரவும் அவற்றால் முடியும். அதே போல் பிறரைக் கவர்வதும் சுலபமே.

மனிதர்களின் உடம்பில் புகுந்து கொண்டு அவர்களைப் போல் வாழ்வதும் அவற்றால் சுலபத்தில் முடிகிறது.

அவற்றுக்கும் எல்லாவித உணர்வுகளும் உள்ளன. பொதுவாகப் பழிவாங்கும் உணர்வே மேலோங்கி இருக்கும். தெய்வீகம் மற்றும் ஆன்மீகச் சக்தியால் இவற்றைப் பயனற்றதாக்க முடியும்.'

"என்ன!" -மெர்ஸி தன்னையும் மீறிக் கேட்டுவிட்டாள்.

தலையை உயர்த்திப் பார்த்தபோது டாக்டர் ஆபிரகாம் அவளுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார்.

# 4

படிக்கணும்னு தோணுதா?" டாக்டர் ஆபிரகாம் கேட்டார்.

"ஆமாம் சார்!" பதிலளித்தாள்.

"பிசாசுகளைப் பத்தின புத்தகம். பயம் ஏற்படலாம்." - டாக்டர் ஆபிரகாம் நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு அவளருகே அமர்ந்தார்.

மெர்ஸி, டாக்டரை நேருக்கு நேராகப் பார்த்தாள்.

அந்தக் கண்களிலிருந்து...

ஏதோ ஒரு பிரத்தியேகமான சக்தி தனக்குள் ஊடுருவுவது போல் ஆபிரகாமுக்குத் தோன்றியது. அந்தக் கண்களைச் சந்திக்கும் வல்லமை தனக்கு இல்லை என்பதைப் போல் சட்டென்று அவராகவே தலையைத் தாழ்த்திப் பார்வையைத் தவிர்க்க முயன்றார்.

"என்ன சார்... என்னமோ மாதிரி..." மெர்ஸி கேட்டாள்.

"ரொம்பக் களைப்பா இருக்கு. நான் கிளம்புறேன்" - நாற்காலியிலிருந்து எழுந்த டாக்டர், ஃபில்டரிலிருந்து ஒரு தம்ளர் குளிர்ந்த நீரை எடுத்துக் குடித்தார்.

பிறகு தனது நாற்காலியருகே வந்தவர், அந்தப் புத்தகத்தை மறுபடி கையில் எடுத்துப் பார்த்தார். பிறகு அங்கேயே வைத்தார்.

நடக்கும்போது அவர் தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் பேசினார்: "அப்பா... பயங்கரமான புத்தகம்! அதை



ஒரு தடவை வாசித்துவிட்டு யாரைப் பார்த்தாலும் பிசாசுகளோ என்று சந்தேகப்படத் தோன்றுகிறது. ச்சே...!"

மெர்ஸி அன்றிரவே அந்தப் புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்தாள். அதில் அவளுக்குத் தெரியாத விவரங்கள் ஏராளமாக இருந்தன.

தனக்கு இயல்பாகவே ஏராளமான சக்திகள் இருப்பது அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

'அப்படியானால் அதைச் செய்ய வேண்டியதுதான்!' என்ற முடிவுக்கு வந்தாள்.

மணி பன்னிரண்டு தாண்டியிருந்தது. மெர்ஸி, குறிப்பிட்ட ஆசிட் பாட்டில் ஒன்றைத் தேடியெடுத்தாள்.

மருத்துவமனையின் சுற்றுப்புறம் அமைதியாக இருந்தது. படிகளில் இறங்கி மருத்துவமனையின் பின்புற 'கேட்'டை அடைந்தாள்.

வாட்ச்மேன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து சுகானுபவத்தில் மூழ்கியிருந்தான்.

அவனுக்கு அருகே சென்ற மெர்ஸி கேட்டாள்: "என்ன தூக்கம் வருதா?"

வாட்ச்மேன் எழுந்து நின்று அவளை அடையாளம் தெரிந்து கொள்ள முயன்றான். பிறகு திடுக்கிட்டு சல்யூட் அடித்தான்.

"பரவாயில்லை... போய் உட்காருங்க!"

பழைய இடத்தில் வாட்ச்மேன் அமர்ந்து கொண்ட விநாடியிலேயே பின்புறம் சரிந்து உறக்கத்தில் அமிழ்ந்தான்.

மெர்ஸி மார்ச்சுவரியை நோக்கி நடந்தாள்.

கதவில் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

அவள் பூட்டைத் தொட்டதும் 'கிளிக்' என்ற சத்தத்துடன் பூட்டுத் திறந்து கொண்டது. உள்ளே நுழைந்தாள்.

மார்ச்சுவரியின் துர்நாற்றம் அவளைக் கொஞ்சம் கூட பாதிக்கவில்லை. முன்புறமாக முன்னேறினாள்.

அந்த ஹாலின் மூலைக்குச் சென்றவள் மூடி வைத்திருந்த உடல் ஒன்றை நெருங்கியதும் நின்றாள். துணியைக் கையால் உருவினாள்.

அங்கு இருந்தது மெர்ஸி ஜானின் உடம்புதான். டாக்டர் மெர்ஸி ஜார்ஜின் உடலில் புகுந்து கொள்வது என்று அவள் தீர்மானித்தபிறகு, அதுவரை எங்கெங்கோவெல்லாம் ஒளித்து வைத்த தன்னுடலை, கடைசியாக மார்ச்சுவரியின் மூலையி லேயே மறைத்து வைத்தாள். அது சட்டென்று எவரது கண்ணுக்கும் புலப்படாத இடமும் கூட.

மேற்கொண்டு அந்த உடம்பு தேவையில்லை. தப்பித் தவறி யாராவது அதைப் பார்த்து விட்டால், பிரச்சினைதான்.

தன் கையிலிருந்து ஆசிட்டை முதலில் முகத்தில் ஊற்றினாள்.

பிணத்தின் மீது ஊற்றப்பட்ட ஆசிட் சற்று நேரத்துக்குள் துரைத்துப் பொங்கியது. அந்த பாட்டிலை அங்கேயே போட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறினாள்.

வாட்ச்மேன் அப்போதும் நல்ல உறக்கத்திலிருந்தார்.

"என்ன தூங்கிட்டிங்களா?" அவள் கேட்டாள்.

அவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான்.

மெர்ஸி மருத்துவமனைக்குள் சென்றாள்.

அலுவலக அறைக்குள் போய் அமர்ந்தபோது நர்ஸ் வல்சம்மா வந்தாள்.

"டாக்டர், உங்களைத்தான் தேடிட்டு வர்றேன். எங்கே போயிட்டீங்க? பதினேழாம் நம்பர் பேஷண்ட் வயித்து வலியால துடிக்கிறாங்க."

"தூங்கறதுக்கு மருந்து குடுங்க."



"ஏற்கெனவே ஃபினோ குடுத்திருக்கு!"

"சரி, நான் வர்றேன்" -மெர்ஸி எழுந்து வார்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

தொலைவிலேயே நோயாளி படும் வேதனையின் குரல் தெளிவாகக் கேட்டது.

நோயாளியின் அருகே சென்றவள், அங்கிருந்த ஸ்டூல் ஒன்றில் அமர்ந்து நோயாளியின் கையைப் பிடித்துக் கொண் டாள். பிறகு கேட்டாள்: "இப்ப வலி குறைஞ்சிருக்கணுமே!"

மந்திரத்தால் நின்றது போல் வலி சட்டென்று மறைந்து போனது.

"இப்ப வலிக்கலைங்க டாக்டர். இதமா இருக்கு." நோயாளி பதிலளித்தாள்.

"அப்பப் படுத்துத் தூங்குங்க." மெர்ஸி எழுந்தாள்.

அவள் வெளியேறிய உடனே வலியால் துடித்த நோயாளி, பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த பெண்மணி யிடம் சொன்னாள்: "என்ன ஆச்சரியம் பாருங்க... டாக்டர் வந்து தொட்டதுமே வலி போயிடுச்சு!"

மறுநாள், மதியத்தில் மருத்துவமனை வளாகத்துக்குள் ஒரு செய்தி பரவியது.

பிணவறையில் ஓர் உடம்பு ஆசிட் ஊற்றிச் சிதைக்கப்பட் டிருக்கிறது. அந்த உடலை அடையாளம் கண்டுபிடிப்பதும் சிரமமாக உள்ளது. பதிவுப் புத்தகத்தில் அப்படி ஒரு பிணம் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை. ஒரு சில நாட் களுக்கு முன் காணாமல் போன பிணமாக அது இருக்குமோ என்ற சந்தேகமும் உள்ளது.

பத்திரிகைகளில் செய்தி வெளியானபோது, யாரோ ஒரு மர்ம நபர் மருத்துவமனைக்குள் புகுந்து இதையெல்லாம் செய்வதாகப் பேச்சு எழுந்தது.

இதைத் தொடர்ந்து மருத்துவமனை வளாகத்தில் போலீஸ் காவல் போடப்பட்டது. இரவும் பகலும் ஆயுதம் ஏந்திய போலீஸார் காவலிலிருந்து, சந்தேகப்பட்டவர்களையெல் லாம் மிரட்டி விசாரித்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மெர்ஸியைப் பற்றி நோயாளிகள் மத்தியில் நல்ல பெயர் ஏற்படத் தொடங்கியது.

'நோயாளிகளிடம் அன்பாக நடந்து கொள்கிறார். மருந்து களை வீணாக எழுதித் தந்து செலவு ஏற்படுத்துவதில்லை. வலியேற்படும் பகுதிகளில் வெறும் கையாலேயே தொட்டு குணப்படுத்துகிறார்' என்றெல்லாம் பலவாறாகப் பேசி னார்கள்.

"மொத்தத்துல ஆஸ்பத்திரி முழுக்க மெர்ஸிக்கு நல்ல பேருன்னு கேள்விப்பட்டேன்." டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் வீட்டில் டைனிங் டேபிளில் எல்லோருடனும் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கும்போது தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார்: "நல்ல சர்ட்டிஃபிகேட்!"

"உண்மையாகவே என்னோட சர்ட்டிஃபிகேட் ரொம்ப நல்லதாச்சே!" மெர்ஸி சிரித்தவாறே சொன்னாள்.

"ஆமாம்... உண்மைதான். அது எங்களுக்குத்தான் தெரியும்!" ஷிபு உரத்த குரலில் சிரித்தபடி கூறினான்.

"இப்படி அட்டகாசமா சிரிக்கிறதுக்கு என்ன இருக்கு? என்னோடா சர்ட்டிஃபிகேட் ஒரிஜினல்தான்! அதில் என்ன சந்தேகம்?" மெர்ஸி வேண்டுமென்றே கேட்டாள்.

"ரொம்ப அலட்டிக்காத! நாங்க மட்டும் இல்லேன்னா, அப்பத் தெரிஞ்சிருக்கும்!" ஷிபு விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

"அந்தப் பெருமையை எல்லாம் நீ ஒருத்தனே எடுத்துக் காத. எல்லாம் அந்த கிளார்க்கோட கெட்டிக்காரத்தனம். அந்த ஆள் இல்லேன்னா எதுவுமே நடந்திருக்காது!"



அம்மா குறுக்கே புகுந்து சூழ்நிலையை சகஜமாக்க முயன்றாள்.

"ஓகோ... அதுதான் விஷயமா? சர்ட்டிஃபிகேட், மார்க் லிஸ்ட் எல்லாத்தையும் அவர்தானே வாங்கித் தந்தார்." மெர்ஸி, ஷிபுவைப் பார்த்தபடி கேட்டாள்.

அவள் பார்வை, அவன் கண்களுக்குள் பதிந்தது. அவன் ஒரு விநாடி திக்குமுக்காடிப் போனான். பத்து விநாடிகள் மூச்சுவிடவே முடியாமலானது போல் உணர்ந்தான். மூளைக் குள் இரண்டு ஊசிகளைக் குத்தியிறக்குவது போல் வேதனை ஏற்பட்டது.

"பயங்கரமான தலைவலி!" -அவன் பாதிச் சாப்பாட்டி லேயே எழுந்தான்.

"என்ன ஷிபு, என்ன ஆச்சு?" அம்மா கேட்டாள்.

"சின்னத் தலைவலிதாம்மா!" -என்றவாறு இடது கையால் நெற்றியை அழுத்திப் பிடித்தபடி கையலம்பப் போனான்.

"உங்க ஹாஸ்பிடல்ல என்ன பிரச்சினை? ஒரே பரபரப்பா இருக்கே." பேச்சைத் திசை திருப்புவதற்காக அம்மா நான்ஸி முயன்றாள்.

"விசாரணை பண்றாங்க போல இருக்கே!" -ஜார்ஜ் செபாஸ் டியன் சுவாரஸ்யமில்லாமல் கூறினார்.

ஷிபு, தனது படுக்கையில் போய்ப் படுத்த பிறகும் மெர்ஸி யின் கண்கள் அவன் தலையிலிருந்து விடுபடவில்லை என்றே தோன்றியது. அது ஜொலித்துக் கொண்டிருப்பது போல் ஆழமாகப் பதிந்திருந்தது.

"அப்பா... என்ன ஒரு பார்வை?" அவன் முனகிக் கொண் டான். அதை நினைக்க நினைக்க அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அத்துடன் அந்தச் சிந்தனைகள் மாதா கோயி லில் ஊழியம் புரியும் ஜானின் மகள் மெர்ஸியைப் பற்றிய

தாகவும் இருந்தது. சர்ட்டிஃபிகேட்டைப் பற்றிப் பேசிய போதுதான் அந்த எண்ணமும் அவனுள் எழுந்தது.

அத்துடன் சொந்தச் சகோதரியின் பார்வையே அவனை மற்றொரு சிந்தனைக்கு ஆளாக்கவும் செய்தது.

மெர்ஸி தனது அறைக்குள் படுத்திருக்கும்போது ஷிபு சொன்னதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். "கிளர்க் விஜயன்!" -அவள் பல்லைக் கடித்தபடி அந்தப் பெயரை உச்சரித்தாள்.

மறு நாள் காலையில் அவள் காரை ஸ்டார்ட் செய்தாள். டாக்டர் ஆபிரகாமின் புத்தகத்தை டாஷ் போர்டின் மீது வைத்தாள். அதைப் பார்த்தபோது அவளுக்கு ஒரு புதிய சக்தி கிடைப்பதாகத் தோன்றியது.

மருத்துவமனைக்கு வந்தவள் சற்றும் தாமதிக்காமல் ரவுண்ட்ஸுக்குப் புறப்பட்டாள்.

வழக்கம் போல் வேலைகள் நடைபெற்றன.

அவளின் அண்மையில் நோயாளிகள் இதமடைந்தனர். எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு அலுவலக அறையில் வந்து அமர்ந்தாள்.

அதற்காகவே காத்திருந்தது மாதிரி டெலிபோன் மணி யடித்தது.

டாக்டர் பாலகிருஷ்ணன் மகப்பேறுப் பிரிவின் சீஃப். ஒரு ஆபரேஷன் தொடர்பாகப் பேசினார். அவருக்குத் திடீரென்று உடல் நலமில்லாமல் போனதால் உடனடியாக ஆபரேஷன் தியேட்டருக்கு வர வேண்டும் என்றார்.

நர்ஸ் ரமணியை அழைத்து தகவலைச் சொல்லிவிட்டு, மெர்ஸி ஆபரேஷன் தியேட்டரை நோக்கி நடந்தாள்.

நேரம் கடந்தும் பிரசவம் ஆகவில்லை.



சற்றுச் சிக்கலான கேஸ் அது. நோயாளி மிகவும் பலவீன மாக இருந்தாள். ஏறத்தாழ மரணத்தை நெருங்கி விட்டிருந் தாள்.

பிரசவம் நடந்தாலும், நடக்காவிட்டாலும் ஆபத்துதான்.

மெர்ஸி உடை மாற்றிக் கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தாள்.

ஆபரேஷனுக்குத் தயாராகப் படுக்க வைக்கப்பட்டிருந்த பெண்மணியின் அருகே சென்றவள், அவளின் அடிவயிற்றுப் பகுதியில் தன் இரண்டு கைப் பகுதிகளையும் மெதுவாக வைத்து அழுத்தினாள்.

குழைந்தையின் அழுகைச் சத்தம்.

அவளுக்கு அருகில் நின்றிருந்த மற்றவர்கள் எல்லோரும் டாக்டர் மெர்ஸியைப் பார்த்தனர்.

"அதிசயமான கைராசிதான்!" ஒரு மனதாகத் தங்களது அபிப்பிராயத்தை வெளியிட்டனர்.

வேலையை முடித்துக் கொண்டு டியூட்டி அறையில் வந்து அமர்ந்த மெர்ஸிக்குப் பெருமிதம் தோன்றியது.

வீட்டுக்கு வந்தபோது அன்றைய அவளது ஆச்சரியகர மான நடவடிக்கை குறித்துப் பேச்சு எழுந்தது.

"மெர்ஸி, இதெல்லாம் உனக்கு எங்கே கிடைச்சது?" - அம்மா கேட்டாள்.

தன் மகளின் நடவடிக்கைகளின் காரணம் தெரியாமல் அவளும் மகிழ்ச்சியில் திளைத்தாள். மிகக் குறுகிய காலத்தில் மெர்ஸி இந்த அளவுக்குக் குறிப்பிட்டுப் பேசப்படுவாள் என்று அந்த வீட்டினர் எவருமே உண்மையில் எதிர்பார்க்க வில்லை.

மதிய உணவுக்குப் பிறகு அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது வீட்டுக்கு முன்னால் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஓர் ஆணும், பெண்ணும் இறங்கினர்.

பெண் கர்ப்பிணியாக இருந்தாள். நீண்ட தொலைவு பயணம் செய்து வந்திருக்கிறார்கள் என்று தோன்றியது.

மெர்ஸியிடம், கர்ப்பிணியான தன் மனைவியை செக்கப் செய்வதற்காக வந்திருந்தனர். இதற்கு முன் அவளைத் தேடி யாருமே வீட்டுக்கு வந்ததில்லை.

அம்மா வந்து எழுப்பியதால் மெர்ஸி படுக்கையிலிருந்து எழுந்து வந்தாள்.

"நீங்க ஹாஸ்பிட்டலுக்கு வர்றதுதான் நல்லது?" -அவள் கேட்டாள்.

"இங்க உங்களைத் தனியாப் பார்க்கிறதுதான் நல்லதுன்னு நினைச்சோம். முதல் பிரசவம்" -வந்தவர் கூறினார்.

"சரி... வாங்க" -மெர்ஸி அந்தப் பெண்ணை வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.

அப்பா, நோயாளிகளைச் சந்திப்பதற்காக ஒதுக்கியுள்ள அறைக்கு வந்தவள், கர்ப்பிணியின் அடிவயிற்றைப் பார்த் தாள்.

மெர்ஸியின் பார்வை எக்ஸ்ரே போல் ஊடுருவியது.

கருப்பைக்குள் கிடக்கும் குழந்தையின் தலைப் பகுதியில், கருப்பையின் உட்புறம் எழுந்த கட்டியொன்று உரசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

கர்ப்பிணிப் பெண்ணை அழைத்துக் கொண்டு அறையி லிருந்து வெளியேறினாள்.

அவள் கணவனைத் தனியே அழைத்துக் கூறினாள்: "கொஞ்சம் சிக்கலான விஷயம்தான்!"

"நான் என்ன செய்யணும் டாக்டர்?" கணவர் திகைப் படைந்தவராகக் கேட்டார்.



"ஒரே நேரத்துல ரெண்டு ஆபரேஷன்கள் செய்யணும். இல்லேன்னா ஆபத்து."

எனவே, இருவரும் மருத்துவமனைக்குக் கிளம்பினர். வழியிலேயே மற்றொரு டாக்டரான மேரி ஜோசபின் வீட்டுக்கு முன்னால் காரை நிறுத்தினர்.

மெர்ஸியைச் சந்தித்து விட்டு வருவதையும் தெரிவித்தனர். அவர்கள் சொன்னதைக் கேட்டு அவர் சிரித்துக் கொண்டார்.

"என்ன டாக்டர் சிரிக்கிறீங்க?" கணவர் கேட்டார்.

"எந்த விதமான டெஸ்ட்டும் நடத்தாம கர்ப்பப் பைக்குள் இருக்குற கட்டியைப் பத்திச் சொல்றதானா... மெர்ஸி ரொம்ப வும்... சரி அதெல்லாம் இருக்கட்டும். நான் ஒரு தடவை செக்கப் பண்ணிடுறேன்."

ஐந்து நிமிட நேரத்துக்குப் பிறகு, "பயப்படுற அளவுக்கு எதுவுமில்லை. நான் எழுதித் தர்ற மாத்திரையை மட்டும் தவறாமச் சாப்பிடுங்க." -ஒரு துண்டுச் சீட்டில் எழுதிக் கொடுத்தார்.

மறுநாள் டாக்டர் மேரி ஜோசப், மெர்ஸியை மருத்துவ மனையில் சந்தித்தார்.

"என்ன டாக்டர், சமீப காலமா நீங்க கண்ணாலயே எக்ஸ் ரே எடுக்க ஆரம்பிச்சுட்டீங்களா என்ன? மத்தவங்களை யெல்லாம் முட்டாள்னு நெனைக்கறீங்க போலிருக்கே" மேரி, மெர்ஸியைக் கிண்டல் செய்தார்.

"நீங்களெல்லாம் தில்லுமுல்லு பண்ணி டாக்டரானவங்க தானே!" மெர்ஸியின் திடுமென்ற பதில் ஒரு பெரிய பிரச்சினை கிளம்பக் களம் அமைத்துத் தந்தது.

# 5

அதைக் கேட்ட மேரி ஜோசப் அணுகுண்டு மாதிரி வெடித்தார். "ச்சீ... என்ன வார்த்தை பேசுறே?"

"நான் சொன்னதுல என்ன தப்பு? மார்க் ஷீட்டைத் திருத்தித்தான் நீங்கள்லாம் இந்த நிலைக்கு வந்திருக்கீங்க. பிளஸ் டூவுல ஜுவாலஜி பாடத்துல வெறும் பதினஞ்சு மார்க் வாங்கிட்டு அதை நூத்துப் பதினஞ்சா திருத்தலையா?" -மெர்ஸியும் விடுவதாக இல்லை.

அதற்குள் அவர்களைச் சுற்றி ஆட்கள் குழுமத் தொடங் கினர் நர்ஸுகள், நோயாளிகளைப் பார்க்க வந்த பார்வை யாளர்கள், நோயாளிகள் என்று விரைவிலேயே ஒரு கூட்டம் சேர்ந்தது.

நிலவரம் கலவரமானது.

சத்தத்தைக் கேட்டு நர்ஸ் தங்கம்மா ஓடி வந்தாள். அங்கி ருந்தவர்களிலேயே வயது அதிகமானவள் அவள்தான். அங்கிருப்பவர்களில் சீனியரும் கூட.

"நீங்களே இப்படியெல்லாம் ஆரம்பிச்சுட்டா எப்படி?" என்று குறுக்கே வந்த தங்கம்மா, மேரி ஜோஸபின் கையைப் பிடித்து இழுத்து, அங்கிருந்து கிளப்ப முயன்றாள்.

"விடு... அவள் ரொம்பத்தான் ஆடுறா... ஏதோ ஒண்ணு ரெண்டு கேஸ் எதிர்பாராம குணமடைஞ்சுட்டதால இவ்வளவு ஆட்டம் கூடாது!" -டாக்டர் மேரி முணுமுணுத்தாள்.

மிகக் குறுகிய நேரத்துக்குள் அந்தச் சண்டை ஆஸ்பத்திரி முழுவதும் பரவியது.



சற்று நேரத்துக்குள் அந்த இருவரையும் ஆர்.எம்.ஓ. ஆளனுப்பி அழைத்து வரச் சொன்னார்.

"உங்களுக்குள்ள என்ன பிரச்சினை? முதல்ல அதைச் சொல்லுங்க." அவர் கேட்டார்.

மெர்ஸி, மற்ற இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"நீங்களாவது சொல்லுங்க மேரி!" அவர் மறுபடியும் கேட்டார்.

"கருப்பையில கட்டி இருக்கிறதா சொல்லி வீணா ஒரு நோயாளியைப் பயப்படுத்திட்டாங்க மெர்ஸி. அதுவும் வீட் டுலயே பார்த்து. எந்த விதமான டெஸ்ட்டும் பண்ணாம..."

"என்னங்க மெர்ஸி, இவங்க சொல்றது உண்மையா?" ஆர்.எம்.ஓ. கேட்டார்.

"நான் அப்படிச் சொன்னது உண்மைதான். சந்தேகமிருந்தா எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால் தெரிஞ்சுடுமே!" மெர்ஸி தன் பக்க நியாயத்தை எடுத்துரைத்தாள்.

"அது சரி, இந்த விஷயத்தை உங்களால எப்படி இவ்வளவு கரெக்டா சொல்ல முடிந்தது?"

"அதெல்லாம் தெரியாது. ஆனால், நான் சொன்ன தகவல் உண்மை. உடனடியா ஆபரேஷன் நடத்தலேன்னா அந்தம்மா உயிருக்கு ஆபத்து!"

"அந்த அளவுக்கு உறுதியாவா சொல்றீங்க?" ஆர்.எம்.ஓ. விசாரித்தார்.

"எந்தவிதமான சந்தேகமும் இல்லாமே..."

"சரி, அப்படியானால் இந்த கேஸை நானே ஸ்டடி பண்ணிப் பார்க்குறேன்." ஆர்.எம்.ஓ. ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

உடனடியாக குறிப்பிட்ட கர்ப்பிணியை எக்ஸ்ரே ரூமுக்கு அனுப்பி வைத்தார்.

"ரிசல்ட் வரட்டும். அதைப் பார்த்துட்டுதான் நான் இங் கேருந்து நகருவேன்." மேரி ஜோசப் வீம்புடன் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

"நானும் அதையேதான் சொல்றேன்." மெர்ஸியும் விட்டுக் கொடுக்க விரும்பாதவளாக மற்றொரு நாற்காலியில் அமர்ந்தாள்.

அரைமணி நேரத்துக்குள் அவர்கள் காத்திருந்த எக்ஸ்ரே ரிசல்ட் வந்தது.

'கார்ப்பப் பையில் ஆபத்தான கட்டி ஒன்று உள்ளது. உட னடியாக அறுவைச் சிகிச்சை அவசியம்!' என்றது ரிப்போர்ட்.

ஆர்.எம்.ஓ. எக்ஸ்ரே மற்றும் ரிப்போர்ட்டை மேரி ஜோச பின் முன்பாக நகர்த்தினார். மேரி அதையெடுத்துப் பார்த்தார். பிறகு வியப்புடன் மெர்ஸியின் பக்கமாகத் திரும்பினார்.

"நான் சொன்னது உண்மைன்னு இப்ப நிரூபணம் ஆகி டுச்சா?" என்று கேட்ட மெர்ஸி, மேரி ஜோசபைக் கடுமை யாகப் பார்த்துவிட்டு அங்கிருந்து வெளியேறினாள்.

வழக்கம் போல் அன்றிரவும் டைனிங் டேபிளில் அவள் அப்பா டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் மருத்துவமனையில் நடந்த சம்பவத்தைக் கூறினார்.

"ஆமாம்மா, நீ எதுக்காக அந்த டாக்டர் மேரி ஜோசபை அவமானப்படுத்துற மாதிரி பேசினே?" -ஜார்ஜ் கேட்டார்.

"நான் சொன்னதெல்லாம் உண்மைதான். பிளஸ் டூவுல வாங்கின மார்க்கும், அதை அவங்க திருத்துனதும், எம்.பி.பி. எஸ்.ஸி -ல ஸீட் வாங்குனதும் எல்லாமே உண்மைதான்!" மெர்ஸி பிடிவாதத்துடன் பேசினாள்.

"பரஸ்பரம் சேத்தை வாரி இறைக்கிறதுல அர்த்தமில்லை. அது நல்லதுமில்லை." டாக்டர் ஜார்ஜ் அறிவுரை கூறினார்.

"எனக்குத் தெரியும் இந்த மெர்ஸி ஜார்ஜ்கூட, மாதா கோயில்ல வேலை செய்யுற மேரி ஜானோட சர்ட்டிஃபிகேட்



டைத் திருத்தித்தான் பாஸாயிருக்கிறா." பேச்சோடு பேச்சாக இதையும் சொல்லவே செய்தாள்.

அதன் பிறகு அவள் கோபம் கொண்டவளைப் போல் நேராகத் தனது படுக்கையறையை நோக்கி நடந்தாள்.

"என்னமோ தெரியலை... கொஞ்ச நாளா இவள் இப்படித் தான் நடந்துக்கிறாள்." அம்மா நான்ஸி குறிப்பிட்டாள்.

"உண்மை. வரம்பு மீறித்தான் நடந்துக்கிறா." அப்பாவும் அதை ஆமோதித்தார்.

மருத்துவமனையில் அசிங்கப்பட்டது மேரி ஜோசபைப் பொறுத்தவரை பலத்த அடியாக இருந்தது. வீட்டுக்கு வந்தவுடன் தனது மொத்த ஆத்திரத்தையும் கணவனிடம் கொட்டித் தீர்த்தாள்.

டி.எஸ்.பி-யான ஜோசப் பல்லைக் கடித்தபடி அதையெல் லாம் கேட்டுக் கொண்டார்.

"இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை பாரு... அதுதான் அவளோட நோய். நான் போய் நேராவே கேட்டு வரட் டுமா?" இருக்கையிலிருந்து எழுந்து உடையணியத் தொடங் கினார்.

"வேண்டாங்க! நாமளா எந்த வம்புக்கும் போக வேண டாம். அவங்களும் சாதாரணமானவங்க இல்லை. அப்பனும் மகளும் அப்படிப்பட்ட இடத்துல இருக்காங்களே..." மேரி அவரைத் தடுத்தார்.

"உனக்கு அது உறைக்காம இருக்கலாம். நாலு பேருக்கு முன்னால இந்த மாதிரி கேட்டுட்டா, என்னால தாங்கிக்க முடியாது. என்ன இருந்தாலும் இந்த வார்த்தைக்குப் பழிவாங் கியே தீருவேன்!"

"அதுக்கு நீங்கதான் போகணுமா? உங்களைவிட பலசா லிங்க எத்தனை பேர் இருக்காங்க?"

"அதுவும் சரிதான்!" என்று யோசனையில் ஆழ்ந்த ஜோசப் தனது திட்டத்தைக் கைவிட்டார்.

மூன்று நாட்கள் கடந்தன.

மெர்ஸி மருத்துவ மனையிலிருந்து கிளம்பி காரில் ஏறினாள். அப்போது வயதான ஒரு பெண்மணியுடன் இளை ஞன் ஒருவன் அவளது காரை நெருங்கினான்.

"டாக்டர்... நீங்கதான் காப்பாத்தணும். இல்லேன்னா என் மகள் செத்துப் போயிடுவா..." வயதான பெண்மணி கெஞ்சும் குரலில் பேசினார்.

"என்ன விஷயம்?" மெர்ஸி கேட்டாள்.

"பிரசவம்தான். எனக்கு ரொம்ப பயமா இருக்கு. பாதிப் பிரசவத்துல நிக்குது. கொஞ்சம் என் கூட வந்தீங்கன்னா பரவாயில்ல. கார் கொண்டு வந்திருக்கோம்."

"வேண்டாம். நான் என்னோட கார்லேயே வர்றேன்." என்றவள் அவர்களுக்காக காரின் கதவைத் திறக்க முயன்றாள்.

"பாதை ரொம்ப மோசம்" இளைஞன் முதல் தடவையாகப் பேசினான்.

ஒரு விநாடி யோசித்தவள், அவர்களது காரிலேயே ஏறிக் கொண்டாள்.

இருள் பரவத் தொடங்கியிருந்தது. அந்த இளைஞன்தான் காரைச் செலுத்தினான்.

கேட் ஒன்றைக் கடந்து இரண்டடுக்கு கட்டடத்தின் முன்னால் கார் நின்றது.

அது ஒரு பழங்காலக் கட்டடம்.

"வாங்க டாக்டர்" -பெண்மணி அழைத்தார்.

மெர்ஸியை அவர்கள் அந்தக் கட்டடத்தின் மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். கதவு திறந்திருந்த ஓர் அறை



வாசலை அடைந்ததும் தலையிலிருந்து கால்வரை இழுத்துப் போர்த்திப் படுத்திருந்த உருவத்தைச் சுட்டிக் காட்டினார்கள்.

மெர்ஸி அந்த அறைக்குள் நுழைந்தவுடன் கதவு வெளிப் புறம் தாழிடப்பட்டது. மெர்ஸி அதைப் பொருட்படுத்த வில்லை.

அவள் கட்டிலை நெருங்கிக் குனிந்தாள். சட்டென்று கட்டி லில் படுத்திருந்த உருவம் துள்ளியெழுந்து, மெர்ஸியை வலுக்கட்டாயமாகக் கட்டிலில் தள்ளியது. அவள், அவனிட மிருந்து தப்பிக்க ஆனமட்டும் முயன்றாள். கடைசியில் சோர்ந்து போனாள்.

"இதை முதல்லேயே செஞ்சிருந்தா, வீணா ஒரு மல்லுக் கட்டைத் தவிர்த்திருக்கலாம்."

அவன் அவள் உடலைத் தழுவினான்.

கடிகாரத்தில் மணியடித்தது.

"டிங்... டாங்... டிங்... டாங்"

அவன் கடிகாரத்தைப் பார்த்தான்.

விநாடி முள் பின்பக்கமாகச் சுழன்று கொண்டிருந்தது. தான் காண்பது கனவா என்று அவன் ஒரு கணம் குழம்பினான்.

"என்ன இது... ஏன் இப்படி?" -அவன் சுவர்க்கடிகாரத் தைப் பார்த்தபடி தடுமாறினான்.

"அதுவா... அது அப்படித்தான்!" மெர்ஸியின் உடல் விறைப்பு அடைந்தது. அவனை ஒரு கையால் புரட்டிப் போட்டாள். ஒரு வைக்கோல் மாதிரி அவன் புரண்டான். அவள் கைகள் இரண்டும் அவன் கழுத்தில் பதிந்தன.

அவன் தனது மொத்த உடல் வலுவையும் பயன்படுத்தி அவளிடமிருந்து திமிறினான். ஆனால், முடியவில்லை.

அவன் நாக்கு வெளிப்புறமாக நீண்டது கண்கள் துருத்திக் கொண்டு வந்தன. சற்று நேரத்துக்குள் அந்த உடலின் மொத்

தத் துடிப்புகளும் அடங்கி விட்டன. மெர்ஸி அந்த உடலை இழுத்துக் கொண்டு போய் பாத்ரூமில் போட்டுவிட்டு புடவையால் உடலைப் போர்த்திக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

"அவர் நல்லாத் தூங்குறார்!" வாசலின் வெளியே நின்றிருந்தவனிடம் சொன்னாள்.

"இருக்கும்... ரொம்பத்தான் களைச்சுப் போயிருப்பார்" - என்றவாறே அவன் மெர்ஸியின் கையைப் பிடித்தான். அப்படியே மற்றொரு அறைக்குள் அழைத்துச் சென்றான்.

அவளைக் கட்டிலில் தள்ளி விட்டுச் சொன்னான். "ஜோசப் சார் சொன்னபோது நான் நம்பலை!"

"அப்படி என்ன சொன்னார்?" மெர்ஸி கேட்டாள்.

"நல்ல உருப்படின்னார். எங்களோட டிபார்ட்மெண்ட்ல இப்படியெல்லாம்தான் பேசிக்குவோம், மன்னிச்சுக்கங்க டாக்டர்."

"மன்னிக்க வேண்டியதுதான்."

அவன் மூச்சில் மதுவாடையடித்தது.

அவனும் டாக்டரை விடவில்லை.

கடைசியில் அவன் எழுந்திருக்க முயன்றபோது அவள் விடவில்லை. அவள் கைகள் அவனை அப்படியே நெரித்தன. முதலில் அதையும் ஒரு வித்தை என்று நினைத்தவன், மூச்சுத்திணற ஆரம்பித்ததும் திடுக்கிட்டான். திமிறி விடுபட முயன்றான். கால்கள் மட்டும் துடித்தன. திடுமென்று சுள்ளிகள் உடைபடுவது போன்ற சத்தம் கேட்டது. அவன் விலா எலும்புகள் உடைபட்டன.

மறு விநாடி அவனும் அசைவற்றுப் போனான்.

அவனைத் தன் உடம்பிலிருந்து கீழே தள்ளிவிட்டு அவள் எழுந்தாள். புடவையை உடுத்திக் கொண்டு வெளியே வந்தாள். நல்லவேளையாக அங்கு வேறு யாரும் தட்டுப்படவில்லை. அவளை அழைத்து வந்தவர்கள் கூட இல்லை.



மறுபடி பழைய அறைக்கே வந்து உடைகளை யெல்லாம் அணிந்து கொண்டாள்.

மனிதர்கள் வசிக்காத ஒரு பாழடைந்த வீடு அது. டாக்டர் மேரி ஜோசப்தான் இதற்கெல்லாம் காரணம் என்பதும், கணவர் மூலமாகத் தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாள் என்பதும் விளங்கியது.

படிகளில் இறங்கிக் கீழ்த்தளத்துக்கு வந்ததும் வாசலில் ஜீப் ஒன்று நின்று கொண்டிருந்தது. சாவியும் அதிலேயே இருந்தது. ஜீப்பை ஸ்டார்ட் செய்து 'கேட்' டைக் கடந்தாள். நகரின் விசாலமான தெருவின் துவக்கத்தில் இருந்த நர்சரிப் பள்ளிக்கூடத்தின் முன்னால் ஜீப்பை நிறுத்திவிட்டு இறங்கினாள். ஆட்டோ அமர்த்திக் கொண்டு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தாள். பிறகு காரில் ஏறி வீடு வந்து சேர்ந்தாள்.

வந்தவுடன் குளித்தாள். பிறகு உடை மாற்றிக் கொண்டு மீண்டும் காரில் ஏறினாள்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை. அவளது விடுமுறை நாளும் கூட. காரைக் கிளப்பிக் கொண்டு போலீஸ் மைதானத்தைச் சுற்றி வந்து நிறுத்தினாள்.

அதன் அருகில்தான் மாதா கோயில் இருந்தது. மாதா கோயில் வாசலைப் பார்த்தபடி நின்றாள்.

"என்ன டாக்டர் இங்கே?" -காரில் வந்த யாரோ ஒருவர், காரை நிறுத்திக் குசலம் விசாரித்தார்.

"ஒருத்தரைப் பார்க்க வேண்டியிருக்கு."

மாதா கோயிலை ஒட்டிய அறை ஒன்றிலிருந்து கோராஸாகப் பாடும் சத்தம் சன்னமாகக் கேட்டது. க்வயர் பிராக்

டீஸ் நடந்து கொண்டிருக்கிறது. மெர்ஸி ஜானும் ஒரு காலத்தில் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தாள். நன்றாகப் பாடுவதால் அவளுக்குத்தான் முதலிடம்.

நன்றாக ஹார்மோனியம் வாசிக்கும் வில்சனும் பாடக் கூடியவன். அவன்தான் இப்போதும் பாட்டுப் பயிற்சியை நடத்திக் கொண்டிருப்பவன்.

மெர்ஸி ஜானும் வில்சனும் ஒருவரை ஒருவர் விரும்பினர். எலெக்ட்ரிசிட்டி போர்டில் ஓவர்சியராக இருந்த வில்சன் மெர்ஸியைத் திருமணம் செய்து கொள்வது எல்லோருக்குமே மகிழ்ச்சியான விஷயமாக இருந்தது. அவள் படிப்பு மட்டும் முடிந்து விட்டால், மாதா கோயில் நடத்தும் பள்ளிக்கூடத்திலேயே வேலை தருவதாகவும் பாதிரியார் கூறியிருந்தார். ஆனால், எல்லா ஆசைகளும் மொத்தமாகத் தொலைந்து போனதே!

மெர்ஸி ஜானின் மரணம் வில்சனை பெருத்த ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியது. எத்தனையோ பேர் பெண் கொடுக்க முன் வந்தபோதும் வில்சன் திருமணம் செய்ய ஒப்புக் கொள்ளவில்லை. அந்த விஷயத்தில் அவன் மாற்ற முடியாத பிடிவாதக்காரனாக இருந்தான்.

இப்போது வில்சன் அசிஸ்டெண்ட் எக்ஸிகியூட்டிவ் இன்ஜினீயர்.

மெர்ஸி, மாதா கோயிலை நோக்கி நடக்க இரண்டு தடவைக்கு மேல் முயன்றாள். ஆனாலும் கால்கள் நகர மாட்டேன் என்றன.

க்வயர் முடிவடைந்து விட்டதாகத் தோன்றியது. அதோ வில்சன் வருகிறான்.

மெர்ஸி ஜார்ஜ் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன், அவளை நெருங்கினான்... மிக அருகில்...

# 6

வில்சன் நெருங்கி வந்தான்.

அருகில் வந்தவன் ஒரு தடவை மெர்ஸியை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, நெற்றியைச் சுளித்துக் கொண்டு அவன் பாட்டுக்கு நடந்து போனான்.

வில்சனிடம் குறிப்பிடத் தக்க அளவில் எந்த மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. உயரமான, மெலிந்த உடல். மாநிறம், வணங்காத தலைமுடி, அலட்சியமாக அவன் நெற்றியில் கொத்தாக விழுந்திருந்தது. சீர்படுத்தப்படாத மீசை. சாதாரணமாக வெள்ளைச்சட்டைதான் அணிவான்.

கறுப்பு பாண்ட் -வெள்ளைச் சட்டை. இன் செய்திருந்தான். நாற்பது வயதானாலும் பார்வையில் இன்னும் குறைவாகத் தெரிந்தான். அவன் பார்வையில் எப்போதும் ஏமாற்ற உணர்வு தட்டுப்படும்.

ஜானின் மகளான மெர்ஸியை அவன் மனமார நேசித்தான். பொருளாதார ரீதியாக அவள், அவனைவிடத் தாழ்ந்திருந்தாலும் அவள் அழகும், குணங்களும், பாடும் திறனும் அவனுக்குப் பிடித்திருந்தன. அதனாலேயே நெருங்கிப் பழகவும் செய்தான்.

அவன் சாலையின் வளைவை நெருங்கியபோது, மெர்ஸி காரில் ஏறி மெதுவாகச் செலுத்தி அவனுக்கு அருகில் சென்றாள். ஹாரனை மெதுவாக அழுத்தினாள்.

வில்சன் திரும்பிப் பார்த்தான்.

"கொஞ்சம் நில்லுங்கள்!" என்று சொல்லியவாறே அவனுக்கு முன்பாகக் கையை நீட்டினாள். கார் நின்றது.

வில்சன் திரும்பி வந்தான்.

"என்னையா கூப்பிட்டீங்க?" -அவன் கேட்டான்.

"உங்களையேதான். க்வயர் பிராக்டீஸ் முடிஞ்சு போறிங்க போலிருக்கே?" -அவள் கேட்டாள்.

அதைக் கேட்டதும் அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான். அவனுக்கு எதுவும் புரியவில்லை. மட்டுமின்றி, அவன் அதுவரை மெர்ஸி ஜார்ஜைப் பார்த்தது கூட இல்லை.

"ஆமாம்... நீங்கள் யார்? என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரியும்... நான் இப்போ டாக்டர் மெர்ஸி" - அவள் குரலைத் தாழ்த்திக் கொண்டு பேசினாள்.

"மெர்ஸி" அந்தப் பெயர் வில்சனது மனத்தில் ஒரு பூவம்பு போலப் பாய்ந்தது.

துயரத்துடன், பழைய நினைவுகள் அவனுக்குச் சட்டென்று நினைவுக்கு வந்தன.

"டாக்டர் மெர்ஸியை எனக்குத் தெரியாது. எனக்கு ஒரே யொரு மெர்ஸியைத்தான் தெரியும். ஆனால்... அதெல்லாம் போகட்டும். என்ன விஷயம்?" வில்சன் கேட்டான்.

"நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். முடிஞ்சா நாளைக்கு சாயங்காலம் பார்க்குக்கு வர்றீங்களா?" விண்ணப்பிப்பது போல் கேட்டாள்.

"எனக்கு எதுவுமே புரியலை. நீங்க எதுக்காக என்னைச் சந்திக்கணும் டாக்டர்? நான் பிஸியான ஒருத்தன். வேலை முடிஞ்சதும் பாட்டுக் கத்துக் குடுக்கிறதுக்காகப் பல இடங்களுக்கும் போக வேண்டியிருக்கு."

"நீங்க எலெக்ட்ரிசிட்டி போர்டில எக்ஸிகியூட்டிவ் இன்ஜினீயர்தானே?"

"ஆமாம். உங்களுக்கு எப்படி...?"



"எல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன். சரி, நான் எங்கே வந்தால் உங்களைச் சந்திக்க முடியும்?" மெர்ஸி கேட்டாள்.

"நேரம்னு சொன்னா, இங்க க்வயருக்கு வரும் போதுதான். சனிக்கிழமை சாயந்திரம் வாங்களேன்."

"சரி, ரொம்ப நன்றி. நான் கண்டிப்பா வருவேன்."

வில்சன் திரும்பவும் நடக்கத் தொடங்கினான்.

"ப்ளீஸ் ஒரு நிமிஷம்... உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா நான் உங்களை டிராப் பண்றேனே." -வற்புறுத்தினாள்.

வில்சன் காரில் ஏறிக் கொண்டான்.

"நீங்க பிரைவேட்டா பிராக்டீஸ் செய்யுறீங்களா... இல்லை..." வில்சன் கேட்டான்.

"மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரியிலதான்."

"என்னை இதுக்கு முன்னால பார்த்திருக்கீங்களா?"

"ம்... நீங்க முன்னெல்லாம் இடது புறமா வகிடு எடுத்து பின்பக்கமா தலை வாருவீங்க. ஹார்மோனியம் வாசிக்கும் போது கொஞ்சம் முடி நெற்றியில விழும். அதை இடது கையால் அப்பப்போ ஒதுக்கித் தள்ளுவீங்க." காரைச் செலுத்தியவாறே அவள் சொன்னாள்.

"ரொம்ப ஆச்சரியமா இருக்கே. நீங்க சொல்றதெல்லாம் பத்து வருஷத்துக்கு முன்னால நடந்த சம்பவங்கள்." வில்சன் அவளைப் பார்த்துக் கண்களைச் சுருக்கினான். அவனால், அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மத்திய சந்திப்புப் பகுதியை கார் நெருங்கியபோது வில்சன் இறங்கிக் கொள்வதாகச் சொன்னான்.

"வீட்டுக்கு வர்றீங்களா?"

"இல்லை, மன்னிக்கணும்!" வில்சன் மறுத்தான்.

அவனை இறக்கிவிட்ட பிறகு மெர்ஸி அவனையே ஒரு சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு காரை ஓட்டிச் சென்றாள்.

வில்சன் நேராகச் சென்றது ஒரு 'பாரு'க்குதான். பாரில் உட்கார்ந்தபடியே அவன் மெர்ஸி ஜார்ஜைப் பற்றி நினைத்தான்.

'எதற்காக டாக்டர் மெர்ஸி தன்னைச் சந்திக்க விரும்புகிறாள்?'

இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் நடுக்கமேற்படுத்தும் அந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியானது.

'நகரத்தின் ஒதுக்குப் புறமான பகுதியில் உள்ள பாழடைந்த பழைய வீட்டில்- ஆள் புழக்கமில்லாத பகுதியில்- இரண்டாவது மாடியிலுள்ள அறைகளில் இரண்டு போலீஸ் அதிகாரிகளின் உயிரற்ற உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முறையே கழுத்து மற்றும் விலாப் பகுதிகளை நெரித்ததால் மரணம் ஏற்பட்டதாக போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டுகள் கூறுகின்றன. போலீஸ் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளது.

டாக்டர் மேரி ஜோசப் இரவு நேரச் சாப்பாட்டின்போது கணவரிடம் இதைப் பற்றிப் பேசினாள்.

"அவளை அங்கே கொண்டு போய்ச் சேர்த்ததாத்தான் அந்தம்மாவும் புரோக்கரும் சொல்றாங்க. அங்கே வேற யாரும் இல்லையாம்..." ஜோசப் சொன்னார்.

"ஒருவேளை இவளோட அண்ணன்கள் யாராவது குண்டர்களைக் கூட்டிட்டுப் போயிருப்பாங்களோ?" மேரி சந்தேகம் எழுப்பினாள்.

"அப்படித்தான் இருக்கணும். ஆனால், நாம இதை வெளியில் சொல்ல முடியுமா? வீணா நாமளே போய்ச் சிக்கல்ல மாட்டிக்கிற மாட்டோமா?"



"நான் ஒண்ணு சொல்றேன். அவள் இந்த ஆஸ்பத்திரியில வேலை செய்யுறதே எனக்கு அவமானமாத் தோணுது. எத்தனை பேருக்கு முன்னால என்னை அவமானப் படுத்தியிருக்கிறா?" மேரி, தன் கணவனை உசுப்பி விடுவதில் தீவிரமானாள்.

"அவளும் திருட்டுத்தனமான வழியில டாக்டரானவதானே. அவள் அப்பனும் சிண்டிகேட் மெம்பர்களையெல்லாம் போய்ப் பார்த்தவர்தானே?"

"அதையெல்லாம் பேசி என்ன பிரயோஜனம்? அவள்தான் இப்ப ஹாஸ்பிட்டல்ல கொடிகட்டி வாழுறா! தேவதைன்னுல்ல சொல்றாங்க!"

"அவங்க அப்பன்காரனுக்கு எக்கச்சக்கமான செல்வாக்கு இருக்கு. இல்லேன்னா சுலபமா அவளை ஏதாவது ஒரு தண்ணியில்லாத காட்டுக்குத் தூக்கியடிக்க வைக்கலாம்."

"நடக்கிறதைப் பேசுங்க. அவள் வெச்சிருக்கிறது மாருதி கார். ஒரேயொரு லாரியை செட்டப் பண்ணிட்டா அவளோட கதை முடிஞ்சிடும்!"

"ஆகா... உனக்குக் கூட மூளை இப்படியெல்லாம் வேலை செய்யுதே?" ஜோசப் வியப்பு அடைந்தார்.

"திட்டம் எப்படி?"

"நல்லதுதான். அதையும் பார்த்துடலாம்!" ஜோசப் உறுதி அளித்தார்.

அன்று மெர்ஸிக்கு நைட் டியூட்டி.

மணி எட்டுக்கு மேல் ஆகி விட்டிருந்தது.

யதேச்சையாக அவள் ஜன்னல் பக்கம் பார்த்தபோது ஜீப் ஒன்று வந்து நின்றதையும், அதிலிருந்து மப்டியில் ஒரு மனிதன் இறங்கி வந்ததையும் கவனித்தாள்.

டாக்டரின் அறைக்கு வந்து அந்த மனிதன் மெர்ஸி ஜார்ஜைப் பற்றி விசாரித்தான்.

நர்ஸ் வல்சம்மா இந்தத் தகவலையும் மெர்ஸியிடம் தெரிவித்தாள்.

"ஆள் யாராம் வந்தது?" மெர்ஸி கேட்டாள்.

"சொல்லலை. பார்த்தா போலீஸ்காரர் மாதிரி தெரியுது."

"ம்" என்று மட்டும் கூறியவள் அறையை நோக்கி நடந்தாள்.

வந்திருப்பவர் தனக்கு அறிமுகம் இல்லாத நபர். இருந்தாலும் புன்னகைத்தாள்.

"உங்களுக்கு நான் யாருன்னு தெரியலைன்னு தோணுது" -வந்தவர் சந்தேகத்துடன் இழுத்தார்.

"உண்மைதான்."

"ஒரு தடவை நான் உங்க வீட்டுக்கு வந்திருக்கேன்- ஒரு டின்னருக்காக. அது சுமார் பத்து வருஷத்துக்கு முன்னால. டாக்டர் ராமச்சந்திரனும் அப்ப இருந்தார். அவர் சமீபத்துல யாராலயோ கொலை செய்யப்பட்டார்னும் கேள்விப் பட்டேன்."

அவள் குறுக்கிடாமல் அவர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். ஒரு பொண்ணுக்காக ரிப்போர்ட் ஒண்ணு தயாரிக்க வேண்டியிருந்தது. நான்தான் அப்ப அதைச் செஞ்சேன். அன்னிக்கு நான் சப்-இன்ஸ்பெக்டரா இருந்தேன். பேரு ராஜசேகரன்."

"ஆமாம்.. இப்ப ஞாபகம் வருது. புரிஞ்சிடுச்சு..." மெர்ஸி அவரை ஊன்றிக் கவனித்தாள்.

"இப்ப நீங்க வந்திருக்கிறது?"



"ஒரு பழைய கேஸ் விஷயமா. உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலைன்னு தெரியும்." -வந்தவர் ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

"ஆமாம்! கல்யாணம் பண்ணிக்க வேண்டாம்னு தீர்மானிச்சிருக்கேன். ஓர் ஆம்பிள்ளைக்கு அடிமையா இருக்க வேண்டாமே."

"நீங்க சொல்றதும் சரிதான். சுதந்திரம் பறிபோகாம இருக்கலாம். இன்னிக்கு உங்களுக்கு நைட் டியூட்டிதான் இல்லையா?"

"ஆமாம்... காலையிலதான் வீட்டுக்குப் போக முடியும்."

"அப்படியானா கொஞ்சம் வெளியில போய் காபி சாப்பிட்டு வரலாமா? உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா..."

"நோ... நோ... எனக்கு இதுல எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது. உங்களை மாதிரி உள்ளவங்களோட அழைப்பை நான் ஒருபோதும் தட்டிக் கழிக்கிறதில்லை." -அவள் சிரித்தாள்.

ராஜசேகரன் மிகவும் மகிழ்ந்தார். முற்றிலும் அவர் எதிர்பார்க்காத ஒரு வரவேற்பு கிடைத்தது அவருக்கு.

முன்னர் தான் வஞ்சம் வாங்கிக் கொண்டு செய்த வேலைக்குப் பின்னாளில் இப்படியொரு பிரதியுபகாரம் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்க வில்லைதான்.

"சரி ஒண்ணு பண்ணுங்க. நீங்க வெளிய போய்க் காத்திருங்க. நான் பின்னாடியே வர்றேன். நாம ரெண்டு பேரா வெளியில போறதை வேற யாரும் கவனிக்க வேண்டாம் பாருங்க." மெர்ஸி அவரை ஒரு வழியாக்கத் தீர்மானித்தாள்.

ராஜசேகரன் அங்கிருந்து வெளியேறினார்.

மெர்ஸி, நர்ஸ் ரமணியை அழைத்தாள்.

"என்ன டாக்டர்?"

"நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கணும். வயிறு வேற என்னமோ மாதிரி இருக்கு. அதனால முடிஞ்ச மட்டும் என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம். ரூம்ல இல்லேன்னா டாய்லெட்டில் இருப்பேன். தவிர்க்க முடியலேன்னா மட்டும் கூப்பிட்டா போதும்!"

"சரிங்க."

"நல்லது. நீங்க போகலாம்."

ரமணி நகர்ந்தவுடன் மெர்ஸி அங்கிருந்து வெளியேறினாள்.

சப்-இன்ஸ்பெக்டர் வெளியே ஜீப்பின் அருகே நின்று கொண்டிருந்தார்.

"ஜீப்பிலேயே போகலாமே?" -மெர்ஸி கேட்டாள்.

"அதுதான் நல்லது, நானே உங்களைத் திரும்பவும் இங்கேயே கொண்டு வந்து விட்டுடுறேன்."

"அதெல்லாம் வேண்டாம். நான் தனியாகவே கூட வந்துடுவேன்" -அவள் ஜீப்பில் ஏறி உட்கார்ந்து கொண்டு சாரலைத் தடுக்கும் தார்ப்பாய் கர்ட்டனை இழுத்து விட்டாள்.

ஜீப் புறப்பட்டது.

"என் நண்பனுக்குச் சொந்தமான ஓட்டல் ஒண்ணு இருக்குது. பார் அட்டாச்டு ஓட்டல். அங்கேயே போகலாம் இல்லையா?" ராஜசேகரன், மெர்ஸியின் நோக்கத்தை அறிவதற்காகக் கேட்டார்.

"அங்கேயெல்லாம் வேண்டாம். யாராவது கவனிப்பாங்க. என் சினேகிதியோட வீட்டுக்குப் போகலாம். அவள் தனியாகத்தான் குடியிருக்கிறாள்." -மெர்ஸி கூறினாள்.

நகர எல்லை தாண்டியதும் மெர்ஸி கூறினாள்: "மேற் கொண்டு நான் ஜீப்பை ஓட்டுறேனே!"



ராஜசேகரன் ஜீப்பை நிறுத்திவிட்டு இறங்கி டிரைவர் இருக்கையை அவளிடம் விட்டுக் கொடுத்தார்.

மெர்ஸி பாழடைந்த இரண்டு மாடிக் கட்டடத்தை நோக்கி ஜீப்பைச் செலுத்தினாள்.

"அன்னிக்கு ரிப்போர்ட் தயாரிப்பதற்காக, நீங்க உட்கார்றதுக்குப் போட்டுக் கொடுத்த ஸ்டூலையே, அவள் தற்கொலை செஞ்சுக்கப் பயன்படுத்துன ஸ்டூல்னுகூட ரிப்போர்ட்டுல எழுதினீங்க இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

"அந்த அளவுக்கு நுணுக்கமா ரிப்போர்ட்டைக் கவனிச்சிருக்கிங்களே...!" சப்-இன்ஸ்பெக்டர் பெருமிதத்துடன் கேட்கவும் செய்தார்.

"இல்லாம... அப்படி நீங்க செஞ்சதுதான் நல்லது."

"அந்த ஒரேயொரு ஆதாரம்தான் அது தற்கொலைங்கிறதை உறுதிப்படுத்துச்சு. அதுக்கு மேல எல்லாம் ராமச்சந்திரன் சார் பார்த்துக்கிட்டார்."

ஜீப் விரைந்து கொண்டிருந்தது.

பழைய கேட்டைக் கடந்து ஜீப் இரண்டு மாடிக் கட்டடத்தின் முன்னால் நின்றது.

"வாங்க.. இங்க நமக்கு எந்த விதமான தொந்தரவும் இருக்காது."

இருவரும் அதற்குள் நுழைந்தனர்.

அவரைப் பொறுத்தவரை இது அவர் முற்றிலும் எதிர் பாராத இலவச இணைப்பு.

இரண்டாவது மாடியை அடைந்தனர்.

"அந்த அறைதான் சௌகரியமா இருக்கும்னு நெனைக்கிறேன்" அவரைப் பார்த்துச் சிரித்தவாறே கூறினாள் மெர்ஸி.

அந்த அறை அவளுக்கு மிகவும் பழக்கமானது போல் தோன்றியது. தீப்பெட்டியைத் தேடியெடுத்து மெழுகுவத்தியை ஏற்றினாள். பிறகு கதவை மூடினாள்.

இதையெல்லாம் கவனித்த ராஜசேகரன் உண்மையிலேயே மலைத்துப் போனார்!

'டாக்டர் மெர்ஸி ஜார்ஜ் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்?' முதல் தடவையாக அவர் யோசிக்கத் தொடங்கினார்.

"நீங்க மட்டும் உண்மையை எழுதியிருந்தால், அந்த மெர்ஸி ஜான் கொலை செய்யப்பட்டாள்ங்கிற உண்மை வெளியில தெரிஞ்சிருக்கும் இல்லையா?" -அவள் சாதாரணமாகக் கேட்டாள்.

"கண்டிப்பா! அப்படி ஏதாவது ஆகியிருந்தா உங்க அப்பாவும், அண்ணன்களும் வசமா சிக்கியிருப்பாங்க!" இப்போதும் அவரது குரலில் பெருமிதம் தட்டுப்பட்டது.

மெர்ஸி அவர் முகத்தை ஊன்றிக் கவனித்தாள். அந்தப் பார்வையின் வீச்சு அவர் கண்களை ஊடுருவியது.

"எல்லாத்தை விடவும் ரொம்ப நல்ல விஷயம், அந்தப் பொண்ணே தற்கொலை செய்தாள்னு நீங்க ஜோடிச்சதுதான், இல்லையா?"

"ஆமாம்!"

"நாயே... உன்னை மாதிரி ஆளுங்கதான் இந்த டிபார்ட்மெண்டையே நாசமாக்குறீங்க!" -அவள், அவரை நெருங்கினாள்.

ராஜசேகரன் திடுக்கிட்டார்.

அவள் கண்கள் நெருப்புக் கோளங்கள் போல் ஜொலித்தன.



அவள் கைகள், அவர் கழுத்தைப் பிடித்தன. அவர், அவளிடமிருந்து விடுபடுவதற்கு வீணாக முயற்சிகள் செய்தார்.

"நல்லாப் பாரு... நான் யாருன்னு!" அவள் அலறினாள்.

ராஜசேகரன் அந்த முகத்தை உற்றுப் பார்த்தார். அன்றொரு நாள் கட்டித் தொங்கவிட்ட ஜானின் மகள் மெர்ஸியின் முகமாகவே மாறியிருந்தது அது.

அவர் நாக்கு வெளிப்புறமாக நீண்டது. சற்று நேரத்துக்குள் அந்த உடல் அசைவற்றுப் போனது. அந்த உடலை வெறுப்புடன் கட்டிலில் வீசியெறிந்து விட்டு அவள் அங்கிருந்து வெளியேற முற்பட்டாள்.

அப்போது வெளியே ஏதோ ஒரு வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

## 7

**வ**ண்டியின் சத்தம் கேட்டதுமே மெர்ஸி, இரண்டாவது மாடியிலுள்ள மற்றோர் அறைக்குள் நுழைந்தாள்.

வண்டி நின்றது. இன்ஜினை ஆஃப் செய்த சத்தமும் கேட்டது.

அந்த அறையிலிருந்து வெளியேறிய மெர்ஸி, இருளில் ஒருபுறமாக ஒதுங்கி நின்றாள். இரண்டு ஆண்கள் ஓர் இளம் பெண்ணுடன் மாடியேறி வந்தனர்.

மெர்ஸிக்கு அவர்களை அடையாளம் தெரிந்தது. அவர்களில் ஒருவன் ஜார்ஜ் செபாஸ்டியனின் மூத்த மகன் டோமி. மற்றவன் கல்லூரி குமாஸ்தா விஜயன். அவர்களுடன் வந்தவள் மாணவி போல் இருந்தாள்.

டோமி- விஜயன் நட்பு இன்னும் தொடரவே செய்கிறது என்பது அவளுக்குப் புரிந்தது.

வந்தவர்கள் முதலில் மெர்ஸி இருந்த அறையில் நுழைந்தனர்.

தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த பையிலிருந்து பருமனான மெழுகுவத்தி ஒன்றை எடுத்துப் பற்ற வைத்து அங்கிருந்த மரப்பலகையின் மீது வைத்தான் விஜயன்.

பிறகு ஒரு விஸ்கி பாட்டிலையும் இரண்டு கிளாஸ்கள் மற்றும் இரண்டு பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்களையும், இரண்டு சிப்ஸ் பாக்கெட்டுகளையும் எடுத்து வெளியே வைத்தான்.

மெர்ஸி மறைவாக நின்றவாறே அவர்களைக் கவனித்தாள்.

விஸ்கி பாட்டிலைத் திறந்து ஒரு கிளாஸில் ஊற்றியவன், நிறையத் தண்ணீரை ஊற்றி அந்தப் பெண்ணிடம் கொடுத்தான்.

அவள் வேண்டாம் என்று மறுத்தாள்.

"களைப்பே தெரியாது. குடிச்சுடு!" -விஜயன் வற்புறுத்தினான். அவள் தயங்கியவாறே அதை வாங்கிக் குடித்தாள்.

பிறகு இரண்டு கிளாஸுகளிலும் பாதியளவு விஸ்கியை ஊற்றி, தண்ணீரைக் கலந்து இருவரும் குடித்தார்கள்.

பெண், தனது உடைகளை ஒவ்வொன்றாகக் களையத் தொடங்கினாள். இருவரும் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தனது வாழ்க்கையை நாசமாக்கிய இருவரையும் மெர்ஸி நன்றாகவே பார்த்தாள். பிறகு அடிமேல் அடியெடுத்து வைத்து அவள் அங்கிருந்து வெளியேறினாள்.

அவர்கள் கொண்டு வந்த காரின் அருகே வந்தாள். என்ன தைரியத்தாலோ அவர்கள் கார்ச்சாவியை அப்படியே விட்டு



விட்டுப் போயிருந்தனர். டோமி பயன்படுத்தும் ஃபியட் கார் தான் அது.

மெர்ஸி காரை ஸ்டார்ட் செய்தாள். அந்தச் சத்தத்தைக் கேட்டு டோமி அறையிலிருந்து ஓடி வந்தான். அதற்குள் கார் கேட்டைத் தாண்டி விட்டிருந்தது. யாரோ தங்களது ரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்ற பயம் தோன்றியது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

முடிந்த விரைவில் அங்கிருந்து கிளம்ப வேண்டும் என்று தீர்மானித்தனர். சுற்றுமுற்றும் பார்த்தபோது அருகிலேயே ஜீப் ஒன்று நிற்பதைக் கவனித்தனர். அப்படியானால் வேறு யாராவது அந்த வீட்டுக்குள் இருக்க வேண்டும் என்று தோன்றியதால் ஒவ்வோர் அறையாகப் பார்த்துக் கொண்டு வந்தனர்.

கடைசியில் ராஜசேகரன் கிடந்த அறைக்கு வந்தனர். டோமிக்கு அவரை நன்றாகவே தெரியும்.

'இவர் எப்படி இங்கு வந்தார்?' என்று யோசிக்கத் தொடங்கினான்.

மேற்கொண்டும் அங்கிருப்பது நல்லதல்ல என்று தோன்றியது. அங்கிருக்கும் ஜீப்பை எடுத்துச் சென்றால் ஒரு வேளை ராஜசேகரனின் கொலைக்கும் ஏதாவது ஒருவகையில் பழி சுமக்க நேரலாம். அதனால் அங்கிருந்து நடந்தே வெளியேறுவது என்ற முடிவுக்கு வந்தனர்.

அன்று வழக்கத்தைவிட தாமதமாகத்தான் மெர்ஸி வந்து சேர்ந்தாள்.

அவள் அம்மா அதைக் கவனிக்கத் தவறவில்லை.

அன்றிரவு சாப்பாட்டு வேளைக்குப் பிறகு, நான்ஸி கணவரிடம் மகள் மீது புகார் சொன்னாள்.

"வர வர மெர்ஸியோட நடவடிக்கைகள் நல்லதாத் தோணலை. எப்பவோ வர்றா; எப்பவோ போறா. அவ போக்கே ஒண்ணும் புரிய மாட்டேங்குது."

"எப்படி இருந்தாலும் ஹாஸ்பிட்டல்ல அவளுக்கு ரொம்ப நல்ல பேரு. விட்டுத் தள்ளு!" டாக்டர் ஜார்ஜ், மனைவிக்கு ஆறுதல் கூறினார்.

"இருக்கட்டுமே... என்ன இருந்தாலும் பொண்ணு, பொண்ணுதானே. அப்படி யோசிக்க மாட்டேங்குறீங்களே!" நான்ஸி அவரை மடக்கினாள்.

"சரி, அவளை நான் விசாரிக்குறேன்... போதுமா?"

அன்று சனிக்கிழமை. க்வயர் பிராக்டீஸுக்காக மாதா கோயில் வரை போக வேண்டியிருந்ததால், வழக்கத்தை விட சீக்கிரமாக தனது அலுவலகத்திலிருந்து புறப்பட்டான், வில்சன்.

பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது, அவனருகே மாருதி கார் ஒன்று வந்து நின்றது.

"ஹலோ வில்சன்!" -காருக்குள் இருந்து ஒரு பெண் குரல் கேட்டதால் வில்சன் திரும்பிப் பார்த்தான்.

டாக்டர் மெர்ஸி.

காருக்கருகே வந்தான்.

"வாங்க... உங்களை மாதாகோயில்ல டிராப் பண்றேன்." அழைத்தாள்.

அந்த அழைப்பை அவனால் தட்டிக் கழிக்க முடிய வில்லை. அந்த அழைப்பிலேயே ஏதோ ஒரு வசீகரத் தன்மை இருப்பதாக அவன் மனம் குரல் கொடுத்தது.

காரில் ஏறினான்.

"அன்னிக்கு நாம சந்திச்சதுக்கு அப்புறம் எப்பவாவது என்னைப் பத்தி நினைச்சுப் பார்த்தீங்களா?" டிரைவ் செய்த வாறே அவள் கேட்டாள்.



"இல்லைங்க... மன்னிக்கணும். எந்த ஒரு பெண்ணைப் பத்தியும் நான் இப்ப நினைச்சுப் பார்க்கிறது இல்லை."-வில்சன் பதிலளித்தான்.

"எதனாலன்னு எனக்குத் தெரியும்!" ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தவாறே பேசினாள்.

வில்சன் அதற்கு பதில் சொல்லவில்லை.

"நானே சொல்லட்டுமா?"

"சரி... சொல்லுங்க..."

"ஒரு காலத்துல நீங்க ஒருத்தியை உயிருக்கு உயிரா விரும்புனீங்க..."

வில்சன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"அவள் பேரும் மெர்ஸிதான்!"

வில்சன் முன்புறச் சாலையையே பார்த்துக் கொண்டிருந் தான். பதில் எதுவும் சொல்லவில்லை.

"இன்னும் நீங்க பதில் சொல்லவில்லையே?" அவள் திரும்பவும் கேட்டாள்.

"நாம வேற எதையாவது பேசலாமே."

கார் மாதா கோயிலுக்கு முன்புறமாக நின்றது.

அவள் பிரார்த்தனை செய்தாள்: "கடவுளே என்னை மன்னித்து விடுங்கள்!"

"ரொம்ப தாங்க்ஸ். வர்றேன்" -வில்சன் படிக்கட்டுகளில் ஏறத் தொடங்கினான்.

"ஹலோ ஒரு நிமிஷம்..."

அவன் திரும்பி நின்றான்.

அவர்களுக்கு முன்பாக மாதா கோயிலின் கட்டடம் கம்பீர மாக நின்று கொண்டிருந்தது. ஆரம்பத்தில் மிகச் சிறிய மாதா கோயிலாக இருந்த அந்தக் கட்டடம், தற்போது சிற்ப

வேலைப்பாடுகள் நிறைந்த புராதனமான கட்டடம் போலிருந் தது.

சர்ச்சுக்கு முன்னால் நீண்ட படிக்கட்டு. அதன் துவக்கத்தில் திறந்தவெளி மைதானம். அதன் நடுவில் குழந்தை இயேசு உலகத்தைக் கையில் பிடித்திருக்கும் சிலை.

சர்ச்சின் வடக்கில்தான் க்வயர் நடக்கும் பகுதி இருந்தது. அதன் மேற்கில் கல்லறைப் பகுதி. அது முடிவடையும் இடத் தில் இரும்பு கேட் இருந்தது.

"என்ன டாக்டர்?" -வில்சன் கேட்டான்.

"நானும் வரலாமா?"

"எந்த இடத்துக்கு!"

"பாட்டுப் பயிற்சிக்கு!"

அதைக் கேட்ட வில்சன் புன்னகை புரிந்தான், "இது உங்களை மாதிரி பிஸியானவர்களுக்கு சரிப்படாத விஷயம்."

"என்னைப் போன்றவர்களுக்கும் ஒரு ரிலீஃப் வேண் டாமா" -கேட்டவாறே வில்சனை நெருங்கினாள்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் வில்சன் தயங்கினான்.

பாட்டுப் பயிற்சி நடைபெறும் கட்டடத்துக்கு முன்னால் இருந்த இரண்டு இளம்பெண்கள் அவர்களையே கவனித்துக் கொண்டு இருந்தனர். பாட்டுப் பயிற்சிக்காக வந்திருப்ப வர்கள் அந்தப் பெண்கள்.

"உங்க விருப்பப்படி செய்யுங்கள். இது உங்களுக்கு சுவாரஸ்யமானதா இல்லையான்னு நான் சொல்ல முடியாது."

அதையெல்லாம் பொருட்படுத்தாதவளாக அவள், வில் சனைப் பின்தொடர்ந்தாள்.



அங்கிருந்த பெண்களுக்கு எதுவும் புரியவில்லை. வெகு நாள் பழகியவளைப் போல் மெர்ஸி அந்த அறைக்குள் நுழைந்தாள்.

பெஞ்சில் அமர்ந்தாள். அறைக்குள் ஒவ்வொருவராக மற்ற பெண்களும் வந்து சேர்ந்தனர்.

வில்சன் ஹார்மோனியத்தை எடுத்து வைத்துக் கொண்டு சுருதி சேர்த்தான். அவன் விரல்கள் அதன் கட்டைகளில் வெகு சரளமாகத் தத்தித் தவழ்ந்தன. அதைத் தொடர்ந்து இனிமையான இசை எழுந்தது.

"நாம இன்னிக்குப் பழைய பாட்டையே தொடரலாமா?" -வில்சன், பெண்களைப் பார்த்துக் கேட்டான்.

"அதுக்கு இன்னும் கொஞ்சம் பயிற்சி தேவைப்படுமே." - ஒரு பெண் குரல் கொடுத்தாள்.

"நாம் இப்பப் பாடிட்டிருக்கிறதைவிடக் கொஞ்சம் கஷ்ட மானது. இது மெர்ஸிக்கு ரொம்பவும் பிடிச்ச பாட்டு" -வில்சன் ஏதோ நினைவு வந்தவனாகக் கூறினான்.

"யாருங்க மெர்ஸி?" -ஒரு பெண் கேட்டாள்.

"நீங்கள்லாம் வர்றதுக்கு முன்னாடி க்வயர்ல கலந்துக் கிட்டிருந்த பெண்."

"எனக்கு அவளை நல்லாவே தெரியும்." -சார்லி கூறினாள்.

"அப்போவெல்லாம் சார்லி இது மாதிரி நிரந்தரமா வர்றது கிடையாது. எப்பவாவது ஒரு நாள் திடும்னு வந்து தப லாவை ரெண்டு தட்டு தட்டிட்டுப் போவீங்க."

அவன் குறிப்பிட்ட சார்லி அப்போதும் தபலாவின் கயிறு களை முறுக்கிக் கொண்டிருந்தாள்.

வில்சன், மெர்ஸியைக் கவனித்தான்.

அவள், அந்த அறையின் ஒவ்வொரு பகுதியையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"சரி, நாம ஆரம்பிக்கலாம்." வில்சன் பாடத் தொடங்கினான்.

"நானும் பாடலாமா?" -மெர்ஸி கேட்டாள்.

"அதுக்கென்ன தடை? தாராளமா பாடலாம்."

"மெர்ஸி பாடினாள். மிகவும் இனிமையாக, இசையில் ஒன்றிக் கலந்து ஈடுபாட்டுடன் பாடினாள்.

உடன் பாடியவர்கள் சட்டென்று தாங்கள் பாடுவதை நிறுத்திக் கொண்டு மெர்ஸியைக் கவனித்தனர்.

வில்சனால் இதை நம்பவே முடியவில்லை. கண்ணிமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தக் காலத்தில் மெர்ஸி ஜான் பாடுவது போலவே இருந்தது அந்தப் பாட்டு!

எந்த ஒரு மாற்றமும் இல்லை. அந்தப் பாட்டை எந்த ஓரிடத்திலும் வில்சன் நினைவுபடுத்த வேண்டியிருக்கவில்லை.

"டாக்டர் உங்களுக்கு இந்தப் பாட்டு எப்படித் தெரியும்? என்னால் நம்பவே முடியலை!" -வில்சன் வியப்புடன் மெர்ஸியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பாட்டு முடிந்தபின் மெர்ஸி கேட்டாள். "பாட்டு எப்படி... கேக்குற மாதிரி இருந்ததா?"

"எனக்குத் தெரிஞ்சு இந்த மாதிரி ஒரே ஒருத்திதான் பாடியிருக்கிறா- அவதான் மெர்ஸி ஜான்."

"இறந்து போன மெர்ஸி ஜானைத்தானே சொல்றீங்க?" -அவள் கேட்டாள்.

"ஆமாம். அவளை உங்களுக்குத் தெரியுமா?"

"ம்... தெரியும்!"

"இந்தப் பாட்டையே நாம இன்னிக்கு பிராக்டீஸ் பண்ணலாம்." மற்ற பெண்கள் விண்ணப்பித்தனர்.



வில்சன் பாடினான். அவனுடன் மற்றவர்களும் சேர்ந்து கொண்டனர். மெர்ஸியும் இணைந்து பாடினாள். அந்தப் பாட்டு காற்று வழியாக வெளியிலும் பரவியது.

அந்தக் குரலைக் கேட்ட தேவாலய ஊழியர் ஜான் அந்த அறைக்கு ஓடி வந்தார். அவர் கண்களிலும், முகத்திலும் என்னென்னவோ உணர்வுகள் அலையடித்தன. பாட்டில் மூழ்கியவாராக அப்படியே நின்றார். அந்த அறைக்குள் அவர் கண்கள் எவரையோ தேடின.

"யாரைத் தேடுறீங்க?" -வில்சன் கேட்டான்.

ஜான் அதற்கு பதில் சொல்லவில்லை.

அவர் தேடிய நபர் அங்கு இல்லை.

ஆனால், அந்தக் குரல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

ஏமாற்றம் அடைந்தவரைப் போல் ஜான் அங்கிருந்து கிளம்பினார்.

"ஜான் எதுக்காக வந்தார்னு யாருக்காவது தெரியுமா?" -வில்சன் அங்கிருந்தவர்களிடம் கேட்டார்.

"தெரியாதே!" -பெண்கள் பதிலளித்தனர்.

"மெர்ஸி பாடுறது மாதிரியே இருந்ததாலதான் அவர் ஓடி வந்தார்."

"நீங்களும் சந்தோஷமாத்தான் இருக்கீங்க போலிருக்கே?" -சார்லி கூறினாள்.

"அப்படியா தெரியுது!" -வில்சன் கர்ச்சீப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

மெர்ஸி எழுந்தாள்.

"வரட்டுங்களா... நான் வர்ற சனிக்கிழமை மறுபடியும் வர்றேன்." அவள் கூறினாள்.

"முடிஞ்சா வாங்க. சந்தோஷம்..." வில்சன் சுருக்கமாகப் பேசினான்: "அப்புறம்..."

"எனக்குப் புரியுது. ஆனால், அது முடியாது. நான் இவ்வளவு தூரம்தான் வர முடியும் மன்னிச்சுடுங்க!" -மெர்ஸி அங்கிருந்து கிளம்பினாள்.

"இறந்து போனவளே திரும்பி வந்தது மாதிரி இருக்குது." -வில்சன் தனக்குத்தானே பேசுவது மாதிரி சொல்லிக் கொண்டான்.

மெர்ஸி, காரை ஸ்டார்ட் செய்தபோது காலேஜ் கிளார்க் விஜயன் முன்புறத்தில் நின்று கொண்டிருந்தான்.

## 8

மெர்ஸி காரின் இன்ஜினை ஆஃப் செய்தாள்.

விஜயன் காருக்குள் இருப்பது யார் என்று ஊன்றிக் கவனித்தான்.

"மிஸ்டர் விஜயன்தானே அது?"

"ஆமாம்... ஓ... நீங்கதானா அது?" கேட்டவாறே விஜயன் மேலும் காரை நெருங்கி வந்தான்.

"சரி... நாம இன்னொரு நாள் சந்திக்கலாம்." என்று கூறியவள் காரை ஸ்டார்ட் செய்து, கிளம்பினாள்.

ஏதோ சந்தேகத்தோடு ஒரு கணம் தயங்கியவன், பிறகு படிக்கட்டில் ஏறி மாதா கோயிலுக்குள் நுழைந்தான்.

மறுநாள் மெர்ஸி ஒரு ஆபரேஷன் செய்ய வேண்டியிருந்தது. ஆனால், முடிந்த மட்டும் அவள் அதைத் தவிர்க்கப் பார்த்தாள். தன்னிடம் எந்த ஒரு தவறும் ஏற்படக் கூடாது என்று விரும்பினாள்.



ஆஸ்பத்திரிக்கு வந்தவுடனே நேராக ஆபரேஷன் தியேட்டருக்குப் போனாள். அன்று இரண்டு சிசேரியன் கேஸ்கள் காத்திருந்தன.

ஒரு பெண்மணிக்கு அது முதல் பிரசவம். மற்றவருக்கு அது இரண்டாவது பிரசவம்.

ஆபரேஷன் டேபிளில் படுத்திருக்கும் கர்ப்பிணியின் வயிற்றுப் பகுதியை மெர்ஸி உற்றுப் பார்த்தாள்.

பால் போன்ற வெண்மையான தோல் ஒரு பலூன் மாதிரி உப்பியிருந்தது. அதற்குக் கீழே ஆபரேஷன் நடத்த வேண்டியிருந்தவரின் பயனற்ற அங்கம்.

மெர்ஸி மீண்டும் அந்த அடிவயிற்றுப் பகுதியைக் கவனித்தாள்.

இரட்டைக் குழந்தை!

பரஸ்பரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி கிடக்கும் அந்தக் குழந்தைகளை ஆபரேஷன் செய்து எடுத்தால்கூட பிழைக்காது என்று அவளுக்குத் தெரிந்தது.

அதற்குள் அருகிலிருந்த டாக்டர் ஆபரேஷனுக்கான கருவிகளை ஒவ்வொன்றாக எடுத்தார். ஆனால், மெர்ஸி எதையும் வாங்கிக் கொள்ளவில்லை.

தன் இரண்டு கைகளாலும் கர்ப்பிணியின் வயிற்றுப் பகுதியைக் கீழ்ப்புறமாக வருடினாள். பிறகு அவளின் கால் பகுதிகளைப் பிடித்துக் கொண்டாள்.

அதே நேரம் மெர்ஸியின் கைகள் குழந்தைகளை ஏந்திக் கொள்ளத் தயாராயின.

உடனேயே அது நிகழவும் செய்தது. சற்று நேரத்துக்குள் இரண்டு குழந்தைகள் அந்த டேபிளில் கிடந்து அழத் தொடங்கின.

அங்கிருந்தவர்கள் மெர்ஸியை வியப்புடன் பார்த்தனர். சற்று நேரத்துக்கு அவர்கள் மூச்சுவிடக்கூட மறந்தனர்.

அடுத்த பிரசவமும் அப்படியேதான் நடந்தது; ஆபரேஷன் தேவைப்படவில்லை.

மதிய நேரத்துக்குள் இந்தச் செய்தி ஆஸ்பத்திரி முழுவதும் பரவியது.

அன்று மாலை நேரத்தில் மெர்ஸி ஆஸ்பத்திரிக்கு வந்தாள். உண்மையில் அப்போது அவளுக்கு டியூட்டி இல்லை.

அதற்குள் ஒரு கர்ப்பிணி அட்மிட் செய்யப்பட்டிருந்தார். மெர்ஸிக்கு நன்கு பழக்கமான ஏழைப் பெண்மணி அவர்.

"உங்க பேரு கார்த்திகாதானே?" புதிதாக வந்திருந்த கர்ப்பிணியை நெருங்கிய மெர்ஸி கேட்டாள்.

"ஆமாம் டாக்டர்... என்னை உங்களுக்குத் தெரியுமா டாக்டர்?" மெர்ஸி டாக்டரை, புதிதாக அப்போதுதான் பார்ப்பவள் போல் கார்த்திகா கேட்டாள்.

"எனக்கு உங்களை நல்லாவே தெரியும். மதுசூதனன் சார் எப்ப வந்தாலும் உங்களைத்தான் விசாரிப்பார். நீங்க வராத அன்னிக்கு அவரோட வகுப்பறையிலே அவ்வளவா சுவாரஸ்யம் இருக்காது." -மெர்ஸி சிரித்தாள்.

இந்த வார்த்தைகள் கார்த்திகாவை மேலும் வியப்பு அடைய வைத்தன.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" -அந்தப் பெண்மணி விசாரித்தார்.

"நீங்கள் ஏழாவது படிக்கும்போது 'சி' செக்ஷன்தானே? மூணாவது வரிசையில் ரெண்டாவது இடம் உங்களோடது!" -மெர்ஸி மீண்டும் பழைய காலத்துள் அமிழ்ந்தாள்.

"உண்மைதான்! என் பக்கத்தில் இருந்தவள் மெர்ஸி-சர்ச்சில வேலை செய்யற ஜானோட மகள். கிளாஸ்லேயே அவள்தான் ஃபர்ஸ்ட் ராங். பாவம் தற்கொலை செஞ்சு செத்துப் போயிட்டா." -கார்த்திக்காவின் கணகள் நீரால் நிறைந்தன.

"அவள் எப்படிச் செத்தாள்னு உங்களுக்குத் தெரியுமா?" -மெர்ஸி கேட்டாள்.

"தெரியும்... தூக்குப்போட்டு! நான் அவளோட பிணத்தைப் பார்க்கவும் போயிருந்தேன். பாவம் மெர்ஸி!"

"சரி அதெல்லாம் கிடக்கட்டும். அதையெல்லாம் இப்ப நினைச்சுப் பார்த்து என்ன பிரயோஜனம்? உங்களுக்கு எந்த நேரத்துல எந்த விதமான உதவி தேவைப்பட்டாலும் என் கிட்டக் கேளுங்க. இந்தாங்க நான் உங்களுக்காக ஒரு பரிசு கொண்டு வந்திருக்கேன்" என்ற மெர்ஸி அவளிடம் ஒரு பொட்டலத்தைக் கொடுத்தாள்.

பொட்டலத்தைப் பிரித்தாள். உள்ளே லூபிக்காய் ஒன்று இருந்தது.

கார்த்திகாவுக்கு மிகவும் பிடித்தமான காய். அது சிவப்பு நிறத் தோலுடன் கூடியது. உட்புறம் வெண்மையாக, நெல்லிக்காய் போன்ற சுவை கொண்டது.

"ஞாபகம் இருக்கா உங்களுக்கு? இதுக்காக மடத்தை யொட்டி வளர்த்திருக்கிற மரத்துல ஏறி திருட்டுத்தனமா அந்தக் காலத்துல பறிச்சுத் தின்னதெல்லாம்?" -சொல்லிவிட்டு மெர்ஸி அங்கிருந்து கிளம்பினாள்.

அந்த டாக்டர் சொன்னதெல்லாம் பழைய விஷயங்கள். ஆனால், எதுவுமே மறக்க முடியாத விஷயங்கள். கார்த்திகாவுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

மதுசூதனன் சாருக்கு அவளை ரொம்பவும் பிடிக்கும். அவள் மீது அப்படியொரு அலாதியான பாசமிருந்தது அவருக்கு. கார்த்திகா அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து விலகி ஹை

ஸ்கூல் போனபோது அவர் எங்கேயோ மாற்றல் வாங்கிப் போனார்.

அதன் பிறகு அவரைப் பார்த்ததில்லை.

ஆனால், அப்புறம் எத்தனையோ தடவை எதிர்பாராத நேரத்திலெல்லாம் அவரது நினைவு வருவதுண்டு.

மெர்ஸி டியூட்டி அறையில் ஓய்வாக உட்கார்ந்திருந்தாள். அவள் மனத்தில் கடந்த கால சம்பவங்கள் ஒவ்வொன்றாகக் கடந்து வந்தன.

"டாக்டர்!" -என்ற அழைப்பைக் கேட்டு அவள் தலையை உயர்த்தினாள்.

அறிமுகமில்லாத இளம்பெண் ஒருத்தி எதிரில் நின்று கொண்டிருந்தாள்.

"வாங்க... என்ன வேணும்?"

இருபத்தோரு வயதிருக்கலாம். அழகாக இருந்தாள். நல்ல நிறம். ஒரு தளிர் போலிருந்தாள்.

எப்படிப்பட்டவர்களும் மீண்டும் திரும்பிப் பார்க்கும் உருவம்.

அவள் அறைக்குள் நுழைந்து மெர்ஸியின் முன்னால் பணிவுடன் நின்றாள்.

"என்ன விஷயம் சொல்லுங்க?" மெர்ஸி திரும்பவும் கேட்டாள்.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன். எனக்கு ஒரு உதவி செய்யணும். என் வீட்டுக்காரர் நோயாளி. நீங்கதான் எப்படியும் அவரைக் குணமாக்கணும்!" வந்தவள் பேசினாள்.

"உடம்புக்கு என்ன?"

"இதய நோயாளி"

"அதையெல்லாம் நான் பார்க்குறது கிடையாது. நீங்கள் டாக்டர் சைமனைப் பாருங்கள்."



"நான் அவர் கிட்டப் போனேன். சரியாக்கிடுறேன்னு சொன்னார். ஆனா..." அவள் அரைகுறையாகப் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

மெர்ஸிக்கு விஷயம் புரிந்தது. கெட்டிக்கார டாக்டர். குறிப்பாக இதயம், சிறுநீரகம் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி மற்றும் பட்டங்கள் பெற்றவர். ஆனால், அவரது இயல்பு ஒரு மாதிரியானது.

அரண்மனை போன்ற வீடு அவருடையது. அதையொட்டி அவர் ஒரு நர்சிங் ஹோம் வைத்திருந்தார். அது மிகவும் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட ஒன்று. நோயாளிகளைப் பெரும்பாலும் அங்கு வரச் சொல்வார். அப்போதே அவர்களுக்கு அதற்கான காரணம் புரியும்.

கனமான ஒரு தொகை அவருக்குக் கிடைத்தால் மட்டுமே டெஸ்ட் மற்றும் சிகிச்சையில் அவர் ஈடுபடுவார்.

பணமில்லாதவர்கள் அவரிடம் சுலபத்தில் சிகிச்சை பெற முடியாது.

டாக்டர் சைமன் பெர்னாண்டஸ், பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் வீக். அழகிகளான பெண்கள் வந்தால், பணம் வாங்காமல் சிகிச்சை செய்வார்.

அவரது கன்சல்ட்டிங் ரூமில் ஒரு சில வாசகங்கள் அழகாக எழுதப்பட்டுச் சட்டம் போட்டு மாட்டப்பட்டிருந்தது.

**'வாழ்க்கை நிமிடம் போன்றது.**
**சுகமும் துயரமும் இங்குதான்!**
**உயிர் போனால், உடல் எதற்கு?**
**இன்பம்தான் எல்லாவற்றையும் விட முக்கியம்!'**

இந்த வாசகங்களை வாசிக்கும் பெண்களில் ஒரு பகுதியினர் அவரது வலைக்குள் சிக்கவே செய்வார்கள்.

"நீங்க அங்கே போனீங்களா?" -மெர்ஸி கேட்டாள்.

"நீங்க கேக்குறது புரியலை."

"டாக்டர் சைமனின் வீட்டுக்கு."

"ஆமாம்... போயிருந்தேன்."

"தனியாகவா?"

"இல்லை, வீட்டுக்காரரோட!"

"அவர் என்ன சொன்னார்?"

"எல்லாத்தையும் நான் விவரமா சொல்றேன். சில விஷயங்களை நான் மேற்கொண்டு தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. அதனால நாளைக்கு மறுபடியும் வரச் சொல்லியிருக்கார்!"

"சரி, நீங்க நாளைக்கு அங்கே போங்க. கணவர் குணமடைஞ்சுட்டா, அதுக்காக என்ன வேணும்னாலும் தர்றேன்னு சொல்லுங்க."

"ஐயோ.... என்ன டாக்டர் இப்படிச் சொல்றீங்க?" -இளம் பெண் பரபரத்தாள்.

"பயப்படாதீங்க. நான்தானே சொல்றேன். ஆமாம், இதுல நீங்க என்னைத் தேடி வர்றதுக்கு என்ன காரணம்?" -மெர்ஸி கேட்டாள்.

"நீங்க ஒரு தடவை நோயாளியைத் தொட்டாலே எல்லாம் சரியாயிடும்னு சொன்னாங்க... அதனாலதான்."

"அதெல்லாம் உண்மையில்லை! நீங்க போயிட்டு வாங்க."

அவள் அங்கிருந்து புறப்பட்டாள்.

மறுநாள் அந்த இளம்பெண் டாக்டர் சைமனிடம் போனாள். மெர்ஸி சொல்லிக் கொடுத்தபடியே சொன்னாள்.

"இங்கே இருக்குற வாசகங்களை நீங்க வாசிக்கலையா? எதையுமே நாளைக்குன்னு தள்ளிப் போடக் கூடாது. வாங்க உங்களுக்கு நான் சில அதிசயங்களைக் காட்டுறேன்" -அவர் அவளை அழைத்தார்.

அவள் தயங்கினாள்.



"நாளைக்கு உன் கணவனுக்கு ஆபரேஷன். அதோட வெற்றி உன் கையிலதான் இருக்கு."

அவள் மெதுவாக எழுந்தாள்.

ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறை அது. அங்கு ஒரு கட்டில் இருந்தது.

"எதையாவது குடிக்கலாமே. கொஞ்சம் ஸ்ட்ராங்காக இருக்கட்டும்" என்ற சைமன் சுவர் அலமாரியைத் திறந்து விஸ்கி பாட்டில் ஒன்றை வெளியே எடுத்தார். ஒரு கிளாஸில் ஊற்றி, தண்ணீர் சேர்த்து அவளிடம் கொடுத்தார்.

அவள் தயங்கினாள். ஆனால், சைமனின் வற்புறுத்தலுக்குக் கீழ்ப்படிந்தாள்.

"கட்டில்ல நீங்க படுத்துக்கலாம்." சைமன் கூறினார்.

அவள் திகைப்பு மாறாமல் அவரைப் பார்த்தாள். சைமன் அவளைக் கட்டிலில் படுக்க வைத்தார்.

அவள் கண்களை இறுக மூடிப் படுத்திருந்தாள்.

சைமன் மெதுவாக அவளை நெருங்கி கட்டிலின் ஒரு மூலையிலிருந்து பட்டுக் கயிறு ஒன்றை எடுத்து அவளின் வலது கையைக் கட்டினார். பிறகு அதே போல் மறு பகுதிக்கு வந்து இடது கையையும், கால்களையும் கட்டினார்.

சைமன் ஒரு கிளாஸ் விஸ்கி + நீர் கலந்த கலவையைத் தொண்டைக்குள் இறக்கினார்.

பிறகு வெளிச்சத்தில் அவளழகை ரசித்தார். சைமன் ஒரு சாடிஸ்ட் என்ற புகார் ஏற்கெனவே வெளியுலகில் பரவி இருந்தது. பம்பாயில் அவர் படிக்கும்போதே அவரது நட்பு வட்டம் அப்படிப்பட்டதாக இருந்தது.

பணம் கொடுத்து வரவழைக்கப்பட்ட விபசாரிகளுடன், அவரும் அவர் நண்பர்களும் இதுபோல் குரூரமான காமக் களியாட்டங்கள் நடத்தியிருக்கின்றனர். அவர் மனைவிக்கும்

இதெல்லாம் தெரியும். ஒரு சில சந்தர்ப்பங்களில் அவர் மனைவிகூட இது போன்ற தண்டனைகளுக்கு ஆளாகியிருக் கிறார். வெளியே சொல்ல முடியாத இந்தக் காரணத்தால் சில காலம் கணவனிடம் சண்டை போட்டு அவர் பிரிந்திருக்கவும் செய்தார். சமீப காலத்தில்தான் திரும்பி வந்திருந்தார்.

மறுநாள் மாலை நேரத்திலிருந்தே சைமன் அந்தப் பெண்ணுக்காகக் காத்திருந்தார்.

அவள் கண்டிப்பாக வருவாள் என்று டாக்டருக்குத் தெரியும். காரணம் அவள் கணவனின் உயிர் டாக்டரிடம் தான் என்பது அவளுக்குத் தெரியும்.

அதே போல் சொன்ன நேரத்துக்கு அவள் வரவும் செய்தாள்.

இந்த முறையும் அவர், அவளை அதே அறைக்கு அழைத்துப் போனார். இந்தத் தடவை, அவளாகவே உடை களை உருவினாள்.

கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டாள்.

விஸ்கியை வாங்கிக் குடிக்கவும் மறக்கவில்லை.

சைமன் இந்த முறை சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தார். சிகரெட்டை அவள் மார்புக்கு அருகே கொண்டு சென்றார். சென்றவர் சட்டென்று திடுக்கிட்டுப் பின்வாங்கினார்!

## 9

"என்ன... என்ன இது?" -டாக்டர் பெர்னாண்டஸால் தன் கண்களையே நம்ப முடியவில்லை!



முந்தைய நாள் தான், சிகரெட்டால் அழுத்திய பகுதியில் எந்த ஓர் அடையாளமும் இல்லை. நெருப்பு பட்டதற்கான எந்தவிதத் தடயமும் இல்லை.

பார்வையைக் கீழிறக்கினார்.

அங்கும் அப்படியேதான்!

ஒரு விநாடி அவர் திகைத்தார்.

சட்டென்று உரத்த குரலிலான சிரிப்பு ஒன்று அங்கு எழுந்தது.

அவருக்கு முன்பாகப் படுத்துக் கிடந்த அந்தப் பெண் அவரைப் பார்த்து பைசாசிகமாகச் சிரித்தாள்.

அவள் அப்படியே அந்தரத்தில் உயர்ந்தாள்.

அவள் கை-கால்களில் பிணைக்கப்பட்டிருந்த பட்டு நூல் கயிறுகள் தலைமுடியைப் போல் பட்பட்டென்று அறுந்து விலகின.

சைமன் தாமதிக்காமல் பின்வாங்கத் தொடங்கினார்.

ஆனால், சட்டென்று தரையில் காலூன்றி நின்ற அவள் டாக்டரின் கழுத்துப் பகுதியைப் பிடித்துக் கட்டிலின் மீது வீசி யெறிந்தாள்.

சைமன் மட்டமல்லாக்கக் கட்டிலில் விழுந்தார்.

"அசைஞ்சா கொன்னுடுவேன்!" அவள் அலறினாள்.

சைமனின் மொத்த உடலும் நடுங்கத் தொடங்கியது.

அவரை நெருங்கியவள், அவர் வழக்கமாகச் செய்வது போல், பட்டுக் கயிறால் அவர் கைகால்களைக் கட்டினாள்.

"என்னை அடையாளம் தெரியுதா?" அவள், அவர் முகத் தைப் பார்த்தபடி கேட்டாள்.

சைமன் எதுவும் பேசவில்லை.

"பத்து வருஷத்துக்கு முன்னால நான் எங்க அப்பாவைக் கூட்டிட்டு இங்கே வந்திருந்தேன். எங்கப்பா தேவாலயத்துல வேலை செய்யுறவர். இதய நோயாளி. ரொம்பவும் மோசமான நிலைமையில நான்தான் அவரை இங்கே கூட்டிட்டு வந்தேன். அன்னிக்கு நீங்க என்னைக் கூட்டிட்டு வந்தது ஞாபகமிருக்கா?"

சைமனின் மூளை பரபரப்பாகச் செயல்பட்டு, நினைவுத் தட்டுகளிலிருந்து சம்பவங்களை மேலெடுத்து வந்தது.

பம்பாயிலிருந்து அவர் இங்கு வந்து சேர்ந்து இரண்டு மாதங்கள்தான் ஆகியிருந்தன. பம்பாயிலிருந்து கற்றுக் கொண்டு வந்த சந்தர்ப்பம். அப்போதுதான் அவர் ஒரு சாடிஸ்டாக மாறினார்.

இங்கு வந்தபோது முதன்முதலாகக் கிடைத்த இரைதான் மெர்ஸி ஜான்.

தனக்கு நேர்ந்ததை அன்றைக்கு வெளியே சொல்ல அவள் பயந்தாள். அது அவளது எதிர்காலத்தை நாசமாக்கி விடக் கூடிய அளவுக்கு மோசமானது.

புகார் கொடுத்தால், ஒவ்வொரு கட்டமாக, தான் அவமானப்படுவோம் என்பதில் அவளுக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை.

எனவே, அவள் அமைதியாக இருந்தாள்.

"இப்ப என்னை அடையாளம் தெரியுதா?" அவள் மறுபடியும் கேட்டாள்.

சைமன், அவள் முகத்தை பயத்துடன் உற்றுப் பார்த்தார்.

அந்த முகம் மாறத் தொடங்கியது.

சிவந்த நிறமுள்ள அந்தப் பெண்ணின் முகம் முற்றிலுமாக மாறியது.



அவள், அவரது உடைகளைக் கண்டபடி தாறுமாறாகக் கிழித்தாள்.

வெறும் உள்ளாடையுடன் மட்டும் அப்போது கட்டிலில் கிடந்தார் சைமன்.

அவள் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டாள்.

"இன்னும் தெரியலை இல்லையா? இங்கே பார்... நான் யாருன்னு தெரியும். அன்னிக்கு என் உடம்புல... இதோ... இங்கேதான்." அவள் மேலாடையை நீக்கிக் காண்பித்தாள்.

"சிகரெட்டால சுட்ட இடங்கள்ல இதோ இந்த பகுதியும் அடங்கும்" முழங்கால் பகுதியையும் காட்டினாள்.

"... ... ..."

"நெருப்பால தகிக்கிற வேதனை எப்படிப்பட்டதுன்னு உனக்கும் தெரியணும். வேதனையோட சுகத்தை அனுபவிச்சுப் பாரு!" -சிகரெட்டை ஆழ்ந்து இழுத்தாள்.

நெருப்பு, நன்கு கனிந்த சிகரெட்டை சைமனின் அடிவயிற்றுப் பகுதிக்குக் கொண்டு வந்து 'நச்'சென்று குத்தினாள்.

"ஐயோ!" -சைமன் அலறினார்.

அவள் மறுபடியும் சிகரெட்டை அதே இடத்தில் வைத்து அமுத்தினாள்.

"இது போதும்னு நினைக்கிறேன். நான் உன்னைக் கொல்ல விரும்பலை. காரணம் நீ ஒரு கெட்டிக்கார டாக்டர்." -சொல்லிவிட்டு அவள் அறையைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

மெர்ஸி மருத்துவமனைக்குத் திரும்பி வந்தாள்.

அந்த இளம்பெண், டாக்டர் மெர்ஸியை எதிர்பார்த்து அங்கு காத்திருந்தாள்.

"கடவுளே... நான் வரலேன்னு அந்த டாக்டர், ஏதாவது செய்திடப் போறாரோ என்னவோ? பாவம் வீட்டுக்காரர்

என்ன ஆகப் போறாரோ?" -அவள் கவலையுடன் பேசிக் கொண்டாள்.

"உனக்கு சைமனோட மறு புறம் தெரியாது. இப்ப அவர் ஒரு நல்ல மனிதர். நீ பயப்படுற மாதிரி எதுவும் நடக்காது!" மெர்ஸி கூறினாள்.

"அப்படியானால் நடந்ததெல்லாம் கற்பனையா?"

"அப்படியே வெச்சுக்க. ஆபரேஷன் முடிஞ்ச பிறகு அவரை நேர்ல சந்தித்து நன்றி சொன்னீங்களா?"

"இல்லை... நீங்க சொன்னதால நான் போகலை."

"சரி... நாளைக்கு அவரைப் போய்ப் பார்!"

"கண்டிப்பா போறேன் டாக்டர்."

மறுநாள் அந்தப் பெண், டாக்டரின் கன்சல்டிங் அறைக் குப் போனாள்.

அவளைப் பார்த்ததும் டாக்டரின் கண்களில் பீதி பரவி யது.

"ஏன்... எதுக்காகம்மா நீ திரும்பவும் வந்திருக்கிறே?" -சட்டென்று கழுத்தில் போட்டிருந்த ஜெபமாலையைக் கழற்றி அதன் சிலுவையை அவளுக்கு நேராகக் காட்டினார்.

"என்ன டாக்டர்... நான் உங்களுக்கு நன்றி சொல்ல வந்தி ருக்கேன்" -அவள் தன் இரண்டு கைகளையும் கூப்பி வணங் கியபடி பேசினாள்.

டாக்டர் அந்த ஜெபமாலையைத் தனக்குத்தான் தருகிறார் என்று நினைத்தவள், அதை வாங்கித் தன் கழுத்தில் போட்டுக் கொண்டாள். அத்துடன் டாக்டரின் பயம் இரண்டு மடங்கானது.

'இவள் சிலுவையாலும் அடக்க முடியாதவளா என்ன!' -சைமன் ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்தார்.



"உன் பேர் என்னம்மா?" -டாக்டர் கேட்டார்.

"ஷீலா..."

'யாராக இருந்தாலும் சிலுவைக்குக் கூடவா அடங்காமல் போவார்கள்?' டாக்டர் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார்.

"போயிட்டு வர்றேன் டாக்டர்!" அவள் விடைபெற்றாள்.

"தாராளமாப் போயிட்டு வாம்மா. தயவு செஞ்சு இனி மேல் என்னைப் பார்க்க நீ வர வேண்டாம்." -டாக்டர் அவள் முகத்தை பார்க்காமல் பேசினார்.

ஷீலாவுக்கு எதுவுமே புரியவில்லை. தன்னைப் பார்த்துக் கண்டிப்பாக வர வேண்டும் என்று சொன்ன டாக்டர், திடு மென்று ஏன் இப்படிப் பேசுகிறார்? அது மட்டுமின்றி, அவர் தனக்கு ஏன் சிலுவை போட்ட ஜெபமாலையைப் பரிசளித் தார்?

அவள் 'கேட்'டைக் கடந்தாள்

இங்கு நடந்ததையெல்லாம் கண்டிப்பாக டாக்டர் மெர்ஸி யிடம் கூற வேண்டுமென்று விரும்பினாள் ஷீலா. அதனால் மெர்ஸியைப் பார்ப்பதற்காக விரைந்தாள்.

நல்லவேளையாக மெர்ஸி அங்கு இருந்தாள்.

"டாக்டர் நல்லவர்தானே?" -ஷீலாவைப் பார்த்த மெர்ஸி கேட்டாள்.

"நல்லவராத்தான் தெரிகிறார். ஆனா, என்னமோ மாதிரி நடந்துக்கிட்டார்."

"மறுபடியும் தப்பா ஏதாவது?"

"அப்படியெல்லாம் கிடையாது. என்னைப் பார்த்ததும் 'எதுக்காக வந்தே'ன்னு கேட்டார்..." என்று தொடங்கியவள் கடைசியில்... "இந்த மாலையைக் கொடுத்தார்" என்று ஷீலா மாலையை எடுத்து மெர்ஸியிடம் காட்டினாள்.

"ச்சே... என்ன வேலை செய்யுறீங்க?" என்று அலறிய மெர்ஸி சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஷீலாவுக்கு இதன் அர்த்தம் விளங்கவில்லை. இருப்பினும் மாலையை உடைக்குள் போட்டு மறைத்துக் கொண்டாள்.

"சரி... நீங்க கிளம்பலாம். நான் சொல்லித்தான் நீங்க டாக்டரைப் போய்ப் பார்த்தீங்கன்னு யார் கிட்டேயும் சொல்ல வேண்டாம். ஏன்னா, ரெண்டும் வேற வேற டிபார்ட்மெண்ட்."

ஷீலா அங்கிருந்து போனவுடன் மெர்ஸி இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு டேபிளை நோக்கிக் குனிந்தாள்.

ஜெபம் செய்யும் அந்த மாலை அவளை ஒரு சில விநாடிகள் பாடாய்ப் படுத்திவிட்டது.

"டாக்டர்..." நர்ஸ் தங்கம்மா அழைத்ததும் தலையை உயர்த்திப் பார்த்தாள்.

"என்ன தங்கம்மா?"

"இங்கே பாருங்க ஒரு நோட்டீஸ்." தங்கம்மா ஒரு காகிதத்தை டேபிள் மீது வைத்தாள்.

ஆர்.எம்.ஓ-வுக்கு மாற்றல் கிடைத்துள்ளதால் டாக்டர்கள் நடத்தும் பிரிவுபசார விழா குறித்த நோட்டீஸ் அது.

டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனின் நெருங்கிய நண்பர் இந்த ஆர்.எம்.ஓ. இது அவராகவே கேட்டு வாங்கிய மாற்றல். டாக்டர் ஜார்ஜின் நண்பராக இருந்தாலும் நல்ல மனிதர் இந்த ஆர்.எம்.ஓ.

யாரும் அவரை எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம். குற்றங்களைக் கூறலாம். முடிந்தவரையில் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கவும் செய்வார்.

மாலை ஆறு மணிக்குதான் பிரிவுபசார விழா.



ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள ஒரு பெரிய ஓட்டலில் உள்ள ஹாலில்தான் விழா நடக்கப் போகிறது. பெரும்பாலானவர்கள் வந்து விட்டிருந்தனர்.

வந்தவர்கள் எல்லோரும் மெர்ஸியைக் கவனிக்கவே செய்தனர். அவளைப் பார்த்துப் புன்னகைக்கவும், வணக்கம் செய்யவும் தவறவில்லை.

ஆபரேஷன் இல்லாமல் அவள் நடத்திய பிரசவ கேஸ்கள் அதற்குள் அவளது புகழைப் பரப்பி விட்டிருந்தன.

இதையெல்லாம் கவனித்த ஜார்ஜ் செபாஸ்டியனின் மனம் திருப்தியடைந்தது.

விழா தொடங்கியது.

விழாவுக்குத் தலைமை தாங்க டாக்டர் ஆபிரகாமை அழைத்தனர். அவர் அதற்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்.

மேடை மீது மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

நடுவிலிருந்த நாற்காலியில் ஆர்.எம்.ஓ. உட்கார வைக்கப்பட்டார். மற்றொன்றில் ஆபிரகாமும் மூன்றாவதில் மெர்ஸியும் அமர்த்தப்பட்டனர். மெர்ஸி முதலில் தயங்கினாலும் மற்றவர்களின் வற்புறுத்தலுக்காக அங்கு சென்று அமர்ந்தாள்.

பிரிவுபசார விழாவில் பேசியவர்கள் மறக்காமல் மெர்ஸியையும் சேர்த்தே புகழ்ந்தனர். "கைராசி என்பது மெர்ஸியின் சிறப்பு. மருத்துவ விஞ்ஞானத்தின் எல்லைகளையும் மீறி மெர்ஸி இங்கு சேவை புரிகிறார். இந்த நிலை தொடர்ந்தால், பிரசவ கேஸ்களுக்கு இனிமேல் ஆபரேஷனே தேவையிருக்காது. ஆகவே, அவரைப் பாராட்ட வேண்டியதும் அவசியம்." -என்று குறிப்பிட்டார் ஆபிரகாம்.

ஆர்.எம்.ஓ. நன்றியுரை கூறும்போதுதான் டாக்டர் டோமியும், கிளார்க் விஜயனும் வந்து சேர்ந்தனர்.

வந்தவர்கள் நேராக ஜார்ஜ் செபாஸ்டியனிடம் அமர்ந்து பேசத் தொடங்கினர்.

மெர்ஸி அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

கூட்டம் முடிந்தது.

டின்னர் ஆரம்பமானது.

முதலில் மதுபான விருந்து. விருப்பமுள்ள பெண்களுக்குத் தனியாக ஒயின் தரப்பட்டது.

எல்லாம் முடிந்தபோது மணி ஒன்பதுக்கு மேல் ஆகி விட்டது.

மெர்ஸி காரை நெருங்கியபோது அங்கு டோமியும் விஜயனும் நின்று கொண்டிருந்தனர்.

"கார் சட்டுன்னு ரிப்பேர் ஆயிட்டதால ஒர்க் ஷாப்புல விட்டுட்டு டாக்ஸியில வந்தேன். ஆமா, இவரை உனக்குத் தெரியும் இல்லையா?" -டோமி கேட்டான்.

"நல்லாத் தெரியும்... மிஸ்டர் விஜயன் தானே?" -அவள், விஜயனைப் பார்த்தவாறு பேசினாள்.

"சமீபத்துலதான் நான் இவங்களைச் சந்திச்சேன்." -விஜயன் கூறினான்.

"எந்த இடத்துல?" -டோமி கேட்டான்.

"சர்ச்சுக்கு முன்னால..."

"அங்கே யாரைப் பார்க்கப் போனே?"

"ஃபாதரை!"

"ஏன், பாவமன்னிப்புக் கேக்கவா?"

"உங்களுக்கெல்லாம் அங்கே போறதுன்னாலே பயம் தானே? உண்மைகளை எப்படி ஃபாதர்கிட்ட ஒப்புக்க முடியும்? இல்லையா?" -மெர்ஸி சற்றுக் கோபத்துடன் கூறினாள்.



"அதெல்லாம் எப்படி வேணும்னாலும் இருக்கட்டும். நாங்களும் உன்கூட வரலாமில்லையா?" -டோமி கேட்டான்.

இருவரும் அவளது காரில் ஏறினர்.

"யாரை முதல்ல கொண்டு போய் சேர்க்கணும்?" -மெர்ஸி கேட்டாள்.

"அவ்வளவெல்லாம் நீ கஷ்டப்பட வேணாம். எங்களை டவுன்ல எங்கேயாவது இறக்கி விட்டாப் போதும்."

காரின் வேகம் அதிகரித்தது.

கார் மின்னல் போல் பாய்ந்தது.

டோமியும், விஜயனும் பயந்தே போனார்கள். மெர்ஸி இவ்வளவு விரைவாக கார் ஓட்டுவாள் என்று அவர்கள் இருவருமே எதிர்பார்க்கவில்லை.

நகரின் பெரிய ஓட்டல் ஒன்றின் முன்னால் அவர்கள் இறங்கிக் கொண்டனர்.

மெர்ஸி தனியாக காரை ஓட்டிக் கொண்டு வீட்டை அடைந்தாள்.

அவள் கேட்டைத் தாண்டியதும் வீட்டின் வடபகுதியில் நாய்கள் பயங்கரமாக ஊளையிடும் சத்தம் கேட்டது.

அங்கு சமீப காலமாக நாய்கள் எதுவும் இல்லாமல் இருந்தது. ஐந்து வருடங்களுக்கு முன்னால் ஸ்பானியன் நாய்கள் இரண்டு அங்கு இருந்தன. டோமி குடித்தனம் போனபோது அவற்றைக் கூடவே கொண்டு போனான்.

அதன் பிறகு நாய்க் கூண்டு வெறுமையாக இருந்தது.

அன்று மாலையில் இன்ஜினீயரான ரூபன் இரண்டு அல்சேஷன் நாய்களைக் கொண்டு வந்திருந்தான்.

ரூபனின் மனைவி மகப்பேறுக்காகத் தாய்வீடு போயிருந்தாள். அதனால்தான் ரூபன் அவற்றை அங்கு கொண்டு வந்தான்.

அதுவரை அமைதியாக இருந்த நாய்கள், திடுமென்று ஊளையிடத் தொடங்கியதால் ரூபனும், அம்மா நான்ஸியும் அந்தப் பக்கமாக வந்தனர்.

அதற்குள் காரை நிறுத்தி விட்டு மெர்ஸியும் அங்கு வந்து சேர்ந்தாள்.

"ஓகோ... உன்னைப் பார்த்துதான் இதுங்க இப்படி ஊளை யிடுதா?" அம்மா கேட்டாள்.

"நாய்ங்க எப்படி இருக்குன்னு பார்க்குறேனே..." மெர்ஸி நாய்க் கூண்டை நெருங்கினாள்.

## 10

மெர்ஸி நாய்க்கூண்டை நெருங்க நெருங்க அவை மேலும் பயங்கரமாக ஊளையிடத் தொடங்கின.

சட்டென்று நாய்களின் சத்தம் குறைந்து இப்போது அவை உறுமத் தொடங்கின. யாரோ கடுமையாக அடிக்கும்போது அழுவது போல் அவற்றின் ஊளையொலி அழுகையாகக் கேட்டன.

மெர்ஸி நெருங்க நெருங்க அந்தச் சத்தமும் வலுவிழந்து அவை அசைவற்றவை போலாயின.

அவள் கூண்டை நெருங்கியபோது அவை தலையை உயர்த்தாமல், பதுங்குவது போல் தலையைத் தாழ்த்திப் படுத்திருந்தன. அவள் திரும்பிப் போன பிறகும் நாய்கள் குரைக்கவே இல்லை.

சாப்பிட உட்கார்ந்தபோது தனது அல்சேஷன் நாய்களின் புகழ் பாடத் தொடங்கினான் ரூபன்.



"உன்னோட வீம்புப் பேச்சை நிறுத்து. உன் தங்கச்சிக்கு இப்ப ஆஸ்பத்திரியில என்ன மரியாதை, புகழ்னு தெரியுமா?" -நான்ஸி ஜார்ஜ் பேச்சின் திசையை மாற்றினாள்.

"மெர்ஸிக்கு இதெல்லாம் எப்படி சாத்தியமாச்சு? ஏதாவது மந்திர வித்தைகளைக் கத்துக்கிட்டியா என்ன?" ரூபன் கேலித் தொனியில் கேட்டான்.

"சில சமயம் அப்படியும் ஏதாவது இருக்கலாம்" -மெர்ஸி பதிலளித்தாள்.

"படிக்கும்போது அசடா இருந்தாலும் நீ டாக்டரானதுக்கப் புறம் கெட்டிக்காரியாயிட்டே" -ஜார்ஜ் செபாஸ்டியன் தனது கருத்தைக் கூறினார்.

"அப்படின்னு யார் சொன்னது? படிக்கும்போதுகூட நான்தான் எல்லாத்துலயும் ஃபர்ஸ்ட் ராங்." -மெர்ஸி பட்டென்று பதிலளித்தாள்.

"பாவம்... அந்த அப்பாவிப் பொண்ணு மட்டும் இல்லேன்னா தெரிஞ்சிருக்கும். இந்த டாக்டர் மெர்ஸி, ஏதாவது ஒரு பணக்காரனோட வீட்டுச் சமையலறையில கரண்டியும் கையுமா நின்னுட்டிருப்ப..." ரூபன் சிரித்தபடி கூறினான்.

"ஆமாடா... அது உண்மைதான். அந்த அப்பாவிப் பெண்ணைக் கொன்னு கட்டித் தொங்க விட்டதாலதான் உன் சகோதரி இன்னிக்கு டாக்டரா இருக்கிறாள்!" மெர்ஸி சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்தாள்.

"ச்சே... ச்சே... இவள் ஏன் இன்னிக்கு இப்படியெல்லாம் பேசுறா?" என்ற நான்ஸி எழுந்து மகளைப் பின்தொடர்ந்தாள்.

விறுவிறுவென்று நடந்த மெர்ஸி, தனது அறைக்குள் நுழைந்து கட்டிலில் குப்புற விழுந்தாள்.

நான்ஸி இதைக் கவனித்தாள்.

"என்னம்மா இது! அவன் என்னமோ சொன்னதுக்காக இப்படியா கோவிச்சுட்டு வந்து படுப்பே? வா... வந்து எதை யாவது சாப்பிட்டுட்டு படு." -என்ற நான்ஸி அவள் தோள் களைப் பிடித்து எழுப்ப முயன்றாள்.

"வெளியில போறீங்களா இல்லையா?" மெர்ஸி தன் தாயாரின் கையை வெடுக்கெனத் தட்டி விட்டாள். தொடர்ந்து யாரோ வீசியெறிந்தது மாதிரி நான்ஸி சுவரில் தலை மோதி விழுந்தாள்.

அவள் வாயிலிருந்து அலறல் ஒன்று புறப்பட்டது.

சட்டென்று படுக்கையிலிருந்து எழுந்த மெர்ஸி அவளை நெருங்கினாள்.

"ஐயோ... என்னம்மா என்ன ஆச்சு? நான் சும்மா ஒரு தள்ளு தள்ளினதுக்கா இப்படி வந்து விழுந்துட்டீங்க... எழுந்திருங்க." அவள், அவளைப் பிடித்து எழுப்பினாள்.

"அது என்ன பிசாசு மாதிரியான வலு உனக்கு? என் தலை உடைஞ்சிடுச்சு போலிருக்கே?" -தலையைப் பிடித்தபடி நான்ஸி அழத் தொடங்கினாள்.

"தெரியாம நடந்துடுச்சும்மா... மன்னிச்சிரு... எழுந்துக்க. இனிமேல் இப்படி நடக்காது!" -அவள் மன்னிப்புக் கேட்டாள்.

தான் முட்டாள்தனம் செய்து விட்டோம் என்பது அப் போதுதான் மெர்ஸிக்குப் புரிந்தது. எந்தக் காரணத்தாலும் தன்னை யாரும் சந்தேகப்படக் கூடாது என்று அவள் விரும் பினாள்.

நான்ஸியை அழைத்துக் கொண்டு வெளியே வந்தாள். ரூபனும், ஜார்ஜும் அப்போதும் சாப்பிட்டுக் கொண்டிருந் தனர்.

"என்ன... அம்மாவுக்கு என்ன ஆச்சு?" ரூபன் கேட்டான்.

"ஒண்ணும் ஆகலை. நீ பதறாதே. அம்மா விழுந்துட் டாங்க, அவ்வளவுதான்." மெர்ஸி ஆறுதல் படுத்தினாள்.



"நீ அம்மாவைத் தள்ளி விட்டியா?"

"தள்ளிவிடலை. கையை உதறினேன். கொஞ்சம் ஃபோர்ஸ் அதிகமாயிடுச்சு. அதனால அம்மா விழுந்துட் டாங்க."

"கொஞ்ச நாளா உன் கைக்கு வலு ஜாஸ்திதான். வெறுங் கையாலேயே ஆபரேஷன் பண்றவளாச்சே நீ" -ரூபன் பேசினான்.

"ஸ்... தொழிலைப் பத்தியெல்லாம் பேசக் கூடாது. அது நல்லதில்லை!" ஜார்ஜ் செபாஸ்டியன், ரூபனை அடக்கினார்.

ஒரு வழியாக அந்தப் பிரச்சினை அன்று முடிவடைந்தது.

நான்ஸியின் தலை மற்றும் தோள் பகுதிகளில் கடுமை யான வலி தெரிந்தது. படுக்கையில் கணவரின் அருகே படுத் திருந்தவள் அவரிடம் பேச்சுக் கொடுத்தாள்:

"பொண்ணு நாம நினைக்கிறபடி இல்லை. ஒரு யானை யோட பலம் அவளோடது."

ஜார்ஜ் செபாஸ்டியன் சிரித்துக் கொண்டார். இருட்டு நேர மானதால் அதை அவள் கவனிக்கவில்லை.

"...நான் சொல்றதை வேடிக்கையா நினைக்கக் கூடாது. கவனமாகக் கேளுங்க." அவள், அவர் தோளைப் பிடித்து உலுப்பியபடி பேசினாள்.

"சரி... அதுக்கு நான் என்ன செய்யணும்கிறே?"

நான்ஸி யோசனையில் ஆழ்ந்தாள். இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. மகள் பலசாலியாகி விட்டாள் என்பதா இதன் பொருள்? அவரிடம் இதை எப்படி விளக்குவது?

"என்னைக் கேட்டால்...?" நான்ஸி சற்று நேரத்துக்குப் பின் திருப்பிக் கேட்டாள்.

"சரி... நீ தற்சமயம் அதையெல்லாம் மறந்துவிட்டு நிம்மதி யாத் தூங்கு. நாளைக்கு முக்கியமான ரெண்டு மேஜர் ஆப ரேஷன்கள் இருக்கு. நானும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கிறேன்" ஜார்ஜ் புரண்டு படுத்தார்.

திரும்பவும் எதையோ சொல்ல விரும்பிய நான்ஸி, மனத்தை மாற்றிக் கொண்டு படுத்தாள்.

மணி பன்னிரண்டு அடித்தது.

நான்ஸி கண்களை மூடிப் படுத்திருந்தாள். வெகு நேரம் கழித்துதான் உறங்கினாள்.

மறுநாள் காலையில் காபி குடித்தவுடன் பிஸ்கெட் டப் பாவை எடுத்துக் கொண்டு நாய்க் கூண்டை நெருங்கினான் ரூபன். புலிக் குட்டிகளைப் போல் பாய்ந்து விளையாடும் அந்த நாய்கள் இரண்டும், துவண்டு போன பூனைக் குட்டி கள் மாதிரிப் படுத்திருந்தன.

ரூபன் ஒவ்வொன்றாக அவற்றின் பெயரைச் சொல்லி அழைத்தான். கூண்டை மெதுவாகத் திறந்து அவற்றின் முன் னால் பிஸ்கெட்டைப் போட்டான். சாதாரணமாகக் கவ்விப் பிடித்து, அரை மணி நேரத்துக்குள் காலியாக்கி விடும் நாய்கள் அன்று மிகவும் நிதானமாக அரை மணி நேரத்துக்குள் இரண்டே இரண்டு பிஸ்கெட்டுகளை மட்டும் சாப்பிட்டன.

அவற்றை பங்களாவின் முன்புறம் அழைத்து வந்தான்.

"மெர்ஸி... மெர்ஸி... மெர்ஸி..." உரத்த குரலில் அழைத் தான்.

மெர்ஸி அப்போதுதான் குளித்துவிட்டு, ஈரத்துணியில் தலைமுடியை முடிந்து கொண்டு பாத்ரூமிலிருந்து வெளியே வந்தாள். அப்போது அவள் ரோஸ் நிற நைட்டி அணிந்திருந் தாள்.

அவள் ஒரு முறை கண்ணாடியில் தன்னைத் தானே பார்த் துக் கொண்டாள். அவள் கண்களில் வியப்பு படர்ந்தது.



கண்ணாடியில் அவளது உண்மையான உருவம் தெரிந் தது. அதாவது மெர்ஸி ஜானின் உருவம். ஆனால், அது தெளிவற்றுத் தெரிந்தது. அதனால் அவள் கண்களில் பீதி பரவத் தொடங்கியது.

'நேற்று கண்ணாடியில் தென்பட்டது கூட மேரி ஜார்ஜின் உருவம்தான். அதற்குள் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. நிலைமை இப்படியே போனால், விரைவிலேயே தன் உடல் வடிவம் மொத்தமாக மாறி விடலாம்!' அவள் பயந்தாள்.

திடுமென்று அவளுக்கு ஆபிரகாம் தந்த புத்தகம் நினை வுக்கு வந்தது. அதில் கால் பகுதியை வாசித்திருந்தாள். ஒரு வேளை அதில் இதற்கான தகவல் ஏதேனும் இருக்கலாம்.

மற்றோர் உடலுக்குள் புகும் ஆத்மாவைப் பற்றியும் அதில் குறிப்பிட்டுள்ளதாகப் பொருளடக்கத்தைப் பார்த்தபோது விளங்கியது.

உடனே அவள் தனது படுக்கையறையை அடைந்தாள். மெத்தைக்கு அடியில் மறைத்து வைத்திருந்த புத்தகத்தை வெளியே எடுத்து அதன் பக்கங்களை அவசர அவசரமாகப் புரட்டினாள்.

அப்போது ரூபன் மீண்டும் அழைத்தான் மெர்ஸியை.

"மெர்ஸி... மெர்ஸி..."

அப்போது அந்தப் பெயரைக் கேட்ட அவளுக்குக் கோபம்தான் தோன்றியது.

"இதோ பார்... இரண்டு புலிக்குட்டிகளை..." ரூபன் பெரு மிதத்துடன் கூறினான்.

அதைக் கேட்டுக்கொண்டுதான் மெர்ஸி வாசல்படி தாண் டினாள்.

ரூபன் அந்த நாய்களுடன் கொஞ்சி விளையாடிக் கொண் டிருந்தான்.

அவளைப் பார்த்தவுடன் நாய்கள் தரையோடு தரையாகப் படுத்தபடி இரக்கத்துக்கு உரிய வகையில் அழத் தொடங்கின.

அதைப் பார்த்ததும் மெர்ஸி சட்டென்று வீட்டுக்குள் திரும்பினாள். தன்னைப் பார்த்ததால்தான் அவை அப்படி மாறின என்று அவளுக்குத் தெரியும்.

ஆனால், ரூபன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனாலும், அவனுக்கு விஷயம் பிடிபடவில்லை.

இருப்பினும், இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நான்ஸிக்கு எதுவோ தட்டுப்பட்டது போலிருந்தது. ஏதோ ஒரு விபரீதம் இருப்பதாக அவளின் உள்ளுணர்வு எச்சரித்தது.

மெர்ஸி அன்று அப்பா ஜார்ஜுடன் ஆஸ்பத்திரிக்குப் போனாள்.

அன்றைய வேலைகளை முடித்துக் கொண்டு, பைபிளை எடுத்துக் கொண்டு மேல் மாடியிலுள்ள தனது அறையை அடைந்த நான்ஸி, அதன் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினாள்.

தான் பங்கு கொண்ட பாவங்களின் பரிகாரத்துக்காக அவள் பைபிளை நாடுவது வழக்கம். அவளை அறியாமலேயே அவளுள் மெர்ஸியைக் குறித்து ஒருவிதமான பீதி எழுந்தது.

அவள் பிரித்த பக்கத்தில் இருந்த வாசகங்கள் இவைதான்; மார்க்கோஸ் எழுதிய சுவிசேஷம், ஐந்தாவது அத்தியாயம்.

'அவர்கள் கடலின் அக்கரையிலுல்ள கதரா தேசத்தை அடைந்தனர். வடக்குத் திசையிலிருந்து திரும்பிய உடனே அசுத்தமடைந்த ஆத்மா கொண்ட ஒரு மனிதன் கல்லறைகளிலிருந்து எழுந்து வந்து அவனுக்கு முன்பாக நின்றான். அவன் கல்லறைகளில் குடியிருந்தவன். யாராலும் அவனைச் சங்கிலியால்கூட பிணைக்க முடியாதிருந்தது. பலமுறை கைவிலங்குகள் மற்றும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டும் அவன் அவற்றையெல்லாம் உடைத்து எறிந்திருக்கிறான். யாராலும் அவனை அடக்க முடியாது.' -நான்ஸி வாசித்துக் கொண்டிருந்தாள்.



'உன் நாமம் என்ன? என்று கேட்டபோது, என் நாமம் லெக்யோன். நாங்கள் பலராக இருக்கிறோம் என்று அவன் பதிலளித்தான். எங்களை அவ்விடத்திலிருந்து அனுப்பாமலிருக்க விண்ணப்பஞ் செய்தான். அங்கு மலையடிவாரத்தில் பன்றிக் கூட்டம் ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. எங்களை அவற்றில் கடத்த, எங்களை அனுப்ப வேண்டுமென்று அவர்கள் அவனிடம் விண்ணப்பஞ் செய்தனர். அப்படியாக அந்த அசுத்த ஆத்மாக்கள் அங்கிருந்த பன்றிகளுக்குள் பிரவேசித்தன.'

"கடவுளே... அப்படியானால் பிசாசுகள் இருக்கின்றன என்றா சொல்கிறார்கள்?" -என்று தனக்குத்தானே பேசியபடி, படித்த பகுதியில் அடையாளம் வைத்து மூடினாள்.

மெர்ஸி தன்னைப் பிடித்துத் தள்ளி விட்டதும், ஊன்றிக் கவனித்ததும் அவளுடைய சந்தேகத்தை அதிகப்படுத்தின. அத்துடன் காலையில் நாய்களுக்கு நேர்ந்த மாற்றமும் சேர்ந்து கொண்டது.

அதே நேரத்தில், தான் இப்படி நினைப்பதெல்லாம் தன் மகளைப் பற்றியாயிற்றே என்ற ஓர் எண்ணமும் எழுந்தது.

அன்று மெர்ஸி வந்தபோது இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

"இவ்வளவு நேரம் நீ எங்கேம்மா போயிருந்தே?" நான்ஸி கேட்டாள்.

"சர்ச்சுக்குப் போயிருந்தேன்" சொல்லியவாறே அவள் தனது அறைக்குள் நுழைந்தாள்.

"சர்ச்சுக்கா... என்ன இது!" தன்னையும் மீறிக் கேட்டுக் கொண்டாள் நான்ஸி.

"ஏன், நான் சர்ச்சுக்குப் போகக் கூடாதா?" -மெர்ஸி உடையை மாற்றிக் கொண்டே கேட்டாள்.

"போகலாம்தான். சரி அங்கே நீ யாரைப் பார்க்கப் போயிருந்தே?" -நான்ஸி கேட்டாள்.

"சாதாரணமா சர்ச்சுக்குப் போறது எதுக்காக?" -மெர்ஸி திருப்பிக் கேட்டாள்.

"அப்படியானால் நீ எந்த சர்ச்சுக்குப் போனே?"

"என்னம்மா, இப்படியெல்லாம் கேக்குறீங்க? ஒண்ணுக்கு ஒண்ணு சம்பந்தமில்லாம எதையெல்லாமோ பேசுறீங்க? நான் பிரார்த்தனை பண்ணப் போனேன். நேத்து உங்களைத் தள்ளி விட்டேன் இல்லையா? அதுக்கு மன்னிப்பு கேட்கப் போனேன்."

"நீ சொல்றதெல்லாம் உண்மையா? ஃபாதரைப் பார்த்தியா? அவர் என்ன சொன்னார்?"

மெர்ஸி அதையெல்லாம் காதில் வாங்காதவளைப் போல் உடை மாற்றுவதில் தீவிரமாக இருந்தாள்.

"ஐயோ... பயங்கரமான ஆவி!" என்ற நான்ஸி இயல்பாகக் கண்ணாடியின் பக்கமாகத் திரும்பியவள் திடுக்கிட்டாள். ஏனெனில் அப்போது கண்ணாடியில் தட்டுப்பட்டது மெர்ஸி ஜானின் உருவம்.

மாலை நேரத்தில் டோமி வந்தான்.

ரூபன் வந்திருப்பதைத் தெரிந்துதான் அவன் வந்திருந்தான்.



மெர்ஸி அப்போது ஆபிரகாம் தந்த புத்தகத்தில் மற்றோர் உடலுக்குள் புகுவது குறித்த பகுதியை வாசித்துக் கொண்டிருந்தாள்.

'மற்றோர் உடம்பில் புகுந்து கொள்ளும் ஆத்மாக்களின் இயல்புகள், படிப்படியாக புகுந்த உடம்பில் படியத் தொடங்கும். இப்படியே தொடர்ந்தால் சில சமயம் உருவ மாற்றங்கள் கூட ஏற்படலாம். ஆனால், அது அவ்வளவு சுலபமல்ல.'

"மெர்ஸி!" டோமி அவளை அழைத்தான்.

"என்ன?"

"இப்படி வாம்மா!"

"வாசிச்சிட்டிருக்கேன்."

"அப்படின்னா, நானே வர்றேன்."

டோமி வரப் போகிறான் என்று தெரிந்ததும், அவள் புத்தகத்தை வழக்கம் போல் படுக்கையின் கீழ் ஒளித்து வைத்தாள்.

வந்தவன் நேராக நாற்காலியில் உட்கார்ந்தான்.

"நீ இன்னிக்கு எதுக்காக சர்ச்சுக்குப் போனே?"

"பிரார்த்தனைக்கு!"

"உன்னை அங்கே யாருமே பார்க்கலைன்னு சொல்றாங்க."

"நான் எதுக்கு ஒளிஞ்சு மறைஞ்சு போகணும்? ஒளிஞ்சிருந்து யாராவது கவனிச்சாங்களா என்ன?" -மெர்ஸி கோபத்துடன் கேட்டாள்.

"நீ வில்சனைப் பார்க்கத்தானே போயிருந்தே?" -டோமி திடுமென்று கேட்டான்.

"அப்படின்னு யாரு சொன்னது?"

"விஜயன்தான் சொன்னார். இன்னிக்கும் அவர் உன்னைப் பார்த்தாராம்."

"ஆமாம்... நான் வில்சனைச் சந்திச்சேன்... அதுக்கென்ன இப்போ?" மெர்ஸி விட்டுக் கொடுக்காமல் பேசினாள்.

"உனக்குத் தெரியுமா? அந்த வில்சன், இறந்து போன மெர்ஸி ஜானின் காதலன்."

"சரி... அதுக்கு என்ன?"

"உன்னை என்னால நம்ப முடியலை!" டோமி எழுந்தான்.

டோமி வெளியேறியவுடன் மெர்ஸியும் எழுந்தாள். தன்னைப் பற்றி அவனுக்கு ஏதோ தெரிந்து விட்டிருக்கிறது என்று அவளுக்குள் முதன் முறையாகச் சந்தேகம் ஏற்பட்டது. இல்லாவிட்டால், இவன் இப்படிப் பேசியிருக்க மாட்டான். ஒருவேளை அம்மா ஏதாவது சொல்லியிருப்பாளோ?

அவள் அறையைவிட்டு வெளியே வந்தாள்.

சரியாக அந்த நேரம் பார்த்து பாத்ரூமுக்குள் நுழைந்த டோமி அதன் கதவை உட்புறமாக இழுத்து மூடினான்.

## 11

உற்சாகமான ஒரு பாட்டை முணுமுணுத்தபடி டோமி, தனது சட்டையை அவிழ்த்து ஹேங்கரில் தொங்க விட்டான். பிறகு லுங்கியை அதன் மீது போட்டான். அண்டர்வேருடன் கண்ணாடி முன்னால் நின்று கொண்டு அதில் தெரியும் தன் உருவத்தைப் பார்த்தான்.

"பரவாயில்லை!"-தனக்குத்தானே பேசிக் கொண்டான்.



ஏறத்தாழ ஆறடி உயரம். அதற்கேற்ற தசைப்பிடிப்பான உடம்பு. டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனின் அதே முக ஜாடை. சதுர முகம். நீண்டு வளைந்த மூக்கு. உறுதியான கன்னக் கதுப்புகள்.

நரம்புகள் முறுக்கேறி நிற்கும் உடற் பகுதிகள்.

ஆனால், அப்போதும் அவன் மனத்தில் மெர்ஸியைப் பற்றிய சிந்தனைதான் இடம் பெற்றிருந்தது. அம்மா அவனிடம் குறிப்பிட்ட விஷயங்கள் மூளைக்குள் நெளிந்து கொண்டிருந்தன.

சமீப காலமாக அவளிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்... அற்புதமான திறமைகள்!

டாக்டர் ராமச்சந்திரனின் மரணம்...

சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் மரணம்...

சிசேரியன் தேவைப்படாமல் அவள் நடத்திய பிரசவம்...

எல்லாவற்றுக்கும் மேலாகக் கொல்லப்பட்ட மெர்ஸி ஜானின் காதலனான வில்சனை அவள் தேடிப் போனது.

இவை ஒவ்வொன்றும் அவன் மனத்தில் வரிசைக் கிரமத்தில் வட்டமடித்துக் கொண்டிருந்தன.

தொடர்பு இருக்கிறதோ, இல்லையோ கல்லறையிலிருந்து எந்த ஒரு சிதைவும் இல்லாமல் மெர்ஸி ஜானின் உடலைத் தோண்டி எடுத்ததும் அதனுடன் சேர்ந்து கொண்டது. அது மட்டுமா, அந்த உடல் மாயமாக மறையவும் செய்தது!

ஹாரர் திரைப்படங்களை விரும்பிப் பார்க்கும் டோமியின் மனத்தில் என்னென்னவோ சிந்தனைகள் புகுந்து கொண்டன.

'ஒருவேளை மெர்ஸி...?' என்று விபரீதமாக எதையோ நினைத்தவன் மறுகணம் தானே அதைத் திருத்திக் கொண்டான். 'சே... அப்படி எதுவும் இருக்காது!' -மனத்துள் பட்டிமன்றம் நடத்திய டோமி வாஷ்பேஸினை நெருங்கி

பைப்பைத் திறந்து ஒரு வாய் தண்ணீரைப் பிடித்து வாயைக் கொப்பளிக்க முயன்றான். ஆனால், வாய்க்குள் ஊற்றிய வேகத்திலேயே அதை வெளியே துப்பினான்.

தண்ணீருக்கு ரத்த ருசி!

உடனே குழாயைப் பார்த்தான்.

அதிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

டோமி பைப்பை மூடினான்.

சந்தேகத்தை நிவர்த்திப்பதற்காக மறுபடி குழாயின் குமிழைத் திருப்பினான்.

இப்போது அதிலிருந்து தெளிந்த தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

'ச்சே... நான் இந்த அளவுக்கு முட்டாளாகிப் போனேனே!' -தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

'ஒரு டாக்டர் மூட நம்பிக்கைகளுக்கு ஆட்படுவதா? என்ன ஒரு முரண்பாடு?'

ஷவரை நெருங்கியவன் பூ போன்ற அதன் பிடியைத் திருகினான்.

குளிர்ந்த தண்ணீர் விசையுடன் அவன் உடலில் பதியத் தொடங்கியது. கண்களை மூடி உடல் முழுவதையும் நனைத்தவன் கைகளால் உடலைத் தேய்த்தான். சட்டென்று தண்ணீர் சூடானது போல் தெரிந்தது. திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான்.

ரத்தம்... செஞ்சாந்து போன்ற ரத்தம்!

ஷவர் வழியாக ரத்தப் பாய்ச்சல் விழுந்து கொண்டிருக்கிறது.

டோமி பயத்தில் உறைந்து போனான். சட்டென்று ஷவரின் கைப்பிடியைத் திருகி நிறுத்தினான்.

"என்ன பயந்துட்டியா?" -ஒரு பெண் குரல்.



டோமியின் உடலிலிருந்த மொத்த ரோமங்களும் விறைத்து நிமிர்ந்தன.

சட்டென்று திரும்பினான்.

மிக அருகில் மெர்ஸி நின்று கொண்டிருந்தாள்.

அவள் டாக்டர் மெர்ஸி ஜார்ஜேதான்.

வேறு யாருமில்லை, சொந்தச் சகோதரி.

"என்னைப் பார்த்தா ஏதேதோ சந்தேகமெல்லாம் ஏற்படுது இல்லையா?" அவள் கேட்டாள். ஆனால், அப்போது அவனுக்குக் கேட்ட குரல் அவன் சகோதரியினுடையதாக இருக்கவில்லை.

முன்னெப்போதோ பாவாடையை இழுத்துக் கிழித்தபோது எழுந்த மெர்ஸி ஜானின் குரலாக இருந்தது!

டோமி நடுங்கினான்.

அவன் கை இயல்பாகவே லுங்கியை நாடியது.

"கையை அசைக்காதடா வெட்கமில்லாத நாயே!" -அவள் இடது கையால் அவன் கையை வலுவாகத் தட்டிவிட்டாள்.

அவளின் கைபட்டது இரும்புக் கம்பியால் அடித்தது போலிருந்தது அவனுக்கு. அவன் முன்னங்கை எலும்பு உடைந்து, கை தானாகத் தாழ்ந்தது.

"இந்த உடம்புக் கறியை எப்படிப்பட்ட வெறியோட கடிச்சே நீ... ஞாபகமிருக்கா?" ஆக்ரோஷத்துடன் கேட்டவள், நைட்கவுனின் ஜிப்பை சர்ரென்று கீழ்ப்புறம் இழுத்தாள்.

அப்போதுதான் கடிபட்டது போல் அவள் உடம்பின் தசைப் பகுதியிலிருந்து ரத்தம் துளிர்த்துக் கொண்டிருந்தது.

டோமி அந்தக் காட்சியை மறக்கவில்லை. விஸ்கியின் போதையில் அவன் செய்த வெறிச் செயலின் அடையாளம்!

அவள், அவன் மீது பாய்ந்து பிடித்தாள். சரியாக அவன் கழுத்தைச் சுற்றி அவள் கைகள் சுருக்குபோல் படிந்தன.

அவனால் அசைய முடியவில்லை.

மெர்ஸியின் கை விரல்கள் நெரிக்கத் தொடங்கின.

டோமியின் விழிகள் வெளியே வந்து விழுந்து விடுவன போல் துருத்திக் கொண்டு வந்தன. முகத்தின் நரம்புகள் விறைத்தன. நின்ற நிலையிலேயே அவன் வளைந்தான்.

"ஞாபகமிருக்கா... அணில் குஞ்சை காட்டுப்பூனை கிழிச்சுக் குதர்றது மாதிரி என்னை நோகடிச்சது? நினைச்சுப் பாருடா நாயே..." -அவளது பிடி மேலும் மேலும் இறுகிக் கொண்டே இருந்தது.

"ஐயோ..." அவன் அலறினான். ஆனால், அவனது குரல் தொண்டையை விட்டு வெளியேறவே இல்லை.

டோமியின் கால்கள் தரையை உடைப்பது போல் அடித்துக் கொண்டன. அவன் கழுத்துப் பகுதியில் தசை முறுகியது. வயிற்றுப் பகுதியிலிருந்த தசைப் பகுதிகள் மேற்புறமாக உயர்ந்து எழும்பின.

அவள், அவனை மேற்புறமாக உயர்த்தினாள்.

டோமி வில் போல் விறைத்துப் போயிருந்தான். மறு விநாடி அவள், அவனைத் தரையில் போட்டு அடித்தாள்.

அத்துடன் டோமியின் உடல் அசைவற்றுப் போனது.

இரவுச் சாப்பாட்டுக்காக எல்லோரும் ஒன்று கூடியபோது டோமி மட்டும் வந்து சேரவில்லை.

"டோமி எங்கே போனான்?" ஜார்ஜ் செபாஸ்டியன் விசாரித்தார்.

"ஆமா... நானும் கவனிக்கவில்லை. அவன் வந்திருக்கிறதை நான் மறந்துட்டேன்." என்ற நான்ஸி உடனே டைனிங் டேபிளிலிருந்து நகர்ந்தாள்.

"நீ அவனைப் பார்த்தியா?" -ரூபன், மெர்ஸியிடம் கேட்டான்.



"இல்லையே..." -அவள் முகத்தை உயர்த்தாமல் பதிலளித்தாள்.

நான்ஸி, "டோமி... டோமி!" என்று அழைத்தவாறே அவனைத் தேடத் தொடங்கினாள்.

ஒவ்வோர் அறையாகத் தேடிவிட்டு மேல் மாடியிலும் பார்த்துவிட்டு அவனைக் காணாததால் திரும்பவும் டைனிங் டேபிளுக்கு வந்து சேர்ந்தாள்.

"ஒருவேளை குளிக்கிறானோ என்னவோ?" -ஜார்ஜ் செபாஸ்டியன் சந்தேகம் கிளப்பினார்.

"இருக்கும்... அவன் குளிச்சுட்டு வந்துருவான், நீங்க சாப்பிடுங்க." நான்ஸி பரிமாறத் தொடங்கினாள்.

சாப்பிட்டு முடித்த பிறகும் டோமி வந்து சேராததால், எழுந்து கையைக் கழுவிய ஜார்ஜ், குளியலறையை நோக்கி நடந்தார்.

பாத்ரூம் கதவைத் தட்டினார்.

பதிலில்லை.

கதவைத் தள்ளிப் பார்த்தார்.

ஊஹூம் கதவு அசையவில்லை.

"டோமி..." என்று உரத்த குரலில் அழைத்தார்.

அதற்குள் எல்லோரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

பதில் எதுவும் வராமல் போகவே, ரூபன் கதவை எட்டி உதைத்துத் திறந்தான். தாழ்ப்பாள் பெயர்ந்த கதவு, விசையுடன் பக்கவாட்டுச் சுவரில் மோதியது.

உள்ளே டோமி தரையில் மட்ட மல்லாக்க விழுந்து கிடந்தான். அங்கு குழுமியவர்கள் சட்டென்று பின்னுக்கு நகர்ந்தனர். அந்தக் காட்சி அந்த அளவுக்கு விபரீதமாக இருந்தது.

கண்கள் துருத்திக் கொண்டிருக்க, நாக்கு தனியே விழுந்து விடுவது போல் ஏகத்துக்கு வெளியே வந்திருந்தது. உடம்பு மரக்கட்டை மாதிரி விறைத்திருந்தது.

ஜார்ஜ் செபாஸ்டியன் லுங்கியை இழுத்து எடுத்து அந்த உடலை மூடினார்.

மெர்ஸியும் அங்குதான் இருந்தாள்.

ஒவ்வொருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

"ஒருவேளை ஷாக் அடிச்சிருக்குமோ?" ஜார்ஜ் கேட்டார்.

"தெரியலையே... பைப்பில கரண்ட் வருதோ என்னமோ?" -ரூபன் கூறினான்.

"யாரும் எதையும் தொட வேணாம். நான் இதோ வந்திடுறேன்" -ஜார்ஜ் அங்கிருந்து கிளம்பி டெஸ்ட்டரை எடுத்து வந்தார்.

ஆனால், பைப்பிலோ, சுவரிலோ எங்கும் கரண்ட் இல்லை!

"இப்ப என்ன செய்யிறது?" -ரூபனைப் பார்த்துக் கேட்டார் ஜார்ஜ்.

"உடனே ஷிபுவையும், சாந்தியையும் வரவழைக்கலாம். வந்த பிறகு மத்ததைப் பார்த்துக்கலாம்" -என்ற ரூபன் நேராகத் தொலைபேசியை நோக்கி நடந்தான்.

சற்று நேரத்துக்குள் எல்லோரும் வந்து சேர்ந்தனர்.

"டோமியின் மரணம் இயல்பானது என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் போஸ்ட்மார்ட்டம், கேஸ், விசாரணை என்று பெரிதாகப் போகும். அது குடும்பத்துக்கும் அவமானம்!" என்று ஷிபு கருத்துத் தெரிவித்தான்.

எல்லோரும் அதை ஒப்புக்கொள்ளவும் செய்தனர்.

சவ அடக்கம் எந்தவிதமான குறையும் இல்லாமல் நடைபெற்றது.



நான்ஸியைப் பொறுத்தவரை டோமியின் மரணம் மறக்க முடியாத ஒன்று. காரணம், அவன்தான் தலைப் பிள்ளை.

அன்றிரவு அவள் உறங்கவில்லை. என்னென்னவோ யோசனைகள் அவள் மனத்துள் கூடு கட்டியது.

ஒரு வார காலம் கடந்த பிறகும் கூட நான்ஸி இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

அன்று சனிக்கிழமை.

ஃபாதரின் இருப்பிடத்துக்கு போன் செய்தாள். அவர் எங்கும் செல்லவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு அவரைச் சந்திப்பதற்காகக் கிளம்பினாள்.

நான்ஸியே காரை ஓட்டிச் சென்று சர்ச்சை அடைந்தாள்.

லூயிஸ் சிரயில்தான் அந்த சர்ச்சின் பாதிரியார்.

அறுபது வயதான பாதிரியார் உண்மையிலேயே பக்தி நிறைந்தவர். உலகின் பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களைத் தரிசித்தவர். அவர் வெகுகாலம் ரோம் நகரில் தங்கியிருந்தவரும் கூட. எல்லா வகையிலும் கெட்டிக்காரராகவும், அனுபவம் மிக்கவராகவும் இருந்தார்.

பார்த்தாலே மரியாதை அளிக்கத் தூண்டும் உருவம் அவருடையது. நல்ல உயரம். மொட்டையடித்ததைப் போல் ஒட்ட வெட்டியிருந்த தலைமுடி. மார்புப் பகுதியில் அடர்ந்து வளர்ந்திருந்த நரைத்த முடியிழைகள். தாடியும் மீசையும் ட்ரிம் செய்யப்பட்டுக் கௌரவத் தோற்றத்தை அதிகப்படுத்தின. தடித்த மூக்குக் கண்ணாடி வழியாக ஆழ்ந்து ஊடுருவும் விழிகள்.

கழுத்தில் சற்றுப் பெரிதான மணிமாலையில் சிலுவை தொங்கியது.

வரவேற்பு அறையில் காத்திருந்த அவர் நான்ஸியை அன்புடன் வரவேற்றார். குசல விசாரிப்புகள் தொடர்ந்தன.

"நடந்ததெல்லாம் அவ்வளவு சீக்கிரமா மறக்கக் கூடிய விஷயமில்லைதான். நம்மகிட்ட என்ன இருக்கு? எல்லாம் கர்த்தரோட செயல்!" -பாதிரியார், நான்ஸிக்கு ஆறுதல் சொல்ல முயன்றார்.

தான் சொல்ல வேண்டியதை எப்படி, எங்கிருந்து தொடங்குவது என்று புரியாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தாள் நான்ஸி.

"தயங்காம, நீங்க சொல்ல நினைக்கிறதைச் சொல்லுங்க. உங்க துயரத்தோட பாரம் கொஞ்சமாவது குறையணும்னா வெளிப்படையாகப் பேசுங்க. இந்த இடத்துக்கு வந்துட்டு நீங்க இவ்வளவெல்லாம் யோசிக்க வேண்டியதில்லை!" பாதிரியார் அமைதியான குரலில் ஊக்கமளித்தார்.

"நான் சொல்லப் போறது ஒருவேளை உங்களுக்குப் பிடிக்காமக் கூட இருக்கலாம். இருந்தாலும் நான் சொல்லியே தீர வேண்டிய விஷயங்கள்..." நான்ஸி ஒருவிதமாகப் பேசத் தொடங்கினாள்.

ஃபாதர் லூயிஸ், நான்ஸியை ஊன்றிக் கவனித்தார். அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதை ஃபாதரால் யூகிக்க முடியவில்லை. கடைசியில் அவரே பேசினார். "எனக்குப் பிடிக்காத விஷயத்தை, உங்களால என்கிட்டச் சொல்ல முடியும்னு எனக்குத் தோணலை. உங்க மனசில எந்த வித மான சந்தேகம் வந்தாலும் அதையெல்லாம் தீர்த்து வைக்கத் தானே நாங்க இருக்கோம்?"

இந்தப் பேச்சு, நான்ஸிக்குத் தைரியத்தை வழங்கியது போலிருந்தது.

"ஃபாதர், ஆவி -பிசாசுங்கிறதெல்லாம் உண்மையாகவே இருக்குங்களா?" -நான்ஸி திடுமென்று கேட்டாள்.

ஃபாதர், நான்ஸியின் முகத்தை ஊன்றிக் கவனித்தார். அவர் நெற்றியில் சுருக்கங்கள் படிந்தன.



"நீங்க இப்படிக் கேட்க என்ன காரணம்?"

"சொல்றேன்... முதல்ல எனக்கு பதில் சொல்லுங்க." -என்ற நான்ஸி, ஃபாதரின் கண்களைப் பார்த்தாள்.

"நீங்க கேட்டதெல்லாம் இருக்கு. ஆவி -பிசாசு துர் ஆத்மாக்கள் -இப்படி எவ்வளவோ இருக்கு! அதைப் பத்தியெல்லாம் பைபிளிலேயே குறிப்பிட்டிருக்கே." -ஃபாதர் ஒப்புக் கொண்டார்.

"அதெல்லாம் மனுஷங்களுக்குத் தொல்லை கொடுக்குமா ஃபாதர்?"

"கர்த்தரைக்கூட சாத்தான் தொல்லைப் படுத்தியிருக்கே?"

"நான் அதைக் கேட்கலை ஃபாதர்... இதெல்லாம் மத்த மனுஷங்களைத் தொல்லைப்படுத்துமா? இன்னொரு கேள்வி. இறந்து போனவங்களோட ஆத்மாக்கள் உயிரோட இருக்கிறவங்களைப் பழி வாங்குமா?"

"இப்படியெல்லாம் கேட்குற அளவுக்கு என்னதான் நடந்துதுன்னு சொல்லுங்களேன்!"

"சொல்றேன். இறந்து போனவங்களோட ஆத்மாக்கள் நாற்பது நாட்கள் வரை பூமிக்குள் அலைந்த பிறகு, இங்கிருந்து வெளியேறி விடும் என்றுதானே சொல்கிறார்கள்?" நான்ஸி, சந்தேகம் கேட்டாள்.

"அப்படியானால், கல்லறைகளில் பிரார்த்தனை நடத்த வேண்டிய தேவையே இல்லை. அது மட்டுமின்றி, இறந்து போன ஆத்மாவுக்காக ஆண்டு தோறும் நாம் பிரார்த்தனை செய்வதும் தேவையில்லையே?" ஃபாதர் கேட்டார்.

அதைக் கேட்டதும் நான்ஸி ஜார்ஜின் முகம் சிவக்கத் தொடங்கியது. அவள் கண்கள் நெருப்புக் கங்குகள் போல் ஜொலிக்கத் தொடங்கின.

"ஃபாதர், பூதம் ஓர் உடலில் நுழைந்த கதையை நான் பைபிளில் வாசித்திருக்கிறேன். அப்படியானால், இறந்தவரின் ஆவி, உயிரோடு இருக்கும் மற்றோர் உடம்புக்குள் நுழைய முடியுமா?"

ஃபாதர் லூயிஸ் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார்.

நான்ஸியின் கேள்விகளுக்கு எல்லாம் தான் பதிலளித்தால், அது வேறு மாதிரியான பிரச்சினைகளுக்கு வழிகாட்டிவிடுமோ என்ற கோணத்தில் அவரது யோசனை விரிந்தது. ஒருபோதும் தனது வார்த்தைகளின் மூலம், அவளுக்கு ஏற்பட்டிருக்கும் பீதியை அதிகப்படுத்தக் கூடாது என்று அவர் தீர்மானித்தார்.

"நான்ஸி, நீங்கள் மனத்துள் எதையெல்லாமோ மறைத்து வைத்துக் கொண்டு உள்நோக்கத்துடன் பேசுகிறீர்கள். அப்படியே இன்னொரு விஷயம். நீங்கள் எல்லோரும் படித்தவர்கள். இந்த நிலையில் நான் உங்களிடம் என்ன பதிலைச் சொல்ல? உண்மையைச் சொன்னால் நாம் புரிந்து கொள்ள முடியாத எவ்வளவோ விஷயங்கள் இந்த உலகத்தில் இருக்கின்றன. அதனால், நமக்குத் தெரியாததை எல்லாம் இல்லையென்று நினைப்பது சரியல்ல!"

அதை கவனித்துக் கேட்ட நான்ஸி கூறினாள்: "நான் வந்தது டோமியின் மரணத்தைப் பற்றி உங்களிடம் சொல்வதற்காக. என்னுடைய சந்தேகம் என்னவென்றால், யாரோ அவனைக் கொன்றிருக்க வேண்டும்- அதுவும் ஏதோ ஒரு பிசாசு!"

"நோ!" ஃபாதர் வியப்புடன் அவளைப் பார்த்தார். அவரின் வலது கை விரல்கள் தன் கழுத்தில் கிடந்த ஜப மாலையின் மணிகளை மாறி மாறிப் பிடித்துக் கொண்டிருந்தன.

நான்ஸி கூறியதன் பொருள் அவருக்கு விளங்கவில்லை.



"என்னுடைய சந்தேகம் என் மகள் மீதேதான்." திடுமென்று அவள் கூறினாள்.

"யார் டாக்டர் மெர்ஸியையா?" ஃபாதர் வியப்படைந்தார்.

"ஆமாம் ஃபாதர்... அவளேதான். அவள் இப்போது அவளாக இல்லை. அவள் வேறு யாரோதான். ஃபாதர், நீங்கள் இதற்கொரு பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டும்." தான் கூற வேண்டியதை யெல்லாம் கூறியாகிவிட்டோம் என்ற ஆறுதலுடன் அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"சரி... அப்படியொரு சந்தேகம் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால், அதைக் களையும் முயற்சியில் ஈடுபடுகிறேன்." என்ற ஃபாதர் அங்கிருந்து எழுந்து, தனது அறையை நோக்கிச் சென்றார்.

## 12

ஃபாதர் லூயிஸ் சற்று நேரத்துக்குப் பிறகு திரும்பி வந்தார். அப்போது அவர் கையில் சிறிய டப்பா ஒன்று இருந்தது. அதை அவர் மேஜை மீது வைத்தார்.

"இதற்குள் மிகவும் பரிசுத்தமான ஒரு பொருள் அடங்கியுள்ளது. யாருக்கும் தெரியாமல், இதை அசுத்தப்படுத்தாமல் பத்திரமான ஓரிடத்தில் வைக்க வேண்டும். இதை நீங்கள் பிரார்த்தனை செய்யும் அறைக்குள் வைத்தாலும் போதும். உங்கள் வீட்டுக்குள் மேற்கொண்டு எந்தவொரு தொல்லையும் ஏற்படாது!" ஃபாதர் விவரித்தார்.

அதைக் கேட்டதும் நான்ஸி ஜார்ஜின் நெற்றி சுளிவடைந்தது. தசைப்பற்று நிறைந்த அவளின் கன்னக் கதுப்புகளில் கீறல்கள் போல் சன்னமாகத் தென்பட்ட கோடுகள் இறுகி முறுகின.

ஃபாதர் தனது வீட்டுக்கு வந்து ஆச்சரியகரமான எதை யாவது செய்வார் என்று அவள் எதிர்பார்த்தாள். 'அவர் என்னடாவென்றால் ஒரு டப்பாவைத் தந்து அனுப்புகிறார். இதனால் என்ன பயன் விளையப் போகிறது?' என்ற சந்தேகம் அவளுள் உயர்ந்தது.

"ஃபாதர் நீங்கள் ஒரு தடவை அங்கு வந்து..." அவள் வார்த்தைகளை முடிக்காமல் அவர் முகத்தையே பார்த்தாள்.

ஃபாதர் லூயிஸ் என்றாலே அவளுக்கு கொஞ்சம் பயம் தான். அவரைப் பொறுத்தவரை ஏழை- பணக்காரன் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. தவறு என்பதை, எவர் முகத் துக்கு நேராகவும் வெளிப்படையாகச் சொல்லக் கூடியவர் அவர்.

பணக்காரர்கள், மாதா கோயிலை ஆட்டிப் படைப்பதை அவர் விரும்புவது இல்லை. அவர் நல்ல, மேன்மையான குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர். இருப்பினும் அவர் பணக்காரர் களின் வீட்டு விருந்துகளில் கலந்து கொள்வது இல்லை. ஆனால், பெரும்பாலான ஏழைகளின் வீடுகளில் எல்லாம் அவர் ஏறியிறங்குவது உண்டு.

"அதற்கு அவசியமே இல்லை. இதுவே தாராளம். எப்படிப்பட்ட துராத்மாவும் இதன் அருகில் கூட வர முடி யாது. அதற்கு நான் உத்திரவாதம் தருகிறேன். போதுமா..." ஃபாதர் உறுதியளித்ததால், நான்ஸி ஜார்ஜ் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தாள்.

அவள் தனது வானிட்டி பேகிலிருந்து பயன்படுத்தாத கைக்குட்டை ஒன்றை எடுத்து அதன் மூலம் பரிசுத்தமான பொருள் உள்ள டப்பாவைப் பொதிந்தாள். அதன் பிறகு அதை பேகுக்குள் வைத்துக் கொண்டாள்.



"அப்படியானால் நான் கிளம்புகிறேன்." அவள் எழுந் தாள். வீட்டுக்கு வந்து சேர்ந்த பிறகும் அவள் அதைப் பற்றி வேறு எவரிடமும் பேசவில்லை.

ஃபாதர் வழங்கிய டப்பாவை, பிரார்த்தனை அறையில் இருந்த படத்தின் கீழே வைத்தாள்.

மெர்ஸி அன்றிரவு எட்டு மணிக்குதான் வர முடியும் என்று தொலைபேசியில் கூறியதாக வேலைக்காரி தெரிவித்தாள்.

அதைக் கேள்விப்பட்டதும் நான்ஸி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். இரவு நேரத்தில் வரும் மெர்ஸி, வீட்டுக்குள் நுழைய முடியாமல் தவிப்பதைக் காணலாமே என்று நினைத் தாள்.

கடிகாரத்தில் ஊசிகள் நகர்வதைப் பார்த்தவாறு அவள் நேரத்தைக் கடத்தினாள்.

கடைசியாக அவள் எதிர்பார்த்த நேரமும் வந்து சேர்ந்தது.

'டிங்... டாங்... டிங்... டாங்...'

மணி எட்டு.

நான்ஸி ஜார்ஜ் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு காத் திருந்தாள்.

மேலும் சில நிமிடங்கள் கடந்தன.

அப்போது காரின் ஹாரன் சத்தம் கேட்டது. கார் கேட்டைத் தாண்டி வந்தது.

வந்தது மெர்ஸிதான் என்பது நான்ஸி ஜார்ஜுக்குப் புரிந்தது.

எப்படியிருந்தாலும்... மெர்ஸிக்கு நிகழப் போவது என்ன வாக இருந்தாலும் அதைக் காண்பது வருத்தத்துக்கு உரிய தாகவும் தோன்றியது. எனவே, அவள் சமையற்கட்டுக்குப் போனாள்.

'அங்கு என்னதான் நடக்கப் போகிறதோ?' நான்ஸியின் ஆவல் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

மெர்ஸி காரிலிருந்து இறங்கி, வீட்டு வாசற்படியை அடைந்து உள்ளே நுழைய முயன்றபோது அவளுக்கு மூச்சுத் திணறுவது போல் தோன்றியது.

உள்ளே நுழைய முடியாதவளைப் போல் அவள், அங் கேயே அசைவற்று நின்று விட்டாள்.

ஏதோ ஒரு தடை.

அது என்னவென்று அவளுக்கு விளங்கவில்லை.

உடனடியாக அது என்னவென்று சோதித்து அறியும் முயற்சியில் ஈடுபடாமல் அங்கிருந்து வடபுறமாக நடந்தாள். அதற்குள் அவள் காரின் கதவை இரண்டு முறை திறந்து விசையாக மூடினாள்.

பிறகு, "அம்மா!" என்று உரத்த குரலில் அழைத்தாள்.

அதைக் கேட்டதும் மெர்ஸிக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டதோ என்று பதறியவளாக நான்ஸி ஓடிவந்தாள்.

"என்னம்மா?" அவள் கேட்டாள்.

"என்னுடைய பர்ஸை மறந்து வைத்து விட்டேன். அதில் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது." மெர்ஸி பொய் சொன்னாள்.

"ஐயோ... அவ்வளவு பணமா இருந்தது? எங்கே மறந்து போய் வைத்தாய்?" ரூபாயின் அளவைக் கேட்டதும் நான்ஸி ஒரு கணம் டப்பாவின் விஷயத்தை மறந்தே போனாள்.

"அப்படியானால் ஒரு வேலை செய்யலாம். அம்மா, நீங்களும் என்னுடன் வாருங்கள். நாம் இருவருமே போய் விட்டு வரலாம். ராத்திரி நேரமாகி விட்டதால் நான் எப்படித் தனியாகப் போவது?"

"அதுவும் சரிதான்... நானும் வருகிறேன்" நான்ஸி உடை மாற்றுவதற்காக மீண்டும் உள்ளே சென்றாள்.



அப்போது மெர்ஸி நாய்கள் கிடக்கும் கூண்டுக்கு அருகே சென்றாள். அவை உடனே பயங்கரமாகக் குரல் கொடுக்கத் தொடங்கின. திடுமென்று மெர்ஸி தன் கையை உயர்த்திக் காட்டினாள்.

நாய்கள் சட்டென்று அடங்கின.

தற்சமயம் மெர்ஸி ஜானுக்கு மெர்ஸி ஜார்ஜின் உடம்பி லிருந்து விலகி இருந்தே தீர வேண்டும் என்று விளங்கியது. உடனே அவள், அந்தக் கூண்டிலிருக்கும் பெண் அல்சேஷன் நாயின் உடம்புக்குள் புகுந்தாள்.

அதற்குள் நான்ஸி ஜார்ஜ் உடை மாற்றி வந்து விட்டாள்.

"புறப்படலாமா?" நான்ஸி கேட்டாள்

"எங்கே?" டாக்டர் மெர்ஸி ஜார்ஜ் கேட்டாள்.

இதைக் கேட்ட நான்ஸி திகைப்பு அடைந்தாள். சற்று நேரத்துக்கு முன்னால் தனது பர்ஸை மறந்து வைத்து விட்டதாகவும், தன்னை உடன் வருமாறு அவள் கேட்டுக் கொண்டதையும் நான்ஸி நினைவு கூர்ந்தாள்.

நான்ஸியின் சந்தேகம் அதிகரித்தது.

"நீதானே பர்ஸை மறந்து வைத்துவிட்டதாகச் சொன் னாய்?" மெர்ஸிக்கு நினைவூட்டினாள் நான்ஸி.

மெர்ஸி ஜார்ஜ் காரை நெருங்கி, அதன் கதவைத் திறந் தாள்.

அங்கிருந்து மெர்ஸி தனது பேகை எடுத்துத் திறந்தாள். அதற்குள் அவளது பர்ஸ் இருந்தது.

"அப்படியானால் வீட்டுக்குள் வா!" நான்ஸி அழைத்தாள்.

மெர்ஸி எந்த விதமான தயக்கமும் இன்றி வீட்டுக்குள் காலெடுத்து வைத்தாள். அதைக் கவனித்த நான்ஸி வியப்பு அடைந்தாள்.

"உனக்கு எதுவும் தோன்றவில்லையா?" அம்மா கேட்டாள்.

"அம்மா நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இது நல்ல கூத்து. கேட்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறதே." மெர்ஸி தனது அறையை நோக்கி நடந்தபடி பேசினாள்.

அப்போதும் நான்ஸி அவளைப் பின்தொடரவே செய்தாள்.

"அம்மா, பசி வயிற்றைக் கிள்ளுகிறது." மெர்ஸி கூறினாள்.

'நான் உன்னை கவனித்துக் கொள்கிறேன்!' என்று மனத்துள் சொல்லியவாறே சமையலறைக்குள் நுழைந்தாள் நான்ஸி.

வேலைக்காரியிடம் சாப்பாடு பரிமாறச் சொல்லிவிட்டு நேராகப் பிரார்த்தனை அறைக்குச் சென்றாள். அங்கு வைத்திருந்த ஃபாதர் கொடுத்த டப்பாவைக் கையில் எடுத்தாள். அத்துடன் சாப்பாட்டு மேஜையை நெருங்கினாள்.

அங்கிருந்த ஃபிளவர் வாஸில் பூக்கள் வாடியிருந்தன. நான்ஸி அந்த ஃபிளவர் வாஸை வெளியே கொண்டு போய் வாடிய பூக்களைத் தூக்கிப் போட்டாள்.

வீட்டின் முற்றத்தில் வளர்ந்திருந்த மூன்று விதமான ரோஜாச் செடிகளிலிருந்து மூன்று பூக்களைக் காம்புடன் பறித்தாள். அதற்குள் அந்த டப்பாவை ஒளித்து வைத்தாள்.

அதற்குள் வேலைக்காரி திரேசாக்குட்டி, சாப்பாடு பரிமாறியிருந்தாள்.

"மெர்ஸி, சாப்பாடு தயார்... வா!" நான்ஸி அழைத்தாள்.

உடனே சாப்பாட்டு அறைக்கு வந்த மெர்ஸி, கை கழுவி விட்டு வந்து சாப்பாட்டுக்கு முன்னால் அமர்ந்தாள் அப்போதுதான் அவள் அங்கிருந்த புத்தம் புதிய ரோஜாப் பூக்களைக் கவனித்தாள்.



"ஆகா... இது மிகவும் நன்றாக இருக்கிறதே. அம்மா, சமீபகாலமாக உங்களுக்கு நல்ல புத்தி தோன்றுகிறதே இப்படியெல்லாம்!"

"வேண்டுமானால் அதில் ஒன்றை எடுத்துக் கொள். இரவில் தலையில் பூ வைத்துக் கொள்வது நல்ல பழக்கம் தான்!" அம்மா உற்சாகப்படுத்தினாள்.

அதைக் கேட்டதும் மெர்ஸி, அந்த ஃபிளவர் வாஸைக் கையில் எடுத்தாள்.

"ஐயோ... அதைக் கையில் எடுத்து விட்டாயா?" நான்ஸி, தன்னையும் மீறிக் கேட்டு விட்டாள்.

"எடுத்தால் என்ன?" என்றவாறே அவள் அதிலிருந்த மூன்று பூக்களையும் வெளியே எடுத்தாள். அதில் ஒன்றை மட்டும் காம்பிலிருந்து உடைத்து எடுத்தவள், மீதத்தை ஃபிளவர் வாஸுக்குள் வைக்க முற்பட்டபோது உள்ளே ஏதோ இருப்பதைக் கவனித்தாள். உடனே அதைக் கவிழ்த்தாள். அதற்குள் இருந்த டப்பி கீழே விழுந்தது.

"என்ன இது?" மெர்ஸி குனிந்து அதைக் கையில் எடுத்தபடி கேட்டாள்.

அப்போதாவது ஏதாவது ஆச்சரியகரமான சம்பவம் நிகழும் என்ற எதிர்பார்ப்புடன் நான்ஸி ஜார்ஜ் அந்தப் பக்கமாகப் பாய்ந்தாள்.

ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை.

மெர்ஸி ஜார்ஜ் அந்த டப்பாவைத் திறந்தாள். சட்டென்று அதற்குள் இருப்பது அவளுக்குப் புலப்படவில்லை.

வழக்கமாக இப்படிப்பட்ட டப்பிகளில் பாதுகாத்து வைப்பது புனிதமானவர்கள் என்று கருதப்படுபவர்களின் உடல் எலும்பின் ஒரு மிகச் சிறிய துகளோ, தலைமுடியோ, தாடி, மீசையின் ஓர் இழையாகவோ இருக்கும்.

அப்போது அந்த டப்பாவுக்குள் இருந்தது, கண்ணுக்குத் தெரியாத ஒரு தலைமுடி. மெர்ஸி அதைக் கவனிக்கவும் இல்லை.

மிகவும் பழையதாகத் தோன்றிய அந்த டப்பாவை அவள் தூக்கியெறிந்தாள்.

"கடவுளே... இவள் என்ன செய்கிறாள்?" என்று உரத்த குரலில் அலறியபடி துள்ளியெழுந்த நான்ஸி, அந்த டப்பாவைக் கையால் பிடிக்க முயன்றாள். ஆனால், அதற்குள் டப்பா மூடியைத் திறந்து கொண்டு இரண்டு பகுதிகளில் போய் விழுந்தன.

நான்ஸி அதைக் கையில் எடுத்துப் பார்த்தபோது அதற்குள் எதுவும் இல்லை.

மெர்ஸி ஜார்ஜ் சட்டென்று எழுந்து பாத்ரூமை நோக்கி ஓடினாள்.

நீண்ட நேரத்துக்குப் பிறகுதான் அவள் பாத்ரூமிலிருந்து வெளியேறினாள். வெளியே வந்ததும் அவள் காலண்டரைப் பார்த்தாள்.

அவளது வருகையைப் பார்த்ததும் அம்மாவுக்கு விஷயம் விளங்கியது. தலையில் கை வைத்தபடி, "ஆகா... தலையில் கல்லைப் போட்டு விட்டாயே... ஃபாதர் சொல்லியிருந்தார், அசுத்தமான இடத்தில் அந்த டப்பாவை வைக்கக் கூடாது என்று!" நான்ஸி கூறினாள்.

"என்னம்மா நீங்கள் எப்போதும் டப்பி... டப்பியென்று சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். இன்றுதானே என்னுடைய வழக்கமான நாள். இன்று வரை தவறியதும் இல்லை." மெர்ஸி உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினாள்.

நான்ஸி தலையில் கை வைத்தவாறே பிரார்த்தனை அறைக்குள் நுழைந்தாள்.



அவள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த போதிலும் ஒரு விஷயத்தைப் பற்றியே அவள் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. 'அவள் பாத்ரூமுக்குள் போவதற்கு முன்புகூட அவளுக்கு எதுவும் நிகழவில்லையே? அப்படியானால், தனது சந்தேகம் பயனற்றதுதான்!' அவள் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். 'ச்சே... நான் வீணாக என் மகளைச் சந்தேகப்பட்டேனே!'

விளக்க முடியாத ஏதோ ஒரு நிம்மதி ஏற்பட்டாற்போல் அவளுக்குத் தோன்றியது. மெர்ஸி கட்டிலில் மட்டமல்லாக்கப் படுத்திருந்தாள். 'இது வரையில் தான் ஒரு நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்திருந்தோமா?' என்றுகூட அவளுக்குத் தோன்றியது.

தன் உடலுக்குள் மெர்ஸியின் ஆவி நுழைந்த சந்தர்ப்பம் அவளுக்கு நன்றாக நினைவிருந்தது. ஆனால், அதன் பிறகு நடந்த எதுவுமே ஞாபகத்தில் இல்லை.

படுக்கையில் படுத்த உடனேயே அவள் உறங்கத் தொடங்கிவிட்டாள்.

எட்டரை மணியானபோது ஜார்ஜ் செபாஸ்டியனும் ரூபனும், ஷிபுவும் வந்து சேர்ந்தனர். சற்று நேரத்துக்குப் பிறகு ரோனியும் வந்தான்.

டோமியின் மரணத்தால் ஏற்பட்ட பாதிப்பைக் குறைப்பதற்காக தினமும் வீட்டுக்கு வரவேண்டுமென்று மற்ற பிள்ளைகளிடம் ஜார்ஜ் செபாஸ்டியன் வற்புறுத்தியிருந்தார். அதனால்தான் அவர்கள் எல்லோரும் வந்திருந்தனர்.

"அவள் எங்கே?" ஷிபு கேட்டான்.

"அவள் எட்டு மணிக்கே சாப்பிட்டு விட்டுப் படுத்துவிட்டாள். மிகவும் சோர்வாக இருக்க வேண்டும். தூங்கட்டும் அவள்!" நான்ஸி கூறினாள்.

"அவள் மலையைப் புரட்டிப் போடப் போயிருந்தாளா என்ன?" ஷிபு கேட்டான்.

"வேண்டாம்! அவளை எழுப்பாதே!" அம்மா உறுதியான குரலில் கூறினாள்.

"சரி... வேண்டாம். ஒரு முக்கியமான விஷயம்..." ஷிபு, மற்றவர்களைப் பார்த்தான்.

"நீ முதலில் விஷயம் என்னவென்று சொல்!" ஜார்ஜ் வழக்கமாகச் சாப்பிடும் விஸ்கியைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சியவாறு கேட்டார்.

டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனுக்கு அது ஒரு வழக்கம். இரவுச் சாப்பாட்டுக்கு முன் அவர் இரண்டு லார்ஜைத் தொண்டைக்குள் இறக்குவார். படுப்பதற்கு முன்னால் நான்ஸிக்கும் ஒரு லார்ஜ் கொடுப்பார்.

அது உள்ளுக்குள் இறங்கிவிட்டால், நான்ஸி ஜார்ஜ் தன் பழைய இருபத்து மூன்றாவது வயதை எட்டி விடுவாள். மாதத்தில் நான்கு நாள் தவிர, என்றென்றுமே அவள் இளம் பெண்தான்.

எல்லாக் காரியங்களும் முறைப்படி ஒழுங்காக நடக்க வேண்டும் என்பது ஜார்ஜ் செபாஸ்டியனின் கண்டிப்பான உத்தரவு. நான்ஸியும் அந்த விஷயத்தில் இன்றுவரை எந்த மாற்றத்தையும் செய்ததில்லை.

"மெர்ஸியின் விஷயம்தான்!" ஷிபு கூறினான். அதைக் கேட்டதும் எல்லோரும் அவன் முகத்தைப் பார்த்தனர். அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற எதிர்பார்ப்பு அவர்களின் முகத்தில் தெரிந்தது.

"ஷிபு, நீ விஷயத்தைச் சொல்!" ஜார்ஜ் செபாஸ்டியன் கிளாஸைக் காலியாக்கி விட்டு இடது உள்ளங்கையால் உதடுகளைத் துடைத்தபடி பதில் கேட்கத் தயாரானார்.

"மெர்ஸி, அடிக்கடி அந்த வில்சனைக் காணப் போகிறாள்." மகத்தான ஒரு சம்பவம் மாதிரி அதைக் கூறினான்.



"அதற்கென்னடா... அவள் கைக்குழந்தையா என்ன?" ஜார்ஜ் செபாஸ்டியன் கேட்டார்.

"அவன் கே.எஸ்.இ.பி. போர்டில் ஒரு இன்ஜினீயரோ... என்னவோ... டிப்ளமோ ஹோல்டர். நம்முடைய அந்தஸ்துக்கு ஏற்றவனல்ல." ஷிபு மிகவும் இளக்காரமான குரலில் கூறினான்.

"இந்த வயதுக்குப் பிறகுதான் அவளுக்குக் காதல் வருகிறதாம்!" என்ற நான்ஸி, அங்கிருந்து எழுந்தாள்.

"அப்படியே உட்காருங்கள் அம்மா. சொல்வதற்கு இன்னும் விஷயங்கள் இருக்கின்றன." சிரித்தவாறே ஷிபு தொடர்ந்தான்: "அவளுக்குப் பொருத்தமான ஒருவரை நான் கண்டுபிடித்திருக்கிறேன். அவர் ஜெர்மன் ரிட்டர்ன். பெயர் ஸ்டீஃபன். டாக்டரும் கூட. அதற்கு மேல் ஒரு முழு நீளத்துக்கு வேறு டிகிரிகளும் உள்ளன. பார்ப்பதற்கும் அழகானவர்."

"என்னை மாதிரி இருப்பாரா?" ரோனி கேட்டான்.

"ஏறத்தாழ நம் அப்பா மாதிரியான உருவம். மிடுக்கு. வயது நாற்பது இருக்கலாம். நல்ல சுறுசுறுப்பானவர். என்ன... பேசலாமா?"

"எதற்கும் அவளிடம் ஒரு வார்த்தை கேட்டுவிடலாமே!" அம்மா கூறினாள்.

மெர்ஸி ஜார்ஜ் அதற்குள் ஒரு தூக்கம் போட்டுக் கண் விழித்தாள்.

அதற்குள் நாய்க் கூண்டுக்குள் ஏதோ சத்தம் கேட்டது.

பெண் அல்சேஷன் தரையில் தலை வைத்துப் படுத்திருந்தது. அப்போது ஆண் நாய் அதை ஒரு முறை சீண்டியது. பெண் நாய் சட்டென்று துள்ளியெழுந்தது.

முன்காலை உயர்த்த முயன்ற ஆண் நாயை, பெண் நாய் தனது முன்னங்காலால் ஓங்கி அறைந்தது. அத்துடன் அந்த ஆண் நாய் ஒரு புறமாகச் சரிந்து விழுந்தது.

அப்போது ரூபன் டார்ச் லைட்டை எரிய விட்டபடி நாய்க் கூண்டை நெருங்கினான். அவன் பார்த்தபோது அல்சேஷன் நாய்கள் இரண்டும் உறங்குவதாகத் தோன்றியது. சந்தேகத்துடன் சுற்றுமுற்றும் பார்த்த ரூபன் உடனே அங்கிருந்து திரும்பவும் செய்தான்.

அவன் அங்கிருந்து நகர்ந்த பிறகு பெண் நாய் சட்டென்று கண்ணைத் திறந்து பார்த்தது. எவரும் அருகில் இல்லையென்று புரிந்ததும், அது தன் முன்னங்கால்களைக் கூண்டுக்கு வெளியே போட்டது.

தாழ்ப்பாளை நோக்கி அதன் முன்னங்கால் நீண்டது. தாழ்ப்பாளை உயர்த்தியது.

கதவைத் திறந்தது.

மெர்ஸி நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

திடுமென்று ஏதோ ஒரு சத்தம் கேட்டு அவள் திடுக்கிட்டு விழித்தாள்!

## 13

அதோ... ஜன்னலின் ஒரு கதவு 'தடதட'வென்ற சத்தத்துடன் அசைந்தது.

மெர்ஸி ஜார்ஜ் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றாள். ஆனால், முடியவில்லை.

'இவ்வளவு பிரம்மாண்டமான அல்சேஷன் நாய் எவருடையது?' அவள் யோசித்தாள். அப்படியொன்று இந்த



வீட்டில் இல்லாமலாகி எத்தனையோ வருடங்களாகியிருக்கின்றன.

"ச்சீ... போ... போ!" அவள் சத்தம் போட்டு விரட்டினாள். ஆனால், குரல் அவள் தொண்டையிலிருந்து வெளியேறவில்லை.

அவளால் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கத்தான் முடிந்தது.

அந்த நாய் மெதுவாக அதன் முன்னங்கால்களை இரும்புக் கம்பிகளுக்கு ஊடாக உட்புறம் போட்டது. பின்னர் அதன் பின்னங்கால்கள் உட்புறமாக வந்தன. அதற்கு ஏற்றாற்போல் கம்பிகள் அகன்று விரிந்தன.

அப்போதும் அவளால் அசைய முடியவில்லை.

சட்டென்று ஒற்றைப் பாய்ச்சலில் அது அறைக்குள் வந்தது.

மெர்ஸி ஜார்ஜ், "அம்மா!" என்று அலறினாள். ஆனால், குரல் அப்போதும் வெளிவரவில்லை. தொண்டைக்கு உள்ளேயே சிக்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அந்த நாய் அவளை நெருங்கியது. கட்டிலில் தாவியேறியது. அது அவளைக் கட்டியணைத்தது.

"நான் போய் விடுவேன் என்று நினைத்தாயா?" நாய் அவளிடம் கேட்டது. அந்தச் சத்தத்தை அவள் அடையாளம் தெரிந்து கொண்டாள். மெர்ஸி ஜானின் குரல்!

நாய் அவளை நெருக்கியது.

நிமிடங்கள் சில கடந்தன.

திடுமென்று அந்த நாய் கட்டிலிலிருந்து கீழே விழுந்தது. அத்துடன் அசைவற்றுப் போகவும் செய்தது.

மெர்ஸி ஜார்ஜ், அப்போது மெர்ஸி ஜான் ஆகிவிட்டிருந்தாள்.

அவள் படுக்கையிலிருந்து நிதானமாக எழுந்தாள்.

தரையில் கிடந்த நாயை, ஒரு பூனைக் குட்டியைத் தூக்கு வது போல் காதைப் பிடித்துத் தூக்கியவள் ஜன்னல் கம்பி வழியாக ஒருவாறாகத் திணித்து மறுபுறம் வீசி எறிந்தாள். பிறகு ஜன்னலை பழையபடி இழுத்து மூடிவிட்டுக் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டாள்.

மறு நாள் காலையில் ரூபன் வழக்கம் போல் எழுந்தான். பிஸ்கெட் டின்னை எடுத்துக் கொண்டு நாய்க் கூண்டை நெருங்கினான்.

கூண்டுக்குள் ஆண் நாய் அசைவற்றுக் கிடந்தது. அதன் வாய் மற்றும் மூக்குப் பகுதியிலிருந்து ரத்தம் வடிந்து உறைந்து நிறம் மாறியிருந்தது. பெண் நாயைக் காண வில்லை.

ரூபன், நாயைப் பெயர் சொல்லி அழைத்தவாறே பங்களா வைச் சுற்றி வந்தான். தென்புற மூலையில் அதுவும் இறந்து கிடந்தது.

ரூபன் சத்தம் போட்டு எல்லோரையும் வரவழைத்தான்.

யாருக்கும் அதைப் பற்றி எதுவும் தெரியவில்லை.

"மெர்ஸி... மெர்ஸி!" அவன் அழைத்தான்.

அவள் படியிறங்கி வந்தாள்.

"என்ன?" அவள் கேட்டாள்.

"உன் அறை ஜன்னலுக்கு நேர் கீழே நாய் இறந்து கிடந்தது. ராத்திரியில் நீ சத்தம் ஏதாவது கேட்டாயா?" அவன் கேட்டான்.

"ராத்திரியில் தூங்காமல் இருப்பது திருடர்களின் வேலை. நான் நன்றாகத் தூங்கினேன்..." அவள் பதிலளித்தாள்.



"சே... எந்த நேரத்தில் நான் இவற்றை இங்கு கொண்டு வந் தேனோ... இனி, இதுபோல் ஒரு ஜோடி எங்கிருந்து கிடைக் கும்?" ரூபன் கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்தான்.

"இனிமேல் அதையெல்லாம் பேசிப் பிரயோஜனமில்லை. முதலில் அவற்றை அந்த ஜாதிக்காய் மரத்தடியில் போட்டுப் புதைத்து விடு. மரத்துக்காவது உரமாகட்டும்." ஜார்ஜ் செபாஸ்டியன் கூறினார்.

"டாடிக்கு ஜாதிக்காய் மரம்தான் பெரிசு. ஒருவேளை டாடி தான் நாய்களைக் கொன்று விட்டாரோ என்னவோ!" அவன் அங்கிருந்து எழுந்து போனான்.

இவ்வளவெல்லாம் நடந்த பிறகும் நான்ஸி ஜார்ஜின் உள்ளுக்குள் மெர்ஸியைக் குறித்த சந்தேகம் விலகவில்லை. நாய்கள் இறந்ததற்குக் காரணம் மெர்ஸிதான் என்று அவள் உறுதியாக நம்பினாள்.

மெர்ஸி வழக்கம்போல் மருத்துவமனைக்குப் போனாள்.

இன்று அவளுக்கு முழுநாள் வேலை.

அதாவது இருபத்து நான்கு மணி நேர டியூட்டி.

அவள் வந்தவுடனே நர்ஸ் தங்கம்மா ஓடிவந்தாள்.

"பதினேழாம் நம்பர் பெட்டில் இருக்கும் நோயாளி மிகவும் சிரமப்படுகிறாள்." தங்கம்மா கூறினாள்.

அதிகபட்சமாக ஒரு வாரத்துக்குள் பிரசவம் நிகழ வேண் டிய நோயாளி அந்தப் பெண்மணி. அவளுக்கு ஏற்பட்டிருப் பதோ, பிரத்தியேகமான ஒரு வியாதி.

உடல் முழுக்க குப்பென்று வியர்க்கும்.

'உடனே வீட்டுக்குப் போக வேண்டும்!' என்று அந்த நோயாளிக்குத் தோன்றும்.

எதற்காக என்று கேட்டால், அங்கு அவளை எதிர்பார்த்துக் காத்திருப்பார்களாம்.

யார் காத்திருக்கிறார்கள் என்று கேட்டால், மாமா-மாமி என்று பதில் வரும்.

அதுவும் ஒரு மாதிரியான கேஸ்தான்.

முந்தைய நாள் காலையில்தான் அவளை ஆஸ்பத்திரிக் குக் கொண்டு வந்தனர். டாக்டர் சாந்தினிதான் அவளைப் பரிசோதித்து அட்மிட் செய்திருந்தார்.

இதுவரை மெர்ஸி அந்த நோயாளியைப் பார்த்ததில்லை.

"என்ன பிரச்சினை?" மெர்ஸி கேட்டாள்.

"தெரியவில்லை. நேற்றுக் காலையில் சாந்தினி டாக்டர் பரிசோதித்த போது பிரசவம் சீக்கிரம் நடந்துவிடும் என்றார். பரிசோதனையின்போது 'காம்ப்ளிகேட்டடு கேஸ்' என்று சொன்னதாக நினைவு."

தங்கம்மாவை வழக்கமான ஒரு நர்ஸ் என்று கருத முடி யாது. அனுபவமும், திறமையும் அதிகம். டாக்டர் வந்தே தீர வேண்டிய தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் அவள் சம யோசிதமாகவும் புத்தி பூர்வமாகவும் செயல்படுவாள். நோயாளிகளிடம் கருணையுடன் நடந்து கொள்ளக் கூடிய வள். அங்கு வரும் நோயாளிகளுக்கும் அவளை மிகவும் பிடிக்கும்.

எந்த டாக்டரும் தங்கம்மாவை நம்பி, எந்தப் பொறுப்பை யும் ஒப்படைக்கலாம்.

தங்கம்மா, 'காம்ப்ளிகேட்டடு' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பதால் அது, அவ்வளவு சாதாரணமான கேஸ் அல்ல என்பது பொருள். மெர்ஸி, தன் குறைந்த கால அனுபவத்தில் இதை உணர்ந்திருந்தாள்.

"உங்களுக்குத் தெரியுமா டாக்டர்?" தங்கம்மா சுற்று முற்றும் பார்த்தபடி கேட்டாள்.

"சொல்லுங்க தங்கம்மா..." மெர்ஸி பதிலைக் கேட்க ஆர்வ மானாள்.



"அந்த உடம்பில் வேறு ஏதோ ஒன்று குடியிருக்கிறது."

"ச்சே... ச்சே... ஆஸ்பத்திரிக்குள் இப்படிக் கண்டதையும் பேசாதே." மெர்ஸி நெற்றியைச் சுளித்தபடி தங்கம்மாவைப் பார்த்தாள்.

"உண்மையைச் சொல்லட்டுமா? இது என்னுடைய நம் பிக்கை. நீங்கள் மனது வைத்தால் அவளது நோய் சரியாகி விடும் என்று நினைக்கிறேன்." தங்கம்மா ரகசியம் பேசுவது போல் மிகவும் ரகசியமான குரலில் பேசினாள்.

"அது எப்படி நடக்கும்? நான் மந்திரவாதியா என்ன?" மெர்ஸி சற்று பயத்துடன் கேட்டாள்.

தங்கம்மா இப்படியெல்லாம் பேசியதைக் கேட்டதும் மெர் ஸிக்குள் ஒரு குழப்பம். 'தன்னைக் குறித்தும் அவள் எதையா வது தெரிந்து கொண்டிருப்பாளோ?' என்று பயந்தாள்.

சமீப காலமாக மெர்ஸிக்குள் அப்படியொரு பயம் உருவாகியிருக்கிறது. மிக மெதுவாக அது அவளுள் வளரவும் செய்தது.

அதற்குக் காரணம், பெரும்பாலானவர்கள் அவளைக் கவனிக்கிறார்கள். தன்னுடைய செயல்களை 'அற்புதம்' என்று கணிக்கிறார்கள்.

நிலைமை இப்படியே போனால் ஆபத்துதான் என்று அவளுக்கே தெரியும். நிறைய விஷயங்களைச் செய்யும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எனவே, அவற்றையெல்லாம் செய்து முடிக்கத்தான் வேண்டும்!

அப்படி இல்லாவிட்டால், இந்த வரவினால் எந்த விதமான பிரயோஜனமும் இல்லை.

அத்துடன் தன்னை அடையாளம் தெரிந்துகொள்ள முற்படுபவர்களைக் கண்டுபிடித்து அவர்களை இல்லாமல் செய்துவிட வேண்டும் என்ற வேட்கையும் அவளுள் முகிழ்த் தது.

"என்னமோ... அன்றைக்கு டாக்டர் ஆபரேஷன் இல்லாம லேயே பிரசவம் நடத்தியதை எல்லோருமே பெரிய ஓர் ஆச்சரியமாகத்தான் கருதுகிறார்கள். அமானுஷிக சக்தி வாய்ந்த மனிதர்கள் சிலர் இல்லையா? அதே மாதிரி..." நர்ஸ் தங்கம்மா உண்மையான ஓர் ஆர்வத்துடன் மனம் திறந்து பேசினாள்.

அவளுக்கு மெர்ஸி மீது உயரிய மதிப்பும் மரியாதையும் உண்டு. அதுகூட சமீப காலத்தில் ஏற்பட்டவைதான்.

"எப்படி இருந்தாலும் நாம் போய் அந்த நோயாளியைப் பார்ப்போம். நீங்களும் வாருங்கள் தங்கம்மா." மெர்ஸி தன் இருக்கையிலிருந்து எழுந்தாள்.

அவர்கள் இருவரும் பதினேழாம் நம்பர் படுக்கையில் கிடந்த நோயாளியை நெருங்கினர்.

"என்னம்மா... என்ன பிரச்சினை?" மெர்ஸி கேட்டாள்.

மெர்ஸியைப் பார்த்ததும் அந்த நோயாளி எழுந்து உட்கார்ந்தாள்.

அவளுக்கு அருகிலேயே நோயாளியின் மச்சினியும் நின்று கொண்டிருந்தாள். அந்தப் பெண்மணிக்குச் சுமார் முப்பது வயதிருக்கலாம்.

"நான் வீட்டுக்குப் போக வேண்டும்." நோயாளி பேசினாள்.

"யாரைப் பார்க்க வேண்டும்?" மெர்ஸி கேட்டாள்.

"மாமாவையும் மாமியையும்..."

"அவளுக்கு அப்பாவும் அம்மாவும் இல்லை. அவர்கள் இறந்து போய் ஒரு மாதம் ஆகிறது" கணவனின் சகோதரி கூறினாள்.



"ராத்திரி நேரத்தில் போனால் போதாதா?" மெர்ஸி கேட்டாள். அதைக் கேட்டதும் அவள் மெர்ஸியை ஒரு தடவை ஊன்றிப் பார்த்தாள்.

"போதும்... ராத்திரியில் போனால் போதும்!" நோயாளி மகிழ்ச்சியுடன் கூறினாள்.

யாருக்கும் எதுவும் விளங்கவில்லை.

மெர்ஸி திரும்பி வந்தாள்.

அதன் பிறகு அந்த நோயாளி எந்த விதமான சத்தமும் போடவில்லை.

மதியத்துக்குப் பிறகு மெர்ஸி டியூட்டி ரூமில் இருந்த கட்டிலில் படுத்திருந்தாள்.

சமீப காலமாக இரவில் நெடுநேரம் விழித்திருப்பதும், பகலில் தூங்குவதுமான ஒரு பழக்கம் அவளைத் தொற்றியிருந்தது. மட்டும் இன்றி, பகல் என்பதே சோம்பலான ஒரு பொழுதாகவும் அவளுக்குத் தென்படத் தொடங்கியது.

வல்சம்மாதான் வந்து அழைத்தாள்.

"டாக்டர், யாரோ உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்கள்" அவள் தகவல் தெரிவித்தாள்.

மெர்ஸி வேண்டா வெறுப்பாகக் கட்டிலிலிருந்து எழுந்தாள்.

வெளியே வந்தபோது காலேஜ் கிளார்க் விஜயனும், இளம் பெண் ஒருத்தியும் அங்கு நின்று கொண்டிருந்தனர்.

மெர்ஸி அவளை உற்றுப் பார்த்தாள்.

'விஜயன்!' அவள் உதடுகள் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டன. ஆனால், அதை வெளிக்காட்டாமல் அவனை உட்காருமாறு கூறினாள்.

விஜயன் உட்கார்ந்தான்.

"இது யார் உங்கள் மகளா?" மெர்ஸி, அவனுக்கு அருகில் நிற்கும் இளம்பெண்ணைப் பார்த்துக் கேட்டாள்.

பார்வைக்குக் கெட்டிக்காரியாகத் தெரிந்தாள். சிவந்த நிறம். திரண்ட உடல். நிச்சயமாகப் பதினேழு வயதுக்கு மேல் கணிக்க முடியாது.

"இல்லை டாக்டர். காலேஜில் படிக்கும் ஒரு மாணவி." விஜயன் கூறினான்.

"சரி... என்ன விஷயம்? மார்க்ஷீட் ஏதாவது அட்டஸ்டு செய்ய வேண்டுமா?" மெர்ஸி கேட்டாள்.

"இல்லை. ஒரு சின்னத் தவறு நேர்ந்துவிட்டது. நமது ரோனி சாரும் வந்திருக்கிறார்." விஜயன் சற்றுத் தயங்கியபடி பேசினான்.

மெர்ஸி, அந்தப் பெண்ணைத் தலை முதல் பாதம் வரை ஒரு தடவை பார்த்தாள். கடைசியாக அவள் வயிற்றில் பார்வை பதிந்தது.

"முந்திரிக் கொட்டை அளவுக்கு ஆகிவிட்டதேம்மா!" மெர்ஸி அவளைப் பார்த்துக் கேலித் தொனியில் கேட்டாள்.

அதைக் கேட்டு அந்த இருவரும் தலை குனிந்தனர்.

"வேறு எவரிடமும் சொன்னால் சரியாகாதே என்று ரோனி சார் கூறினார். அவர் குறிப்பிட்டுச் சொல்லியனுப்பியதால் இங்கு கொண்டு வந்திருக்கிறேன். உங்களிடம் உண்மையைச் சொல்லலாமே..." விஜயன் நமுட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தான்.

"ஓகோ... அது சரி... எனக்கு வேலை தருவதற்காக நீங்கள் மெனக்கெட்டிருக்கிறீர்கள் அப்படித்தானே?" அந்தப் பெண்ணும் இதைக் கேட்கட்டும் என்றேதான் மெர்ஸி இப்படிப் பேசினாள்.



"அன்றைக்கு எனக்கு மட்டும் புத்தி அந்த மாதிரி வேலை செய்தது, என்னுடைய அதிர்ஷ்டம்தான். அதைப் பெரிய டாக்டர் இப்போதும் அடிக்கடி குறிப்பிடுவார். இல்லா விட்டால் டாக்டர் இப்போது..." அவன், அந்த இளம் பெண் உடன் இருப்பதால் மிச்சத்தைக் கூறவில்லை.

"இரண்டு மாதம் பதினோரு நாள் ஆகிறது... இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

அதைக் கேட்ட விஜயன் சட்டென்று கணக்குப் போட்டுப் பார்த்தான். அவன் கண்களில் சட்டென்று வியப்பு பரவியது.

"டாக்டர், இது எப்படி உங்களுக்கு இவ்வளவு துல்லியமாகத் தெரிந்தது!" விஜயன் கேட்டான்.

"அன்று இரவு ரோனி ஹோட்டல் டிலைட்டில் அறை எடுத்துத் தங்கியிருந்தார் அப்படித்தானே?" மெர்ஸி கேட்டாள்.

"ஓகோ... அப்படியா! நானும் நினைத்தேன். டாக்டருக்கு இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் விசாரிக்க தாராளமாக நேரம் இருக்கிறது. உதவி செய்தவர்களையெல்லாம் மறந்து விட்டு இப்போது மாதா கோயிலுக்குப் போக ஆரம்பித்து விட்டீர்கள் போலிருக்கிறதே..." விஜயன் பழைய நமுட்டுச் சிரிப்பு மாறாமலே கேட்டான்.

"அப்படியெல்லாம் கிடையாது. நான் விஜயனை மறக்கவும் இல்லை. பைதி பை... வரும் சனிக்கிழமை இரண்டாவது சனிக்கிழமை இல்லையா. அன்று நான் காலேஜுக்கு வருகிறேன். நீங்கள் இருப்பீர்கள் இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

"நிஜமாகவா வரப்போகிறீர்கள்? கண்டிப்பாக நான் காத்திருப்பேன்." விஜயன் மகிழ்ச்சியுடன் பதிலளித்தான்.

மெர்ஸி அந்தப் பெண்ணைத் திரும்பவும் பார்த்தாள்.

"வாம்மா..." அவள், அந்தப் பெண்ணை உட்புறம் அழைத்துச் சென்றாள்.

"ம்... படு! இது உனக்காகவோ, அந்தப் பொறுக்கிகளுக் காகவோ அல்ல. பிளடி ராஸ்கல்ஸ். நீ ஏன் இதற்கெல்லாம் ஒப்புக் கொண்டாய்?"

"எனக்கு ஃபர்ஸ்ட் கிளாஸ் வாங்கித் தருவதாகச் சொன்னார்."

"ஓகோ பேப்பர் டிரேசிங்... மார்க் திருத்துதல் வேலை களா? பிளாங் சர்ட்டிபிகேட்டுகளும், பிளாங் மார்க் ஷீட்டு களும் யுனிவர்சிட்டி காம்பஸில் தாராளமாகக் கிடைக்குமே," மெர்ஸி அவள் அடிவயிற்றைத் தடவியபடி பேசினாள்.

சட்டென்று அந்தப் பெண் "ஐயோ!" என்று அலறியபடி மேற்புறமாகத் துள்ளினாள்.

"கல்யாணமாகாத ஓர் இளம்பெண்ணின் தற்கொலையைத் தவிர்ப்பதற்காகத்தான் இதைச் செய்தேன். கடவுள் என்னை மன்னிக்கட்டும்!" அவள் மேற்புறத்தைச் சுட்டிக் காட்டியபடி பேசினாள்.

பிறகு இருவருமாக வெளியே வந்தனர்.

"வேலை முடிந்து விட்டது. நாளைக் காலையில் எல்லாம் சரியாகி விடும்!" மெர்ஸி கூறினாள்.

"அப்படியானால் நாங்கள் கிளம்பட்டுமா? மிக்க நன்றி. நான் சனிக்கிழமை உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்!" விஜயன் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து கிளம்பினான்.

இரவு நேரம். பத்து மணி கடந்து விட்டது.

மெர்ஸி, பதினேழாம் நம்பர் படுக்கையை நெருங்கினாள்.

"அடியே சுமதி!" மெர்ஸி நோயாளியை அழைத்தாள்.

நோயாளி கண் திறந்தாள்.



"நீ ஏன் இந்த அப்பாவிப் பெண்ணைத் தொல்லைப் படுத்துகிறாய்?" மெர்ஸி கேட்டாள்.

"என் புருஷனின் இரண்டாவது மனைவி இவள். என்னை அவன்தான் கொலை செய்தான். அதுவும் வரதட்சணை விவ காரத்தில். அதனால் நான் இவளையும் அழைத்துக் கொண்டு தான் போவேன்." நோயாளிக்குள் புகுந்திருந்த சுமதியின் ஆவி பேசியது.

"அப்படியானால் மாமாவையும் மாமியையும் பார்க்கப் போவதாக ஏன் பொய் சொன்னாய்?" மெர்ஸி கேட்டாள்.

"அவர்கள்தான் இறந்து போய்விட்டார்களே. அவர்களு டன் இவளையும் அனுப்பி வைப்பதற்காக அப்படிச் சொன்னேன்."

மெர்ஸி ஜானின் சிநேகிதிதான் இந்த சுமதி. இரண்டு வருடங்களுக்கு முன்புதான் அவளது திருமணம் நடந்தது. ஆனால், வரதட்சணை விவகாரத்தில் அவள் கணவன், அவளை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொன்று விட் டான். இப்போது சுமதியின் ஆவி, கணவனின் இரண்டாவது மனைவியின் உடம்புக்குள் புகுந்திருக்கிறது.

"தற்சமயம் நீ இவளை விட்டுப் போக வேண்டும். நான் சொல்கிறேன். இந்தப் பெண்மணி ஓர் அப்பாவி. இவள் வயிற்றில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அதைக் கொல் வது முறையல்ல. உன் பழிக்குப் பழியை பின்னால் வைத்துக் கொள்!"

"சரி... நீ சொல்வதால் நான் கிளம்புகிறேன்." சுமதி ஒப்புக் கொண்டாள்.

மறு நாள் காலையில் அந்த நோயாளி முழுமையாகக் குண மடைந்தாள்.

இதைத் தெரிந்து கொண்ட நர்ஸ் தங்கம்மா ஆச்சரியம் அடைந்தாள்.

ஆனால், மெர்ஸி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மெர்ஸிதான் அவளைக் குணப்படுத்தினாள் என்ற தகவலை தங்கம்மா வேறெவரிடமும் சொல்லவில்லை.

எதிர்பார்ப்பு நிறைந்த இரண்டாவது சனிக்கிழமையும் வந்து சேர்ந்தது.

கிளார்க் விஜயன் தன் அலுவலக அறையில் காத்திருந் தான்.

மணி ஐந்துக்கு மேலாகி விட்டது.

மெர்ஸி அந்த அறைக்குள் வந்தாள்.

நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.

"அன்றைய சிகிச்சைக்கான பில் கொண்டு வந்திருக் கிறேன்" என்ற மெர்ஸி சிறிய காகிதம் ஒன்றை டேபிள் மீது வைத்தாள்.

பில் தொகை ஐயாயிரம் ரூபாய்.

அந்த தொகைக்கு அடியில் டாக்டர் மெர்ஸி ஜார்ஜ் என்ற கையெழுத்து இருந்தது.

அந்தக் கையெழுத்தை விஜயன் ஊன்றிப் பார்த்தான். அதில் மெர்ஸி ஜான் என்று எழுத்துகள் தெளிவாகத் தெரிந்தன.

திடுக்கிட்ட விஜயன் தலையை உயர்த்தி மெர்ஸியைப் பார்த்தான்.

## 14

விஜயன் வியப்புடன் பில்லைப் பார்த்த பிறகும் எந்த ஓர் உணர்வு மாற்றமும் இன்றி மெர்ஸி அமர்ந்திருந்தாள்.



"என்ன விஜயன் சார்... இவ்வளவு கவனமாக ஊன்றிப் பார்க்கிறீர்கள்?" அவள் குரல் மிகவும் சன்னமாக ஒலித்தது.

"இந்தக் கையெழுத்து மாறியிருக்கிறதே. சரியாகப் போட்டிருக்கலாமே!" திகைப்பிலிருந்து விடுபட்ட விஜயன் கேட்டான்.

பில்லில் இருந்தது மெர்ஸி ஜானின் எஸ்.எஸ்.எல்.சி. புத்த கத்தில் இருந்த மெர்ஸி ஜானின் அதே கையெழுத்துதான். விஜயனுக்கு அந்தக் கையெழுத்து நன்றாக ஞாபகமிருந்தது.

அதன் பிறகாவது அந்தக் கையெழுத்து மாற்றப்படும் என்று அவன் எதிர்பார்த்தான்.

அதைக் கேட்ட மெர்ஸி சிரித்தாள். அந்தச் சிரிப்புக்குப் பிரத்தியேகமான ஒரு தன்மை இருந்தது.

கண்ணாடித் துண்டுகளைப் போட்டுக் குலுக்குவது போன்ற சத்தம்.

மிகவும் கடுமையான சிரிப்புச் சத்தம்.

இதயத்தின் சுவர்களில் சிலந்தி ஒன்று தன் கால்களால் கீறுவது போன்ற அனுபவம் விஜயனுக்கு ஏற்பட்டது.

சட்டென்று அவன் பின்னுக்கு நகர்ந்தான்.

காரணம், மேஜைமீது வைத்திருந்த மெர்ஸியின் வலக் கையில் நீண்டு வந்த கூர்மையான நகங்கள்தான். பின்பு அவை உட்புறமாக இழுபட்டுப் பழைய நிலையை அடைய வும் செய்தன.

'ஒருவேளை தனக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்!' என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்ட விஜயன் மறுபடியும் மெர்ஸியைத் தலை உயர்த்திப் பார்த்தான்.

அந்தக் கண்களில் என்னவோ ஒரு பளபளப்பு.

"என்ன விஜயன் சார், இப்படிப் பார்க்கிறீர்கள்?" மெர்ஸி கேட்டாள்.

"இல்லை... ஒன்றுமில்லை." சற்று நிம்மதி அடைந்தவனாக விஜயன் பதிலளித்தான்.

'எல்லாமே தனக்கு மட்டுமாக அப்படித் தோன்றியிருக்கும். மெர்ஸி ஜான் என்ற கையெழுத்தைப் பார்த்ததும் பழைய நிகழ்ச்சிகள் எல்லாம் சட்டென்று மனதுக்குள் பாய்ந்து வந்திருக்கும். மட்டுமின்றி, யாருக்காக அன்றைக்கு இதை யெல்லாம் செய்தோமோ அதே நபர் இதோ எதிரில்...'

"பழைய விஷயங்கள் எல்லாம் ஞாபகம் வந்திருக்கும்... இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

"இல்லை... அது இல்லை... இருந்தாலும்..." விஜயன் தடுமாற்றமும் தயக்கமும் கொண்டார்.

"நான் வந்த விஷயத்தை இன்னும் சொல்ல வில்லையே..." உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்த மெர்ஸி அடுத்த அறை யின் வாசலை நோக்கி நடந்தாள்.

"என்ன இருந்தாலும் இந்த ஐயாயிரம் ரூபாய் என்பது கொஞ்சம் அதிகப்படி என்று தோன்றவில்லையா?" விஜயன் பில் தொகையைப் பார்த்தவாறே கேட்டான்.

"இருக்கட்டுமே... அதையெல்லாம் நாம் சரிப்படுத்திக் கொள்ள முடியாதா என்ன? அன்றைக்கு நீங்கள் எனக்குச் செய்ததற்கு நான் எதையும் திருப்பித் தரவில்லையே! இப் போது நான் வந்திருப்பது அந்தக் கணக்கையும் சரி செய் வதற்காகத்தான்." திரும்பி நின்ற மெர்ஸி, விஜயனைப் பார்த்துச் சிரித்தாள்.

கீழுதட்டைக் கடித்தபடி பார்த்துச் சிரித்த அந்தச் சிரிப்பும், இளமையின் கவர்ச்சி நிறைந்த பார்வையும் விஜயனின் இதயத்தில் கிளுகிளுப்பை ஊட்டியது.

விஜயன் எழுந்து மெர்ஸியை நெருங்கினான்.



"அந்தக் கதவு திறந்திருக்கிறது. சட்டென்று யாராவது வந்துவிடப் போகிறார்கள்." மெர்ஸி, வெளியே செல்லும் கதவைச் சுட்டிக் காட்டினாள்.

விஜயன் உடனேயே கதவை மூடித் தாழிட்டான்.

"இரண்டாவது சனிக்கிழமை ஆயிற்றே. யாரும் வர மாட் டார்கள். இருப்பினும் இது ஒரு பாதுகாப்புதான்." என்றபடி மேற்புறத் தாழ்ப்பாளையும் போட்டான்.

பிறகு திடுமென்று ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன் மீண் டும் கதவைத் திறந்தான். பூட்டையும் சாவியையும் எடுத்துக் கொண்டு வெளியே போனான். வெளிப்புறமாகக் கதவைப் பூட்டிய பிறகு ஜன்னல் வழியாக அந்த அறைக்கு வந்தான்.

"நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்தான். இங்கு விபரீதமாக ஏதாவது நடந்தால் கூட ஆட்கள் தற்கொலைதான் என்று நினைத்துக் கொள்வார்கள் இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

"என்ன இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? கதவை வெளிப் புறமாகப் பூட்டியதால் இப்படிப் பேசுகிறீர்களா என்ன?" விஜயன் அவளை நெருங்கியபடி கேட்டான்.

மெர்ஸி அடுத்த அறைக்குச் செல்லும் கதவைத் திறந்தாள்.

"ஓகோ... இங்கே படுத்துக் கொள்வதற்கான வசதியும் இருக்கிறதே. நல்லதுதான். இந்த இடத்தில்தான் அன்றைக்கு... டோமி, ஒரு தடவை அவன் நண்பனிடம் பேசும்போது நான் யதேச்சையாகக் கேட்டேன்." என்ற மெர்ஸி கட்டிலில் அமர்ந்தாள்.

விஜயனும் உட்கார்ந்தான்.

"டாக்டருக்கு முன்னால் இந்த உடைகள் எல்லாம் தேவையா என்ன? வேண்டாமே..." அவள், அவனது சட்டை யின் பட்டன்களை அவிழ்க்கத் தொடங்கினாள்.

உடைகள் ஒவ்வொன்றாகக் கட்டிலின் பின்புறம் வந்து விழுந்தன.

"இப்போதும் உங்கள் உடம்பு திடகாத்திரமாகத்தான் இருக்கிறது." அவள், அவர் உடம்பைப் பார்த்தபடி பேசினாள்.

"வயதானவர்கள், வயது குறைந்தவர்களுடன் உறவு கொண்டால் இளமை அதிகரிக்கும் என்று சொல்வதை நீங்கள் கேள்விப்பட்டது இல்லையா?" விஜயன் கட்டிலில் மட்ட மல்லாக்கப் படுத்தபடி கேட்டான்.

"எனக்கு இப்போதும் பத்தொன்பது வயதுதான்... அன்றைய அதே வயது." மெர்ஸி தனது புடவையில் கை வைத்தாள்.

அவன் சந்தேகத்துடன் அவளைப் பார்த்தான்.

அவள் சொன்ன வார்த்தைகள் உண்மைதான். பத்தொ பது வயதான இளம்பெண்.

கிழக்குப் புற ஜன்னலிலிருந்து பாய்ந்து வந்த மங்கலான வெளிச்சம் அவள் முகத்தில் பதிந்து கொண்டிருந்தது. அது இரண்டாம் மாடியாக இருந்ததால் அதன் ஜன்னல் பெரும் பாலும் திறந்தேதான் கிடக்கும். காற்றோட்டத்துக்காகத்தான் அதுவும்.

"இப்போது என்னைப் பார்த்தால் எப்படி இருக்கிறது?" அவள் கேட்டாள்.

அப்போது அந்த முகத்தில் அவன் ஒரு மாற்றத்தைக் கவனித்தான்.

சன்னமான ஒரு மாற்றம்.

"இந்த அடையாளம் எதனால் என்று தெரிகிறதா?" அவள் தன் மார்பைத் தொட்டுக் காட்டினாள்.

அங்கு பல்லினால் ஏற்பட்ட காயம் போல் தென்பட்ட இடத்திலிருந்து ரத்தம் சன்னமாகத் துளிர்த்துக் கொண்டிருந் தது.



அவள் வந்து கட்டிலில் அமர்ந்தாள்.

விஜயனுக்குள் சந்தேகம் உயர்ந்தது.

இது... ஆள் மாறி விட்டாற் போல்...

'யார் இவள்?

அந்தப் பழைய பெண்ணா?

அப்போது அவளின் கை அவனின் உடையற்ற மார்பை வருடியபடி கீழ்ப்புறமாக ஊர்ந்தது.

பாம்புகள் பிணைவது போல்...

சில்லென்ற ஐஸ் கட்டியின் குளிர்ச்சி. பயம் ஓர் ஓணான் மாதிரி அவன் மூளைக்குள் வட்டமிட்டு ஊர்ந்தது.

மறுவிநாடி-

அவளின் வலதுகைச் சுட்டுவிரல் அவன் தொப்பூழுக்குள் ஆழ்ந்து இறங்கியது.

"ஐயோ!" என்றோர் அலறல்.

ஆனால், அந்தச் சத்தம் வெளியே கேட்கவில்லை. அதற் குள் அவளின் இடக்கை தொப்பூழின் கீழ்ப்பகுதியை வலு வுடன் பற்றின.

அவன் கண்கள் துருத்திக் கொண்டு வந்தன.

கைகளையும் கால்களையும் அவன் கட்டிலில் போட்டு அடித்தபடி துடித்தான். அவன் குதிகால் பகுதி, கட்டிலின் விளிம்பில் மோதி, உடைந்து ரத்தம் வடியத் தொடங்கியது.

"அன்றைக்கு இதே இடத்தில்தான் நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து என்னைக் கிழித்துக் குதறினீர்கள்! ஞாபகம் இருக் கிறதா உனக்கு? அதே மெர்ஸி ஜான்தான் நான். என்னுடைய சர்ட்டிபிகேட் மற்றும் மார்க் ஷீட்டை மாற்றுவதற்கு யோசனை கூறியவன் நீதானே!" அவள், அவனைக் கட்டிலில் இருந்து உயர்த்தினாள்.

"ஐயோ... என்னைக் கொல்லாதே!" அவன் அலறினான். ஆனால், அந்தக் குரல் மிகவும் பலவீனமாக இருந்தது.

துணி துவைப்பது போல் அவள், அவனைக் கட்டிலில் போட்டுத் துவைத்தாள். ஒரேயொரு முறை வலுவாகத் துடித்து மறு விநாடி அந்த உடல் அசைவற்றுப் போனது.

மெர்ஸி, உடைகளை எடுத்து அணிந்து கொண்டு வெளியே வந்தாள்.

ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள்.

வெளியே இருட்டுப் பரவியிருந்தது. மணி ஏழைத் தாண்டி விட்டிருந்தது. ஜன்னல் வழியாக வெளியேறினாள். படிக்கட்டுகளைக் கடந்து கீழே வந்தாள்.

காலேஜின் கேட்டைக் கடந்து விறுவிறுவென்று நடந்தவள் மெயின் ரோட்டை அடைந்தாள்.

பெட்ரோல் பங்க்கில் அவளது மாருதி கார் நின்றிருந்தது.

எந்த ஒன்றும் நிகழாதது மாதிரி அவள் வீடு வந்து சேர்ந்தாள்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை.

திங்கட் கிழமையன்று கல்லூரி நாள்.

அலுவலக அறை பூட்டிக் கிடந்தது.

கிளார்க் விஜயன் இன்னும் வந்து சேரவில்லை.

பிரின்ஸிபால் வந்து விட்டார். அவர் கைவசமிருந்த சாவியால் ஆபீஸ் கதவைத் திறந்தார்கள்.

அதற்குள் விஜயனின் வீட்டிலிருந்து யாரெல்லாமோ வந்தனர்.

கடந்த இரண்டு நாட்களாக அப்பாவைக் காணவில்லை என்று மகன் புகார் செய்தான்.



யதேச்சையாகப் பக்கத்து அறைக்குள் நுழைந்த பியூன் அலறியடித்தபடி வெளியே ஓடிவந்தார்.

அந்தக் காட்சியைக் கண்டவர்கள் பயந்து நடுங்கினர்.

தவளையைப் போல் வீங்கியிருந்த நிர்வாணமான அந்த உடல் எவரையும் பயப்படுத்தும் ஒன்றாக இருந்தது.

விரைவிலேயே போலீஸார் வந்தனர் ஆரம்பகட்ட விசாரணைக்குப் பிறகு போஸ்ட்மார்ட்டத்துக்கு பிணத்தை அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டி யனும், அவர் குடும்பத்தாரும் பீதிக்குள் ஆழ்ந்தனர். அவர்கள் யோசித்துப் பார்த்தபோது, சமீப காலத்தில் இப்படி மரணமடைந்தவர்கள் எல்லோருமே அன்றைய கொலை யுடன் தொடர்பு கொண்டவர்கள்தான்.

கல்லூரியின் நற்பெயரை மனத்தில் கொண்டு பத்திரிகை களில் அந்தச் செய்திக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருப்பினும் சம்பவம் விரைவிலேயே ஊர் முழுக்கப் பரவியது. அது ஏதோ ஓர் ஆவியின் நடவடிக்கை தான் என்றனர் ஒரு சாரார். அந்தக் கல்லூரியில் எப்போதோ ஒரு காலத்தில்... யாரோ ஒருவர் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டாராம்.

போலீஸ் அலுவலக அறைக்குள் விரிவான சோதனை நடத்தியது. ஒவ்வொரு துண்டுக் காகிதத்தையும், இண்டு இடுக்கு விடாமல் துருவிப் பார்த்தனர். சமீப காலமாக யாரெல் லாம் அவரிடம் எந்த விதமான தொடர்பு வைத்திருந்தனர் என்றெல்லாம் விரிவாக ஆராய்ந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாகக் குப்பைக் கூடையி லிருந்து மெர்ஸியின் கையொப்பமிட்ட ஐயாயிரம் ரூபாய்க் கான பில் ஒன்று போலீஸ் அதிகாரியின் கையில் சிக்கியது.

அதைச் சந்தேகத்துடன் பார்த்த அந்த அதிகாரி, தனது பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

அன்றிரவு நான்ஸி ஜார்ஜ், தன் கணவரின் காதில் பழைய விஷயத்தை எடுத்துப் போட்டாள்.

"ஒருத்தனையே நினைத்திருந்தால், பார்ப்பதெல்லாம் அவனாகவே தோன்றும் என்று சொல்வது போலிருக்கிறது உன் விஷயம். சமீப காலமாகக் கொல்லப்பட்டவர்கள் அவ்வளவு நல்லவர்கள் அல்ல- நம் டோமி உட்பட. இதற்கு வேறு காரணங்கள் ஏதாவது இருக்கலாம். நீ சும்மா இரு." ஜார்ஜ் செபாஸ்டியன் மனைவியை அடக்கினார்.

"நான் சொல்ல வந்தது என்னவென்றால், என் சந்தேகம் முழுக்க நம் பெண்ணின் மேல்தான்!" அவள் மறுபடியும் பழைய கதையை நினைவு கூர்ந்தாள்.

"உன்னை முதலில் ஒரு சைக்ரியாட்டிஸ்டிடம் கொண்டு போக வேண்டும். நாளைக்கு பொழுது விடியட்டும்."

"எனக்கு அந்த மாதிரி எந்த ஒரு பிரச்சினையும் கிடையாது. நீங்கள் எல்லோரும் எச்சரிக்கையுடன் இருங்கள். எனக்கு இந்த ரத்தத்தில் எந்தவிதப் பங்கும் இல்லை." என்றவள் அப்போதே சிலுவை போட்டுக் கொண்டாள்.

"போகட்டும். அதற்காக நீ ஏன் குப்புறப் படுத்துக் கிடக்கிறாய்?" ஜார்ஜ் அவளின் தோளைப் பிடித்து உயர்த்தி, மல்லாக்கப் படுக்க வைத்தார்.

"நல்ல மனிதர் நீங்கள்... போங்கள்!" நான்ஸி முணுமுணுத்தாள்.

"இங்கு எந்த விதமான பிரச்சினையும் கிடையாது. நான்தான் இங்கேயே இருக்கிறேனே. முடிந்து போனதையெல்லாம் நீ மறுபடி தோண்டி எடுக்காமல் இருந்தால் போதும்." ஜார்ஜ் செபாஸ்டியன் மனைவிக்கு ஆறுதல் கூறினார்.



விஜயனின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் மிகவும் அசாதாரணமாக இருந்தது.

'கொலைதான் மரணத்துக்குக் காரணம். ஆனால், அதை ஆயுதம் மூலமாகச் செய்யவில்லை. ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த ஒருவர் துணி துவைப்பது போல் அடித்துக் கொன்றிருக்கிறார். ஒரு மனிதர்தான் இதைச் செய்திருக்க வேண்டும். ஆனால், அந்த மனிதருக்கு ஐந்து பேரின் வலு இருந்திருக்கிறது.'

அதில் ஏதோ ஒரு விபரீதம் மறைந்திருக்கிறது.

செவ்வாய்க் கிழமை மாலை நேரத்தில் மெர்ஸி, ஒரு பிரசவத்தை முடித்துவிட்டு அறைக்குள் வந்து அமர்ந்தாள்.

அப்போது முன்பின் தெரியாத ஒரு மனிதர் அவளுக்கு முன்பாக வந்து நின்றார். முப்பத்திரண்டு வயதுக்கு மேல் மதிப்பிட முடியாது. சரியான உயரம். சீரியஸான முகம். தீட்சண்ணியம் நிறைந்த கண்கள். அழகாக வெட்டிச் சீராக்கப்பட்ட மீசை. ஒழுங்காக வெட்டப்பட்ட கிராப்பு.

அவர், அவளிடம் அனுமதி கோராமலே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

பிறகு கம்பீரமான குரலில் பேசினார்: "மன்னிக்க வேண்டும். நான் உங்களிடம் சிலவற்றைக் குறித்துப் பேச எனக்குக் கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டும்." வந்தவர் கூறினார்.

"நீங்கள் யார் என்று தெரியவில்லையே... நீங்கள் சிகிச்சை தொடர்பாக ஏதாவது பேச வேண்டுமா?" மெர்ஸி கேட்டாள்.

"இல்லை... ஒரு கொலை வழக்கு தொடர்பாக." அவர் குரல் நிதானமாக வெளிவந்தது.

மெர்ஸி சன்னமாகத் திடுக்கிட்டாள். ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைத்தபடி கேட்டாள்: "கொலை வழக்கா... சொல்லுங்கள்... யாருடைய விஷயம்?"

அவர் முதலில் தன் சட்டைப் பையிலிருந்து ஐடென்டிட்டி கார்டை எடுத்து எதிரிலுள்ள மேஜை மீது வைத்தார்.

மெர்ஸி அதிலுள்ள பெயரை வாசித்தாள்.

கே.வேணுக் குட்டன் நாயர்.

டி.ஒய்.எஸ்.பி.

கிரைம் பிராஞ்சு

கேரளா.

அதிலிருந்த போட்டோ அவருடையதுதான்.

காலேஜ் மற்றும் கிளார்க் விஜயனின் பெயரைக் குறிப்பிட்டு, 'அவரைத் தெரியுமா' என்று டி.ஒய்.எஸ்.பி. வேணுக் குட்டன் கேட்டார்.

மெர்ஸி ஒரு விநாடி யோசித்தாள்.

அவள் மூளைக்குள், கிளார்க் விஜயனின் மேஜை மீது அவள் வைத்த ஐயாயிரம் ரூபாய் பில் தெளிவடைந்து வந்தது.

உடனேயே அவளுக்கு விஷயம் விளங்கவும் செய்தது. அந்தக் காகிதத்தைக் கசக்கி விஜயன் குப்பைக் கூடைக்குள் எறிவதையும் அவள் கவனித்திருந்தாள்.

அது ஒரு பிரச்சினையாக வெடிக்கும் என்று அவள் யோசிக்கவில்லை. பழிவாங்குவது மட்டுமே அவளது நோக்கமாக இருந்தது. எனவே, அந்த நேரத்தில் இதைப் பற்றியெல்லாம் யோசிக்கவில்லை. என்பதுதான் உண்மை.

"நீங்கள் என்றைக்கு அவரைச் சந்திக்கப் போயிருந்தீர்கள்?"

நமுவ முடியாத ஒரு கேள்வி வந்து அவளைத் தாக்கியிருக்கிறது.



சட்டென்று அவள் அந்தக் காகிதத் துண்டைப் பார்க்க விரும்பினாள். அது நான்காக மடிக்கப்பட்டு டி.ஒய்.எஸ்.பி. யின் பாக்கெட்டுக்குள் கிடக்கிறது.

அவள் அதை வாசித்தாள்.

நல்லவேளையாக அதில் தேதி கிடையாது. 'அதிர்ஷ்டம் தான்!' அவள் ஆறுதலடைந்தாள்.

அப்போது நர்ஸ் தங்கம்மா மூச்சிரைத்தபடி அங்கு வந்து சேர்ந்தாள்.

"பதினொன்றாம் நம்பர் பெட் பேஷண்ட் கிடந்து துடிக்கிறார் மேடம். குழந்தையின் நிலை மாறிவிட்டதாகத் தோன்றுகிறது." தங்கம்மா பதைப்புடன் கூறினாள்.

"எக்ஸ்கியூஸ் மீ. இதோ சற்று நேரத்தில் வந்து விடுகிறேன்!" என்று கூறிய மெர்ஸி கொஞ்சம் ஆறுதல் அடைந்தவளாக எழுந்து தங்கம்மாவைப் பின்தொடர்ந்தாள்.

மெர்ஸி நோயாளியை நெருங்கினாள். அவளால் அதைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது

"சீக்கிரமாக ஸ்க்ரீன் கொண்டு வாருங்கள்!"

"டாக்டர், ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போக வேண்டாமா?" தங்கம்மா கேட்டாள். பிரச்சினை சிக்கலானது என்று தங்கம்மாவுக்கும் தெரியும்.

ஆபரேஷன் தேவைப்படுகிற நோயாளிதான். இருப்பினும் தங்கம்மா ஸ்க்ரீன் எடுக்கப் போனாள்.

அதற்குள் நோயாளி எட்டுத் திசையும் நடுங்குமாறு அலறினாள். "ஐயோ... நான் சாகப் போகிறேன்!"

"திரும்பிப் படுங்கள்!" மெர்ஸி நோயாளியின் வயிற்றைப் பார்த்தபடி கூறினாள்.

# 15

துடித்துக் கொண்டிருக்கும் கர்ப்பிணியின் அடிவயிற்றைப் பார்த்தபடி "திரும்பிப் படுங்கள்!" என்று கூறியபோது, உந்தி நிற்கும் வயிற்றின் மேற்புறம் ஏதோ ஒன்று புரள்வதை மெர்ஸி கவனித்தாள்.

கர்ப்பிணி நிம்மதிப் பெருமூச்சு விட்டு ஆறுதலடையவும் செய்தார்.

"கர்த்தரே!" கர்ப்பிணிப் பெண் தன்னையும் மீறித் தன் நெஞ்சில் சிலுவை போட்டாள்.

மெர்ஸி சட்டென்று திரும்பி, கட்டிலுக்கு எதிரிலுள்ள சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

அதற்குள் நர்ஸ் தங்கம்மா ஸ்க்ரீனை எடுத்து வந்து கட்டிலை மறைத்தாள்.

"பிரசவம் இப்போதே நடக்கும். தங்கம்மா, நீங்களே பார்த்துக் கொள்ளலாம். பயப்படுவதற்கு எதுவுமில்லை." மெர்ஸி கூறிவிட்டு ஒருவிதமாக அங்கிருந்து நகர்ந்தாள்.

"கர்த்தரே!" என்று நோயாளி அழைத்ததும், சிலுவை போட்டுக் கொண்டதும் மெர்ஸிக்கு இப்போது பழையபடி ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை.

இதே நிலை சில நாட்களுக்கு முன்பு நடந்திருந்தால், ஒன்று அவள் கீழே விழுந்திருப்பாள் அல்லது அங்கிருந்து ஓடியிருப்பாள்.

என்ன காரணத்தாலோ இப்போது அதையெல்லாம் சமாளிக்க முடிகிறது. ஒருவேளை அதற்குக் காரணம் தன்னுடைய



செயல்பாடுகளாக இருக்கலாம் என்று அவள் தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

டியூட்டி ரூமை அடைந்த போது, டி.ஒய்.எஸ்.பி. வேணுக்குட்டன் அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

"டாக்டர், நீங்கள் மிகவும் பிஸியாக இருந்தால், நான் உங்களை உங்களது வீட்டுக்கே வந்து சந்திக்கிறேன். அப்படியே உங்கள் அப்பாவையும் பார்த்த மாதிரி இருக்கும். நாங்கள் நண்பர்கள்தான்!" வேணுக்குட்டன் இருக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றார்.

"அது சரியாகுமா? காலேஜில் பணி புரியும் ஒரு கிளார்க்கைக் குறித்து என்னிடம் விசாரிக்க வீட்டுக்கு வந்தால், அப்பா என்னைப் பற்றி என்ன நினைப்பார்?" அவள், அவரிடம் நேரடியாகக் கேட்டாள்.

அதுவும் யோசிக்க வேண்டிய விஷயம்தான். "சரி... ஒப்புக் கொள்கிறேன்." என்றார் டி.ஒய்.எஸ்.பி.

"காலேஜில் பணி புரியும் விஜயன் என்பவரைப் பற்றித் தானே நீங்கள் கேட்டீர்கள்? ஆமாம்... ஒரு தடவை அவர் இங்கு வந்திருந்தார்."

"எதற்காக என்று சொல்ல முடியுமா?"

"அது வேறொரு நோயாளிக்காக. கண்டிப்பாக நீங்கள் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும் என்றால் சொல்கிறேன்."

"சொல்லுங்கள். அதைத் தெரிந்து கொள்வதற்காகவும் தான் வந்திருக்கிறேன்."

"கிளார்க் விஜயன் ஒரு அபார்ஷன் கேஸ் விஷயமாக இளம்பெண் ஒருத்தியுடன் இங்கு வந்திருந்தார். அவரது நோக்கத்தை நிறைவேற்றிக் கொடுத்தேன். கல்யாணமாகாத அந்த இளம்பெண்ணின் எதிர்காலத்தை நினைத்து நான் அதைச் செய்ய நேர்ந்தது. அதற்கு ஃபீஸ் எவ்வளவு என்று கேட்டார். நான் வேடிக்கையாகத் துண்டுக் காகிதம் ஒன்றில்

ஐயாயிரம் ரூபாய் என்று எழுதிக் கொடுத்தேன். நடந்தது இதுதான்."

"எந்த இடத்தில் அந்தக் காகிதத்தைக் கொடுத்தீர்கள்?"

"இதே இடத்தில்தான்."

வேணுக்குட்டன் தனது பாக்கெட்டிலிருந்து அந்தத் துண்டுக் காகிதத்தை எடுத்து டேபிளின் மேல் விரித்து வைத்தார். பிறகு கேட்டார்: "இந்தக் காகிதம்தானா அது?"

"ஆமாம்... இதுவேதான். இது எப்படி சார் உங்கள் கைக்கு வந்தது?"

"விஜயனின் ஆபீஸ் அறையிலிருந்து கண்டெடுத்தேன்."

"இந்தக் காகிதத்தை வாங்கி மடக்கிச் சட்டைப் பையில் போட்டுச் சிரித்தபடியே அவர் இங்கிருந்து கிளம்பினார்" மெர்ஸி கூறினாள்.

வேணுக்குட்டன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு, அந்தக் காகிதத்தை மடக்கி எடுத்துக் கொண்டு பாக்கெட்டில் போட்டபடி எழுந்தார்.

"நன்றி! நான் வரட்டுமா?" அதற்குமேல் அவர் அங்கு தாமதிக்கவில்லை.

'இந்த யோசனை தனக்குள் எப்படி ஏற்பட்டது?' என்று மெர்ஸியே ஆச்சரியப்பட்டாள்.

தன்னுடைய எதிரிகளில் மற்றொருவரைக்கூட, எந்தவித மான ஆதாரமும் இல்லாமல் அழிக்க முடிந்ததில் அவள் மகிழ்ச்சி அடைந்தாள்.

எனினும் முக்கியக் குற்றவாளிகள் இன்னும் உயிருடன் தான் இருக்கிறார்கள். இதேபோல், சிக்கிக் கொள்ளாமல் அவர்களையும் பழி வாங்குவது எப்படி என்று அவள் நீண்ட யோசனையில் ஆழ்ந்தாள்.



இரண்டு நாட்களுக்குப் பிறகு ஜார்ஜ் செபாஸ்டியனது வீட்டில் சாப்பாட்டு மேஜையில் ஒரு விவாதம் நடந்தது.

அதில் மெர்ஸியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் கலந்து கொண்டனர். விவாதத்தைத் தொடங்கி வைத்தவன் ஷிபு ஜார்ஜ்தான்.

"அப்பா, சமீப காலமாக நடந்திருக்கும் சில மரணங்களை நீங்கள் கவனித்தீர்களா?"

"என்ன சொல்ல வருகிறாய் நீ? முதலில் அதைத் தெளிவாகச் சொல்!" சாப்பாட்டை முடித்துக் கொண்ட ஜார்ஜ் செபாஸ்டியன் எழுந்து போய்க் கை கழுவிவிட்டு வந்த பிறகு அதே இருக்கையில் உட்கார்ந்து கொண்டார்.

அந்தத் தொடக்கம் நான்ஸி ஜார்ஜுக்கு மிகவும் பிடித்துப் போனது. காரணம் நீண்ட நாட்களாக அவளை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையை ஷிபு சுட்டிக் காட்டியிருக்கிறான்.

"நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். முதலில் டாக்டர் சந்திரன் கொல்லப்பட்டார். அடுத்தது டோமி. கடைசியாக கிளார்க் விஜயன். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு விபத்து நேர்ந்தது. இவர்கள் எல்லோருமே மற்றொரு வழக்கில் தொடர்பு உடையவர்கள். அந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா?" ஷிபு கேட்டான்.

"தெரியும். நானும் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், இவை எல்லாமே யதேச்சையாக நடந்ததாகவே எனக்குத் தோன்றுகிறது." ஜார்ஜ் செபாஸ்டியன் பதிலளித்தார்.

"மருத்துவத் துறையில் நூற்றுக்கணக்கான மரணங்களைச் சந்தித்திருக்கும் உங்களுக்கு, அதனாலேயே இந்தக் கொலைகளைச் சரியாக எடை போட முடியவில்லை." ஷிபு பதிலளித்தான்.

அப்போது ரூபன் குறுக்கிட்டான்.

"நாய்கள் இறந்து போன விஷயத்தில் கூட எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது."

ரோனி, மௌனமாக இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். நீண்ட யோசனைக்குப் பிறகே எதையும் பேசும் இயல்பு கொண்டவன் ரோனி. மட்டுமின்றி வாசிப்பிலும் ஆர்வம் நிறைந்தவன்.

"டாடி, நீங்கள் எல்லோரும் விஞ்ஞானத்துக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள். ஆனால், விஞ்ஞானத்தையும் தாண்டி இந்த உலகத்தில் வேறு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன என்று நம்பும் ஆசாமி நான். அதற்கு உதாரணம் தீர்க்கதரிசனமாகக் கூறும் வார்த்தைகள். எத்தனையோ விஷயங்களை முன்கூட்டியே சொல்லும் மனிதர்கள் இருக்கிறார்களே... இரண்டாவது விஷயம், கடவுள் நம்பிக்கை. சில தெய்வீக சக்திகள் மதங்களையும் ஜாதிகளையும் கடந்து உயிர் வாழ்வதில்லையா? விஞ்ஞானத்தை உறுதியாக நம்புகிறவர்கள் கூட பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மத ரீதியான விரதங்களைக் கடைப்பிடிப்பது உண்டு." ரோனி கூறினான்.

பேசத் தொடங்கினால், கல்லூரியில் பாடம் நடத்துவது மாதிரி அவன்பாட்டுக்குப் பேசிக் கொண்டே இருப்பான். அது அந்தக் குடும்பத்தினருக்கும் தெரியும். அதனால் ஜார்ஜ் செபாஸ்டியன் கேட்டார்: "நீ என்ன சொல்ல வருகிறாய்?"

"தெய்வீக சக்திகளில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், பைசாசிக சக்திகளும் உண்டு என்பதை நம்பித்தான் ஆக வேண்டும். அப்படியானால் இதெல்லாம்..."

"நிறுத்து! நீ என்ன சொல்ல வருகிறாய் என்று விளங்குகிறது. இதெல்லாம் இறந்துபோன அந்தப் பெண்ணின் விளையாட்டு என்று நீ நினைக்கிறாயா?" ஜார்ஜ் கேட்டார்.



"ஆமாம்... நான் அப்படித்தான் நம்புகிறேன்!" அவன் உறுதியான குரலில் கூறினான்.

எல்லோரும் பரஸ்பரம் ஒருவரை மாற்றி ஒருவர் பார்த்துக் கொண்டனர். சற்று நேரம் அங்கு மௌனம் நிலவியது.

"இதையேதான் நானும் சொன்னேன்!" நான்ஸி ஜார்ஜ் முத்தாய்ப்பாகக் கூறினாள்.

"இதையெல்லாம் அந்தச் சிறிய பெண்ணால் செய்ய முடியும் என்று நினைக்கிறாயா?" ஷிபு கேட்டான்.

"ஏன் முடியாது! பைசாசிகமான சக்திகளுக்கு பலம் அதிகரிக்கும். அதுவும் பழிவாங்கும் ஒரு நடவடிக்கை எனும் போது சொல்லவும் வேண்டியதில்லை!" ரோனி கூறினான்.

"கர்த்தரே... இவன் என்னவெல்லாம் பேசுகிறான்! எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது!" நான்ஸி தன் காதுகள் இரண்டையும் பொத்திக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டாள்.

"சரி... அப்படியே இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசனை சொல்!" ஜார்ஜ் கேட்டார்.

"அதை என்னிடம் விட்டு விடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்." அவன் உறுதி அளித்தான்.

"சரி... உன் விருப்பப்படியே செய்து கொள்!"

எல்லோரும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

இரவு மணி இரண்டுக்கு மேலாகி விட்டது. அன்று அவசர சிகிச்சைப் பிரிவில் மெர்ஸிக்கு டியூட்டி.

டாக்டர் விக்கிரமனும், டாக்டர் லதாவும் டியூட்டி ரூமில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அருகே மெர்ஸி ஓய்வு எடுக்கும் பெயரில் கட்டிலில் படுத்திருந்தாள்.

அவளின் மனத்தில், அவளது வாழ்க்கையைத் தகர்த்து நொறுக்கிய ஒவ்வொருவரின் முகமும் மின்னி மறைந்து கொண்டிருந்தது.

திடுமென்று காஷுவாலிட்டி வார்டுக்கு முன்பாக ஜீப் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து ஓர் ஆணின் உடம்பை நான்கு பேர் சுமந்து வந்து அவசர சிகிச்சைப் பிரிவில் போட்டிருந்த பெஞ்சில் கிடத்தினர். அந்த உடல் அசைவற்றிருந்தது.

வண்டி மோதியதாகச் சொன்னார்கள். டாக்டர் விக்கிரமனும் டாக்டர் லதாவும் அப்போதும் அங்குதான் இருந்தனர்.

இது போல் தினந்தோறும் அங்கு எவ்வளவோ நடக்கின்றன. எனவே, மேற்குறிப்பிட்ட இருவரும் தங்கள் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருந்தனர்.

"உயிர் போகும் நிலையில் ஒருவரைக் கொண்டு வந்து போட்டிருக்கிறோம். கொஞ்சம் வந்து பாருங்களேன் சார்!" வந்தவர்களில் ஒருவர் மூச்சிரைத்தபடி பேசினார்.

அந்தப் பேச்சு டாக்டர் விக்கிரமனுக்குப் பிடிக்கவில்லை.

"மிஸ்டர், இங்கே கண்டபடி கத்தக் கூடாது. இது ஒரு ஆஸ்பத்திரி என்பது ஞாபகம் இருக்கட்டும்!" விக்கிரமன் உரத்த குரலில் பதிலளித்தார்.

"இது கள்ளுக்கடை இல்லை என்று எங்களுக்கும் தெரியும். ஆபத்தான நிலையில் இருக்கும் ஒருவரை வேறு எங்குதான் கொண்டு போவது?" மற்றொருவர் கோபத்துடன் கேட்டார்.

"என்ன சத்தம் இங்கே!" என்றபடி மெர்ஸி சட்டென்று எழுந்து வந்தாள்.

"நீங்கள் காதலிப்பதற்கான இடமா இது? எல்லோரையும் பொசுக்கி விடுவோம்!" கட்டை மீசைக்காரர் ஒருவர் முன்புறமாகப் பாய்ந்து வந்தார்.



"அசையாதீர்கள்!" மெர்ஸி அந்த மனிதரின் பக்கமாகத் திரும்பினாள்.

அதைக் கேட்டதும் தரையில் ஒட்ட வைத்தது மாதிரி அவர் அப்படியே நின்று விட்டார்.

"நீங்கள் இருவரும் பேசியது தவறுதான். இன்று அடுத்தடுத்து எக்கச்சக்கமான நோயாளிகள். எனவே, நாங்களும் சோர்ந்து போயிருக்கிறோம். தூங்காமல் இருப்பதற்காகத்தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். உங்கள் கவலை உங்களுக்கு. சரி, வேலையைப் பார்ப்போம்."

மெர்ஸி, பெஞ்சில் கிடக்கும் நோயாளியை நெருங்கினாள்.

"எக்கச்சக்கமாகத் தண்ணியடித்து விட்டு வண்டி ஓட்டியிருக்கிறார்போல் தோன்றுகிறதே! அப்புறம் எப்படி லாரி இந்த மாதிரி எல்லாம் தாறுமாறாக ஓடாமலிருக்கும்? நீங்கள் தானே வண்டி ஓட்டும்போதும் டிரைவருக்கு ஊற்றிக் கொடுத்தவர்?" மெர்ஸி அருகில் நின்றிருந்தவரிடம் கேட்டாள்.

அவர், குடத்தால் தலையில் அடி வாங்கியவரைப் போல் அசைவற்றுப் போனார்.

'இது எப்படி டாக்டருக்குத் தெரிந்தது!' என்று வியப்படைந்தார் அவர்.

மெர்ஸி, பெஞ்சில் கிடந்த மனிதரின் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள்: "போதை தெளியவுமில்லை. உயிர் போகவுமில்லை. டாக்டர் விக்கிரமன் சார் மார்ச்சுவரியில் போடுங்கள் என்றது எவ்வளவு சரியான வார்த்தை!"

லாரி டிரைவரை வார்டுக்கு கொண்டு போகுமாறு, நர்ஸிடம் கூறிவிட்டு மெர்ஸி மறுபடியும் போய்ப் படுத்துக் கொண்டாள்.

"அந்த டாக்டரம்மா மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், இந்நேரம் உங்களுக்கு ஒரு பாடம் புகட்டியிருப்போம்" நால்வரில் ஒருவர் விக்கிரமனின் பக்கமாகத் திரும்பினார்.

டாக்டர் விக்கிரமனும் லதாவும் மெர்ஸியையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சற்று நேரத்துக்குப் பிறகு டாக்டர் விக்கிரமன், மெர்ஸியை நெருங்கினார்.

"அதெல்லாம் உங்களுக்கு எப்படிப் புரிந்தது?" நயமாகக் கேட்டார்.

அப்போதுதான் தான் செய்தது முட்டாள்தனமாகி விட்டது என்பதை அவள் உணர்ந்தாள்.

சட்டென்று அவள் அதற்கு ஓர் உபாயம் கண்டுபிடித்தாள்.

"உங்களுக்கு மதுபானத்தின் மணம் தெரியவில்லையா என்ன? அப்புறம் அவரது உடையைக் கவனிக்கவில்லையா? எனவே யூகித்தேன். நீங்கள் இருவரும் கொஞ்சமாக மது அருந்திருயிருப்பதால் ஒருவேளை அது உங்களுக்குத் தெரிய வில்லையோ என்னவோ?" மெர்ஸி சிரித்தபடி பேசினாள்.

இதைக் கேட்டதும் டாக்டர் விக்கிரமனும் லதாவும் பரஸ் பரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர் மெர்ஸி கடைசியாகக் குறிப்பிட்டதும் உண்மைதான்.

மித்தேல் கலக்காத ஸ்பிரிட்டைக் கொஞ்சமாகக் குடிப்பது டாக்டர் விக்கிரமனின் வழக்கம். ஆனால், அதை மெர்ஸி எப்படிக் கண்டுபிடித்தாள் என்பது அவரது சந்தேகம்.

சுமார் ஒரு வாரத்துக்குப் பிறகு டாக்டர் விக்கிரமனும், டாக்டர் ஷிபுவும் நகரின் உயர்தரமான பார் ஒன்றில் எதிர் பாராமல் சந்திக்க நேர்ந்தது.

இருவரும் பரஸ்பரம் கை கொடுத்துக் கொண்ட பிறகு ('டபிளின் இரு புறமும் எதிரெதிராக அமர்ந்து கொண்டனர்.



ஒரு லார்ஜை தொண்டையில் இறங்கிய பிறகு டாக்டர் விக்கிரமன் கூறினார்: "ஹலோ ஷிபு, உங்கள் சகோதரிக்குச் சில அபூர்வமான தன்மைகள் உள்ளன."

"அப்படியா? நீங்கள் இப்படி ஒரு முடிவுக்கு வரக் காரணம்?" ஷிபு கேட்டான்.

டாக்டர் விக்கிரமன் அன்று மருத்துவமனையில் நடந் ததை எல்லாம் விவரித்தார்.

அதை ஷிபு மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டான். ஆனால், பதில் எதுவும் சொல்லவில்லை. அவன் கண்களில் சந்தேகத்தின் நிழல் பரவியது.

அப்படியானால் தனக்கும் ஏதாவது விபத்து ஏற்படுமோ என்று அவன் பயந்தான்.

அத்துடன் தனக்கு எதனால் அப்படியொரு சிந்தனை மெர்ஸியைத் தொடர்பு படுத்தித் தோன்றியது என்றும் யோசித்தான்.

'ஒருவேளை சும்மா அப்படித் தோன்றியிருக்கலாம்!' என்று அவன் தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்டான். இருப்பினும் அன்றிரவு அவன் அந்தத் தகவலை ரோனி யிடம் தெரிவிக்கவும் தவறவில்லை.

அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதை மெர்ஸி, ஜன்ன லின் அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

தன்னைக் குறித்துதான் அவர்கள் பேசிக் கொள்கிறார்கள் என்பதும் அவளுக்கு விளங்கியது.

## 16

ஷிபுவும் ரோனியும் கட்டிலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அதையொட்டிய மூன்றாவது அறையில் தான் மெர்ஸி படுத்து உறங்குவது வழக்கம். அந்த அறை டோமியினுடையது. அவனது மரணத்துக்குப் பிறகு அந்த அறையை வேறு எவரும் பயன்படுத்துவதில்லை.

மெர்ஸி அந்த அறைக்குள் இருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

மணி பத்துக்கு மேலாகி விட்டிருந்தது.

ஏறத்தாழ எல்லோருமே உறங்கி விட்டிருந்தனர். வரவேற்பு அறையிலிருந்த கடிகாரம் மட்டும் டிக்டிக் சத்தத்தை எழுப்பி அமைதியைச் சிதைத்துக் கொண்டிருந்தது.

இருவரும் அங்கு அந்த இரவில் சந்தித்துப் பேசியதே பிரத்தியேகமான ஒரு லட்சியத்துடன்தான். காரணம் டாக்டர் விக்கிரமனின் பேச்சு, ஷிபுவின் மனத்தில் விடை இல்லாத கேள்விகள் சிலவற்றை உயர்த்தி விட்டிருந்தது.

மட்டுமின்றி, சமீப காலமாக மெர்ஸியிடம் ஏற்பட்டுள்ள அற்புதமான மாற்றங்கள் சிலவும் அவர்களது கவனத்தில் பதியவும் செய்தன.

மிகவும் சிக்கலான பிரசவங்களைக் கூட, அவள் மிகவும் லாகவமாகக் கையாண்டதில், அனுபவம் வாய்ந்த பல பெரிய டாக்டர்களுக்கே கூட அவள் மீது எரிச்சல் தோன்றியிருந்தது.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவளைப் பாராட்டிய ஒரே நபர் மகப்பேறு மருத்துவத்தில் மாஸ்டர் டிகிரியும்



அதைவிட கைராசிக்காரர் என்றும் பெயர் பெற்ற டாக்டர் பாலகிருஷ்ணன் மட்டும்தான்.

"மெர்ஸிக்கு இந்த அளவுக்குத் திறமை இருப்பதாக நீ நினைக்கிறாயா ஷிபு?" ரோனி கேட்பதை, மெர்ஸி ஊன்றிக் கவனித்தாள்.

"கிடையாது. அவளுக்கு இதெல்லாம் என்ன தெரியும்? ஒரு அட்டெண்டருக்கு உள்ள கெட்டிக்காரத்தனம் கூட இல்லாதவள் நம் சகோதரி. நம் அப்பாவும், கெட்டிக்கார டாக்டர்களும் சேர்ந்து அவளைக் கெட்டிக்காரி மாதிரிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் விஷயம்." ஷிபு கூறினான்.

"உண்மைதான். அவளது கையாலாகத்தனத்தால் நான்கு பெண்கள் இறந்து போன விஷயம் எனக்குத் தெரியும். அதையெல்லாம் வெளியே தெரியாமல் அப்பாதான் மறைத்தார்." ரோனி மிகவும் பழைய காரியங்களுக்குள் கடந்தான்.

"அது மட்டுமா, அவள் இப்போது செய்வது எல்லாம் வைத்தியத்தில் விஞ்ஞானத்தைக் கடந்த அற்புதங்கள். இதன் பின்னணியில் ஏதேதோ ரகசியங்கள் உள்ளன!" ஷிபு பேசினான்.

"ஆமாம்... அதுவும் எனக்குத் தெரியும்" ரோனி கூறினான்.

"நீ என்ன சொல்ல வருகிறாய்?"

"நாம் இப்போது நம்முடன் காண்பது சரியான டாக்டர் மெர்ஸி ஜார்ஜ் கிடையாது!" ரோனி உறுதியான குரலில் கூறினான்.

"நீ என்னதான் சொல்கிறாய்?"

ரோனி சற்று நேரம் மௌனமாக இருந்தான். மனத்தில் இருப்பதை எப்படி வெளிப்படுத்துவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"அப்படியானால் அது வேறு யார்?"

"மெர்ஸி ஜான். அதாவது நாம் எல்லோருமாகச் சேர்ந்து கொலை செய்து விட்ட மெர்ஸி ஜான்!" ரோனி ஒருவாறாகச் சொல்லி முடித்தான்.

"நீ என்ன சொல்கிறாய்? இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலா இப்படி? இது கம்ப்யூட்டர் யுகம். இப்போதா நீ துருப் பிடித்த பழைய பூத- ஆவி- பேய்க் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறாய்?"

"இதற்கு மேல் எனக்கு வேறு எதுவும் தெரியாது. ஆனால், நான் நிறையப் படிப்பவன். சமீபத்தில் கூட நான் காலேஜ் லைப்ரரியிலிருந்து ஒரு புத்தகத்தைப் படித்தேன். ஆவி - பேய்களைக் குறித்து விவாதிக்கிற ஒரு புத்தகம் அது. பெயர் 'லிவிங் கோஸ்ட்ஸ்' (உயிருள்ள பேய்கள்). அவற்றை எப்படி அழிப்பது என்பது பற்றியும் அதில் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்." ரோனி கூறினான்.

"எனக்கு என்னமோ ஒரே திகைப்பாக இருக்கிறது. இந்த நிலையில் நீ தேவை இல்லாததை யெல்லாம் சொல்லி என் மனத்தை வேறு குழப்பி விட்டாய்" ஷிபு, தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான்.

தன்னை வலையில் வீழ்த்தக் கூடிய ஏதோ ஒன்று ரோனியிடம் உள்ளது என்று தெரிந்த விநாடியிலிருந்து மெர்ஸி பயப்படத் தொடங்கினாள். கூடவே அவளுக்கு ரோனி மீது அடக்க முடியாத கோபமும் தோன்றியது.

"ஷிபு, இன்னொரு விஷயம். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் அவற்றுக்கு எல்லாம் சக்தி அதிகரிக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில்தான் நாம் அவற்றை நேரிட வேண்டும். அப்படித்தான் அந்தப் புத்தககத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது."

"அது உன்னிடம் இருக்கிறதா?"



"இருக்கிறது. நான் காட்டுகிறேன்." என்ற ரோனி கட்டிலின் அடியிலிருந்து சிறிய பிரீஃப்கேஸ் ஒன்றை எடுத்துத் திறந்தான். அதற்குள்ளிருந்து மிகவும் பழைய புத்தகம் ஒன்றை வெளியே எடுத்தான். பிறகு டேபிள் லேம்ப்பின் வெளிச்சத்தைப் புத்தகத்தின் பக்கமாகத் திருப்பினான்.

"இன்றைக்கு இரவு கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடிக்கும்போது இதோ இதில் இருக்கும் இயந்திரத்தை அவள் மார்பு மீது வைத்த பிறகு மந்திரம் சொல்லியபடி கட்டாரி ஒன்றை இறக்க வேண்டும். அத்துடன் எல்லாம் தீர்ந்து விடும்!"

"கடவுளே... நீ என்ன சொல்கிறாய் ரோனி? இதெல்லாம் நம்மால் செய்யக் கூடிய விஷயங்களா என்ன? அதுவும் நம் சகோதரியை இப்படியெல்லாம் நம்மால் செய்ய முடியுமா?" ஷிபு பதறினான்.

"அவளா நம் சகோதரி. இல்லை! அது எப்போதோ செத்துப் போன ஒரு பெண்ணின் பிணம். துர் ஆவி குடியேறியிருக்கும் உடம்பு. நாம் இதையெல்லாம் செய்தே தீர வேண்டும். இதைச் செய்யக் கூடிய நபர் இப்போது இங்கு வந்து கொண்டிருக்கிறார்." என்ற ரோனி தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

"என்ன... கடிகாரம் நின்று போயிருக்கிறது!" மணி இன்னுமா பன்னிரண்டு ஆகவில்லை?" அவன் கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயன்றான்.

அப்போது கடிகாரத்தில் மணி அடிக்கத் தொடங்கியது. ரோனி ஒவ்வொன்றாக எண்ணத் தொடங்கினான்.

"இதென்ன கூத்து! மணி பத்தா? எப்போதோ பத்து மணி அடித்ததை நான் கவனித்தேனே!" அவன் குரலில் சந்தேகம் உயர்ந்தது.

"நீ எண்ணிக்கையைக் கவனிப்பதில் தவறு செய்திருக் கலாம். சரி... அது போகட்டும் யார் வரப் போகிறார்கள்?" ஷிபு கேட்டான்.

"நம் காலேஜ் லைப்ரேரியன் அனந்த நாராயணன் நம்பூதி ரியின் மாமா சங்கர நாராயணன் நம்பூதிரி. அவர், பொரித்து எடுத்த கோழியைப் பறக்கச் செய்பவர். ஆளைக் கொன்று எவருக்கும் தெரியாமல் மார்ச்சுவரியின் மூலையில் போட்டு விட்டுத்தான் போவார். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டுத்தான் வந்திருக்கிறேன் நான்." அவன் மார்பில் தன் வலது கையால் தட்டியபடி கூறினான்.

மெர்ஸி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள், கடிகாரத்தின் மீது தன் கவனத்தைத் திருப்பியிருந் தாள்.

"என்ன இருந்தாலும் மணி என்ன என்று பார்த்துவிட்டு வருகிறேன். எனக்கு ஒரு சந்தேகம்" -ரோனி அங்கிருந்து எழுந்து போனான்.

வரவேற்பு அறைக்குச் சென்றவன் லைட்டைப் போடாமல் டார்ச்லைட்டை அடித்துப் பார்த்தான்.

திடுக்கிட்டவன் சட்டென்று பின்னோக்கி நகர்ந்தான். ஒன்றரையடி விட்ட முள்ள கடிகாரத்தின் கண்ணாடியில் ஏறத்தாழ அதே அளவுள்ள பீமாகாரமான ஒரு சிலந்தி.

அதன் கால்கள் எட்டும் அதனதன் திசையில் அப்படியே நீண்டன. மட்டுமின்றி, டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் அந்தக் கருஞ்சிலந்தியின் கண்கள் இரண்டும் சிவப்பு நிற வைரங் களைப் போல் பளபளத்தன.

மற்றோர் ஆச்சரியத்தையும் ரோனி கவனித்தான். அதைப் பார்த்ததும் அவன் உடலின் மொத்த மயிர்க் கால்களும் குத்திட்டு நின்றன.

அதோ... கடிகாரத்தின் முள் பின்னோக்கி நகர்கிறது!



"கடவுளே... என்ன இது!" அவன் கண்களை மூடி மூடித் திறந்தான். ஆமாம்... உண்மைதான்!

விநாடி முள் பின்னோக்கி விரைவாகச் சுழன்றது.

அந்தச் சிலந்தி கண்ணிமைப்பதற்குள் கடிகாரத்திலிருந்து நேராக ரோனியின் மீது பாய்ந்தது. அது, அவன் தலை மீது ஊர்ந்து பின்புறமாகச் சென்றது.

கால்களைத் தரையில் பதிய வைத்தது போல் அவன் அப்படியே அசைவற்று நின்று போனான்.

அதே நேரம் மாந்திரீகனான சங்கர நாராயணன் நம்பூதிரி யும், அவர் மருமகன் அனந்தனும் காரில் வந்து கொண்டிருந் தனர்.

நல்ல நிலா வெளிச்சமுள்ள இரவு.

அதை இரவு என்று சொல்வதே தவறு.

காரின் ஹெட்லைட் வெளிச்சம் ரோட்டில் விழுவதே தெரியவில்லை. அந்த அளவுக்குப் பகல் போல் இருந்து நிலா வெளிச்சம்.

"அனந்தா, பெண் எப்படி இருக்கிறாள்?" சங்கர நாரா யணன் நம்பூதிரி கேட்டார்.

மாந்திரீகனான மாமா எல்லா விதத்திலும் கெட்டிக்காரர் என்று அனந்தனுக்குத் தெரியும். ஆவி மற்றும் பேய் பீடித்த பெண்களிடம் இருந்து அவற்றை வெளியேற்ற, நம்பூதிரி அப்படிப்பட்ட பெண்களை உட்கார வைத்தும் படுக்க வைத்தும் மந்திரங்கள் உச்சரிப்பார் என்பது அனந்தனுக்குத் தெரியும்.

அவற்றை அகற்றிவிட்டால், கிடைக்கும் தட்சிணையில் மருமகனுக்கும் ஒரு பங்கு உண்டு. எனவே, அவரும் மாமா வுடன் எல்லா இடங்களுக்கும் செல்வதுண்டு.

"இந்தப் பெண் அவர்களின் சகோதரி. டாக்டரும் கூட!" அனந்தன் கூறினான்.

"அப்படியென்றால், இதற்கு முன்னால் நாம் போனதெல்லாம் அன்னியரிடமா? பொடியை முகத்தில் வீசும்போது எந்தப் பெண்தான் சுயநினைவை இழக்காமல் இருப்பாள்? பிறகு பிரயோகிக்க வேண்டியதுதான். ஹா...!" நம்பூதிரி காரின் பின் ஸீட்டில் சாய்ந்து கிடந்து அட்டகாசக் குரல் கொடுத்தார்.

அனந்தன் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

"அனந்தா, மணி பன்னிரண்டாக மேற்கொண்டு சில நிமிடங்கள்தான் உள்ளன!" சங்கரநாராயணன் நம்பூதிரி நினைவூட்டினார்.

அனந்தன் ஆக்ஸிலேட்டரில் காலை அமுத்திப் பதித்தார்.

மறுவிநாடி-

காரின் முன்புறக் கண்ணாடியில் பெரிய சிலந்தி ஒன்று வந்து பதிந்தது.

அந்தச் சிலந்தி மிகப் பெரியதாக இருந்ததால், அனந்தனால் ரோட்டைக் கவனிக்க முடியவில்லை. அனந்தன் பிரேக்கை மிதித்தார்.

ஆனால், பிரேக் பிடிக்கவில்லை.

இரண்டு அல்லது மூன்று முறைக்கு மேல் பிரேக்கில் கால் வைத்து அமுத்திப் பார்த்தும் பிரேக் பிடிக்கவில்லை.

முன் புறக் கண்ணாடியில் இருந்த சிலந்தியோ விநாடிக்கு விநாடி பெரிதாகிக் கொண்டு இருந்தது.

"மாமா... என்ன இது?" அனந்தன் கேட்டான்.

மாந்திரீகனான திருமேனி தனது தோள்பையைக் கையில் எடுக்க முயன்றார். ஆனால், அவரால் அது முடியவில்லை. அதற்குள் கார் வலது புறப் பள்ளத்தில் விழுந்தது.



ஷிபுவும் ரோனியும் உறங்காமல் காத்திருந்தனர்.

அவர்களை இன்னும் காணவில்லையே?

ரோனி, டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு எழுந்தான்.

"நீ எங்கே போகிறாய்?" ஷிபு கேட்டான்.

"அவள் தூங்கிவிட்டாளா என்று பார்க்க வேண்டும்."

"அவள் மூன்றாவது அறையில்தானே படுக்கிறாள்? ஒரு வேளை நாம் பேசியதை எல்லாம் அவள் கேட்டிருப்பாளோ?"

"பார்த்துவிடலாம்" என்ற ரோனி ஜன்னல் கதவைத் தள்ளிப் பார்த்தான்.

அது வெளிப்புறத்திலிருந்து பூட்டப்பட்டிருந்தது. அவன் அறையிலிருந்து வெளியேறினான்.

அந்த அறையின் ஜன்னல் கதவு திறந்து கிடந்தது.

அவன் டார்ச்லைட் அடித்துப் பார்த்தான். மெர்ஸி கட்டிலில் கிடந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

மறுநாள் காலையில் சுமார் பத்து மணியான போதுதான் நம்பூதிரி வந்த கார் பற்றிய தகவல் கிடைத்தது.

அனந்தன் மரணமடைந்துவிட்டான். ஆனால், மாந்திரீகனான சங்கரநாராயணன் நம்பூதிரி ஒருவாறாக உயிர் பிழைத்தார் எனலாம்.

சிலந்தியின் வடிவம் அவர் மனத்தில் மறையாத உருவம் பெற்றது.

வழக்கம்போல் மெர்ஸி ஆஸ்பத்திரிக்கு வந்தாள்.

ரவுண்ட்ஸ் வந்த பிறகு அவள் டியூட்டி ரூமில் வந்து அமர்ந்தாள். அப்போது நர்ஸ் தங்கம்மா அவளுக்கு அருகே வந்து நின்றாள்.

"என்னம்மா?"

"கல்லூரி மாணவி ஒருத்தி வந்திருக்கிறாள்."

"வரச் சொல்லுங்கள்!"

மூன்று நிமிடங்களுக்குப் பிறகு அந்தப் பெண் வந்து சேர்ந்தாள்.

பத்தொன்பது வயதைத் தாண்டாத இளந்தளிர் போன்ற இளம்பெண்.

தீயின் நிறம்.

லிப்ஸ்டிக் போட்டது போன்ற இயற்கையான, சிவந்த நிற உதடுகள்.

அந்த உடலை விரலால் தொட்டால் வெண்ணெயில் தொடுவது போன்ற மினுமினுப்பும் வழவழப்பும்.

"உட்காரும்மா. என்ன பேர்?" மெர்ஸி கேட்டாள்.

அவள் மிகவும் தயங்கித் தயங்கி நாற்காலியில் உட்கார்ந்தாள். பிறகு கூறினாள்:

"ஜாஸ்மின் டிக்ரூஸ்."

ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்ணுக்கு உரிய எல்லா வித லட்சணங்களும் இருந்தன.

"ம்... சொல்லும்மா!"

"உங்களுக்கு எல்லா இடத்திலும் நல்ல பெயர். அதனால் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக வந்திருக்கிறேன். பிறகு முக்கியமான ஒரு தகவலும் இருக்கிறது." அவள் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தாள்.

"ம்... சொல்லும்மா!" என்ற மெர்ஸி தன் கையிலிருந்த பால்பாயிண்ட் பேனாவால் அங்கிருந்த சிறிய புத்தகம் ஒன்றில் வட்டமாக எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தாள்.

"அசிஸ்டெண்ட் புரபசர் விக்கிரமன் சார் எப்படிப் பட்டவர்?" அவள் கேட்டாள்.



"நான் எப்படி ஒரு தனி மனிதரைப் பற்றிக் கருத்துக் கூறுவது? அது சரியில்லையே!" மெர்ஸி நழுவினாள்.

"அவர் எப்போதும் என்னை வெறித்துப் பார்க்கிறார். எனக்கு பயமாக இருக்கிறது. வெளிப்படையாகச் சொன்னால் நான் ஒருவரை மனமார விரும்புகிறேன்."

"போதும்... போதும்! புரிந்துவிட்டது. டாக்டர் விக்கிரமன் உங்களைப் பார்க்கிறார்... அது நீங்கள் அழகாக இருப்பதால் இருக்கலாம். அழகிகளைப் பார்ப்பது தவறா என்ன?" மெர்ஸி கேட்டாள்.

ஜாஸ்மின் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அவள் எதுவோ ரகசியம் சொல்லப் போகிறாள் என்று மெர்ஸிக்குத் தோன்றியது.

"என்ன சொல்ல வேண்டுமோ, அதை வெளிப்படையாகச் சொல்லுங்கள். தற்சமயம் இங்கு வேறு யாரும் வர வாய்ப்பு இல்லை. ம்... என்ன விஷயம்?"

"என்னை அவரது அறைக்குள் வருமாறு டாக்டர் விக்ரமன் சொல்லியிருக்கிறார்!"

உடனே டாக்டர் விக்கிரமனின் முகம் மெர்ஸியின் மனத்தில் மேலெழும்பி வந்தது.

தன்னுடைய வலையில் விழாதவர்களை மிரட்டி விழ வைத்துவிடுவார் அவர். ஃபிஸியாலஜி புரபசர். வெற்றி பெறச் செய்யவும் தோல்வியடைய வைப்பதிலும் கெட்டிக்காரர். ஆனால், அவர் நினைத்தது நடக்க வேண்டும்.

"நான் என்ன செய்வது டாக்டர்?" ஜாஸ்மின் கேட்டாள்.

"இதில் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவரிடம் எனக்கு அவ்வளவாகப் பழக்கம் கிடையாது. நம்மைப் போன்றவர்கள் உடம்பை நல்லபடியாகப் பராமரிப்பவர்கள். அவர் மனசு வைத்தால் உங்கள் வாழ்க்கையில் அதிக அள

வுக்கு உதவ முடியும். ஆமாம், இன்றைக்கா வரச் சொல்லியிருக்கிறார்?"

"ஆமாம்... இன்றைக்கு இரவில்... நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை ஆயிற்றே." ஜாஸ்மின் கூறினாள்.

"அவர் மனத்தை நோகடிக்க வேண்டாம்." மெர்ஸி எழுந்து அங்கிருந்து வெளியேறினாள்.

டாக்டர் விக்கிரமன் தனது அறையில் காத்திருந்தார்.

டாக்டர் லதா, டாக்டர் விக்கிரமனுக்கு மிகவும் வேண்டியவள். எனவே, ஜாஸ்மினை அழைத்து வருவதாகச் சொல்லியிருந்தாள். யாருக்கும் எந்த விதமான சந்தேகமும் ஏற்படாதே.

சரியாக இரவு ஒன்பது மணி ஆனபோது டாக்டர் விக்கிரமனது குவார்ட்டர்ஸுக்கு முன்னால் கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து டாக்டர் லதாவும், ஜாஸ்மினும் இறங்கினர்.

டாக்டர் விக்கிரமன் அவர்கள் இருவரையும் வரவேற்றார்.

"எனக்கு இன்றைக்கு நைட் டியூட்டி. நான் போய்விட்டு உடனே வருகிறேன்." டாக்டர் லதா அங்கிருந்து கிளம்பினாள்.

டாக்டர் விக்கிரமன் கதவை மூடித் தாழிட்டார்.

"உள்ளே வாருங்கள்!"

அவர், அவளின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு உட்புறமாக அழைத்துச் சென்றார்.

விஸ்கி ஊற்றி சோடா கலந்து இரண்டு கிளாஸுகளை நிரப்பினார். ஒன்றை அவளிடம் கொடுத்தார். "தாகம் தீரட்டும்!"

"வேண்டாம்... எனக்குப் பழக்கமில்லை."



"அப்படியானால் சரி!" அவர் முதலில் ஒரு கிளாஸ் விஸ்கியை ஒரே மூச்சில் உள்ளுக்கு இறக்கினார்.

பின்னர் வாயைக் கையால் துடைத்துச் சுத்தப்படுத்தினார். அவளை இரண்டு கைகளாலும் வாரியெடுத்து கட்டிலில் படுக்க வைத்தார்.

அவள் சுடிதார் அணிந்திருந்தாள்.

அந்த உடை அவருக்குப் பிடிக்காததாலோ என்னவோ, அந்த உடம்பிலிருந்து அகற்றினார்.

"நீ மிகவும் அழகான பெண்!" அவர் அவளைத் தழுவினார்.

அவளால் அசைய முடியவில்லை.

திடீரென்று ஞாபகம் வந்தவராக எழுந்தவர் இரண்டாவது கிளாஸிலிருந்த விஸ்கியைக் காலியாக்கினார்.

ஜாஸ்மின் கிடந்த படுக்கைப் பக்கமாகத் திரும்பிய டாக்டர் திடுக்கிட்டு நடுங்கினார்.

ஜாஸ்மினுக்கு பதிலாக அந்த இடத்தில் அவர் கண்ட காட்சி மிகவும் பயங்கரமானதாக இருந்தது!

## 17

கட்டிலில் கிடந்த அந்த உருவத்தைப் பார்த்து டாக்டர் பயந்து நடுங்கினார்.

அந்த அளவுக்கு பயங்கரத்தை ஏற்படுத்தும் அருவருப்பான காட்சியாக இருந்தது அது.

இடுக்கி மாவட்டத்தில் எங்கோ ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளத்தில் மிதந்து வந்த பிணம் ஒன்றை மார்ச்சுவரி எனப்படும் பிணவறையில் பாதுகாத்து வைத்திருந்தனர்.

மீன்கள் அங்கிங்காகக் கடித்துக் குதறியதால் பிசிறு பிசிறாகத் தசைப் பகுதிகள் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெண் உருவம்.

அதன் முகத்தில் ஒரு கண் இருக்க வேண்டிய பகுதியில் கருமையான இருண்ட குழியும், மற்றொரு கண்ணில் கரு மணி பாதி வெளியே பிதுங்கித் தொங்கிக் கொண்டுமிருந்தது.

மூக்கு பெயர்ந்திருந்தது.

உதடுகள் சிதைந்து அழுகி, பற்கள் நீண்டிருந்தன.

மொத்தத்தில் சிதைந்த, இறந்து போன ஒரு பிணம்.

டாக்டருக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. அவர் திடு மென்று பாத்ரூமை நோக்கி ஓடினார்.

ஷவரின் குமிழைத் திருகினார். நீர்த் துளிகள் 'ஸ்' என்ற சத்தத்துடன் விசையுடன் பாய்ந்தது. உடல் குளிரக் குளித்தார். சோப்பு போட்டு உடம்பை நன்றாகத் தேய்த்துக் குளித்தார்.

திரும்பத் திரும்பத் தேய்த்துக் குளித்தார்.

லுங்கி எடுத்துக் கட்டிக் கொண்டார். இருப்பினும் பயமும் அருவருப்பும் மிச்சமாகக் கிடந்தன.

எப்போதெல்லாமோ பார்த்த பயங்கர சினிமாப் படங் களின் காட்சிகளை விட மிகவும் பயங்கரமாக இருந்தது அந்தக் காட்சி.

சிதிலமாகி, அழுகிய ஒரு பிணத்துடன், தான் உறவு கொண்டோம் என்ற நினைப்பு எழுந்தபோது அந்தக் கணத்திலேயே தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட அவருக்குத் தோன்றியது.



மேற்கொண்டு அதைப் பற்றியெல்லாம் யோசிப்பதில் அர்த்தமில்லை!

அந்தப் பிணத்தை எப்படியாவது மார்ச்சுவரிக்குக் கொண்டு போக வேண்டும். இல்லாவிட்டால் என்ன நடக்கும்!

நடந்ததெல்லாம் ஒரு கனவு அல்ல என்று நினைக்கவே, நிமிடங்கள் சில தேவைப்பட்டன அவருக்கு.

அந்தப் பிணத்தை எப்படியாவது மூடிக் கட்டி மருத்துவக் கல்லூரியின் காம்பௌண்டுக்குள் உள்ள பாழடைந்த கிணற் றில் போட்டுவிட வேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.

குளியலறையின் கதவைத் திறப்பதற்காக அவர் திரும் பினார்.

அப்போது-

"குளித்து விட்டீர்களா டாக்டர்?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டார் விக்கிரமன்.

அழுகிச் சிதிலமடைந்த அந்தப் பெண்மணியின் நிர்வாண மான உடல் கதவைத் திறந்து கொண்டு கதவுக்கு முன்னால் நிற்கிறது!

"கடவுளே!" என்று அலறியபடி அவர் பாத்ரூம் கதவை மூட முயன்றார்.

ஆனால், அவரால் முடியவில்லை.

"நான் கிளம்பட்டுமா?" அந்தப் பெண்ணுருவம் அவரைப் பார்த்துக் கேட்டது.

டாக்டரால் அதற்கு பதில் சொல்ல முடியவில்லை.

அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவரது கட்டிலி லிருந்த பெட்ஷீட்டை உருவி எடுத்துப் போர்த்தியபடி அந்த வீட்டிலிருந்து வெளியேறி இருளில் மறைந்தது அந்த உருவம்.

டாக்டர் விக்கிரமன் அடிக்கடி வாஷ் பேஸினை நெருங்கிக் கை கழுவினார். அவ்வப்போது தண்ணீர் குடித்தார்.

"என்ன ஆச்சு டாக்டர்?" டாக்டர் மாணி ஆபிரகாம் மீண்டும் விசாரித்தார்.

"குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவும் இல்லை. இன்றைக்கு மனமே சரியில்லை." டாக்டர் காரணம் கூறினார்.

மணி பதினொன்றைத் தாண்டிவிட்டிருந்தது.

அப்போது கார் ஒன்று காஷுவாலிட்டியின் போர்ச்சில் வந்து நின்றது.

மூன்று பேர் காருக்குள்ளிருந்து பிணம் ஒன்றை எடுத்து வந்து ஸ்ட்ரெக்ச்சரில் படுக்க வைத்தனர்.

மெர்ஸிதான் முதலில் வந்து பார்த்தவள்.

"இந்த நேரத்தில் எப்படித் தண்ணீருக்குள் மூழ்கி எடுத்தீர்கள்?" அவள் கேட்டாள்.

இதைக் கேட்ட மூவரில் ஒருவன் வியப்புடன் மெர்ஸியின் முகத்தைப் பார்த்தான்.

இரவில் படகில் ஆற்றைக் கடக்கும்போது படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி இறந்து போன பிணம்.

உடனேயே தற்காலிக ரிப்போர்ட் ஒன்றை எழுதி, பிணத்தை மார்ச்சுவரிக்குக் கொண்டு போனார்கள்.

அப்போது டாக்டர் விக்கிரமனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். அவரது நோக்கம், அவரது வீட்டுக்கு வந்த அந்தப் பைசாசிக உருவம் மார்ச்சுவரிக்குள் அப்போது இருக்கிறதா என்று சோதித்துப் பார்ப்பதுதான்.

அந்த அறையின் மங்கிய வெளிச்சத்தில் டாக்டர் விக்கிரமன் தனது கையில் இருந்த டார்ச் லைட்டை எரிய விட்டுத் தேடினார்.

அதோ கிடக்கிறது தனது பெட்ஷீட்.



அவர், அதன் அருகே சென்றார்.

சிதிலமடைந்த அந்த உடம்பு அவரது போர்வையைப் போர்த்தியபடி படுத்திருந்தது.

அந்த பெட்ஷீட்டை எப்படியாவது அங்கிருந்து எடுத்து அழிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாளைக்கு அது ஒரு பிரச்சினையாகி விடும். முயற்சி செய்தால் அது தன்னுடைய போர்வை என்பதைச் சுலபத்தில் கண்டுபிடித்துவிட முடியும்.

'என்ன செய்யலாம்?' டாக்டர் விக்கிரமன் யோசித்தார். 'அன்றிரவே, அந்த பெட்ஷீட்டை எப்படியும் கைப்பற்றிவிட வேண்டும்.'

அட்டெண்டர் மார்ச்சுவாரியைப் பூட்டி, சாவியை அதற்கான இடத்தில் தொங்க விடுவதை டாக்டர் விக்கிரமன் கவனித்தார்.

மணி இரண்டு.

பக்கத்தில் எவரும் இல்லை. எனவே, மார்ச்சுவரியின் சாவியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

ஆஸ்பத்திரியின் சுற்றுப்புறம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. அவ்வப்போது அருகிலுள்ள மெயின் ரோட்டில் கார்கள் சில வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தன.

டாக்டர் விக்கிரமன் மார்ச்சுவரியின் கதவை நெருங்கினார்.

டார்ச் லைட்டை எரியவிட்டபடி அவர் அந்தப் பிணம் கிடக்கும் பகுதியை நெருங்கினார்.

பீதி அவரைச் சூழ்ந்து கொண்டிருந்தாலும், போர்வையைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அதை நெருங்கினார்.

அவரை ஆச்சரியப்படுத்திக் கொண்டு அந்தப் பிணம் சட்டென்று ஒருபுறமாக உருண்டு நகர்ந்தது. பெட்ஷீட்டை

அவர் எடுத்துக் கொள்வதற்கு வசதியாகவே அது நகர்ந்தாற் போலிருந்தது.

டாக்டர் விக்கிரமன் மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்தார்.

மூடியிருக்கும் கதவின் சன்னமான இடுக்கு வழியாக நூலளவு நேர்க்கோடு போல் வெளிப்புற வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அவர் பெட்ஷீட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

அவர் நேராகச் சென்றது மருத்துவமனையின் வடகிழக் குப் பகுதிக்குத்தான்.

அந்த நேரத்தில் அங்கு யாரும் இருக்க மாட்டார்கள் என்று அவருக்குத் தெரியும். அவிழ்க்கப்பட்ட கட்டுகளின் பாண் டேஜ் துணிகளை எரிப்பதற்காக அங்குதான் கொட்டி வைத் திருந்தார்கள்.

பெட்ஷீட்டை அதற்குள் வெளியே தெரியாதபடி திணித்து விட்டுத் திரும்பினார்.

பயம் அப்போதும் அவரை விட்டு விலகியிருக்கவில்லை.

அவர் மறுபடியும் டியூட்டி ரூமுக்கு வந்து கை கழுவிய போது மெர்ஸி வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

"இந்த நடுராத்திரியில் எங்கே போய்விட்டு வருகிறீர்கள் டாக்டர்?" மெர்ஸி சாதாரணமாகக் கேட்டாள்.

"இயற்கைக் காற்றைச் சுவாசிக்கலாம் என்றுதான்." பதில் கூறினார்.

டாக்டர் விக்கிரமனின் மனத்தில் மறுபடியும் சந்தேகம் தோன்றியது.

அப்போதுதான் டேபிள் மீது கிடந்த புத்தகம் டாக்டர் விக்கிரமனின் கண்ணில் பட்டது.

'கோஸ்ட் ஸ்டோரிஸ்.'



'ஆவிக் கதைகள்'. அவர் தன்னையும் மீறி மெர்ஸியைப் பார்த்தார். பின்பு அந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

இரவு நேரத்தைக் கடத்த அந்தப் புத்தகம் உதவும் என்று அவர் கருதினார். எனவே, அத்துடன் ஒய்வு அறைக்குள் நுழைந்தார்.

ரோனி, அடிக்கடி சங்கரநாராயணன் நம்பூதிரியைச் சந்தித்து வந்தான். அவர் சுயநினைவு பெற நீண்ட நாட்கள் தேவைப்பட்டது.

அன்று மாலை நேரத்தில் ரோனி வந்தபோது ரோனியிடம் உட்காருமாறு கூறினார் நம்பூதிரி.

ரோனி அங்கிருந்த ஸ்டூலில் அமர்ந்தான்.

"தம்பி... அது கொஞ்சம் சிக்கலான பேர்வழிதான். நான் நினைத்த மாதிரி இல்லை. பலம் ஜாஸ்தியானது. இதற்குள் அது நிறைய விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும் செய்திருக் கிறது!" நம்பூதிரி கூறினார்.

விஷயம் இன்னதென்று ரோனிக்கு விளங்கவில்லை.

"திருமேனி நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை."

"நீங்கள் என்னிடம் தெரிவித்த நபர் இதற்குள் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டுவிட்டார். படித்த நபராக இருப்பதால், அந்தக் கெட்டிக்காரத்தனமும் சேர்ந்து கொண் டது."

"சரி, உங்கள் கார் எப்படி விபத்துக்குள்ளானது?" ரோனி கேட்டான்.

"அது மிகவும் ஆச்சரியமான ஒரு விஷயம். அனந்தன் கார் ஓட்டிக் கொண்டு வரும்போது, காரின் முன்புறக் கண் ணாடியில் சிலந்தி ஒன்று பதிந்தது. அதுவும் அசாதாரணமான அளவுக்குப் பெரியது. அந்த விஷயமே வேறு. அதன்

ஜாதியே வேறு. அதற்குள் பாதை சுத்தமாகத் தெரியவில்லை. அதன் பிறகு நடந்தது எதுவும் எனக்கு நினைவில்லை..."

"சிலந்தியா?" ரோனி கேட்டான்.

"ஆமாம்... சிலந்திதான்!" திருமேனி கூறினார்.

"ஓகோ... அப்படியானால் அதுதான் விஷயமா? அந்தச் சிலந்தியை நானும் என் வீட்டில் பார்த்தேன். ஆள் யாரென்று கண்டுபிடிக்க ஏதாவது வழி இருக்கிறதா?" ரோனி கேட்டான்.

"எல்லாம் அங்குதான் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே!" திருமேனி மிகவும் சோர்வாக இருந்தார்.

"எப்படியிருந்தாலும் முதலில் உங்கள் உடம்பு சீராகட்டும். அதன் பிறகு மற்றவற்றைப் பார்த்துக் கொள்ளலாம்" ரோனி அங்கிருந்து எழுந்தான்.

மெர்ஸிக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து அவளது வீட்டார் திட்டமிடுவது அவள் நைட் டியூட்டிக்குப் போகும் இரவு வேளையில்தான்.

எப்போதும் அதைத் தொடங்கி வைப்பவள் நான்ஸி ஜார்ஜ்தான்.

"சந்தேகமே வேண்டாம். இது அவளது ஆவிதான். அது நம் மகள் மெர்ஸியின் உடம்புக்குள் புகுந்து கொண்டிருக் கிறது. நீங்கள் இதைக் கொஞ்சம் சீரியஸாகக் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால்... இதைக் குழந்தை விளை யாட்டு என்று வேடிக்கையாக நினைக்காதீர்கள்!"

"இப்போது என்ன செய்ய வேண்டும் என்று சொல் கிறீர்கள்? அதற்காக அவளைச் சாகடிக்க முடியுமா? அதற்கு பதிலாக அவள் உடம்புக்குள் இருக்கிற ஆவியை விரட்டு வது அல்லவா நல்லது? ச்சே... ஒரு டாக்டரான நான் போயும் போயும் இதையெல்லாம் நம்ப வேண்டியிருக்கிறது



பாருங்கள்!" ஜார்ஜ் செபாஸ்டியன் தன் தலையில் கைவைத்து அமர்ந்தார்.

"எப்படி இருந்தாலும் நம் திருமேனி உடல் தேறி வரட்டும். அவர் கவனித்துக் கொள்வதாகக் கூறியிருக்கிறார்." ரோனி உறுதியளித்தான்.

மெர்ஸி அப்போது வார்டில் இருந்தாள்.

வார்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அப்போதுதான் டியூட்டி ரூமில் வந்து அமர்ந்தாள். அன்று கைனகாலஜி அசிஸ் டெண்ட் புரபசர் பாலகிருஷ்ணனும் அவளுடன் நைட் டியூட் டியில் இருந்தார்.

டாக்டர் பாலகிருஷ்ணன் மெர்ஸியின் செயல்பாடுகளுக் குப் பெரிய அளவில் மரியாதை எதுவும் கொடுக்கவில்லை யாயினும், அவள் மீது அவருக்கு எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

அனுபவ முதிர்ச்சியால் எதையும் சட்டென்று பற்றிக்கொள் ளும் இயல்பால் அவள் புகழ் பெற்றாள் என்று மட்டுமே அவர் கருதினார்.

"மெர்ஸி, நீ உன்னுடைய தொழிலில் கெட்டிக்காரி என்று பெயர் வாங்கியதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி." டாக்டர் பாலகிருஷ்ணன், தனது மூக்குக் கண்ணாடியை எடுத்துத் துடைத்தபடி பேசினார்.

மெடிக்கல் காலேஜின் மிகவும் புகழ்பெற்ற டாக்டர்களில் ஒருவர் பாலகிருஷ்ணன். வைத்தியம் செய்வது என்பது மேன் மையான செயல் என்றும், அது கடவுளால் ஒப்படைக்கப் பட்ட பணி என்றும் அவர் உறுதியாக நம்பினார்.

அது மட்டுமல்ல, மகப்பேறு இயல் துறையில் நீண்ட அனுபவமும், ஞானமும் உள்ளவர். எல்லாவற்றுக்கும் மேலாக நெருங்கிய குடும்ப நண்பரும் கூட. எவருக்கும் எப்

போது வேண்டுமானாலும் எந்த விதமான உதவியும் செய்யத் தயாராக இருப்பவர்.

அவர் மனைவி சுஷ்மாவும் ஒரு டாக்டர்தான். அவரும் கணவரைப் போலவே நல்ல இயல்புகள் கொண்டவர்.

"இதை மனந்திறந்து கூறியவர் நீங்கள் ஒருவர் மட்டும் தான் டாக்டர்" மெர்ஸி சிரித்தபடி கூறினாள்.

"மெர்ஸி, அனுபவம்தான் சரியான குரு. வெறும் படிப்பு மட்டுமே எவருக்குமே இந்த அளவுக்கு உதவாது. நான் வெளிப்படையாகப் பேசுவதால் வருத்தம் கொள்ளக் கூடாது. நான் ஒரு விஷயம் கேட்கலாமா?" டாக்டர் பாலகிருஷ்ணன், மீதியைச் சொல்லாமல் தயங்கினார்.

"எதுவாக இருந்தாலும் நீங்கள் தயங்காமல் என்னிடம் கேட்கலாம் டாக்டர்!" மெர்ஸி கூறினாள்.

"இல்லை வேண்டாம்... அது நல்லதல்ல... எக்ஸ்கியூஸ் மீ."

"சரி... நானே சொல்கிறேன். நீங்கள் என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்று. மார்க் திருத்தி நான் பாஸானவள் என்பதும், நான் எப்படி இந்த நிலைக்கு வந்தேன் என்பதும் பலருடைய சந்தேகம். அதைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்?" மெர்ஸி, டாக்டரின் முகத்தைப் பார்த்தபடி கேட்டாள்.

டாக்டர் பாலகிருஷ்ணன் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை.

"அதற்கான பதிலையும் நானே சொல்லியிருக்கிறேன். அதெல்லாம் பொய். நான் உண்மையிலேயே நல்ல மார்க் வாங்கி பாஸானவள். இரண்டாவது உண்மை, என்னிடம் எந்த விதமான அற்புதமும் கிடையாது. டாக்டர், தற்சமயம் நீங்கள் இதை மட்டும் புரிந்து கொண்டால் போதும்." அவள் சட்டென்று எழுந்து வாஷ் பேசினில் முகம் கழுவினாள்.

அப்போது நர்ஸ் பத்மா பரபரப்புடன் ஓடிவந்தாள்.



"இருபத்தோராம் நம்பர் பெட்டில் இருக்கும் பேஷண்ட்..." அவள் தெரிவித்தாள்.

"சீக்கிரமாக அவர்களை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு செல்லுங்கள்." அவள் வயிற்றில் இருப்பது குழந்தையல்ல!" மெர்ஸி, சட்டென்று கூறினாள்.

அதைக் கேட்ட டாக்டர் பாலகிருஷ்ணன் சந்தேகத்துடன் மெர்ஸியைப் பார்த்தார்!

## 18

டாக்டர் மெர்ஸி அவ்வளவு உறுதியாகக் கூறியதால், டாக்டர் பாலகிருஷ்ணனும் அந்த நோயாளியை தியேட்டருக்குக் கொண்டு போகுமாறு கூறினார்.

'மெர்ஸி சொன்னது உண்மைதானா?' என்பதை அறியும் ஆவல் பாலகிருஷ்ணனுக்குள் உயர்ந்தது.

நோயாளி அழைத்து வரப்பட்டார்.

மெர்ஸியின் ஆலோசனைப்படி உடனே ஆபரேஷனுக்கு தயாரானார் பாலகிருஷ்ணன்.

ஆபரேஷனும் முடிந்தது.

மெர்ஸி கூறியது நூற்றுக்கு நூறு சரியாக இருந்தது. அந்தப் பெண்மணியின் கருப்பையில் சுமார் இரண்டரை கிலோ எடையுள்ள மாமிசப் பிண்டம் ஒன்று இருந்தது. மிக அதிகமாக வளர்ந்த அந்த மாமிசப் பிண்டம் கர்ப்பப் பையுடன் தொடர்பு கொண்டிருந்த ரத்தக் குழாயின் தொடர்பு விடுபட்டதால், சிதிலமடையத் தொடங்கியிருந்தது.

மேற்கொண்டு ஒரு மணி நேரம் தாமதமாகியிருந்தால் அந்த நோயாளி மரணம் அடைந்திருப்பாள் என்பதிலும்

டாக்டர் பாலகிருஷ்ணனுக்கு எந்த விதமான சந்தேகமும் கிடையாது. தக்க சமயத்தில் யோசனை கூறி அவளைக் காப்பாற்றியதற்காக பாலகிருஷ்ணன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

தவிர்க்க முடியாமல் அந்த நோயாளி இறக்க நேர்ந்திருந்தால், தானும் அதற்கு பதில் சொல்ல நேர்ந்திருக்கும்.

எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு மறுபடி ரூமுக்கு வந்த பிறகு டாக்டர் பாலகிருஷ்ணன், மெர்ஸியிடம் கேட்டார்:

"இதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

மெர்ஸி, அவர் முகத்தைப் பார்த்தாள். தடித்த கண்ணாடி ஃபிரேமினூடாக அவர் கண்கள் தன்னை உற்று நோக்குவதை அவள் கவனித்தாள்.

'இதற்கு எப்படி பதில் சொல்வது?

தான் அவள் வயிற்றைப் பார்த்தபோது உள்ளே மாமிசப் பிண்டம் இருப்பது கண்களுக்குத் தெரிந்தது என்றா சொல்வது? அப்படிச் சொன்னால் மற்றவர்களின் சந்தேகம் ஊர்ஜிதமாகாதா? ஏற்கெனவே, தான் டாக்டர்கள் மத்தியில் பரபரப்பான ஒரு செய்தியாகி விட்டிருக்கிறோம்.

சில நாட்களுக்கு முன்பு டாக்டர் ஜேக்கப் சொன்ன வார்த்தை அவளுக்கு ஞாபகம் வந்தது. தன்னை அவர் விட்ச் (துர்மந்திரவாதினி) என்று குறிப்பிட்டார்.

எனவே, மிகுந்த கவனத்துடன் இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டும்' என்று அவள் தீர்மானித்தாள்.

"வெறும் ஒரு யூகம்தான் டாக்டர்!" அவள் பதிலளித்தாள்.

"அது எனக்கு வியப்பை ஏற்படுத்தியது. அதே சமயத்தில் பாராட்டவும் தோன்றுகிறது." என்ற பாலகிருஷ்ணன் அவளை ஒரு தடவை நேருக்கு நேராகப் பார்த்துவிட்டு அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.



மெர்ஸி ஒரு கணம் துணுக்குற்றாள். தான் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்ட உணர்ச்சி அவளுக்குத் தோன்றியது. தான் இப்படி ஒவ்வொன்றாகச் சொல்வது தனக்குள்ள தனிப்பட்ட இயல்பினால்தான் என்பது அவளுக்கே தெரியும். ஆனால், அப்படிப்பட்ட சிறப்புத் தன்மையே தனக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதையும் அவள் உணர்ந்தாள். அதனால் பயம் தோன்றியது.

தனக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு அதெல்லாம் ஓர் ஆதாரமாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. தான் இன்னும் எவ்வளவோ வேலைகளைச் செய்து தீர்க்க வேண்டியுள்ளது. தன் வாழ்க்கையைச் சீரழித்தவர்கள் இன்னும் சிலர் உயிருடன் இருக்கிறார்கள். எனவே, மேற்கொண்டு மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

மறு நாள் அவளுக்கு விடுமுறை.

வீட்டில் தனிமையில் உட்கார்ந்திருப்பது அவளுக்கு அலுப்பாகத் தோன்றியது. வீட்டில் இருப்பவர்கள் எல்லோருமே அவளைத் தவிர்க்கிறார்கள் என்று அவளுக்கு விளங்கியது. எல்லோரும் தன்னை ஏதோ ஒருவிதச் சந்தேகத்துடன் பார்க்கிறார்கள். குறிப்பாக அம்மா நான்ஸி ஜார்ஜ் உட்பட. அவள், மெர்ஸியின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கூர்ந்து கவனிக்கிறாள்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு மருத்துவம் தொடர்பான புத்தகம் ஒன்றை எடுத்துக்கொண்டு தனது படுக்கையறையில் ஜன்னலை ஒட்டி அமர்ந்திருந்தாள்.

அப்போது வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அவள் எழுந்தாள். வீட்டின் முன்புறமுள்ள ஜன்னலைத் திறந்து பார்த்தாள். காரிலிருந்து இறங்கிய மனிதரைக் கண்டதும் அவள் சற்றுத் திடுக்கிட்டாள். அவர் டாக்டர் மேரி ஜோசப். அவளின் எதிராளியான மேரி ஜோசப்.

அவள் திரும்பவும் நாற்காலியில் வந்து அமர்ந்தாள். புத்தகத்தின் தாள்களைப் புரட்டத் தொடங்கினாள்.

டாக்டர் மேரி காலிங்பெல்லை அமர்த்தியும் கூட மெர்ஸி, கதவைத் திறப்பதற்காக எழுந்து செல்லவில்லை. சற்று நேரத்துக்குப் பிறகு யாரோ கதவைத் திறந்து, அவரை வரவேற்பது கேட்டது.

"மெர்ஸி இல்லையா?" மேரியின் குரல்.

"எப்போதும் அறைக்குள்தான் உட்கார்ந்திருக்கிறாள்." அம்மாவின் குரல்.

"அப்படியானால் கூப்பிட வேண்டாம்." மேரி ஜோசப் கூறினார்.

அவர்கள் சாப்பாட்டு அறைக்குச் சென்றனர்.

நான்ஸி ஜார்ஜ், ஃபிரிட்ஜைத் திறந்து சில்லென்ற பழச் சாறை ஒரு கிளாஸில் ஊற்றி எடுத்துக் கொடுத்தாள்.

பிறகு, மேரிக்கு அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

"ஏதாவது தகவல் உண்டா?" நான்ஸி கேட்டாள்.

"எக்கச்சக்கமாக இருக்கிறது. மெர்ஸி ஆஸ்பத்திரிக்குள் இருந்தால், ஆபரேஷன், எக்ஸ்ரே போன்றவை எல்லாம் இனி அங்கு தேவையில்லை என்று தோன்றுகிறது. அந்த அளவுக் குக் காரியங்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறது." டாக்டர் மேரி கூறினார்.

"நானும் சிலவற்றைக் கேள்விப்பட்டேன். இதற்குப் பின்னணியில் என்னென்னவோ ரகசியங்கள் உள்ளன. அது என்னவென்று எவ்வளவுதான் முயன்றாலும் கண்டுபிடிக்க முடியவில்லை!"

"என்னுடைய சந்தேகம் என்னவென்றால், மெர்ஸிக்குப் பிரத்தியேகமான சக்தி ஏதோ இருப்பதாகத்தான்."



"உண்மையை என் வாயால் சொல்லக் கூடாதுதான். விஞ் ஞானத்துக்கு எதிரான சில சக்திகள் அவளுக்கு இருப்பதாகத் தோன்றுகிறது. அது என்னவென்று நம்மால் சரியாக விளக்க முடியாது. ஆவி-பேய்-பிசாசு என்றெல்லாம் நாம் சொல் வோம்."

"அதேதான்... எனக்கும் அதே சந்தேகம்தான் தோன்றி யிருக்கிறது. சில சமயம் அவள் பார்வையைக் கவனித்தாலே பயத்தால் என் உடம்பு நடுங்கும்."

"நான் சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் ஒரு மந்திரவாதியைச் சந்தித்தால் என்ன?"

"வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். அதையும் முயற்சி செய்து பார்த்தோம். அதற்காகக் கிளம்பிய மந்திரவாதி கார் விபத்தில் சிக்கிப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். இன் றைக்கு ரோனி வந்தால் மறுபடியும் போய்ப் பார்த்துவிட்டு வரச் சொல்ல வேண்டும்."

நான்ஸி பேசிக் கொண்டிருக்கும் போதே ரோனி அங்கு வந்து சேர்ந்தான்.

நான்ஸியை நெருங்கிய ரோனி கேட்டான்: "மெர்ஸி எங்கே இருக்கிறாள்?"

"அறைக்குள் உட்கார்ந்து வாசிக்கிறாள்."

"வாசிக்கட்டும். இன்று சங்கர நாராயணன் நம்பூதிரி வரு கிறார். விஷயம் அவளுக்குத் தெரிய வேண்டாம்." மெது வான குரலில் கூறினான் ரோனி.

"இன்றைக்கே அவளைப் பிடித்து ஏதாவது எட்டி மரம் ஒன்றில் அறைந்துவிட வேண்டும். இல்லாவிட்டால், பிரச்சி னைகள் அதிகமாகிவிடும்." மந்திரவாதத்தைக் குறித்து அவ ருக்கு இருந்த அறிவை வெளிப்படுத்திவிட்டு டாக்டர் மேரி ஜோசப் எழுந்தார்.

மேரியின் கார் கேட்டைக் கடந்து வெளியேறியதை மெர்ஸி கவனித்தாள்.

அன்று மாலை நேரத்தில் ரோனி, மந்திரவாதியான சங்கர நாராயணனை வீட்டுக்கு அழைத்து வந்தான்.

அவர்கள் கேட்டைத் தாண்டி வருவதைப் பார்த்ததுமே மெர்ஸிக்கு விஷயம் விளங்கிவிட்டது.

ஏற்கெனவே சொல்லி வைத்தபடி யாரும் பயன்படுத்தாமல் இருந்த டோமியின் அறைக்குள் பிரஸ்னம் பார்ப்பது என்று முடிவு செய்தனர்.

அதற்காக அவர்கள் எல்லோரும் டோமியின் அறைக்குள் நுழைந்தனர். டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனுக்கு இதில் எல்லாம் அவ்வளவாக ஆர்வமுமில்லை, நம்பிக்கையுமில்லை. இருப்பினும் மற்றவர்களின் ஆர்வத்துக்காக அவரும் இதில் கலந்து கொண்டார்.

திருமேனி ராசிப் பலகையை வெளியே எடுத்து வைத்த பிறகு அந்த வீட்டின் கிழக்குத் திசை எது என்று கேட்டு, அந்த பக்கமாகத் திரும்பி உட்கார்ந்தார்.

சோழிகளை தேவஸ்தானம் மற்றும் குரு ஸ்தானங்களில் வைத்த பிறகு சோழிகளைக் குலுக்கி வாரியெடுத்து மும்மூன்று வீதம் மாற்றி வைத்து விடை கண்டுபிடித்தார்.

அதன் பிறகு சுலோகம் ஒன்றை மனத்துள் உருவிட்டவர் வலப்புறமாகப் பார்த்தார். சட்டென்று சந்தேகத்துடன் திரும்பினார்.

"உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், கேட்கலாம்." திருமேனி, ஜார்ஜ் செபாஸ்டியனின் முகத்தைப் பார்த்தார்.

"இருக்கிறது. கிறிஸ்தவப் பிசாசை இந்து மத மாந்திரீகத்தால் அடக்கிக் கட்ட முடியுமா?" ஜார்ஜ் செபாஸ்டியன் கேட்டார்.



அதைக் கேட்ட சங்கர நாராயணன் நம்பூதிரி புன்னகை புரிந்தார்.

"கடவுளை பல பெயர்களில் பல்வேறு மதத்தினரான நாம் அழைக்கிறோம். அதே போல்தான் பிசாசுகளும். எல்லாம் ஒன்றுதான். அதில் எந்த விதமான மாற்றமும் கிடையாது. எல்லா மதத்தவரும் நல்ல நேரம் பார்ப்பது உண்டே." திருமேனி கேட்டார்.

இந்த லாஜிக் சரிதான் என்று ஜார்ஜ் செபாஸ்டியனுக்கும் தோன்றியது.

"சரி... இனி விஷயத்துக்கு வருகிறேன். நான் வெளிப்படையாகப் பேசுவதில் உங்களுக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லையே." திருமேனி சுற்றுமுற்றும் பார்த்தபடி பேசினார்.

அப்போது அங்கு திடுமென்று ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சுவரில் ஒட்டிக் கொண்டிருந்த சற்றுப் பெரிய பல்லி ஒன்று அந்த அறையின் மேற்புறம் தொங்கிக் கொண்டிருந்த எரியும் பல்பின் மீது விழுந்தது.

'டப்' என்ற சத்தத்துடன் வெடித்த அந்த பல்பு நேராக ராசிப் பலகை மீது விழுந்து சிதறித் தெறித்தது.

அறைக்குள் இருட்டு பரவியது.

அதிர்ஷ்டவசமாக பல்பின் கண்ணாடித் துண்டுகள் எவர் மீதும் பட்டுக் காயம் ஏற்படுத்தவில்லை.

எல்லோரும் பயந்தனர்.

ரோனி சட்டென்று பக்கத்து அறைக்கு ஓடினான். அங்கு மெர்ஸி தனது படுக்கையில் படுத்திருந்தாள். அவள் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தோன்றியது.

அந்த அறையில் இருந்த பல்பை எடுத்துக் கொண்டு டோமியின் அறைக்குத் திரும்பி வந்தான் ரோனி.

அதை அங்குள்ள ஹோல்டரில் போட்டு சுவிட்சைத் தட்டியபோது அறைக்குள் பழையபடி வெளிச்சம் பரவியது.

அப்போதுதான் ராசிப் பலகையில் தென்பட்ட காட்சியை அவர்கள் கவனித்தனர்.

ராசிப் பலகையில் வைக்கப்பட்டிருந்த சோழிகள் ஒரு மனித வடிவத்தை உருவாக்கியிருந்தன.

அதைக் கண்டதும் சங்கர நாராயணன் நம்பூதிரி பயப்படத் தொடங்கினார். இப்படியோர் அனுபவம் இதுவரை அவருக்கு ஏற்பட்டதில்லை.

எனினும் அவர் நம்பிக்கையை இழக்கவில்லை.

"ஆகா... பரவாயில்லையே!" என்று திருமேனி சிலாகிக்கவும் செய்தார்.

"என்ன திருமேனி?" ரோனி கேட்டான்.

"ஓ... ஒன்றுமில்லை... இன்று இதை இந்த இடத்துடன் நிறுத்திக் கொள்வதுதான் நல்லது!" திருமேனி சோழிகளை வாரியெடுக்க முற்பட்டாலும் சற்று நேரம் அந்த மனித வடிவத்தையே உற்றுப் பார்த்தார்.

எதனால் இப்படி? அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

எதிராளி மிகவும் மோசமான பேர்வழி என்பது விளங்கியது.

"மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்?" சூஸன் கேட்டான்.

"நான் தற்காலிகமான ஓர் ஏற்பாடு செய்து தருகிறேன். ஒரு சேவலைக் கொண்டு வர முடியுமா?" திருமேனி கேட்டார்.

"அதற்கென்ன... கொண்டு வருகிறேனே!" சூஸன் ஜார்ஜ் எழுந்து வெளியே போனான்.

நேராகக் கோழிக் கூண்டை நெருங்கியவன் சற்று நேரத்தில் ஒரு சேவலுடன் திரும்பி வந்தான்.



நம்பூதிரி அதைச் சாய்த்துப் படுக்க வைத்தார். அதன் தலையிலுள்ள பூப்பகுதியை வருடினார். கால்கள் கட்டப்படாத அந்தக் கோழி அமைதியாகக் கிடந்தது. சில மந்திரங்களை உருவிட்ட திருமேனி, தன் இடது கைச் சுண்டு விரலைக் கத்தியால் கீறி, திரண்டு வந்த ரத்தத்தைக் கோழியின் வாயில் சொட்டச் செய்தார்.

அந்தக் கோழி அதைச் சுவைத்துப் பருகியது.

சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு திருமேனி கோழியைத் தட்டிக் கொடுத்தார். அது எழுந்து நின்றது.

"இந்தக் கோழியை நாளை மதியமோ, இரவோ நீங்கள் சமைத்துச் சாப்பிட வேண்டும். மறக்காமல் எல்லோரும் சாப்பிட வேண்டும். யாருக்குப் பிரச்சினை என்பது அப்போது தெளிவாகத் தெரிந்துவிடும். இந்த ரத்தம் வெளியே வரும்."

அதைக் கேள்விப்பட்ட எல்லோரும் பரஸ்பரம் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டனர்.

"அப்படியானால், நான் கிளம்பட்டுமா?" திருமேனி எழுந்தார்.

அவர் சொன்னதன் பொருள் ஜார்ஜ் செபாஸ்டியானுக்கு விளங்கியது. இந்தக் கோழியின் இறைச்சியைச் சாப்பிடும் பாதிக்கப்பட்ட நபர் ரத்தம் கக்குவார். அல்லது வாந்தியெடுப்பார். அதுதான் திருமேனி சொன்னதன் பொருள்.

ரோனி, திருமேனியை வழி அனுப்புவதற்காக அவருடன் சென்றான்.

மறு நாள் மெர்ஸி வழக்கம் போல் ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்.

அன்று அவளுக்கு டியூட்டி பிரசவ வார்டில்தான் என்றாலும் மற்ற வார்டுகளையும் சும்மா சுற்றிவிட்டு வந்தாள். சிக்கலான நோயாளிகள் எவரும் தென்படவில்லை.

எனவே, அவள் புற நோயாளிகள் பகுதிக்கு வந்தாள்.

லிஃப்ட்டில் ஏறிக் கீழே வந்து மேற்குப் புறமாக நடந்தாள். மருந்து கொடுக்கும் பகுதியில் நான்கு பெண்கள் மருந்துச் சீட்டும் பாட்டில்களுமாக நின்றிருந்தனர்.

மெர்ஸி அவர்களை அழைத்தாள்.

“உங்களுக்கு என்ன வியாதி?” மெர்ஸி கேட்டாள்.

அவர்கள் தங்களிடமுள்ள மருந்துச் சீட்டை மெர்ஸியிடம் காட்டினர்.

“உங்களை அடிக்கடி இங்கே பார்க்கிறேனே, இது உங்கள் வாடிக்கையான விளையாட்டா? காலையில் ஆஸ்பத்திரிக்கு என்று வீட்டிலிருந்து கிளம்புவது... பிறகு அங்கும் இங்குமாகச் சுற்றி அலைந்து கொண்டு வீட்டுக்குப் போவது. இதெல்லாம் எனக்குத் தெரியும். உங்களுக்கு எந்த விதமான நோயும் கிடையாதே!”

மெர்ஸியின் வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் தலை குனிந்தனர். பிறகு சட்டென்று அங்கிருந்து வெளியேறினார்கள்.

அவள் மறுபடியும் பிரசவ வார்டின் டியூட்டி ரூமுக்கு வந்தபோது மாணி ஆபிரகாம் அமர்ந்திருந்தார்.

“எங்கே நான் கொடுத்த புத்தகம்?” அவர் கேட்டார்.

“கோஸ்ட் ஸ்டோரிஸ்தானே?”

“ஆமாம்...”

“வாசித்துக் கொண்டிருக்கிறேன்.”

“நான் நேற்று ஒரு புத்தகம் வாசித்தேன்.” என்ற டாக்டர் மாணி தனது பாக்கெட்டிலிருந்து அதை வெளியே எடுத்தார்.

“என்ன புத்தகம் அது?”

டாக்டர் மாணி சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார்.



“இதில் இடம்பெற்றிருப்பது புதியதொரு தத்துவம். இது வரையில் நான் வாசிக்காத புது விஷயம்.” அவர் கூறினார்.

“அப்படியென்றால்...”

“ஏதாவது ஆவியொன்று ஓர் உடம்பில் புகுந்து கொண்டால் அது, அந்த உடம்பிலுள்ள ஆத்மாவைப் படிப்படியாக வெளியேற்றிவிட்டு அதிலேயே நிரந்தரமாகத் தங்கி விடுமாம். அதன் பிறகு அந்த ஆவியை அந்த உடம்பிலிருந்து வெளியேற்ற முடியாதாம். கவனத்துக்குரிய விஷயம் இது!”

“என்ன... நிஜமாகவா?” மெர்ஸி வியப்புடன் கேட்டாள்.

“ஆமாம். அதற்குக் காரணம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குப் பிறகு அந்த உடலின் உண்மையான ஆத்மாவுக்கு அந்த உடம்புக்குள் இருக்க முடியாத நிலை ஏற்படும். ஆனால், இதற்கு உடம்பில் புகுந்து கொண்ட புதிய ஆத்மாவின் சக்தியை ஒட்டி கால அளவு வேறுபடுமாம்.”

“நீங்கள் சக்தி என்று குறிப்பிடுவது எதை?” மெர்ஸி கேட்டாள்.

“நான் இன்னும் முழுமையாகப் படித்து முடிக்கவில்லை.” டாக்டர் கூறினார்.

“இதை எனக்குத் தருகிறீர்களா?”

“ஓ... அதற்கென்ன! உண்மையைச் சொன்னால் உங்களுக்காகத்தான் நான் இதை எடுத்து வந்தேன்.”

அப்போது யாரோ ஒருவர் மெர்ஸியைக் காண வந்திருப்பதாக நர்ஸ் தங்கம்மா தகவல் தெரிவித்தாள்.

# 19

'தன்னைக் காண வந்திருப்பது யாராக இருக்கும்?' என்று சில விநாடிகள் யோசனையில் ஆழ்ந்த மெர்ஸி, கடைசியில் அவரை அழைத்து வரச் சொன்னாள்.

சற்று நேரத்துக்குள் ஒருவர் அந்த அறைக்கு வந்தார்.

வில்சன்!

மெர்ஸி, தன்னையும் மீறி நாற்காலியிலிருந்து எழுந்து விட்டாள். வில்சனைப் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டன. 'ஒரு டாக்டராகி, ஆட்களிடம் புகழ்பெறத் தொடங்கியதுடன் தான் மாறிவிட்டோமா?' என்று கேட்டுக் கொண்ட அவள் வியப்பு அடைந்தாள்.

வில்சனை ஒரு தடவை ஊன்றிப் பார்த்துவிட்டு மாணி ஆபிரகாம் அங்கிருந்து எழுந்து போனார்.

"உட்காருங்கள்!" அவள் வில்சனிடம் கூறினாள்.

வில்சன் உட்கார்ந்தான். அவன் பார்வை மெர்ஸியின் முகத்தின் மீதே பதிந்து இருந்தது. அவன் எதையும் பேச வில்லை.

"நான் உங்களைச் சந்திக்க வராததில் வருத்தம் ஏற்பட்டிருக் கும் இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

"வருத்தமா... எதற்கு?" வில்சன் கேட்டான்.

தான் பேசியது சற்று எல்லை கடந்து போய்விட்டதோ என்று மெர்ஸிக்குத் தோன்றியது.

"இல்லை... நான் ஒரு பரபரப்பில் அப்படிக் கேட்டுவிட் டேன். எத்தனையோ தடவை பார்க்க வேண்டுமென்று



நினைப்பேன். பிறகு வேலைப் பரபரப்பில் அதை அப்படியே மறந்து விடுவேன்." மெர்ஸி சமாளித்தாள்.

அப்போதும் வில்சன் அவளை ஒருவிதச் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவளது பேச்சின் பொருள் வில்சனுக்கு விளங்கவில்லை.

"நான் ஒரு கேள்வி கேட்கலாமா?" -வில்சன் அவள் கண்களைப் பார்த்தபடி கேட்டான்.

"ம்... கேளுங்கள்!" மெர்ஸியின் இதயம் மிக விரைவாகத் துடிக்கத் தொடங்கியது.

"டாக்டர் மெர்ஸி ஜார்ஜ், எதற்காக என்னைச் சந்திக்க வர வேண்டும்? நாம் இதுவரை வாழ்க்கையில் ஒரு தடவை கூடச் சந்தித்துக் கொண்டதில்லையே? ஒரு நாள் திடீரென்று தேவாலயத்தின் குவயர் பயிற்சி அறைக்கு வந்தோம்... பாடி னோம். அதையெல்லாம் புரிந்து கொள்வது எனக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது." வில்சன் மென்மையான குரலில் பேசிக் கொண்டு இருந்தான்.

தான் பேசுவதை வேறு எவராவது கவனிக்கிறார்களா என்று அவன் அடிக்கடி சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான்.

மெர்ஸி யோசனையில் ஆழ்ந்தாள். மிகவும் யோசித்து பதிலளிக்க வேண்டிய சூழ்நிலை இது. ஒரு போதும் தன் பிடியை நழுவ விடக் கூடாது. சுயமாகவே தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளாவிட்டால், அது ஆபத்தை வரவழைத்து விடும். எனவே, எச்சரிக்கை அடைந்தாள்.

"அப்படிக் குறிப்பிட்டு எதையும் சொல்ல முடியாது. ஒரு தடவை நான் தேவாலயத்துக்கு வந்தபோது வில்சனின் பாட் டைக் கேட்டேன். பாட்டு எனக்கு மிகவும் பிடிக்கும். அத னால் மறுமுறை அந்தப் பக்கமாக வந்தபோது இரண்டாவது முறை சந்தித்தேன்." அவள் ஒருவாறாகச் சொல்லி முடித்தாள்.

அது திருப்தி அளிக்கக் கூடிய. ஒரு பதில்தான் என்று வில்சனுக்குத் தோன்றியது. இருப்பினும் அவன் எதையோ சொல்லத் துடித்தான்.

"இந்த நேரத்தில் நீங்கள் வந்ததற்கு ஏதாவது பிரத்தியேக மான காரணம் ஏதாவது உண்டா?" மெர்ஸி கேட்டாள்.

"இருக்கிறது. நான் வந்ததே அதற்காகத்தான். எனக்கும் உங்கள் சகோதரர் ஷிபு ஜார்ஜுக்கும் எந்த விதமான தொடர் பும் கிடையாது. இருப்பினும் அவர் நேற்று எனது வீட்டுக்கு வந்திருந்தார்." வில்சன் இருக்கையில் பின்புறமாகச் சாய்ந்து உட்கார்ந்தான்.

"அவர் எதற்காக உங்களைப் பார்க்க வந்தார்?" மெர்ஸி சட்டென்று கேட்டாள்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. அவருடன் மூன்று பேர் இருந்தனர். அவர்கள் டாக்டர்கள் கிடையாது. ரௌடிகள்."

"எதற்காக வந்தார்கள்?"

"டாக்டர் மெர்ஸி என்னைச் சந்திக்க வருவது எதற்காக என்று அவர்களுக்குத் தெரிந்தே ஆக வேண்டுமாம். அதன் பிறகு எனக்குக் கொஞ்சம்கூடத் தொடர்பில்லாத என்னென் னவோ கேள்விகளைக் கேட்டார். எனக்கு அவற்றின் அர்த்தம் புரியவில்லை."

மெர்ஸிக்கு நடந்ததை அறிந்து கொள்ளும் ஆர்வம் தோன்றியது.

"ம்... பிறகு?"

"நான் எப்போதாவது மெர்ஸியிடம் நெருக்கமாகப் பழகியிருக்கிறேனா? தற்கொலை செய்து கொண்ட மெர்ஸி ஜானின் ஆவி உங்களைச் சந்திக்க வருவதுண்டா? இப்படி யெல்லாம் விசித்திரமான கேள்விகள். அவர்கள் எல்லோ ருமே மூக்குமுட்டக் குடித்திருந்தனர். அடுத்ததாக அவர்கள்



கேட்ட கேள்விதான் என்னை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கி யது."

"அது என்ன கேள்வி?"

"நீங்கள்... அதாவது டாக்டர் மெர்ஸி ஜார்ஜ், இறந்து போன மெர்ஸி ஜானின் ஆவிதானா என்று கேட்டார்கள். எவ்வளவு முட்டாள்தனமான -அபத்தமான கேள்விகள்! மட்டுமின்றி அவர்கள் என்னைத் தாக்கவும் முற்பட்டார்கள்."

"என்ன... நிஜமாகவா!" மெர்ஸி திகைப்பு அடைந்தாள். அவளின் மூக்கு நுனியில் வியர்வை முத்துகள் அரும்பின. அவளுக்கு மூச்சு வாங்கியது.

"இதோ... இதைப் பார்த்தீர்களா?" வில்சன் தனது ஷர்ட் டின் கைப்பகுதியை மேற்புறமாக ஏற்றிவிட்டுக் காட்டினான். அங்கு பாண்டேஜால் கட்டுப் போடப்பட்டிருந்தது.

"அவர்களில் ஒருவர் என்னைக் கத்தியால் குத்தினார். நல்லவேளையாகக் கத்தி ஆழமாக இறங்கவில்லை. என்னு டைய அதிர்ஷ்டம் அந்த வழியாக வந்த இருவர் எனக்கு உதவினார்கள். ஒரு வகையாக நான் தப்பித்தேன்."

"யாரிடமாவது இதையெல்லாம் சொன்னீர்களா?"

"இல்லை. வெட்கக் கேடான விஷயம் இல்லையா? மற்ற வர்கள் என்ன நினைப்பார்கள்? உங்களுக்கும் இதனால் கெட்ட பெயர் ஏற்படாதா? மேற்கொண்டும் அவர்கள் என் னைத் தாக்க வருவர்கள் என்று தோன்றுகிறது. அதெல்லாம் போகட்டும். டாக்டர், எதனால் அவர்கள் இப்படியெல்லாம் பிதற்றுகிறார்கள்?" வில்சன் கேட்டான்.

இதற்கு என்ன பதிலளிப்பது என்று தெரியாமல் மெர்ஸி திணறினாள். அவன் சொன்னதெல்லாம் உண்மைதான் என்று அவளுக்கும் தெரியும். உண்மையில் தான் பழைய மெர்ஸி ஜான்தான். தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் மனிதரை ஒரு காலத்தில் தான் மனதார விரும்பினோம். தன்னை அவர்கள்

சிதைத்ததால்தான் இவர் இன்னும் திருமணம் செய்யாமல் இருக்கிறார்.

இதெல்லாம் தனக்குத் தெரிந்த விஷயங்கள்தான். என்றாலும் இவற்றை வெளியே சொல்லவோ ஒப்புக் கொள்ளவோ முடியுமா? எனவே, அவள் கெட்டிக்காரத்தனமாகச் சூழ்நிலையைச் சமாளிக்க முயன்றாள்.

"நான் கிளம்புகிறேன். இன்னொரு விஷயம். அவர்கள் மேற்கொண்டும் என்னைத் தாக்க வருவார்கள் என்பதால், உங்கள் பெயரைத் தொடர்புபடுத்தாமல் நான் போலீஸில் புகார் ஒன்று கொடுக்கப் போகிறேன். என்னுடைய நண்பர் தான் இந்தப் பகுதி இன்ஸ்பெக்டர்" வில்சன் எழுந்தான்.

"உட்காருங்கள். நான் ஒரு விஷயம் சொல்கிறேன்." அவள் வற்புறுத்தினாள். விஷயம் விளங்காமலே வில்சன் உட்கார்ந்தான்.

"தயவு செய்து போலீஸுக்குப் போகக் கூடாது. அவர்கள் என்னை வந்து விசாரிப்பார்கள். காரணம், ஷிபு. எல்லாவற்றையும் சொல்ல வேண்டியிருக்கும். எதற்கும் நான் ஒரு தடவை அவனிடம் பேசுகிறேன்" மெர்ஸி மன்னிப்புக் கோரும் குரலில் பேசினாள்.

"ம்... சரி. இன்னொரு விஷயம் டாக்டர். நீங்கள் மேற்கொண்டு என்னைச் சந்திக்க வரக் கூடாது." சொல்லிவிட்டு வில்சன் சட்டென்று அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

அதைக் கேட்ட மெர்ஸி மிகவும் சோர்ந்து போனாள். அத்துடன் அவள் கண்கள் கடுமையடையவும் செய்தன.

மதியமானபோது அவள் வீட்டை அடைந்தாள். தனது காரை பங்களாவின் இடதுபுறமுள்ள கார் ஷெட்டில் நிறுத்தினாள். அங்கு ஏற்கெனவே புதிய மாருதி கார் ஒன்று நின்று கொண்டிருந்தது.



கிரீம் நிறமுள்ள அந்த காரை நெருங்கியபோது சட்டென்று கோழி ஒன்று கூவும் சத்தம் கேட்டது.

சத்தம் வந்த திசையில் பார்த்தபோது கோழிக் கூட்டுக்குள் வெள்ளை நிறச் சேவல் ஒன்று அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

கம்பி வலையைக் கடந்து அவள் பார்வை கூண்டுக்குள் ஊடுருவியது.

அந்தக் கோழியின் முகம் ஒரு மனிதனின் முகம் போல் அவளுக்குத் தோன்றியது. விகாரமான பைசாசிக முகம்!

அவளுக்கு விஷயம் புரிந்தது.

அவள் சாதாரணமாக வருவது போல் வீட்டுக்குள் வந்தாள்.

சாப்பாட்டு மேஜைக்கு முன்னால் ஷிபுவும், அம்மாவும் உட்கார்ந்திருந்தனர்.

"மெர்ஸி வந்துவிட்டாள். அவளுக்கும் சேர்த்து உணவு பரிமாறுங்கள்." ஷிபு கூறினான்.

அம்மா அங்கிருந்து எழுந்து போனாள்.

"நீ அந்த ஓவர்சியர் வில்சனை அடிக்கடி சந்திக்கப் போகிறாயாமே... எதற்காக?" ஷிபு கேட்டான்.

"அதற்குக் குறிப்பிட்ட காரணங்கள் எதுவுமில்லை!" அவள் எழுந்து வாஷ் பேஸினை நெருங்கிக் கை கழுவினாள்.

அம்மா சாதம் எடுத்து வந்தாள்.

"நாளைக்கு உனக்கு டியூட்டி கிடையாது இல்லையா?" ஷிபு கேட்டான்.

"ஆமாம்... நாளை எனக்கு விடுமுறைதான்." மெர்ஸி பதிலளித்தாள்.

"நாளைக்கு நான் விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். ஷாம்ப்பெயின் பார்ட்டி. எல்லோருக்கும் சாப்பாடு இங்கேதான். டோமியின் நாற்பத்தோராவது நாளும்கூட." ஷிபு கூறினான்.

"ம்..." மெர்ஸி முனகினாள்.

இரவு எட்டு மணிக்கு மெர்ஸி வீட்டுக்கு வந்தாள். மாணி ஆபிரகாம் கொடுத்த புத்தகத்தை வாசித்தவாறு கட்டிலில் படுத்திருந்தாள்.

ஏறத்தாழப் பாதிப் புத்தகமானபோது அற்புதமான காரியங்களைக் காண முடிந்தது.

'ஓர் உடம்பில் மரணமடைந்த நபரின் ஆத்மா தன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொண்டால், அந்த உடம்பில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படத் தொடங்கும்.'

வியப்பை அடக்க முடியாமல் அவள் அடுத்த வரிகளைப் பார்த்தாள்.

'அந்த உடலுக்கு ஸ்தூல உடம்பிலிருந்து மாற்றம் ஏற்படத் தொடங்கும். அது எப்படியும் வளைந்து கொடுக்கும். அதாவது கதவின் நூலிழை இடைவெளி வழியாகவோ, சாவித் துவாரத்தின் வழியாகவோகூட இப்படிப்பட்டவர்களால் கடந்து செல்ல முடியும். அது முதல் நிலை. பிறகு, எப்போதும், எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். ஒளி, உடலை ஊடுருவிச் செல்லும். அவர்களின் நிழல் தரையில் விழாது.'

மெர்ஸி சட்டென்று புத்தகத்தை மூடினாள். அதை வாசித்த போது அவளுக்கே பயம் தோன்றியது.

'என்னால் எங்கேயும் போக முடியுமாம்! வாசல்கள், சுவர்கள் போன்றவை எனக்கு எந்த விதத்திலும் தடையல்லவாம். உண்மையா அது?' அவள் கட்டிலிலிருந்து மெதுவாக எழுந்தாள்.



அந்தப் புத்தகத்தைப் படுக்கையின் அடியில் வைத்துவிட்டு, அவள் வரவேற்பு அறைக்கு வந்தாள்.

அவள் மனதில் கோழிக் கூட்டுக்குள் இருக்கும் சேவல் தெளிவடைந்து வந்தது.

மதிய நேர விருந்து பற்றி ஷிபு சொன்னதுடன் இதற்கு நிச்சயமாக ஏதோ தொடர்பு இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

அவள் அங்கிருந்து வெளியே போக வேண்டும் என்று நினைத்தாள். கதவின் தாழ்ப்பாளைச் சத்தமின்றித் திறந்தாள். வெளியே வந்த பிறகு மெதுவாகச் சாத்தினாள்.

கோழிக்கூட்டை நெருங்கினாள்.

மூன்று அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய கோழிக்கூட்டின் ஓர் அறையில் தனியாக இருந்தது அந்த வெள்ளை நிறச் சேவல். அதைத் தாழிட்டுப் பூட்டியிருக்கிறார்கள்.

அவள் அருகே வந்தவுடன் கோழி அவளையே ஊன்றிப் பார்த்தபடி எழுந்தது.

அவள் அதன் தாழைத் தொட்டாள். அது 'டிக்' என்ற சத்தத்துடன் தானாகத் திறந்து கொண்டது.

அவள் உட்புறமாகக் கையைச் செலுத்தி அதன் கழுத்தைப் பிடித்தாள். அந்தச் சேவல் ஒரு தடவை குரல் எழுப்ப முயன்றும் முடியாமல் தலையைத் தொங்கவிட்டது.

அந்தச் சேவலை வெளியே எடுத்து வீட்டின் பின்புற காம்பௌண்ட் சுவரின் மேற்புற வழியாக வீசி எறிந்தாள். அதற்கு பதில் மற்றொரு சேவலைப் பிடித்து அந்தக் கூட்டுக்குள் போட்ட பிறகு திரும்பி வந்தாள்.

மறு நாள் மதிய விருந்துக்கு எல்லோரும் வந்திருந்தனர். அன்றைய விருந்தில் கோழிக்கறி சிறப்பு இடம் பெற்றிருந்தது.

எல்லோருக்கும் பரிமாறுவது போல் மெர்ஸிக்கும் அது வழங்கப்பட்டது.

எந்த விதத் தயக்கமும் இல்லாமல் அவள் அவற்றைச் சாப்பிடவும் செய்தாள். எல்லோருமே மெர்ஸிக்குத் தெரியாமல், மெர்ஸியையே கவனித்துக் கொண்டிருந்தனர்.

சாப்பிட்டவர்கள் எல்லோரும் எழுந்து கை கழுவினர்.

மெர்ஸி பாட்டுக்குத் தனது அறைக்குச் சென்றாள். மற்றவர்கள் பரஸ்பரம் தங்களைப் பார்த்துக் கொண்டனர்.

"என்ன... எதுவுமே நடக்கவில்லையே!" ஜார்ஜ் செபாஸ்டியன், ரோனியைப் பார்த்தார்.

"இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. திருமேனிக்கு ஒரு போதும் தவறு நேராது. நாம் அறுத்த கோழி அதுவேதானா?" அவன் கேட்டான்.

"ஆமாம்..." நான்ஸி கூறினாள்.

"கோழியை யார் அறுத்தது?"

அவர்கள் விசாரித்தனர்.

"வழக்கம்போல் சமையற்காரிதான்." அம்மா பதிலளித்தாள்.

உடனே அவள் வரவழைக்கப்பட்டாள்.

"திரேஸா, நீ கூண்டைத் திறந்துதான் கோழியைப் பிடித்தாயா?"

"இல்லை... கூண்டு திறந்துதான் கிடந்தது."

"என்ன? நான் கூண்டைப் பூட்டியிருந்தேனே. இதோ பாருங்கள் அதன் சாவி."

"அப்படியானால் மீதமுள்ள கோழிகளை எண்ணிப் பாருங்கள்."

ரோனியும் சமையற்கட்டு வழியாக வெளியே வந்தான்.



நான்ஸி கோழிகளை எண்ணிப் பார்த்தாள். அவள் முகத்தில் சந்தேகம் ஏற்பட்டது.

"ஒரு கோழி குறைகிறது."

எண்ணிப் பார்த்த பிறகு ரோனி கூறினான்.

"நடுவில் என்னமோ நடந்திருக்கிறது. அம்மா, யாரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம். இதை நான் பார்த்துக் கொள்கிறேன்." ரோனி கூறினான்.

மாலை நேரத்தில் ஷிபு, தனது புதிய காரில் ஏறி வெளியே போனான்.

வெளியே போவதற்கு முன்பு அவன் மெர்ஸியின் அறைக்கு வந்தான். வில்சனை மறுபடி எதற்காகச் சந்தித்தாய் என்று கேட்டான். அவள் பதில் எதுவும் சொல்லாமல் போகவே, அவளை பதில் சொல்ல வைக்கத் தன்னால் முடியும் என்று பயமுறுத்திவிட்டு வெளியேறினான்.

இரவு மணி பத்து.

ஆஸ்பத்திரியிலிருந்து மெர்ஸிக்கு போன் வந்தது. மிகவும் சிக்கலான ஒரு கேஸாம். உடனடியாக மெர்ஸி வரவேண்டும் என்பதுதான் செய்தி. பேசியது தங்கம்மாதான்.

சன்னமாகப் புன்னகைத்த மெர்ஸி, தான் வருவதாகத் தெரிவித்தாள். உடனேயே உடை மாற்றிக் கொண்டு காரில் ஏறிப் புறப்படவும் செய்தாள்.

வீட்டிலிருந்து உடனடியாக வெளியேறுவதற்காக அவளே செய்த ஓர் ஏற்பாடு அது. கர்ப்பிணி நோயாளி ஒருவரிடம் அவளே ஏற்படுத்திய செயற்கை வலிதான் அந்தத் திட்டம்.

மருத்துவ மனைக்கு வந்தவள், நோயாளியைப் பரிசோதித்து, சிகிச்சை அளித்துவிட்டு நேராக ஷிபு ஜார்ஜ் வசிக்கும் வீட்டை நோக்கி காரைச் செலுத்தினாள்.

காரைச் சற்றுத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு கேட்டை நெருங்கினாள்.

கேட் பூட்டப்பட்டிருந்தது.

கேட் கம்பிகளின் இடைவெளி வழியாகத் தாழ்ப்பாளைத் தொடுவதற்கு மெர்ஸி முற்பட்ட போது மிகவும் விசித்திர மான சம்பவம் ஒன்று நடந்தது!

## 20

பூட்டியிருக்கும் கேட்டின் தாழ்ப்பாளைத் திறக்க முடியும் என்ற நம்பிக்கை அனுபவத்தால் அவளுக்கு ஏற்பட்டிருந் தது.

எனவே, அவள் அங்கிருக்கும் தாழை நோக்கிக் கையை நீட்டினாள். ஆனால், இப்போது அவளே, கேட்டை ஊடுருவி மறுபுறம் வந்து சேர்ந்தாள்.

ஆமாம்... அவள் உட்புறம் வந்துவிட்டாள்.

தாழ்ப்பாளில் கை வைத்துப் பார்த்தாள், 'இனி இதற்கு வேலை இல்லையே' என்று நினைத்தாள்.

ஷிபு ஜார்ஜின் பங்களாவை நோக்கி நடந்தாள்.

திடுமென்று அல்சேஷன் நாயொன்று அவளை நோக்கிப் பாய்ந்து வந்தது. ஆனால், என்ன காரணத்தாலோ, அது உடனேயே கால்களைத் தரையில் தாழ்த்தி அப்படியே நின்று விட்டது.

அவள் தன் இடதுகையை அதற்கு நேராக நீட்டினாள்.



ஒருவித முனகலோடு, வேருடன் பிடுங்கிப் போட்ட மரம் போல் அது ஒரு புறமாகச் சரிந்து விழுந்தது. பிறகு அசை வற்றுப் போனது.

மெர்ஸி வாசற் கதவை நெருங்கினாள்.

காலிங்பெல்லை அழுத்தினாள். உள்ளே அது மணி யோசை எழுப்புவது கேட்டது.

யாரோ நடந்து வரும் சத்தம்.

கதவைத் திறந்ததும் ஒரு டபிள் பேரல் துப்பாக்கியின் முனை வெளியே வந்ததும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

"யாரது?" ஷிபு ஜார்ஜின் குரல்.

மெர்ஸி, நகர்ந்து துப்பாக்கிக்கு நேராக நின்றாள்.

"மெர்ஸி... இல்லை மெர்ஸி ஜான். அதுகூட இல்லை மெர்ஸி ஜானின் ஆவி. உன்னைத்தான் நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். டைகர்... டைகர்!" ஷிபு உரத்துக் குரல் கொடுத்தான்.

"அதோ கிடக்கிறது உன்னுடைய டைகர்!" மெர்ஸி சுட்டிக் காட்டினாள்.

"என் டைகரை நீ கொன்று விட்டாயா? நீ எப்படி கேட் டைக் கடந்து வந்தாய்? கேட்டின் மீது ஏறிக் குதித்து வந்திருக் கிறாயா?" ஷிபுவின் துப்பாக்கி அப்போதும் அவளையே குறிபார்த்தபடி இருந்தது.

அவன் மனத்துள் சட்டென்று ஒரு திட்டம் தயாரானது. 'இவளைச் சுட்டுக் கொன்ற பிறகு, உடலை எங்காவது கொண்டு போய் போட்டுவிட வேண்டியதுதான். அல்லது ரோட்டில் போட்டு அவள் மீது காரை ஏற்ற வேண்டும். இல்லாவிட்டால் ஆழமாகப் போட்டு புதைக்க வேண்டியது தான்.'

அவன் யோசனை இப்படி அலைபாய்ந்து கொண்டிருந்தது.

"நீ எதற்காக இந்த நேரத்தில் இங்கு வந்திருக்கிறாய்?" ஷிபு கேட்டான்.

"அப்படியானால் உனக்கு என்னை அடையாளம் தெரிந்திருக்கிறது இல்லையா? அன்றைக்கு எதற்காக நான் காலேஜுக்கு வந்தேன் என்று நீ கேட்கவில்லையே..." அவள் அவன் முகத்தைப் பார்த்தாள்.

"ஓகோ... அப்படியானால் என் சந்தேகம் சரிதான்." ஷிபு ஜார்ஜ், தனது துப்பாக்கியை அவள் மார்புக்கு நேராக நீட்டி, ட்ரிக்கரை இழுத்தான்.

குண்டு வெடித்தது.

மெர்ஸி ஒருபுறமாகச் சரிந்தாள்.

மீண்டும் குண்டு வெடித்தது.

இப்போது அவள் நிமிர்ந்தாள்.

"இதோ..." அவள் தன் வலது கையைத் திறந்தாள்.

அந்தத் துப்பாக்கியிலிருந்து வெளியேறிய தோட்டாக்கள் இரண்டும் அவள் கைக்குள் கிடந்து புகையெழுப்பிக் கொண்டிருந்தன.

"இது இப்போதும் சூடாகத்தான் இருக்கும்... இல்லையா?" அவள், அவற்றை அவன் முகத்தை நோக்கி வீசியெறிந்தாள்.

"ஐயோ!" என்று அலறியபடி அவன் பின்னோக்கிச் சரிந்தான்.

சட்டென்று அவள், அவன் கையில் இருந்த துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு அவன் அடிவயிற்றில் ஓங்கி மிதித்தாள்.



"ஐயோ... அம்மா!" என்று அலறியவாறு அவன் துடித்தபடி சுருண்டான்.

அவன் கால்கள் அவள் பக்கமாக வந்தபோது, அவள் தன் கையிலிருந்த துப்பாக்கியின் பின்பக்கத்தால், அவன் இடுப்புப் பகுதியில் ஓங்கி அடித்தாள்.

அலற முற்பட்ட அவன் நாக்கு வெளிப்புறமாக நீண்டது. கண் விழிகள் வெளிப்புறமாகத் துருத்திக் கொண்டு வந்தன. மெர்ஸி, தன்னிடமிருந்த துப்பாக்கியின் முன்புறக் குழலை அவன் தொண்டைக் குழிக்குள் வைத்து அழுத்தினாள்.

ஒரு சில நிமிடங்களில் அந்த உடல் அசைவற்றுப் போனது.

ஷிபு ஜார்ஜ் இறந்து விட்டான்.

துப்பாக்கியைத் தன் புடவையால் நன்றாகத் துடைத்தவள், அதை அவன் உடலின் மீதே நீளவாட்டில் வைத்தாள். பிறகு திரும்பினாள். சற்று நேரம் அங்கேயே நின்றாள்.

அந்த வீட்டில் அப்போது, வேறு யாரும் இல்லை என்பது உறுதியானவுடன் அவள் அங்கிருந்து கேட்டை நோக்கி நடந்தாள்.

கேட்டுக்குள் நுழைந்தது போலவே சுலபமாக வெளி வந்தாள்.

புத்தகத்தில் வாசித்த விஷயம் தனக்கு நடைமுறையில் சித்தித்திருக்கிறது.

இப்போது அவளால் மிகச் சிறிய இடைவெளிகளில் கூட கடந்து போக முடியும்.

காரை ஸ்டார்ட் செய்தவள் நேராக ஆஸ்பத்திரியை அடைந்தாள்.

நர்ஸ் தங்கம்மா நெருங்கி வந்தாள்.

"தகவல் ஏதாவது உண்டா?" மெர்ஸி கேட்டாள்.

"வீட்டிலிருந்து கூப்பிட்டிருந்தார்கள்!"

"என்ன சொன்னீர்கள்?"

"நீங்கள் ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னேன்."

"ம்... சரி." என்ற மெர்ஸி ஓய்வு அறைக்குள் சென்று கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

"இப்படியாக மற்றொருவனும் கணக்குத் தீர்க்கப்பட்டான்!" அவள் தனக்குத்தானே மந்திரித்தாள்.

உண்மையில் அன்று அவள் ஷிபுவைக் கொல்லக் காரணம், அவன் வில்சனுக்குத் தொல்லை கொடுத்ததுதான். வில்சனைக் கொன்று விடுவதாக வேறு சொல்லியிருந்தானே!

நாளைக்கு வில்சனுக்குத் தகவல் தெரியும்போது அவன் என்ன நினைப்பான் என்று ஒரு கணம் யோசித்தாள். தன் மீது அவனுக்குச் சந்தேகம் ஏற்படுமா? இல்லை. அதற்கு வாய்ப்பு இல்லை. அவர் இன்னும் தன்னை அடையாளம் தெரிந்து கொள்ளவே இல்லையே?

மறுநாள் மதியத்தில் ஷிபுவின் மரணம் வெளியுலகுக்குத் தெரிந்தது.

ஷிபுவின் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்ய அனுப்பி வைத்தனர்.

'பிறப்பு உறுப்பில் கடுமையாகத் தாக்கப்பட்டும், மூச்சுத் திணறச் செய்தும் மரணம் நிகழ்ந்துள்ளது. ஆனால், போலீஸின் விசாரணையில் அவர் யாரையோ தனது துப்பாக்கியால் இரண்டு முறை சுட்டிருப்பதாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஷிபுவின் சவ அடக்கம் மற்றும் சடங்குகளின்போது மெர்ஸி எந்த ஒரு சந்தேகமும் ஏற்படாத வகையில் கலந்து கொள்ளவும் செய்தாள்.



ஷிபுவின் மரணம் தொடர்பாக எந்த ஒரு துப்பும் கிடைக்கவில்லை. எனினும் நான்ஸி ஜார்ஜுக்கும், ரோனிக்கும் அவள் மீது சந்தேகம் தோன்றியது. ஆனால், அதை எப்படி வெளியிடுவது என்று தெரியவில்லை. அதனால் அவர்கள் இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பொருட் செறிவுடன் பார்த்துக் கொண்டனர்.

அன்று இரவில் அம்மாவும் மகனும் அதைக் குறித்துப் பேசிக் கொண்டனர்.

"இதற்குக் காரணம் அவளேதான்!" ரோனி உறுதியான குரலில் கூறினான்.

"இதை அவ்வளவு உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. அவன் துப்பாக்கியால் சுட்டும் காயம்படாத யாரோ ஒருவர் தான் இந்தக் கொலைக்குக் காரணம்!" அம்மா தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினாள்.

"பிசாசுகளைச் சுட்டால் அது, அவர்கள் உடலில் பாயுமா என்ன?"

"அப்படியானால் நீ அதையும் சோதித்துப் பார்த்து விடு!" நான்ஸி ஜார்ஜ் சொல்லிவிட்டு அந்த அறையிலிருந்து வெளியேறினாள்.

உடனேயே திரும்பி வரவும் செய்தாள்.

"இந்தா... உன் அங்கிளின் துப்பாக்கி இது. இறப்பதற்கு முன் என்னிடம் கொடுத்தது. உன் அப்பாவுக்குக்கூட இதைப் பற்றித் தெரியாது. அதனால் நீ இதைப் பயன்படுத்தினாலும் அவருக்குத் தெரியாது" அம்மா உற்சாகப்படுத்தினாள்.

தன் இரண்டு ஆண் குழந்தைகளின் மரணத்துக்குக் காரணமானவள் என்று அவள் நம்பும் மெர்ஸியைக் கொல்வதில் எந்த விதமான தவறும் இல்லை என்பது அவள் கட்சி. "காரியத்தை உடனே கச்சிதமாக நிறைவேற்றுகிறேன்." என்ற

உறுதிமொழியுடன் அவன் அந்தத் துப்பாக்கியைத் துணியில் மூடி, பிரீஃப்கேஸுக்குள் பத்திரப்படுத்தினான்.

அன்று ஆஸ்பத்திரியில் மிகவும் விசித்திரமான சம்பவம் ஒன்று நடைபெற்றது.

அது ஒரு பிரசவம் தொடர்பானது.

குழந்தை சற்றுப் பெரிதாக இருந்ததால் சிசேரியன் தேவைப்பட்ட கேஸும் கூட.

ஆண் குழந்தை.

மேரி ஜோசப்தான் அந்த கேஸை அட்டெண்ட் செய்தவர். அவருடன் டாக்டர் சந்திரகுமாரும் இருந்தார்.

பத்து மணி நேரம் வரை கர்ப்பிணி எந்தவொரு சிக்கலும் இல்லாமலும் படுத்துக் கிடந்தாள். அதன் பிறகு அவளுக்குச் சிரமம் தொடங்கியது.

பிரசவம் சம்பந்தமான அடையாளங்கள்தான் அவை.

"ஒருவேளை இரட்டைக் குழந்தையோ என்னவோ?" மேரி ஜோசப், சந்திரகுமாரிடம் கேட்டாள்.

சற்று நேர யோசனைக்குப் பிறகு அவர் கூறினார்: "அப்படியும் இருக்கலாம்."

"ஐயோ, இன்னொரு சிசேரியனா?" மேரி ஜோசப் கேட்டாள்.

"இப்படியெல்லாம் யோசிக்க வேண்டியதோ, குழம்ப வேண்டியதோ, இல்லை. நம்மால் செய்ய முடிந்ததை உடனடியாகச் செய்ய வேண்டும். எது வேண்டுமானாலும் நடக்கலாம்!" சந்திரகுமார் கருத்துத் தெரிவித்தார்.

"அப்படியானால் எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்து விடலாமா?" மேரி ஜோசப் கேட்டாள்.

"சந்தேகமானால் பார்த்து விடுங்கள்!"



உடனேயே நோயாளியை எக்ஸ்-ரே டிபார்ட்மெண்ட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்டும் வந்தது.

டாக்டர் சந்திரகுமார் எக்ஸ்ரேயைப் பார்த்தார்.

"கடவுளே, என்ன இது! நிலைமையே வேறு என்று தோன்றுகிறதே" டாக்டர் சந்திரகுமார் வியப்புடன் எக்ஸ்-ரேயை, மேரி ஜோசபிடம் கொடுத்தார்.

"என்ன டாக்டர் இது? இது எப்படி!" மேரி ஜோசபுக்கு காரியம் பிடிபடவில்லை.

"ஐந்து தலைகள் தெரியவில்லையா? மிச்சத்தை நான் சொல்ல வேண்டுமா? முடிந்த விரைவில் அவர்களை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும்" சந்திரகுமார் கூறினார்.

"பாம்புதானே? எந்த விநாடியிலும் அது வெளியே வரலாம் இல்லையா? திரும்பவும் எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கலாமா?" டாக்டர் மேரி ஜோசப் கேட்டார்.

அதன்படி மறுமுறையும் எக்ஸ்-ரே எடுக்கப்பட்டது. பலன் என்னவோ அதேதான்.

சற்றுச் சரிந்து கிடக்கிறது. அவ்வளவுதான். மாலை நேரத்தில் நோயாளியின் வலி குறைவதற்காக மருந்து கொடுத்து ஆறுதல் படுத்தினார்கள்.

மூன்று நாட்கள் அப்படியே நகர்ந்தன.

நான்காவது நாளன்று ஆஸ்பத்திரியில் இருந்து அந்த நோயாளி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த நோயாளி திரும்பவும் கொண்டு வரப்பட்டாள். வலி மிகவும் அதிகமாக இருந்ததுடன் பிரசவத்தின் அடையாளங்களும் தென்பட்டன.

அன்று மெர்ஸியின் டியூட்டி

"இருபத்தேழாம் நம்பர் பெட் நோயாளி மிகவும் சிரமப் படுகிறார். ஒரு பிரசவம் முடிந்திருக்கிறது. இன்னொரு குழந்தை இருக்கிறதோ என்ற சந்தேகம்..." தங்கம்மா நர்ஸ் கூறினாள்.

"பாலகிருஷ்ணன் சார் இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

"அவர் இன்றைக்கு விடுமுறை!"

"சரி நான் பார்க்கிறேன்." என்ற மெர்ஸி, நோயாளியை நெருங்கினாள். முதலில் ஸ்க்ரீன் கொண்டு மறைக்கச் சொன்னாள் மெர்ஸி.

பின்னர் உடையை விலக்கி நோயாளியின் வயிற்றைத் தடவிப் பார்த்தாள்.

வயிற்றை ஊன்றிப் பார்த்தாள்.

"தங்கம்மா ஒரு கையுறை தேவை!" மெர்ஸி, கேட்டாள்.

அவள் கொண்டு வந்து கொடுத்தாள்.

மறு விநாடி மெர்ஸியின் கை செயல்படத் தொடங்கியது.

சற்று நேரத்துக்குப் பிறகு அவள் மற்றொரு கையுறையை நோயாளியின் வயிற்றுக்குள்ளிருந்து வெளியே எடுத்தாள்.

"இதைத்தான் ஐந்து தலை நாகம் என்று டாக்டர் சந்திரகுமார் கூறினாரா?" நர்ஸ் தங்கம்மா கேட்டாள்.

"போன தடவை சிசேரியன் ஆபரேஷன் செய்தபோது உள்ளே சிக்கிக்கொண்ட கையுறை இது. எக்ஸ்ரேயில் ஐந்து தலை நாகமாகத் தென்பட்டிருக்கிறது." மெர்ஸி கை கழுவிய படி கூறினாள்.

இந்தத் தகவல் உடனேயே ஆஸ்பத்திரி முழுவதும் பரவியது.

மறு நாள் பத்திரிகைகளிலும் வெளியாகியது.



டாக்டர் பாலகிருஷ்ணன் கேட்டார்: "ஆமாம் மெர்ஸி, இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"யோசித்துப் பார்த்தேன். இப்படியொரு யூகம் தோன்றியது." மெர்ஸி பதிலளித்தாள்.

"மெர்ஸி நீங்கள் கெட்டிக்காரர். ஒரு விஷயத்தை நான் உறுதியாகச் சொல்ல முடியும். உங்கள் குடும்பத்தில் உள்ள எல்லோரை விடவும் நீங்கள் கெட்டிக்காரிதான். நான் எதையும் வெளிப்படையாகப் பேசுபவன். உங்களைக் குறித்துச் சில ஆட்சேபகரமான செய்திகளை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதையெல்லாம் உங்கள் பிராக்டீஸ் மூலமாகப் பொய் என்று நிரூபித்துவிட்டீர்கள்." டாக்டர் பாலகிருஷ்ணன் கூறினார்.

"அப்படியா டாக்டர்?" மெர்ஸி கேட்டாள்.

"உட்காருங்கள்." டாக்டர் கூறினார்.

அவள் உட்கார்ந்தாள்.

"டாக்டர் மெர்ஸி, ஒரு காலத்தில் தற்கொலை செய்து கொண்டு இறந்துபோன மெர்ஸி ஜானின் சர்ட்டிஃபிகேட்டை மாற்றி நீங்கள் டாக்டர் ஆகிவிட்டதாக ஒரு வதந்தி பரவியிருந்தது. ஆரம்ப காலத்தில் அது உண்மைதான் என்பது போல்தானிருந்தது உங்களது நடவடிக்கைகளும்."

டாக்டர் பாலகிருஷ்ணன் கூறுவதை அவள் கவனமுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஆரம்பத்தில் உங்கள் கவனக் குறைவால் ஐந்து கர்ப்பிணிகள் மரணம் அடைந்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் உங்கள் அப்பாவின் கெட்டிக்காரத்தனம் மற்றும் வசதி வாய்ப்புகளால் மறைக்க முடிந்தது. இப்போது அதையெல்லாம் சொன்னால்கூட எவரும் நம்ப மாட்டார்கள். ஜனங்கள் மறந்து விட்டிருப்பார்கள்." பாலகிருஷ்ணன் அந்தப் பழைய கதையைச் சொன்னார்.

அவள், அவரையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"இப்போது அப்படியல்ல. பிறகு எப்படி அவர்கள் வியப்பு அடையாமல் இருப்பார்கள்? அப்படியானால் நான் அப்பாவியான ஓர் ஏழைப் பெண்ணைக் கொன்றுதான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன் இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

டாக்டர் பாலகிருஷ்ணன் அவள் முகத்தைப் பார்த்தார்.

## 21

தான் சற்று எல்லை கடந்து பேசிவிட்டதாக பாலகிருஷ்ண னுக்குத் தோன்றியது.

"நான் எல்லை மீறிப் பேசிவிட்டேனோ?" டாக்டர் பால கிருஷ்ணன் குற்ற உணர்ச்சியுடன் கேட்டார்.

"இல்லை டாக்டர், இல்லவே இல்லை! நீங்கள் உண்மை யைத்தான் பேசினீர்கள். எனக்கு அதில் எந்த விதமான வருத்தமும் கிடையாது. ஒரு காலத்தில் என் முட்டாள்தனத் தினால் என்னவெல்லாமோ நடந்துவிட்டன. அதற்காக நான் இப்போது வருத்தப்படுகிறேன்." மெர்ஸி மிகுந்த எச்சரிக்கை யுடன் பேசினாள்.

"ஒரு சிலர் பிராக்டீஸினால் கெட்டிக்காரர்கள் ஆகிறார்கள். நீங்களும் அப்படித்தான் மெர்ஸி." டாக்டர் பாராட்டினார்.

மறுநாள் மெர்ஸிக்கு நைட் டியூட்டி

விஷு பண்டிகையை ஒட்டி டாக்டர் பாலகிருஷ்ணன் விடுமுறையிலிருந்தார். அதனால் மெர்ஸி அதை ஈடுகட்டும் விதமாக டியூட்டியை அட்ஜெஸ்ட் செய்து கொண்டாள்.

அது அவ்வளவு சாதாரணமானதல்ல.



எவ்வளவெல்லாம் வேதனைகளைப் பார்க்க வேண்டி யிருக்கும்?

ஞாயிற்றுக்கிழமை மதியமானபோது மெர்ஸி தவிர மற்ற வர்கள் எல்லோரும் சாப்பாட்டுக்குப் பிறகு வரவேற்பு அறையில் அமர்ந்திருந்தனர்.

ரூபன், ரோனி ஆகியோருடன் அப்போது அவர்களின் மனைவியரும் இருந்தனர்.

"நீங்கள் இரண்டு பேரும் சற்று நேரம் மேல் மாடியில் இருங்கள். நான் பிறகு கூப்பிடுகிறேன்." நான்ஸி ஜார்ஜ், தன் மருமக்களிடம் கூறினாள்.

"புதிய கேஸட் ஏதாவது இருக்கிறதா?" ரோனியின் மனைவி கேட்டாள்.

"இருக்கிறதே... 'கோஸ்ட்' இங்கிலீஷ் படம். புதியது. நல்ல படம்!" ரோனி கூறினான்.

பெண்கள் இருவரும் மேல் மாடிக்குச் சென்றார்கள். அதன் பிறகு அப்பாவும் அம்மாவும் பிள்ளைகளுமாகக் குடும்ப விஷயத்துக்குள் நுழைந்தனர்.

ரூபன் தொடங்கி வைத்தான்.

"மொத்தம், இதுவரை எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள் என்று பாருங்கள்! அந்த கேஸுடன் தொடர்புள்ள பெரும் பாலானவர்களும் காலி. அண்ணன்கள் இரண்டு பேர், கிளார்க் விஜயன், போஸ்ட்மார்ட்டம் செய்த டாக்டர் ராமச் சந்திரன், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், இனி மீதமுள்ளவர்கள் யாரெல்லாம் என்று தெரியுமா?"

ரூபன், ஜார்ஜ் செபாஸ்டியனின் முகத்தைப் பார்த்தான். அவர் முகம் சட்டென்று தாழ்ந்தது. அவரால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை.

அவர் மனத்தில் திடமான எந்த ஒரு கருத்தும் கிடையாது. என்ன சொல்வது என்றும் அவருக்கு விளங்கவில்லை.

இறந்துபோன ஒரு பெண்ணின் ஆவி வந்து இப்படியெல்லாம் செய்யுமா? இத்தனை வருடங்களாக மருத்துவத்தில் வாழ்க்கையைச் செலவழித்திருக்கும் அவருக்கு இதையெல்லாம் நம்பவும் முடியவில்லை; மறு புறம் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

"இதெல்லாமே இயற்கையான மரணங்கள்தான் என்று உங்களால் சொல்ல முடியுமா?" ரோனி கேட்டான்.

"இல்லையென்று எனக்குத் தெரிகிறது. இருந்தாலும் இதையெல்லாம் எப்படி நான் நம்புவது? நம்பினாலும் நம்பாவிட்டாலும் இதற்கு என்னதான் மாற்று வழி?" என்ற ஜார்ஜ் செபாஸ்டியன், ரோனியைப் பார்த்தார்.

"இதுவரை அதற்காக நாம் செய்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்து விட்டன. அதனால் எல்லாம் பின்வாங்கக் கூடியவன் அல்ல நான். அதையும் பார்த்துவிடலாம்."

"நீ என்ன செய்யப் போகிறாய்?" ஜார்ஜ் கேட்டார்.

"அரத்தை ராவ வேண்டுமானால் மற்றோர் அரம்தான் வேண்டுமென்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்போது இரண்டுமே இல்லாமலாகிவிடும்." ரோனி எழுந்தான்.

அவன் சொன்னதன் பொருள் என்னவென்று அங்கிருந்த எவருக்கும் புரியவில்லை. காலேஜில் லெக்சரராகப் பணி புரியும் ரோனி சாமானியமானவன் அல்ல என்பது ஜார்ஜுக்குத் தெரியும். அவன் மனத்தில் ஒரு காரியத்தை நினைத்துவிட்டால், அதை முடிப்பது வரை ஓயமாட்டான்.

"நீ இப்போது எங்கே போகிறாய்?" ரூபன் கேட்டான்.

"உடனேயே வந்து விடுகிறேன்" என்ற ரோனி மோட்டார் பைக்கை ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.



ஏறத்தாழ முப்பது கிலோமீட்டர் தூரம் பயணம் செய்தான். நடுவில், எவரிடமும் அவன் எந்த விதமான கேள்வியும் கேட்கவில்லை; விசாரிக்கவில்லை. கடைசியில் ஒரு நாற்சந்தியை அடைந்ததும் பைக்கை நிறுத்தினான்.

ஒரு சிறிய டீக்கடையும் பெட்டிக் கடையும் இணைந்த கடை. அருகில் ஒரு பார்பர் ஷாப். மாலை நேரமானதால் அங்கு ஐந்து அல்லது ஆறு பேர் இருந்தனர்.

"ஃபாதர் காஞ்ஞிரத்தின்சோட்டில் எங்கே தங்கியிருக்கிறார்?" அங்கு தென்பட்ட நடுவயது மனிதரிடம் கேட்டான்.

அந்தப் பெயரைக் கேள்விப்பட்டதும் அவர் கண்களைச் சுருக்கி ரோனியைப் பார்த்தார்.

"அவரை உங்களுக்குத் தெரியாதா?" ரோனி கேட்டான்.

"இப்போது அவர் ஃபாதராக வேலை செய்யவில்லையே?" அவர் கூறினார்.

"அது எனக்கும் தெரியும். அவர் வீடு எதுவென்று சொன்னால் போதும்."

"நேராக இந்த ரோட்டில் போனால், ஒரு கிலோ மீட்டருக்குப் பிறகு இடதுபுறமாக ஒரு குறுக்குப் பாதை திரும்பும். அது, முடிவடைகிற இடம் அவர் வீடுதான்!"

"இப்போது அவர் வீட்டிலிருப்பாரா?"

"இருப்பார். வேறு எங்கே போவார்?"

ரோனி அவர் சொன்ன வழிகளில் பைக்கைச் செலுத்தினான்.

"ஆமாம்... அந்தத் தம்பி யாரைப் பார்க்க வேண்டுமாம்?" அங்கிருந்த மற்றொருவர் கேட்டார்.

"அந்த மந்திரவாதி இருக்கிறாரே... அவரைப் பார்க்கத்தான்." இது வழி சொல்லிக் கொடுத்தவரின் பதில்.

ரோனியின் மோட்டார் பைக் ஒரு பழைய கேட்டின் முன்னால் போய் நின்றது.

தாழ்ப்பாளுக்கு பதிலாக பழைய கம்பி ஒன்றால் இணைப்பு போடப்பட்டிருந்த அதன் கதவுகள் திறந்து கிடந்தன.

அந்த காம்பௌண்டுக்குள் ஒரு சிறிய வீடு.

பழைய காலப் பாணியிலான வீடு. உயரம் குறைவாக இருந்தது. வீட்டின் முன்புற முற்றத்தில் புல் ஏராளமாக வளர்ந்திருந்தது. துளசிமாடம் ஒன்று இடிந்து விழுந்து கிடந்தது.

சமீப காலத்தில் அந்த வீட்டுக்கு எவரும் வந்திருப்பதற் கான அடையாளங்கள் எதுவும் தென்படவில்லை.

ரோனி கேட்டைக் கடந்து உட்புறம் சென்றான்.

"ஃபாதர் இங்கு இருக்கிறாரா?" அவன் குரல் கொடுத்தான்.

"யாரது?" முரட்டுத்தனமான குரல் ஒன்று வீட்டின் உட்புறத்திலிருந்து கேட்டது.

"உங்களைத்தான் பார்க்க வந்திருக்கிறேன்." ரோனி பதிலளித்தான்.

"வரந்தாவில் உட்காருங்கள்... இதோ வந்து விடுகிறேன்." உட்புறத்திலிருந்து குரல் வந்தது.

ரோனி, வராந்தாவிலிருந்த தூசியை ஊதிவிட்டு ஓர் ஓரமாக உட்கார்ந்தான்.

பொழுது இருட்டிக் கொண்டு வந்தது.

திடுமென்று அவன் திடுக்கிட்டான். முற்றத்தின் வடகிழக் குப் பகுதியில் ஒரு மண் குவியல். அதன் மீது ஒரு மனித மண்டை ஓடு.

ஃபாதர் காஞ்சிரத்தின்சோட்டில், இப்போது தேவாலயத் துடன் எந்த விதமான தொடர்பும் இல்லாதவர் என்பது



ரோனிக்குத் தெரியும். அவர் ஒரு காலத்தில் பல தேவாலயங் களிலும் பணி புரிந்தவர்.

அந்தக் கட்டத்தில்தான் அவர் மாந்திரீகம் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். துர்மந்திரவாதம் கற்றுக் கொள்வதில்தான் அவர் அதிகம் ஆர்வம் செலுத்தினார்.

கடைசியாக அவர் பணிபுரிந்த ஒரு தேவாலயத்தில்கூட அவர் ஓர் அற்புதம் நிகழ்த்தினார்.

அந்த ஊரில் இருந்த பணக்காரர் ஒருவரைக் காளைமாடு ஒன்று குத்திக் கொன்று விட்டது. அவருக்கு அது தகுந்த தண்டனைதான் என்று, அவரைப் பற்றித் தெரிந்தவர்கள் எல் லோரும் கூறினர். அந்த அளவுக்கு அவர் அப்பாவிகளையும், ஏழைகளையும் கசக்கிப் பிழிந்தவர்.

பணத்தை வட்டிக்கு விட்டு, கடைசியில் சொத்து பத்துகளை எழுதி வாங்கித்தான் அவர் பணக்காரரானார்.

தன் சொத்துகளைப் பங்கு வைப்பதற்கு முன்னாலேயே அவர் இறந்து போய் விட்டார்.

ஃபாதருக்கு மந்திரவாதம் தெரியும் என்று அவரின் பையன்களில் ஒருவனுக்குத் தெரியும். அவன் ஃபாதரைச் சந்தித்து, தகவல் கூறி விஷயத்தை நல்லபடியாக முடித்தால் நல்ல ஒரு தொகை தருவதாகவும் கூறினான்.

"விபத்தில்தானே இறந்து போனார்? அவரை நான் எழுப் பித் தருகிறேன். ஆனால், அதிக நேரம் எடுத்துக் கொள்ளக் கூடாது, அதற்குள் எல்லாக் காகிதங்களிலும் கையெழுத்து வாங்கிவிட வேண்டும்!" ஃபாதர் கூறினார்.

அதையொட்டி பையன்கள் கல்லறைக்கு வந்து, சேர்ந் தனர். அவர்களுடன் ஃபாதரும் இருந்தார்.

ஃபாதர் ஒரு சில மந்திரங்களை உச்சரித்த பிறகு ஓர் ஆட்டை வெட்டி அதன் ரத்தத்தைக் கல்லறை மீது சொட்ட விட்டார். அதன் பிறகு கல்லறையைத் திறக்கச் செய்தார்.

கல்லறையின் ஸ்லாபை அகற்றினர்.

பிறகு ரீத்துகளை வெளியே எடுத்தனர். சவப்பெட்டியின் மூடியைத் திறந்தனர். ஃபாதர், தன் இடது கைக் கட்டை விரலைக் காயப்படுத்தி, பிணத்தின் வாயில் ஒரு சில சொட்டுகள் ரத்தத்தை வடிய விட்டார். சற்று நேரத்துக்குப் பிறகு அங்கிருந்த பிணம் அந்த ரத்தத் துளிகளைச் சுவைத்து உள்ளுக்குள் இறக்கியது.

"ஆண்ட்ரூஸ் ம்... சீக்கிரமாக எழுந்திரு. இதோ... இந்தக் காகிதங்களில் எல்லாம் கையெழுத்துப் போடு." ஃபாதர், அதனிடம் கூறினார்.

ஆண்ட்ரூஸ் சவப்பெட்டிக்குள் எழுந்து உட்கார்ந்தார்.

ஃபாதர் நீட்டிய பத்திரங்களில் எல்லாம் அவர் கையெழுத்துப் போட்டார். அதன் பிறகு ஃபாதர் அவரிடம் படுத்துக் கொள்ளுமாறு கூறினார். அவர், சவப்பெட்டிக்குள் மட்டமல்லாக்கப் படுத்துக் கொண்டார். அதற்குப் பிறகு பழையபடி பெட்டியை மூடி, கல்லறையையும் மூடினர்.

இருந்தும் விஷயம் எப்படியோ வெளியே தெரிந்து போனது.

அதுவும் மிகவும் விசித்திரமான ஒரு முறையில்தான் செய்தி வெளியானது. அதற்குக் காரணம் பத்திரத்தில் அவர் கையெழுத்துப் போட்டதுடன் தேதியையும் குறிப்பிட்டிருந்தார். அந்தத் தேதி அவரது மரணத்துக்குப் பிந்தைய தேதி.

அதன் பிறகு ஃபாதரைக் குறித்துப் பல்வேறு கதைகள் வெளியாகின.

தன்னுடைய மாந்திரீக ஸித்திகளுக்காக அவர் பல்வேறு கெட்ட காரியங்களையும் செய்திருக்கிறாராம்.

எனவே ஃபாதர் காஞ்ஞிரச்சோட்டிலை, தேவாலயத்திலிருந்து விலக்கி வைத்தார்கள். மட்டுமின்றி, அவரை கிறிஸ்தவ மதத்திலிருந்தே விலக்கினர்.



இருப்பினும் அவர் தற்போதும் தனது மாந்திரீக வேலைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

காலேஜில் பணி புரியும் பியூன் மூலமாகத்தான் ரோனிக்கு இவரைப் பற்றித் தெரிய வந்தது.

மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றிக் கொண்டுதான் ஃபாதர் வெளியே வந்தார்.

எழுந்திருக்க முற்பட்ட ரோனியிடம் உட்காருமாறு ஃபாதர் சைகை காட்டினார்.

"என்ன விஷயம்?" ஃபாதர் கேட்டார்.

ரோனி முதலில் தான் எடுத்து வந்திருந்த ஒரு ஃபுல் விஸ்கி பாட்டிலை அவருக்கு முன்னால் வைத்தான்.

"நல்லதுதான்!" என்ற ஃபாதர் அதன் மூடியைத் திறந்து தண்ணீர் கலக்காமல் இரண்டு மிடறு குடித்தார்.

ஆறடி உயரமுள்ள ஃபாதர் கறுப்பு நிற அங்கி அணிந்திருந்தார். மிகவும் பழையதும் ஆங்காங்கே கிழிந்தும் இருந்தது அந்த அங்கி. தலைமுடியைப் பின்னோக்கி வாரும் அடையாளம் தெரிந்தது. தலைமுடி கழுத்தைத் தாண்டி வளர்ந்திருந்தது. தாடியும் மீசையும் கூட நீண்டு வளர்ந்திருந்தன. அங்கியை அவர் அப்போதுதான் அவசரமாகப் போட்டுக் கொண்டு வருவது மாதிரி பட்டன்கள் ஒன்றிரண்டை மட்டுமே போட்டிருந்தார்.

கண்கள் தீட்சண்ணியம் மிக்கவையாக இருந்தன.

அருவருப்பை ஏற்படுத்தும் அவரின் கை-கால் நகங்களைக் கவனித்த ரோனி சற்றுத் திடுக்கிடவே செய்தான். நீண்ட, கூர்மையான, வளைந்த நகங்கள். இடது கை நகங்கள் மட்டும் சற்றுச் சிறியவையாக இருந்தன.

"என்ன விஷயம்?" ஃபாதர் கேட்டார்.

ரோனி எல்லாவற்றையும் தெரிவித்தான்.

ஃபாதர் மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

"அப்படியானால், அன்று இறந்து போன பெண்ணின் ஆவிதான் இப்போது இந்தப் பெண்ணின் உடம்பில் உள்ளதா?" ஃபாதர் கேட்டார்.

"அப்படித்தான் அனுமானிக்கிறோம்."

"சரி... இது ஒரு புதிய விஷயம்தான். எனக்கும் சுவாரஸ்யம் ஏற்படுகிறது. நான் என்னால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்கிறேன். ரோனி, நீங்கள் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்!" என்ற ஃபாதர் மேலும் சற்று விஸ்கியைக் குடித்தார்.

"சொல்லுங்கள்!"

"ஆவிகளை ஒரு போதும் மனிதர்களால் நேரிட முடியாது. அவற்றுக்கு நம்மைவிட சக்தி அதிகம். எனவே, நான் வேறொரு வழியைப் பின்பற்றப் போகிறேன்!" ஃபாதர் கூறினார்.

"என்ன வழி ஃபாதர்?"

"எப்போதெல்லாம் அவளுக்கு இரவு நேர டியூட்டி வரும்?"

"இன்றைக்கும், நாளைக்கும் கூட நைட் டியூட்டிதான்."

"சரி... ரோனி நீங்கள் கிளம்புங்கள், நான் பார்த்துக் கொள்கிறேன்." ஃபாதர் உறுதியளித்தார்.

"நான் கிளம்பலாம் என்றா சொல்கிறீர்கள் ஃபாதர்?"

"ஆமாம்."

ரோனி பைக்கை ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.

சற்று நேரத்துக்குள் ஃபாதரும் அவரது வீட்டிலிருந்து வெளியேறினார்.

மெர்ஸி டியூட்டி அறையில் அமர்ந்திருந்தாள்.



மாணி ஆபிரகாம் கொடுத்த புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள். அந்தப் புத்தகத்தைப் பிறர் பார்த்து விடக் கூடாது என்பதற்காக, மருந்து கம்பெனி விளம்பரக் காகிதம் ஒன்றால் அட்டை போட்டிருந்தாள்.

பூட்டுகளைத் திறக்கவும், மிகச் சிறிய இடைவெளிகளில் உடம்பை நுழைக்கவும் முடியும் என்பது அவளுக்கே உறுதியாகத் தெரிந்தது. அவளின் புதிய ஆத்மாவின் செயல்பாடுகளுக்கு ஏற்ப உடலும் மாறிக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டு என்னவெல்லாம் மாற்றங்கள் ஏற்படப் போகின்றனவோ என்பதை அறிய முயலும் ஆவலுடன் அந்தப் புத்தகத்தை சுவாரஸ்யத்துடன் வாசித்தாள்.

கடிகாரம் பத்து மணி என்பதைக் காட்டிக் குரல் எழுப்பியது.

தங்கம்மா நர்ஸ் அப்போது பரபரப்பாக ஓடி வந்தாள்.

"என்ன தங்கம்மா?" மெர்ஸி கேட்டாள்.

"ஒரு பெண்... எவ்வளவு முயன்றும் அவளுக்குப் பிரசவம் ஆகமாட்டேன் என்கிறது. என்ன செய்தும் ஒன்றும் பலிக்கவில்லை." தங்கம்மா கூறினாள்.

மெர்ஸி படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி பெட்டியின் அடியில் வைத்துவிட்டு, தங்கம்மாவுடன் கிளம்பினாள்.

அங்கு மற்றும் சில நர்ஸுகள் அந்த நோயாளிக்குச் சுற்றிலும் நின்றவாறு என்னென்னவோ செய்து நோயாளியின் வலியைக் குறைக்க முயன்று கொண்டிருந்தனர்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் அவள் என்பது தெளிவாகத் தெரிந்தது. நடுவயதுப் பெண்மணி ஒருவர் அந்தப் பெண்ணின் அருகிலேயே நின்று கொண்டிருந்தாள். நோயாளியின் தாயாராக இருக்கலாம்.

"இதையெல்லாம் அந்த நேரம் யோசித்திருக்க வேண்டும்" நர்ஸ் ஒருவர் சொன்னதைக் கேட்டு மற்றவர்கள் 'களுக்' கென்று சிரித்தனர்.

கர்ப்பிணியின் அருகில் சென்ற மெர்ஸி, அவளின் வயிற்றுப் பகுதியை ஊன்றிப் பார்த்தாள்.

"பிரசவ நேரம் நெருங்கியதாகத் தீர்மானித்தது யார்?"

"சந்திரிகா சிஸ்டர்தான்!" தங்கம்மா கூறினாள்.

"தங்கம்மாவுக்குத் தெரியாத பிரசவக் கதையா? சந்திரிகா சிஸ்டருக்கு இதெல்லாம் ஒரு வேடிக்கையாக இருக்கும். பிரசவ நேரம் நெருங்கவில்லை. வயிற்று வலியைப் போக்க மருந்து கொடுங்கள் போதும்!" மெர்ஸி கூறினாள்.

திரும்பிச் செல்லும்போது ஒரு கணம் நின்றாள் மெர்ஸி. சந்திரிகா நர்ஸை அருகில் வருமாறு அழைத்தாள்; "மன்னிக்க வேண்டும். விளையாட்டுக்காக அப்படிச் சொன்னேன்... நானும் குழந்தை பெற்றுக்கொள்ளாத ஒருத்திதானே?"

அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். இருப்பினும் கர்ப்பிணிக்கு இன்னும் எட்டு மாதம் கூட முடியவில்லை என்பதை மெர்ஸி குறிப்பிட்டபோது அவர்கள் வியப்பு அடைந்தனர்.

உண்மையில் கருவறைக்குள் கிடந்த குழந்தையை இப்போது அவளால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. இப்போது மெர்ஸியின் பார்வைக்கு எக்ஸ்ரேயின் தன்மை கிடைத்திருக்கிறது.

டியூட்டி அறைக்கு வந்த மெர்ஸி புத்தகத்தை எடுத்து, விட்ட இடத்திலிருந்து வாசிக்கத் தொடங்கினாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு டாக்டர் மாணி ஆபிரகாம் அங்கு வந்தார்.



"வாசிப்பு ஜுரூராகப் போகிறது போலிருக்கிறதே!" அவர் கேட்டார்.

"சுவாரஸ்யமாக இருக்கிறது."

"இந்த மாதிரிப் புத்தகங்களை வாசிப்பதை இன்னுமா மாற்றிக் கொள்ளவில்லை. வாசித்து வாசித்து ஒரு கட்டத்தில் நீங்களும் ஏதாவது ஆவியாகிவிடப் போகிறீர்கள், ஜாக்கிரதை!" டாக்டர் சிரித்தவாறே அங்குள்ள நாற்காலியில் அமர்ந்தார்.

மேற்புறத்தில் விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது.

மேஜை மீது அவள் கையிலுள்ள புத்தகத்தின் நிழல் படிந்தது. அந்த நிழலில் ஸ்டெதாஸ்கோப்பின் பாதிவரை மறைந்திருக்கிறது. ஆனால், மெர்ஸியின் கைப்பகுதியின் நிழல் தட்டுப்படவில்லை. மெர்ஸிதான் முதலில் இதைக் கவனித்தவள்.

அவள் சட்டென்று அங்கிருந்து நகர்ந்தாள்.

"நான் வருகிறேன். சும்மா அப்படியே ஒரு ரவுண்ட் வந்தேன். கிளம்புகிறேன்." டாக்டர் மாணி அங்கிருந்து கிளம்பினார்.

மெர்ஸி, நிழல் இல்லாத தனது நிலையை எண்ணி வியப்பு அடைந்தாள். அதன் பிறகு தன் கையை வெளிச்சத்தில் சுவரின் பக்கமாக நீட்டினாள், ம்... ஹூம் அப்போதும் நிழல் தட்டுப்படவில்லை!

மணி பன்னிரண்டைத் தாண்டி விட்டது.

சட்டென்று நர்ஸ் சந்திரிகா அங்கு வந்தாள். "யாரோ ஒருவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்!"

"எங்கே வெளியில் காத்திருக்கிறாரா?" மெர்ஸி கேட்டாள்.

"இல்லை... இதோ நிற்கிறாரே..." சந்திரிகா சுட்டிக் காட்டினாள். மெர்ஸி சந்தேகத்துடன் பார்த்தாள்.

## 22

அதற்குள் நர்ஸ் சந்திரிகா அங்கிருந்து போய்விட்டிருந்தாள்.

'இந்த இரவு வேளையில் செக்யூரிட்டி காவல்காரர்களுக்குக் கூடத் தெரியாமல் இந்த மனிதர் எப்படி மூன்றாவது மாடிக்கு வந்தார்?

ஒருவேளை லஞ்சம் கொடுத்து கூட வந்திருக்கலாம்.'

மெர்ஸி நிழலில் நிற்கும் மனிதனை நெருங்கினாள்.

"நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" மெர்ஸி கேட்டாள்.

"தேவாலய ஊழியரின் மகளைப் பார்க்க வந்திருக்கிறேன்" வந்தவர் முரட்டுத் தனமான குரலில் கூறினார். அதைக் கேட்ட மெர்ஸி ஒரு கணம் திடுக்கிட்டாள்.

'யார் இவர்? தெளிவாகத் தெரியவில்லையே? இவரை உள்ளே அனுப்பி வைத்தது யார்? ஒரு வேளை தேவாலய ஊழியரின் பெண் யாரையாவது இங்கு பிரசவத்துக்காக அனுமதித்திருக்கிறார்களோ என்னவோ?'

"அனுமதிச் சீட்டு இருக்கிறதா?" மெர்ஸி கேட்டாள்.

"எனக்கு அப்படிப்பட்ட எதுவும் தேவையில்லை. அந்த நாளிலிருந்தே என் வழக்கம் அப்படித்தான்!"

அவர் தன்னை எதிர்ப்பதற்காகத்தான் வந்திருக்கிறார் என்பது விளங்கியது.

'தேவாலய ஊழியரின் மகளை' என்றதுதான் மெர்ஸிக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒரு வேளை தன்னை இவர் அடையாளம் தெரிந்து கொண்டிருப்பாரோ?'



வெள்ளை நிற ஜிப்பாவும், வேட்டியும்தான் அவரது உடை. தாடையிலிருந்து வெள்ளைத் துண்டு ஒன்றை மேல் நோக்கித் தலையில் கட்டியிருந்தார்.

"யாரென்று தெரியவில்லையே? இப்படி வெளிச்சத்துக்கு வாருங்கள்." மெர்ஸி சற்று உரத்த குரலில் கூறினாள்.

அவர் வெளிச்சத்தில் வந்து நின்றார். மெர்ஸி திடுக்கிட்டாள்.

"காடன் கரியா!" அவள் தன்னையும் மீறிக் கூவினாள். ஊரே அலறும் ரௌடி. பயங்கரத் திருடன். ஏழைகளின் வீட்டுக்குள் புகுந்து பெண்களைப் பிடித்து இழுத்து அவமானப்படுத்துபவன்.

எத்தனையோ முறை சிறைக்குப் போய் வந்திருப்பவன்.

கடைசியில் வேறு வழியே இல்லாமலானபோது ஊரார் சிலர் ஒன்றுகூடி மறைந்திருந்து தாக்கினார்கள். கடப்பாரையால் தாக்கியதால் திகைத்துப் போய் விழுந்தவன் அதன் பிறகு எழுந்திருக்கவில்லை!

அவனது சவ அடக்கச் சடங்குக்கு ஏராளமானவர்கள் வந்திருந்தனர். அவனை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்பதற்காக வந்தவர்கள். மெர்ஸியும் அன்றைக்கு அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாள். அப்படிப்பட்டவன் இதோ இப்போது தனக்கு முன்னால்!

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் சவப்பெட்டிக்குள் போட்டுப் புதைக்கப்பட்டவன் அதே வடிவத்தில் இதோ, இப்போதும் எதிரில்.

"நீ இந்த இடத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன். ஒரே மாதிரி பலமுள்ளவர்கள்தானே சண்டை போட்டுக் கொள்ள முடியும்?" அவன் பேசினான்.

மெர்ஸி திகைத்தாள்.

கடப்பாரை அடியால் இறந்த காடன் கரியாவை, செமித் தேரி எனப்படும் கல்லறைக்கு வெளியில் புதைத்தனர். அவனைப் புதைத்த அந்த இடத்தில் கள்ளிச் செடி ஒன்று வளர்ந்ததும் நன்றாக நினைவில் இருக்கிறது. இந்த மனிதன் எப்படி இங்கு வந்து சேர்ந்தான்?

இப்போது அவளுக்குப் பல விஷயங்களைப் புரிந்து கொள்ளவும் பகுத்து உணரவும் முடிகிறது. அவளுக்கு விஷயம் விளங்கியது. தேவாலயத்திலிருந்து விலக்கப்பட்ட ஃபாதர் காஞ்ஞிரச்சோட்டில், தனது துர்மந்திரவாதத்தால் கல்லறையிலிருந்து காடன் கரியாவை எழுப்பி, தனக்குத் தொல்லை கொடுப்பதற்காக அனுப்பி வைத்திருக்கிறார்!

ரோனி, ஃபாதர் காஞ்ஞிரச்சோட்டிலைச் சந்தித்தபோது உடனடியாக மாந்திரீகனான ஃபாதர் மனதில் ஒரு திட்ட மிட்டார்.

மெர்ஸியிடம் மோதுவதற்கு அவளைப் போலவே விபத்தில் இறந்த ஒருவனை அனுப்பி வைத்தால் போதும் என்று அவர் முடிவு செய்தார்.

எனவே, நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு அவனது கல்ல றையை அடைந்தார். அந்தக் கல்லறைக்கு முன்பாக நின்று கொண்டு சில பைசாசிக மந்திரங்களை உச்சரித்த பிறகு அவன் பெயரைச் சொல்லி அழைத்தார்.

"டேய் கரியா..."

"இதோ வந்து விட்டேன்!" கல்லறைக்கு உள்ளிருந்து பதில் குரல் கேட்டது.

"நீ அங்கிருந்து எழுந்து வா!" ஃபாதர் மீண்டும் அழைத் தார்.

சட்டென்று கல்லறையின் மேற்புறம் பிளவு ஒன்று ஏற்பட் டது. அதன் வழியாக காடன் கரியா, இறந்தபோது அணிந் திருந்த உடைகளுடன் எழுந்து வெளியே வந்தான்.



"நான் என்ன செய்ய வேண்டும்?" அவன் கேட்டான்.

"உன்னிடம் ஒரு வேலையை ஒப்படைக்க வேண்டி இருக்கிறது!"

"என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்... நான் தயாராக இருக்கிறேன்!" அந்தப் பிணம் கைகட்டி நின்றது.

"தேவாலய ஊழியர் ஜானின் மகள் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் ஒரு டாக்டரின் உடம்பில் நுழைந்திருக் கிறாள். அவளை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும். உன்னால் அது முடியும். வெறுமனே மிரட்டினாலே போதும். தேவைப்பட்டால் கொஞ்சம் வன்முறையையும் பயன்படுத்து. நீங்கள் இருவரும் சமமானவர்களாக இருப்பதால், பலப் பரீட்சை தேவைப்படும் என்று தோன்றுகிறது. போய் வா!" ஃபாதர் கூறினார்.

இப்படித்தான் கரியா ஆஸ்பத்திரிக்கு வந்தான். அவனை எவரும் கவனிக்கவில்லை.

"நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்?" மெர்ஸி கேட்டாள்.

"நல்ல கேள்வி! அதற்கான பதிலையும் சொல்ல வேண்டி யதுதான். இவ்வளவு நாட்களாக அந்த டாக்டரின் உடம்புக் குள் இருக்கிறாயே... போதும்! இனி வெளியே வந்துவிடு." கரியா கட்டளையிடுவது போல் கூறினான்.

"இனிமேல் அதற்கு முடியாதே. என் உடம்பு அழிந்து விட்டது. இனிமேல் என்னால் இப்படித்தான் வாழ முடியும்!"

"இப்படிச் சொன்னால் எப்படி? நான் சொன்னபடி நீ நடந்து கொள்ளவில்லை என்றால், நான் அப்படி நடக்க வைக்க வேண்டி இருக்குமே..."

அதைக் கேட்ட மெர்ஸி ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு யாராவது வந்து விட்டால் பிரச்சினைதான். வந்திருப்பது கரியாவின் ஆவி என்றால் எவருமே நம்ப மாட்டார்கள்! தன்னுடன் அனாவசியமாக சம்பந்தப்படுத்திப் பேசுவார்கள். எனவே, என்ன செய்யலாம் என்று தெரியாமல் தவித்தாள் அவள்.

மெர்ஸி பயப்படத் தொடங்கிவிட்டாள் என்பது காடன் கரியாவுக்கு நன்றாக விளங்கவும் செய்தது.

"நீ போகிறயா... இல்லையா?" அவன் மெர்ஸியை நெருங்கி நின்று கேட்டான்.

"என்னால் முடியவில்லையே?" மெர்ஸி கூறினாள்.

சட்டென்று சரியா தனது நீளமான கைகளின் விரல்களை விரித்தபடியே அவளை நேருக்கு நேர் தாக்கினான்.

ஆனால், அப்போது எதிர்பாராத ஒரு சம்பவம் அங்கு நடந்தது.

கரியாவின் கை மெர்ஸியாவின் மார்பகங்கள் வழியாக ஊடுருவி மறுபுறம் வந்துவிட்டாலும் அது சன்னமான ஒரு ரப்பர் துண்டின் மீது மோதியது போல் சற்று வெளிப்புறமாக இழுபட்டு, அவன் கையை இழுத்துக் கொண்டதும் பழைய நிலைக்குத் திரும்பி வரவும் செய்தது.

கரியா அசைவற்று நின்று போனான். மெர்ஸிக்கும் இது வியப்பை அளித்தது. தன் உடம்பில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை அப்போதுதான் அவள் முற்றிலுமாக உணர்ந்தாள். வெடிகுண்டு பாய்ந்தபோதே அது வெறுமனே மறுபுறம் ஊடுருவி வந்து ஏற்கெனவே நிரூபணமான விஷயம் தான் இது. தன் உடம்பின் மீது எந்த விதமான தாக்குதலும் எதுவும் செய்ய முடியாது என்பது விளங்கியது.

நர்ஸ் தங்கம்மா அப்போது அந்தப் பக்கமாக வந்தாள். கரியா சட்டென்று நிழல் பக்கமாக ஒதுங்கி நின்றான்.

"என்ன தங்கம்மா?" மெர்ஸி கேட்டாள்.



"பத்தொன்பதாம் நம்பர் பேஷண்டுக்கு நேரமாகி விட்டதாகத் தோன்றுகிறது."

"நான் இதோ வருகிறேன். நீ முன்னால் போய் கவனித்துக் கொண்டிரு." என்ற மெர்ஸி, கரியாவைப் பார்த்தாள்.

"போ... போ... நான் இனி வேறு எங்கு போக? ராத்திரி வேளை முழுக்க அடிக்கடி வந்து கொண்டே இருப்பேன்." என்றவன் பின்வாங்கி இருட்டில் மறைந்தான்.

தனக்குப் புதிதாக ஓர் எதிராளி உருவாகி இருப்பது அவளுக்குப் புரிந்தது. அது சாதாரணமானதும் அல்ல. உயிருடன் இருந்த காலத்திலேயே எல்லா விதமான போக்கிரித் தனங்களும் காட்டிய மோசமான ஒன்று. எனவே, அது எதைச் செய்யவும் தயங்காது.

என்ன செய்வதென்று அவளுக்கு எந்த ஒரு வழியும் புலப்படவில்லை. அன்று வரை ஏற்படாத ஒரு பதற்றம் அப்போது மெர்ஸிக்குத் தோன்றியது. பத்தொன்பதாம் நம்பர் பேஷண்ட்டை அவள் கவனித்தாள்.

சிக்கலில்லாத ஒரு கேஸ்தான்.

"தங்கம்மா... சிக்கல் எதுவுமில்லை. நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்."

அவள் தன் பழைய இடத்துக்குத் திரும்பி வந்தபோது கரியா அங்கு எங்கும் தென்படவில்லை. இருப்பினும் அவளின் பயம் விலகவில்லை.

இப்போது, தான் சந்திக்க வேண்டியிருப்பது தன்னைப் போன்ற ஓர் ஆவியை. எனவே மிகுந்த எச்சரிக்கை தேவை.

தன்னிடமுள்ள புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தாள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எப்படி நடந்து கொள்வது என்பது குறித்து அதில் ஏதாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று தேடிப் பார்த்தாள்.

"என்ன டாக்டர்... ஓய்வெடுக்கக் கூட நேரமில்லை போலிருக்கிறதே!" டாக்டர் மாணி ஆபிரகாமின் குரல்.

ஓர் இடத்தில் உட்கார்ந்து வேலை செய்வது என்பது அவர் இயல்பு அல்ல. இன்றைய டியூட்டியில் அவரும் இருக்கிறார். எனவே, இரவிலும் பகல் மாதிரி எல்லா வார்டுகளிலும் ஏறி இறங்கிச் சுற்றிவிட்டு வருவார்.

அவருக்கு மெர்ஸியிடம் தனி மரியாதையும் அன்பும் உண்டு. வாசிப்பில் இருவரும் ஒரே மாதிரியான சுவை கொண்டவர்கள்.

"உட்காருங்கள் டாக்டர்!" மெர்ஸி கூறினாள்.

அவர் உட்கார்ந்தார்.

"இன்னுமா இந்தப் புத்தகத்தை வாசித்து முடிக்கவில்லை!" மேஜை மீதிருந்த புத்தகத்தைப் பார்த்தபடி கேட்டார்.

"இல்லை டாக்டர்... முடிக்கவே முடியவில்லை!"

"இதை வாசித்து முடித்தால் உடனேயே ஒரு நல்ல புத்தகம் தருவேன்."

"சீக்கிரமாக முடித்து விடுகிறேன். டாக்டர் நான் உங்களி டம் ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன்..." அவள் கரியாவை நினைவு கூர்ந்தபடி பேசினாள்.

"கேளுங்கள் டாக்டர்!"

"இது ஒரு புது கான்செப்ட். சுவாரஸ்யமானதும் கூட!"

"என்னவாக இருந்தாலும் கேளுங்கள்... பரவாயில்லை!"

"ஓர் ஆவி, வருடக்கணக்கில் அதன் உடல் எந்தவிதமான சேதாரமும் அடையாமல் கிடந்து அது அப்படியே எழுந்து வருவதாக வைத்துக் கொள்வோம். அதை அழிப்பதற்கு என்ன வழி?" மெர்ஸி சாதாரணமான ஒரு சந்தேகம் மாதிரி இதையும் கேட்டாள்.



"அழிப்பதற்கா?" டாக்டர் யோசனையில் ஆழ்ந்தார். பின்பு அவள் வாசித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தின் பக்கங் களைப் புரட்டினார்.

"இதில் அப்படிப்பட்ட எதைப் பற்றியும் கூறவில்லை. ஆனால், இதுவரை நான் படித்ததை வைத்துச் சொல்வ தனால், ஒரு விஷயத்தைச் சொல்ல முடியும்."

"எப்படி டாக்டர்?"

"ஆவியின் அந்த உடலை அழித்துவிட வேண்டியது தான்."

"அது முடியுமா டாக்டர்?"

"வேறென்ன... எரித்துவிட வேண்டியதுதான். அதற்கு ஆசிட்டைப் பயன்படுத்தலாம்."

"அதன் பிறகும் மாந்திரீக சக்தியால் அது மறுபடி வந்தால்..."

"அதற்குத்தான் அதன் பௌதிக உடம்பை எரித்துவிட வேண்டுமென்று சொன்னேன். ஆமாம்... அப்படி ஏதாவது ஆவி வந்து தொல்லை கொடுக்கிறதா என்ன?" டாக்டர் சிரித்தவாறு கேட்டார்.

"அப்படி எதுவும் இல்லை டாக்டர்."

டாக்டர் புத்தகத்தை அவள் பக்கமாகத் தள்ளி வைத்தார்.

மெர்ஸிக்கு ஒரு புதிய யோசனை கிடைத்து விட்டது.

'காடன் கரியாவின் உடம்பை எரித்துவிட வேண்டியது தான்!' அவள் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

அவனது கல்லறை இருக்குமிடம் மெர்ஸிக்குத் தெரியும்.

கடிகாரத்தில் மணி ஒன்று என்பதை வெளிக்காட்ட, சத்தம் எழுப்பி ஓய்ந்தது.

அன்று கருநீலப் பட்டுப் புடவை அணிந்திருந்தாள். இருட் டில் அது மற்றவர்களின் கண்களுக்குத் தெரியாது.

மேலே போட்டு வைத்திருந்த கோட்டை அவிழ்த்து வைத்தாள்.

சுற்றுமுற்றும் பார்த்தாள். இதுதான் நல்ல வாய்ப்பு என்று நினைத்தவள், உடனேயே அங்கிருந்து வெளியேறி, லிஃப்டில் இறங்கினாள்.

காரை ஸ்டார்ட் செய்து கரியாவின் கல்லறையை அடைந் தாள்.

அந்த நேரம் கல்லறைப் பகுதியில் இருள் மண்டியிருந் தது. இரவானதால் எந்த ஒரு மனிதரும் அப்போது அங்கு வருவார் என்று பயப்படத் தேவையில்லை.

குறிப்பிட்ட அந்தக் கல்லறையை நெருங்குவதற்குள், எதிர்ப்புறமாக யாரோ நடந்து வருவது தெரிந்தது. கல்லறை யின் வாசற் கதவும் திறந்தே கிடந்தது.

அவள் கண்கள், பகல் வெளிச்சம் போல் இருட்டைத் தெளிவாகப் பார்த்தன. எதிரில் வருபவர் கறுப்பு நிறச் சட்டை போட்டிருந்தார்.

'யாரோ ஒரு ஃபாதர்!" அவள் சட்டென்று கார் ஷெட்டின் மறைவில் ஒதுங்கினாள்.

அவளை நெருங்கி வந்தபோது நபரைத் தெளிவாகப் பார்த்தாள். ஒரு ஃபாதர்தான். ஆனால், அவரை இதற்கு முன் எங்கும் பார்த்திருப்பதாக அவளுக்கு ஞாபகம் வரவில்லை.

தென்புறமாக நடந்து மறைந்தார். அதன் பிறகு அவர் மறுபடி வரவில்லை.

'அது யாராக இருக்கும்?' மெர்ஸி ஒரு விநாடி யோச னையில் ஆழ்ந்தாள். 'இவரை இதுவரை எந்தத் தேவாலயத் திலும் பார்த்ததே இல்லை! இருப்பினும் அவளுக்கு ஒரு விஷயம் விளங்கியது. எப்படி இருந்தாலும் அவர் இங்கு வந்து செல்வது நிச்சயமாக நல்லதற்கு அல்ல!'



அந்தக் கறுப்பு வடிவம் பார்வையில் இருந்து மறைந்ததும் அவள் நேராக அந்தக் கல்லறையை நோக்கி நடந்தாள்.

கேட்டின் மிகச் சிறிய இடைவெளிக்குள் சுலபமாக நுழைந்து, கல்லறையை அடையாளம் தெரிந்து அதற்கு நேராக வந்து நின்றாள். அவள், சற்று நேரம் அந்தக் கல்லறையை ஊன்றிப் பார்த்தாள்.

கல்லறையின் மேற்புறம் சன்னமாக விரிசல் விட்டிருந்தது. அவள் சந்தேகம் வலுவடைந்தது. தான் பாதையில் சந்தித்த கருமையான உடையணிந்த உருவம் ஃபாதர் காஞ்ஞிரச் சோட்டில்தான் என்பதுடன், அவர்தான் காடன் கரியாவின் பின்னணியில் செயல்படுகிறார் என்பதும் அவளுக்கு உறுதி யாகி விட்டது.

கல்லறையைத் திறந்து பார்ப்பதா, வேண்டாமா என்று அவள் கொஞ்ச நேரம் யோசித்தாள்.

பின்னர் சற்றுக் குனிந்து நின்று ஓர் இயந்திரம் மாதிரி மேற்புற மண்ணின் முக்கால் பாகத்தைக் கைகளால் தோண்டி எடுத்து, வெளியே போட்டாள்.

திடுமென்று அவள் கை, பிண உடல் ஒன்றின் மீது பட்டது. அந்தப் பகுதியின் மண்ணை அவள் அவசர அவசரமாக நீக்கினாள்.

அந்தப் பகுதி முழுவதும் இருளும் அமைதியும் நிறைந் திருந்தன. அன்று நிலா கூட மேகக் கூட்டங்களுக்குள் ஒளிந்து கொண்டாற் போலிருந்தது.

அவசர அவசரமாக மண்ணை வாரியவள், அதன் முகத் தைப் பார்த்தாள்.

சந்தேகமே இல்லை... அது காடன் கரியாவின் முகமே தான்!

அப்போது திடுமென்று சக்தி வாய்ந்த விளக்கின் வெளிச்ச வட்டம் ஒன்று தென்பகுதியிலிருந்து அங்கு வந்து பதிந்தது.

## 23

மெர்ஸி திடுக்கிட்டாள்!

'இந்த நேரத்தில் தன்னை யாராவது இங்கு பார்த்து விட்டால் அதன் விளைவுகள் எப்படி இருக்கும்?

மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் புகழ்பெற்ற ஒரு டாக்டர், அதுவும் மணமாகாதவள்... நள்ளிரவு வேளையில் கல்லறைப் பகுதிக்கு வந்து, அதுவும் ஒரு கல்லறையைத் தோண்டும் போது கவனிக்கப்பட்டால்...

ஐயோ... அவளால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!'

அவள் சட்டென்று துள்ளி யெழுந்தாள்.

அப்போதும் பந்து விளையாடும் இடத்தில் பயன்படுத்தப்படும் ஃப்ளாட் லைட்டைப் போல் அந்த விளக்கு மிகவும் பிரகாசமான ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்தில் அவள் தன் நிழலைக் கவனித்தாள். அவள் அணிந்திருக்கும் உடையின் நிழல். ஆனால், அவள் உடலின் நிழல் அங்கு எங்கும் விழவில்லை.

அப்போது அவளுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.

தனக்கு இப்போது நிழல் கிடையாது. எனவே, அவள் தான் உடுத்திருந்த ஆடைகளை ஒவ்வொன்றாகக் களையத் தொடங்கினாள். பின்பு அவற்றை அருகிலுள்ள புதர்க்காட்டில் எறிந்தாள். இப்போது அவள் உடலில் கடிகாரமும் வளையல்களும் மட்டுமே இருந்தன.

அவள் வெளிச்சப் பகுதியிலிருந்து விலகி நின்றிருந்தாள். அப்போது அவள் ஒரு விஷயத்தை புரிந்து கொள்ளவில்லை.



அவள் உடம்புக்கு நிழல் ஏற்படுத்தும் தன்மை இல்லையே தவிர, இவள் உடம்பை மற்றவர்களால் பார்க்க முடியும் என்பதுதான் அது.

அப்போது யாரோ கல்லறைப் பகுதியின் வெளிப்புறக் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. துருப்பிடித்த அதன் தாழ்ப்பாள்கள் திறக்கும்போது ஏற்படுத்திய சத்தம். ஒளி வீசிக் கொண்டிருந்த விளக்கை இரண்டாவது மாடியில் உறுதியாக நிற்க வைத்த பிறகு அல்லது பொருத்திய பிறகு ஃபாதர்கள் சிலர் அந்தப் பக்கம் வருவதாக அவளுக்குத் தோன்றியது.

அவள் புதர்ப் பகுதியை ஒட்டி மறைந்து நின்று கொண்டிருந்தாள்.

அருகில் வந்தவர்கள் அவள் யூகித்தது போலவே, ஃபாதர்கள் இருவர்தான்.

ஒருவர் அவளுக்கு நன்கு தெரிந்தவர். அவள் பக்திப் பாடல்களைப் பாடிப் பயிற்சி எடுக்கும்போது கற்றுத் தருபவர் அவர். ஃபாதர் அகஸ்டின் டிசூஸா. ஃபாதர் ஜோசப் சாம் என்ற மற்றொருவரை அவளுக்குத் தெரியவில்லை.

வந்த ஃபாதர்கள் இருவரும் காடன் கரியாவின் கல்லறையைப் பார்த்தனர். டார்ச் லைட்டைப் பயன்படுத்தி அந்தப் பகுதியை நன்றாகப் பார்த்தனர். அது தோண்டப்பட்டிருக்கிறது. மட்டுமின்றி, கரியாவின் உடல் பகுதிகள் சிலவும் பார்வைக்குத் தட்டுப்பட்டன.

"ஃபாதர், இங்கே பாருங்கள்... இந்த உடல் இதுவரை அழுகவில்லை. புதைத்தபோது இருந்தது மாதிரியே இப்போதும் இருக்கிறது" ஜோசப் சாம், ஃபாதர் அகஸ்டினிடம் கூறினார்.

"ஒரு சிலரது உடலில் கந்தகத்தின் அம்சம் சற்று அதிகமாக இருக்கலாம். அப்படிப்பட்ட உடம்புகள் அவ்வளவு சீக்கிர

மாகச் சிதைவு அடையாது. அதே போல் தெய்வீக சக்தி அதிகம் உள்ளவர்களின் உடம்பும் அவ்வளவு விரைவில் சிதைவடையாது. மற்றொரு விஷயம், பைசாசிகமான சக்தி கொண்டவர்களின் உடம்பும் அதே மாதிரி கெட்டுப் போகாதாம்... நான் கேள்விப் பட்டிருக்கிறேன். மண்ணில் வாழும்போது தங்களின் ஆசைகள் நிறைவேறாமல் அற்ப ஆயுளில் இறந்து போகிறவர்களும் இதே மாதிரித்தான் கிடப்பார்கள் என்று எனக்கு வேண்டப்பட்ட ஃபாதர் ஒருவர் கூறியிருக்கிறார். நான் இத்தாலி நாட்டில் இருக்கும்போது ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்." ஃபாதர் அகஸ்டின் கூறினார்.

"இங்கிருந்து இப்படி இரண்டு பிணங்களைத் தோண்டியிருக்கிறார்கள். இரண்டு பெண்களின் உடம்புகளை மறு போஸ்ட்மார்ட்டம் செய்வதற்காக. அதில் ஓர் உடம்பு கிடைக்கவில்லை. அதாவது நம் ஜானின் மகளுடையது. ஒருவேளை பாட சம்பந்தமான பயிற்சிகளுக்காக அதை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கலாம்."

"ஒரு சில உடம்புகள் அவ்வளவு சுலபத்தில் அழுகுவதில்லை..." ஜோசப் சாம் தனது அறிவை வெளிப்படுத்தினார்.

எப்படியிருப்பினும் அந்தச் சவக்குழியை எதற்காகத் தோண்டியிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

ஃபாதர் அகஸ்டின் பேசியவாறு தன் கையிலிருந்த ஐந்து செல் பேட்டரி லைட்டை எரிய விட்டுச் சுற்றுப்புறத்தை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

"அதோ... அங்கே பாருங்கள்." ஃபாதர் புதர்க் காட்டில் வெண்மையான பொருள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார். பிறகு அதன் அருகே சென்று பார்த்தார். அது ஒரு பிரேசியர். சந்தேகத்துடன் அவர் அங்குமிங்கும் பார்த்தார். ஊன்றிக் கவனித்தார். மெர்ஸியின் புடவையும் மற்ற துணிகளும் தென்பட்டன.



"யாரோ இங்கு அசிங்கம் செய்வதற்காக வந்திருக்கின்றனர்." ஃபாதர் அகஸ்டின் கூறினார்.

"நீங்கள் சொன்னது உண்மை என்றுதான் தோன்றுகிறது. இந்தக் குழியை மூட வேண்டாமா?" ஃபாதர் ஜோசப் சாம் கேட்டார்.

"என்னவாக இருந்தாலும் அதை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். அந்தப் புடவையின் சொந்தக்காரி இங்கு எங்காவதுதான் இருப்பாள். எதற்கும் கல்லறை தேவாலயத்துக்குள் போய்ப் பார்ப்போம்." ஃபாதர் அதை நோக்கி நடந்தார்.

செமித்தேரியின் ஏறத்தாழ மையப் பகுதியில் சிறிய தேவாலயம் ஒன்று உண்டு. இறந்து போனவர்களை அங்கு கொண்டு வந்து பிரார்த்தனை நடத்திய பிறகே சவ அடக்கம் செய்வார்கள். ஃபாதர் அதற்குள் நுழைந்து டார்ச் லைட்டை எரிய விட்டுப் பார்த்தார்.

அதற்குள் மெர்ஸி தனது துணிமணிகளை உருவி எடுத்து அவசர அவசரமாக உடுத்திக் கொண்டாள். மேற்கொண்டும் அங்கு தாமதிப்பது ஆபத்து என்பது விளங்கியது. எனவே, அவள் கல்லறைப் பகுதியைவிட்டு வெளியேறுவதற்காக அதன் கேட்டை நோக்கி ஓடினாள்.

"அதோ... யாரோ ஓடுகிறார்கள்!"

பாதர் ஜோசப் சாம் உரத்த குரலில் கூறினார். அந்த அளவுக்கு விரைவாக ஓடும் வல்லமை உடலில் இல்லாததால் அவர் டார்ச் லைட்டை அந்தப் பக்கமாகத் திருப்பினார்.

புடவை உடுத்திய ஒரு பெண்மணி ஓடுகிறாள் என்பது மட்டும் விளங்கியது.

ஜோசப் சாம் அவளைப் பின்தொடர்ந்து ஓடினாலும் ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தார். எனவே, அவராலும் மேற்கொண்டு ஓட முடியவில்லை.

மெர்ஸி விரைவாக ஓடினாள்.

அவள் கால்கள் தரையில் படவில்லை என்று தோன்றியது. கண்மூடித் திறப்பதற்குள் அவள் தனது காரை நெருங்கினாள். காரை நெருங்கியதும் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து, ஸ்டார்ட் செய்து விரைவாகச் செலுத்தினாள். முடிந்த விரைவில் காரைச் செலுத்தி ஆஸ்பத்திரியை அடைவதுதான் அவளது லட்சியம்.

அவள் உள்ளாடைகளை அணியவில்லை. புடவையை எடுத்து அவசர அவசரமாக உடுத்தி, உடம்பின் மேற்புறத்தை முந்தானையால் மறைத்திருந்தாள். நிழலான பகுதியில் காரை நிறுத்தி, உடையை ஒழுங்காக உடுத்திவிட்டு காரிலிருந்து இறங்கினாள்.

செக்யூரிட்டி வாசலில் ஸ்டூலில் அமர்ந்து சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார்.

அவளைப் பார்த்ததும் எழுந்து வந்து கதவைத் திறந்தார். உள்ளே நுழைந்தவள் நேராக லிஃப்டை நெருங்கினாள். அப்போது லிஃப்ட் சரியாகக் கீழிறங்கி வந்தது.

அதிலிருந்து டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் இறங்கி வந்தார்.

அவள் தன்னையும் மீறித் திடுக்கிட்டாள்.

ஓர் அவசரச் சிகிச்சைக்காக ஜார்ஜ் வந்து சேர்ந்திருந்தார். வேலை முடிந்ததும் மெர்ஸி பணி புரியும் பிரசவ வார்டை நோக்கிச் சென்றார். மெர்ஸி இல்லை. விசாரித்தார். அவள் அங்கு இல்லை. ஜார்ஜ் செபாஸ்டியனுக்குள் சந்தேகம் உயர்ந்தது.

'இந்த நள்ளிரவில் அவள் எங்கு போயிருக்க முடியும்?'

அங்கிருக்கும் எந்த நர்ஸுக்கும் எதுவும் தெரியவில்லை.



ஜார்ஜ் செபாஸ்டியன், சந்திரிகாவை அருகில் வருமாறு அழைத்தார்.

"மெர்ஸியைச் சந்திப்பதற்காக இங்கு யாராவது வருவதுண்டா?" ஜார்ஜ் விசாரித்தார்.

"ராத்திரி ஒருவர் வந்திருந்தார்."

"யாரது?"

"தெரியாது. நடு இரவில்தான் வந்தார்."

"வேறு யாராவது வந்தார்களா?"

"அதற்கு முன்னால் வேறொருவர் வந்திருந்தார்."

வில்சனைக் குறிப்பிடத்தான் அவள் அப்படிக் கூறினாள்.

இவ்வளவுக்குப் பிறகுதான் அவர் கீழே இறங்கி வந்தார். அப்போது மெர்ஸி சந்தேகத்துக்கு உரிய வகையில் தட்டுப்படவும் செய்தாள்.

"நீ எங்கே போயிருந்தாய்?" ஜார்ஜ் கேட்டார்.

"நோயாளி ஒருவர் உடல்நலம் சரியில்லாமல் போனதால் ஒருவர் வந்து தகவல் தெரிவித்தார். அவரது வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்." மெர்ஸி பதிலளித்தாள்.

ஜார்ஜ் ஒருமுறை அவளை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு அங்கிருந்து வெளியேறினார். அவர் கண்களில் தென்பட்ட சந்தேகத்தின் அளவு அதிகரித்தது. வீட்டுக்கு வந்தவுடன் அவர் தன் மனைவியிடம் தகவல் தெரிவித்தார்.

"நான்ஸி, நான் சொன்னது வேறு யாருக்கும் தெரியக் கூடாது. ரகசியமாக இருக்கட்டும்." படுக்கையில் ஜார்ஜ், தன் மனைவியின் காதில் கிசுகிசுத்தார்.

"என்ன... புதிய சேதி ஏதாவது இருக்கிறதா?" நான்ஸி விசாரித்தாள்.

"ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய மெர்ஸி, நள்ளிரவில் எங்கோ போய்விட்டு வருவதைப் பார்த்தேன். அவள் உடம்

பில் பிளவுஸ் இல்லை. புடவையை இழுத்துப் போர்த்தியபடி வந்தாள். அவள் வரும்போது நீ கவனி!"

"என்ன... அந்த வேலையையும் தொடங்கிவிட்டாளா?" மட்டமல்லாக்கப் படுத்திருந்த நான்ஸி கேட்டாள்.

மறுநாள் தேவாலாயத்தைச் சேர்ந்த சமையல்காரர் மூலமாகச் செய்தியொன்று பரவியது. 'காடன் கரியாவின் சமாதியை யாரோ தோண்டியிருக்கிறார்கள். சவத்துக்கு எந்த விதமான சேதமும் ஏற்படவில்லை. அதையொட்டி புதர்க்காட்டில் ஒரு பெண்ணின் புடவை தவிர மற்ற உடைகள் கிடந்தன.'

பக்கத்து நகரிலிருந்து வெளியாகும் மாலை நேரப் பத்திரிகையில் இந்தச் செய்தி மிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டிருந்தது. யதேச்சையாக அந்தப் பத்திரிகை ரோனியின் கையில் கிடைத்தது. ரோனி அவசரமாக வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

அப்பா-அம்மாவிடம் இந்தத் தகவலை, கண்-காது-மூக்கு ஒட்ட வைத்து எவ்வளவு பூதாகாரமாக்க முடியுமோ, அவ்வளவுக்குச் சொன்னான்.

"புடவையைத் தவிர மற்றதெல்லாம் அங்கு கிடந்தது என்றா சொன்னார்கள்?" நான்ஸி துருவித் துருவிக் கேட்டாள்.

"ஆமாம்!"

"ரோனி, நேற்று இரவு அப்பா அவசரமான ஒரு கேஸுக்காக ஆஸ்பத்திரிக்குப் போனார். முடித்துவிட்டுக் கிளம்பும்போது மெர்ஸி எங்கேயோ போய்விட்டு வந்தாளாம். அப்போது அவள் பிளவுஸ் அணியவில்லை என்றுதான் அப்பா சொன்னார்."

"நிஜமாகவா! அப்படியா சொன்னார்?" ரோனி அதன் பிறகு ஒரு விநாடி கூடத் தாமதிக்கவில்லை. காரை ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.



அவன் நேராகப் போய் நின்றது ஃபாதர் காஞ்ஞிரச் சோட்டிலின் வீட்டு முன்னால்தான். மாலை நேரம். அப்போது ஃபாதர் அங்கு இருந்தார்.

"என்ன... ஏதாவது விசேஷம் உண்டா?" ஃபாதர் கேட்டார்.

ரோனி எல்லாவற்றையும் விவரித்தான். "அவள் உள்ளாடைகள் எல்லாம் காடன் கரியாவின் சவக்குழிக்கு அருகே கிடந்தது. அந்தக் குழியைப் பிற்பாடு ஆட்கள் மூடியிருக்கிறார்கள்."

"அந்தப் பிணத்துக்கு ஏதாவது சேதம் ஆகியிருக்கிறதா?" ஃபாதர் கேட்டார்.

"தெரியவில்லை. அந்த உடையெல்லாம் யாருடையது என்று கண்டுபிடிக்க வேண்டுமா என்ன?"

"தேவையில்லை."

"எதற்காக அவள் அங்கு போனாள்?"

"ரோனி... நீங்கள் வருத்தப்பட வேண்டாம். இதற்கெல்லாம் ஒரு பரிகாரம் செய்யலாம். தைரியமாகக் கிளம்புங்கள்."

ஒரு பாட்டில் விஸ்கியை அங்கு வைத்த பிறகு, ரோனி அங்கிருந்து கிளம்பினான்.

நள்ளிரவு தாண்டிய பிறகு ஃபாதர் நேராக காடன் கரியாவின் கல்லறைக்கு வந்தார்.

"கரியா..." ஃபாதர் அழைத்தார்.

"என்ன ஃபாதர்?" பதில் குரல் கேட்டது.

"எழுந்து வா!"

காடன் கரியா வெளியே வந்தான்.

"நீ அவளிடம் தோல்வியடைந்து விட்டாயா என்ன?"

"அவள் உடம்பு ரப்பர் மாதிரி இருக்கிறது. நான் தாக்குதல் நடத்தியும் எந்த விதமான பலனும் கிடையாது."

"ஓகோ... அப்படியா? அவளுக்கு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது." ஃபாதர் யோசனையில் ஆழ்ந்தார். இத்தனை வருட மாந்திரீக அனுபவத்தில் இது கேள்விப்படாத ஒரு புதிய விஷயமாக இருந்தது.

"சரி... நீ படுத்துக் கொள். தேவைப்பட்டால் நான் மறுபடி வருகிறேன். இது மிகவும் சிக்கலான விஷயமாகத் தெரிகிறது." ஃபாதர் அங்கிருந்து திரும்பி நடந்தார்.

தனக்கு எதிராக வலிமையான எதிராளிகள் அதிகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மெர்ஸிக்கு விளங்கியது.

"இன்னும் நான் எவ்வளவோ விஷயங்களைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது." அவள் இருட்டைப் பார்த்து மந்திரித்தாள்.

மாலை நேரமானபோது மருத்துவம் தொடர்பான ஒரு காரியத்துக்காக அவள் திருவனந்தபுரம் செல்ல வேண்டுமாம். அவள் வீட்டுக்குத் தகவல் தெரிவித்தாள்.

"நாளை மதியம் இரண்டரை மணிக்கு நிகழ்ச்சி முடிவடையும். அதன் பிறகு நான் ஒரு சினேகிதியைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வருவேன்."

மறுநாள் காலையில் எட்டு மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வந்தவுடன் அவள் வில்சனுக்கு போன் செய்தாள். அவனிடம், 'உடனடியாக வர வேண்டும்' என்றாள்.

முப்பது நிமிடத்துக்குள் பைக்கில் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தான் வில்சன்.

"என்ன டாக்டர் என்ன சேதி?" அவன் விசாரித்தான்.

"நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உங்களுக்குத் தொல்லை கொடுத்த ஷிபுவை யாரோ கொலை செய்துவிட்டார்கள்."



"கொலைகாரர் யாரென்று கண்டுபிடித்துவிட்டார்களா?"

"அதைக் கண்டுபிடித்தாலும் இல்லாவிட்டாலும் நமக்கு என்ன? நான் அழைத்தது மற்றொரு விஷயத்துக்காக."

"சொல்லுங்கள்."

"நான் திருவனந்தபுரம் வரை போக வேண்டியுள்ளது. நீங்கள் என்னுடன் வர வேண்டும். நாளைக்கு நாம் திரும்பி வரப் போகிறோம்." அவள் வில்சனின் கண்களைப் பார்த்தபடி பேசினாள்.

அவனால் அந்தக் கோரிக்கையை நிராகரிக்க முடியவில்லை.

"ரயிலில்தானே?"

"இல்லை. காரில் போகிறோம். வேறு சில விஷயங்களும் உண்டு. அதையெல்லாம் அங்கு போன பிறகு பார்த்துக் கொள்ளலாம்."

"சரி... எப்போது போக வேண்டும்?"

"உடனடியாக! அத்தியாவசியமான ஒரு கான்ஃபிரன்ஸ். அதற்குப் பிறகு நான் ஃப்ரீ."

மோட்டார் சைக்கிளில் வில்சன் கிளம்பினான். வண்டியை நண்பனின் வீட்டில் விட்டுவிட்டு, பஸ் ஸ்டாண்டின் அருகில் காத்திருந்தான்.

மெர்ஸி மாருதி காரில் வந்தாள்.

சொன்னவாறே மெர்ஸி அவனை காரில் ஏற்றிக் கொண்டாள். திருவனந்தபுரத்தில் ஸ்டார் ஓட்டல் ஒன்றில் அறை யெடுத்தனர்.

"நான் வருவதற்கு ஏழு மணியாகும். தேவைப்பட்டால் அதுவரை நீங்கள் இந்த வண்டியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்புறம் எனக்கு ஓர் உதவி செய்வீர்களா?"

"சொல்லுங்கள்."

"யுனிவர்சிட்டி அலுவலகத்தில் கோபாலகிருஷ்ணன் என்பவர் இருக்கிறாரா என்று விசாரியுங்கள். பத்து வருடங்களுக்கு முன்னால் அவர்தான் மார்க் லிஸ்ட் விஷயங்களைப் பார்த்துக் கொண்டவர். அன்றைய செனட் மெம்பர் பெயர் வாசுதேவன் நாயர். அவரைப் பற்றியும் விசாரியுங்கள்... போதும்."

"சரி..."

மெர்ஸியை கான்ஃபிரன்ஸ் நடக்கும் இடத்தில் இறக்கி விட்ட பிறகு வில்சன் யுனிவர்சிட்டி அலுவலகத்துக்கு வந்தான்.

காரை நிறுத்திவிட்டு அதற்குள் நுழைந்தான்.

முதல் இருக்கையில் இருப்பவரை நெருங்கி, "கோபாலகிருஷ்ணன் என்ற கிளார்க் இருக்கிறாரா?" என்று கேட்டான் வில்சன்.

"அந்தப் பெயரில் இங்கு மூன்று பேர் இருக்கிறார்கள். நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" அவர் எதிர்க் கேள்வி கேட்டார்.

"பத்து வருடங்களுக்கு முன்னால் மார்க் ஷீட் விவகாரங்களைக் கவனித்த கோபாலகிருஷ்ணன்..."

"ஓகோ... அவரா... அதோ உட்கார்ந்திருக்கிறார். இப்போதும் அதே செக்ஷன்தான். என்ன... ஏதாவது விஷயம் இருக்கிறதா?"

"ஒரு தேவையுள்ளது." வில்சன் பதிலளித்தான்.

அதன் பிறகு அவரை நெருங்கிய வில்சன், "சார், உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறேன்" வில்சன் பேச்சைத் தொடங்கினான்.

# 24

கோபாலகிருஷ்ணன் மூக்குக்கண்ணாடி வழியாக வில்சனை ஏறிட்டுப் பார்த்தார்.

திடகாத்திரமான மனிதர். ஐம்பது வயது மதிப்பிடலாம். பின்புறமாக வாரி விடப்பட்ட தலைமுடி, சன்னமான மீசை, நரைத்த தலைமுடி. ஆனால், அது தெரியாமல் டை அடித்திருந்தார்.

"என்ன வேண்டும்?" கோபாலகிருஷ்ணன் கேட்டார்.

"கொஞ்சம் தனியாகப் பேச வேண்டி உள்ளது. வெளியே போய்ப் பேசலாமா?" வில்சன் அவரிடம் கேட்டான்.

வில்சனது அழைப்புக்குப் பின்னணியில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருப்பதாக, கோபாலகிருஷ்ணனுக்குத் தோன்றியது. எனவே, அவர் இருக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தார்.

"சார், நீங்கள் எங்கே குடியிருக்கிறீர்கள்?" வில்சன் கேட்டான்.

அவர், இடத்தின் பெயரைச் சொன்னார்.

"வேறொருவரின் காரியமாக நான் உங்களைப் பார்க்க விரும்புகிறேன். உங்களை, உங்கள் வீட்டில் வந்து பார்க்கலாம் இல்லையா?" வில்சன் கேட்டான்.

"சரி... அப்படியானால் இரவு ஏழு மணிக்கு மேல் வாருங்கள்." கோபாலகிருஷ்ணன் கூறினார்.

ஒப்புக்கொண்டு அங்கிருந்து விடைபெற்றான் வில்சன்.

காரை எடுத்துக் கொண்டு சற்று நேரம் ஊரைச் சுற்றிய வில்சன் கான்பிரன்ஸ் நடக்கும் இடத்துக்கு வந்தான். எதிர்

பார்த்ததைவிட சீக்கிரமாகவே கான்ஃபிரன்ஸ் முடிந்துவிட்ட தால், மெர்ஸி அப்போது வெளியே வந்தாள்.

"சொன்ன விஷயம்?" மெர்ஸி கேட்டாள்.

"கோபாலகிருஷ்ணனைக் கண்டுபிடித்து விட்டேன். அன் றைய செனட் மெம்பரைக் குறித்து விசாரிக்க முடியவில்லை. கோபாலகிருஷ்ணனிடம் அதைப் பற்றி எப்படிக் கேட்பது என்று எனக்குத் தெரியவில்லை."

"பரவாயில்லை... அதை நான் கேட்டுக் கொள்கிறேன்." மெர்ஸி கூறினாள்.

"என்ன... முக்கியமான விஷயம் ஏதாவதா?"

"ஆமாம்... அவரை வீட்டிலிருந்து எப்படியாவது வெளியே அழைத்துக் கொண்டு வரவேண்டும். எதற்காக என்று பிறகு கூறுகிறேன்..."

"அவரை எந்த இடத்துக்கு அழைத்துக் கொண்டு வர வேண்டும்?"

"இந்த இடத்துக்குத்தான். அதன் பிறகு அவருடன் நான் பக்கத்தில் ஓரிடம் வரை போக வேண்டியுள்ளது."

"ஏழு மணிக்கு வரச் சொன்னார்."

"அது போதும்!"

மெர்ஸி சொன்னபடி வில்சன், கோபாலகிருஷ்ணனின் வீட்டை அடைந்தான்.

"ஓட்டல் வரை உங்களால் வர முடியுமா? அங்குதான் நமது நபர் இருக்கிறார்."

அதைக் கேட்டதும் கோபாலகிருஷ்ணனின் முகம் மலர்ந்தது. 'நல்ல விருந்துதான்!' என்று மனத்துள் கணக்குக் கூட்டினார்.



இருவரும் காரில் ஏறிக் கொண்டனர். கார் சுமார் நூறு மீட்டர் போவதற்குள் மெர்ஸி, சாலை ஓரத்திலிருந்து கை காட்டினாள். வில்சன் காரை நிறுத்தினான்.

"என்ன செய்ய வேண்டும்?" வில்சன் கேட்டான்.

"மன்னிக்க வேண்டும் வில்சன். நான் இவருடன் கொஞ்சம் பேச வேண்டும். நீங்கள் ஓட்டலுக்குப் போங்கள்." மெர்ஸி கூறினாள்.

மெர்ஸி காரில் ஏறிக் கொண்டாள்.

கோபாலகிருஷ்ணனுக்கு எதுவும் விளங்கவில்லை. எப் படி இருப்பினும் இளம்பெண் ஒருத்தி வண்டி ஓட்டும்போது, அவளுக்கு அருகில் உட்கார்ந்திருப்பது சுகமாகவே இருந்தது.

"சரி..." வில்சன் காரிலிருந்து இறங்கினான்.

"நீங்கள்தானே கோபாலகிருஷ்ணன்?" மெர்ஸி கேட்டாள்.

"ஆமாம்... என்னைச் சந்திக்க விரும்பியது நீங்கள் தானா?" அவர் விசாரித்தார்.

"ஆமாம். நான்தான். என் பெயர் மெர்ஸி ஜான். பத்து வருடங்களுக்கு முன்னால் எனக்கு நீங்கள் உதவி செய்ததால் தான் நான் இப்போது மெர்ஸி ஜார்ஜ் ஆகியிருக்கிறேன்."

அவள் சொன்னதன் பொருள் என்னவென்று கோபால கிருஷ்ணனுக்கு உண்மையில் விளங்கவில்லை.

"நீங்களும் அன்றைய செனட் மெம்பர் வாசுதேவன் சாரும் மனசு வைத்ததால்தான் இன்று இந்த நிலைக்கு வந்திருக் கிறேன். இல்லாவிட்டால், ஏதோ ஒரு வீட்டில், மனைவி என்ற பெயரில் குப்பை கொட்டிக் கொண்டு இருந்திருப்பேன். என்ன... இதெல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?"

"ஞாபகமில்லை. இப்படி எத்தனையோ பேர்... எவ்வ ளவோ சம்பவங்கள். இதையெல்லாம் யார் ஞாபகத்தில் வைத்திருக்க முடியும்?"

"அப்படியானால் இது ஒரே ஒரு சம்பவம் மட்டுமில்லையா? போகட்டும்... இறந்துபோன ஒரு பெண்ணின் மார்க் ஷீட்டை பயன்படுத்தித்தான் அன்றைக்கு நீங்கள் எனக்கு உதவினீர்கள்?" மெர்ஸி கூறினாள்.

"இறந்து போன ஒரு பெண்ணின் மார்க் ஷீட்டா... இந்த மாதிரியான விஷயங்களை மிகவும் புத்திசாலித்தனமாக யோசிப்பவர்கள் கொண்டு வருவதுண்டு. ஆனால், எல்லாம் வெளியே போய்விட்ட பிறகு யாருக்குத் தெரியப் போகிறது? உண்மையில் அதுதான் மிகவும் நல்ல வழி."

"காலேஜுக்குப் போகவில்லை என்றால் கூட விஷயத்தை முடித்து விடலாம் இல்லையா?" மெர்ஸி கேட்டாள்.

"அப்படியானால் எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட் ஒரு பிரச்சினைதான். அது இருந்தால் விஷயத்தைச் சுலபமாக முடித்து விடலாம்." கோபாலகிருஷ்ணன் உறுதி நிறைந்த குரலில் பேசினார்.

தான் உதவி செய்து, அதனால் வாழ்க்கையில் உயர்ந்த ஓரிடத்துக்கு வந்த ஒரு பெண் நன்றி தெரிவிப்பதற்காகத் தனக்கு முன்னால் வந்திருக்கிறாள். இப்படியெல்லாம் வழக்கமாக நடப்பதில்லை!

காரியம் நல்லபடியாக முடிந்துவிட்டால் ஏதாவது பரிசு வழங்கிவிட்டுப் போவார்கள். இது நேர்மாறாக இருக்கிறது. அப்படியானால், தனக்கு ஏதாவது பரிசு கிடைக்கவே செய்யும். மட்டுமின்றி, அவள் மீண்டும் அது மாதிரி ஏதாவது ஒரு வேலைக்காகவும் வந்திருக்கலாம். கோபாலகிருஷ்ணன் இப்படி என்னவெல்லாமோ யோசனைகளில் ஆழ்ந்தார்.

"அன்றைக்கு செனட் மெம்பராக இருந்தவர் மிஸ்டர் வாசுதேவன். அவரைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" மெர்ஸி கேட்டாள்.



"ஓகோ... அவரா! அவர் ஒரு ஆக்ஸிடெண்ட்டில் இறந்து போய்விட்டார். அதுவும் வித்தியாசமான முறையில்..."

"மரணம் வித்தியாசமாகவா? நீங்கள் சொல்வது புரியவில்லையே?" மெர்ஸி கேட்டாள்.

"காளை மாடு ஒன்று அவரைக் குத்திக் கொன்றுவிட்டது. சிவன் கோயிலைச் சேர்ந்த ஒரு காளை மாடு அது. கொம்புகளால் தூக்கி, தரையில் வீசியெறிந்து பிறகு கொம்புகளால் குத்திக் கொன்றது."

"அப்படியானால் அது தெய்வீகமான ஒரு சக்தி ஆயிற்றே. அநியாயமாக நடந்து கொண்டவர்களுக்குத் தண்டனை முன்பெல்லாம் தாமதமாகக் கிடைத்தது. இப்போது உடனுக்கு உடன் கிடைக்கிறது போலிருக்கிறது." மெர்ஸி வண்டி ஓட்டுவதற்கு நடுவே அவரை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள்.

அதுவும் கோபாலகிருஷ்ணனுக்கு விளங்கவில்லை. கார் அப்போது மிகவும் வேகமாகப் பயணம் செய்து கொண்டிருந்தது. நகரிலிருந்து கார் வெகுதொலைவுக்கு வந்துவிட்டிருந்தது.

கோபாலகிருஷ்ணன் வெளிப்புறமாகப் பார்த்தார். கார், தெற்குத் திசையில் விரைந்தது.

கன்யாகுமரி பாதையில் கார் தொண்ணூறு கிலோமீட்டர் வேகத்தில் பாய்ந்தது.

"நாம் எங்கே போகிறோம்?" கோபாலகிருஷ்ணன் கேட்டார்.

"கன்யாகுமரிக்கு. இன்றைய இரவை நாம் அங்கு செலவழிக்கலாம். நீண்ட நாட்களாக நான் உங்களைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பினேன். இன்றுதான் அதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது."

நீண்ட நாள் நோயாளியான மனைவி அவருக்கு எந்த வகையிலும் உதவ முடியாதவள். இந்தச் சூழ்நிலையில் இளம்

பெண் ஒருத்தி அவருடன் ஓர் இரவு தங்க விரும்புவதாகக் கூறினால், அது எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி!

எப்படியாவது கன்யாகுமரியை அடைந்தால் போது மென்று அவருக்குத் தோன்றியது.

சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குள் அவர்கள் கன்யா குமரியை அடைந்தனர். மெர்ஸி நோட்டுக் கற்றை ஒன்றை எடுத்து அவர் கையில் கொடுத்தாள்.

"அறை எடுப்பது முதல் எல்லாச் செலவுகளையும் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்." மெர்ஸி கூறினாள்.

இதுவும் அவரை மிகவும் கவர்ந்தது.

அந்த ஊரின் மிகச் சிறந்த ஓட்டல் ஒன்றில் அறை எடுத் தனர்.

இருவரின் பெயர்களும் புத்தகத்தில் வெவ்வேறாக இடம் பெற்றன.

"கொஞ்ச நேரம் சுற்றிப் பார்க்கலாமா?" மெர்ஸி கேட்டாள்.

"தாராளமாக!"

அவர்கள் கடற்கரை ஓரமாக நடக்கத் தொடங்கினர். மேற்குப் புறமாக நடந்தபோது லைட் ஹவுஸ் தென்பட்டது. அலைகள் கரை மீது மோதித் தெறிக்கும் சத்தம் பயங்கர மாகக் கேட்டது.

"நாம் இதற்குள் போகலாமா?" அவள் கேட்டாள்.

அவரும் ஒப்புக் கொண்டார்.

இரவு நேரத்தில் யாரும் அந்தப் பக்கமாகச் செல்வதில்லை. இருளும், அலைகளின் பேரிசைச்சலும்தான் அதற்குக் காரணம்.

அவர்கள் அதற்குள் நுழைந்தனர்.



"நான் திட்டமிட்டுத்தான் உங்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்தேன்." மெர்ஸி, அவரைப் பார்த்துக் கூறினாள்.

"அது எனக்கும் விளங்குகிறது!" திடுமென்று ஏற்பட்ட ஒரு மின்னலில் அவர், அவளைப் பார்த்தார்.

"ஆனால், நீங்கள் நினைத்தபடியெல்லாம் எதுவும் நடக் கப் போவதில்லை. நான் யார் என்று தெரிகிறதா உங்களுக்கு? நீங்கள் திருத்திய சர்ட்டிபிகேட்டின் உண்மையான சொந்தக் காரி நான்!" என்று கூறியவள் அவரை நெருங்கி நின்றாள்.

"நீங்கள் பேசுவது எதுவும் எனக்கு விளங்கவில்லை." கோபாலகிருஷ்ணனுக்குள் முதன் முதலாகச் சந்தேகம் உயர்ந் தது: "இருந்தாலும் அதற்கென்ன?" என்று அவர் தனக்குத் தானே முணுமுணுத்தார்.

"இப்போதும் உங்களுக்கு எதுவும் விளங்கவில்லை இல் லையா?" மெர்ஸி அவர் கழுத்துக்கு நேராகத் தன் கையை நீட்டினாள். அவள் சுட்டுவிரல் அவர் தொண்டைக்குழிக்கு நேராக இருந்தது.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" அவர் பின்னோக்கி நகரத் தொடங்கினார்.

"எது புரியவில்லை. நீங்கள் திருத்திய சர்ட்டிபிகேட்டின் உண்மையான முதல் சொந்தக்காரி நான்தான். அதாவது மெர்ஸி ஜான். சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள எக்கச் சக்கமான ஓட்டைகள் உண்டு. மட்டுமல்ல, இறந்து போனவர் களின் சர்ட்டிபிகேட்டுகளை யார் கேட்கப் போகிறார்கள்? நான்தான் எப்போதோ இறந்து போன மெர்ஸி ஜான். நான் இப்போது வந்திருப்பது, நீங்கள் மேற்கொண்டு அப்படியெல் லாம் செய்யாமல் இருப்பதற்காக." பேச்சு முடிவதற்குள்ளாக அவள், அவர் தொண்டையில் தன் விரலைப் பாய்ச்சி இறக் கினாள்.

அவர் பின் புறமாக நகர்ந்து தப்பிக்க முயன்றாலும், அவள் தன் வலது காலை, அவர் காலின் மீது அழுத்தி வைத்திருந்தாள்.

கோபாலகிருஷ்ணனால் அலறக்கூட முடியவில்லை. அவரை அவள் கண்ணாடிச் சுவரின் மீது வீசி எறிந்தாள். அவர் கண்ணாடியை நொறுக்கிக் கொண்டு கீழ்ப்புறமுள்ள பாறைகளைச் சிதைக்க முற்படுவது போன்ற வேகத்துடன் விசையாக இறங்கினார்.

அவர் தலை, பாறை ஒன்றில் மோதிச் சிதறுவதை அவள் வேடிக்கை பார்த்தாள்.

உடனேயே அவள் திரும்பி நடக்கத் தொடங்கினாள். ஓட்டலுக்குள் நுழையாமல், காரை ரிவர்ஸில் எடுத்துத் திரும்பு பயணம் மேற்கொண்டாள்.

சுமார் பன்னிரண்டு மணியானபோது அவள் வில்சனிடம் வந்தாள்.

"இதுவரை எங்கே போயிருந்தீர்கள்?" வில்சன் கேட்டான்.

"அவரது உதவியால் நான் ஒரு மார்க்ஸிஸ்ட்டைத் திருத்த வேண்டியிருந்தது." மெர்ஸி கூறினாள்.

"மார்க் திருத்தவா?" வில்சன் வியப்புடன் கேட்டவாறு அவள் முகத்தைப் பார்த்தான். பிறகு திடுமென்று கேட்டான்: "உங்கள் முகத்தில் சிவப்பாக... என்னது?"

உடனே மெர்ஸியின் முகத்தில் சட்டென்று உணர்ச்சி மாற்றம் ஏற்பட்டது. அவள் விரைவாக பாத்ரூமுக்குள் நுழைந்தாள். கதவை மூடினாள்.

கண்ணாடியில் பார்த்தாள்.

ரத்தம்! கோபாலகிருஷ்ணனின் கழுத்திலிருந்து தெறித்த ரத்தம்!



அவள் உடைகளை ஒவ்வொன்றாகக் களைந்தபடி ஷவரின் கீழ் நின்று குளித்தாள். அதன் பிறகு உடைகளை நீரில் நனைத்துக் கசக்கிப் பிழிந்தாள். கதவை லேசாகத் திறந்தவள், வில்சனை அழைத்தாள்.

"என்னங்க?" என்றபடி வில்சன் வந்தான்.

"அந்தப் போர்வையை எடுங்கள்." அவள் கேட்டுக் கொண்டாள்.

வில்சன் எடுத்து வந்தான்.

மெர்ஸி மார்புக்கு மேல் பகுதி வரை மறையுமாறு பெட் ஷீட்டை உடுத்திக் கொண்டு பாத்ரூமிலிருந்து வெளியேறினாள்.

பிறகு நனைந்த துணிகளை நாற்காலிகளின் மீது போட்டுவிட்டு, ஃபேனை உயர்ந்தபட்ச வேகத்தில் ஓடவிட்டாள்.

வில்சன் அவள் உடம்பைப் பார்த்தான். தசைப்பற்று நிறைந்த உடல். வடித்தெடுத்தது போன்ற கை கால்கள். தோளில் எங்குமே குண்டும் குழியும் தென்படவில்லை. வெண்ணெயில் வழித்து எடுத்தது மாதிரி இருந்த அவயவங்கள்.

"உடுத்திருந்த உடைகளை எல்லாம் எதற்காக நனைத்தீர்கள்?"

"உடம்பு மொத்தமும் வியர்த்துப் போயிருந்தது. வில்சன் நீங்களும் குளிக்கலாமே?"

அதையொட்டி அவனும் பாத்ரூமுக்குள் நுழைந்தான்.

குளித்து முடித்ததும் வில்சனுக்கு ஓர் உற்சாகம் தோன்றியது.

"தூங்கலாமா... நாளைக்குக் காலையில் நாம் கிளம்ப வேண்டாமா?" மெர்ஸி கேட்டாள்.

அவள் கட்டில்களை இணைத்துப் போட்டாள்.

வில்சனும் படுத்துக் கொண்டான்.

சற்று நேரத்துக்குள் குளிர்ந்த மெர்ஸியின் கைகள் உடையற்ற வில்சனின் மார்பில் ஊர்ந்தன.

அவனுள் உறங்கிக் கிடந்த ஆண்மை விழித்துக் கொண்டது.

"டாக்டர் மெர்ஸி!" என்று அழைத்தான்.

"மெர்ஸி என்றே கூப்பிடுங்கள். அதுதான் நல்லது" அவள், அவனை ஒட்டியபடி நெருங்கிப் படுத்தாள்.

"மெர்ஸி! அப்படி ஒருத்தி இருந்தாள்!" வில்சன் பெருமூச்செறிந்தான்.

"அப்படியா!" அவள், அவனை இறுகத் தழுவினாள்.

அவளின் வெப்பமான மூச்சுக்காற்று அவன் கன்னங்களில் பதிந்தன.

"இந்த ஒரு சந்தர்ப்பத்துக்காக நான் எவ்வளவு நாளாகக் காத்திருக்கிறேன் தெரியுமா?" அவள், அவன் காதில் கிசுகிசுத்தாள்.

"அதெல்லாம் கிடக்கட்டும். மெர்ஸியின் சகோதரர் எதற்காக என்னிடம் தகராறு செய்தார்?"

"அதையெல்லாம் எதற்கு இப்போது பேசுகிறீர்கள்? அதெல்லாம் பிறகு..." அவள் உடலை மூடியிருந்த பெட்ஷீட் எப்போதோ உடலிலிருந்து நழுவிவிட்டிருந்தது.

மெர்ஸியின் உடம்பு வியர்வைக்குப் பிரத்தியேகமான ஒரு மணமிருந்தது.

மனோரஞ்சிதப் பூவின் மணம்.

"என்றைக்கோ இறந்துபோன மெர்ஸியை இப்போதும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா வில்சன்?" அவள் மயக்கத்துடன் கேட்டாள்.



"இதுவரை மறக்கவில்லை. அவளை எனக்கு மிகவும் பிடிக்கும். நன்றாகப் பாடுவாள்!"

"அன்றைக்கு நான் பாடியபோது எப்படி இருந்தது?"

"எனக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது."

"எதில் சந்தேகம்?"

"மெர்ஸியின் ஆத்மாதான் பாடியதோ என்று!"

"அந்த அளவுக்கு நேசித்ததால் உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்." அவன் மார்பில் உள்ள முடியிழைகளின் ஊடாக அவள் விரல்கள் அளைந்தன.

அவன் மார்பில் தன் வலக் கன்னத்தைப் பதித்தபடி அவள் உறங்கினாள்.

பொழுது விடிந்தபோது மெர்ஸி உடை உடுத்தித் தயாராக இருந்தாள்.

வில்சன் குளித்து உடை மாற்றினான்.

அங்கிருந்து கார் கிளம்பும்போது மணி பத்து ஆகிவிட்டது.

மூன்று நாட்களுக்குப் பிறகு பத்திரிகையில் ஒரு செய்தி வெளியானது. யுனிவர்சிட்டியின் அலுவலகத்தில் பணி புரிந்த குமாஸ்தா கோபாலகிருஷ்ணனைக் காணவில்லை!

ஆனால், அவருடையது என்று கருதப்படும் பிண உடல், கன்யாகுமரி கலங்கரை விளக்கத்துக்கு அருகில் கிடப்பதாக அது மேலும் தகவல் கூறியது.

ரோனிதான் அந்தச் செய்தியை முதலில் பார்த்தவன்.

"டாடி, இதைப் பார்த்தீர்களா? அந்த கோபாலகிருஷ்ணன் தான் மெர்ஸியின் மார்க் ஷீட்டைத் திருத்த உதவியவர்!" அவன் கூறினான்.

இதைக் கேட்ட டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் நெற்றியைச் சுளித்தார். இப்போதுதான் அவர் இதயத்தில் முதன் முதலாக பீதியின் நிழல் பரவியது.

"அந்த கேஸில் தொடர்பு கொண்டு உயிருடன் இருக்கும் ஒரே ஆள் தற்போது நீங்கள் மட்டும்தான் அப்பா!" ரோனி கூறினான்.

"என்ன வார்த்தை சொல்கிறாய் ரோனி நீ!" நான்ஸி அவனை ஆத்திரத்துடன் இடைமறித்தாள்

அப்போது மெர்ஸியின் கார் வீட்டுக்கு முன்னால் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

## 25

"அதோ அவள் வருகிறாள். பேசாமல் இரு!" நான்ஸி ஜார்ஜ், ரோனியிடம் கூறினாள்.

மெர்ஸி காரிலிருந்து இறங்கிய பிறகு சற்று நேரம் அங்கு நின்றாள். அதன் பிறகு மெதுவாக வீட்டுக்குள் காலெடுத்து வைத்தாள்.

அவள் உட்புறம் பார்த்தபோது டைனிங்ஹாலைப் பிரிக்கும் திரையின் மறுபுறம் அவனையே உற்றுப் பார்க்கும் மூன்று முகங்கள் தென்பட்டன.

அவர்களின் முகத்தில் வியப்பு தோன்றியது. திரை நடுவில் ஒரு தடையாக இருந்த போதிலும் மெர்ஸியைப் பொறுத்த வரை அது துடைத்துச் சுத்தப்படுத்திய ஒரு கண்ணாடிக்குத் துல்லியமாக இருந்தது.

துணிகள் போன்றவை இப்போது அவளுக்கு ஒரு பொருட்டல்ல.



மெர்ஸி இடப்புறமாகத் திரும்பி அவளது அறைக்குள் நுழைந்தாள்.

"அவள் போகும் போக்கைப் பார்த்தீர்களா?" ரோனி, அப்பாவின் காதில் ரகசியமாகக் கூறினான்.

"ஆமாம்... அவள் இப்போது பழைய மெர்ஸி கிடையாது. ரொம்பவும் மாறிவிட்டிருக்கிறாள்." நான்ஸி ஜார்ஜ், தன் கணவனைப் பார்த்தாள்.

ஆனால், டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் அவர்கள் சொல்வதையெல்லாம் நம்பவில்லை. வைத்திய விஞ்ஞானத்தை இறுக்கிப் பிடித்திருக்கும் அவருக்கு இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளுடன் இணங்கிச் செல்வது மிகவும் சிரமமாக இருந்தது.

அன்று இரவில் நான்ஸி, தன் கணவனிடம் ரகசியமாகப் பேசினாள்:

"நான் எவ்வளவு சொல்லியும் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அந்தப் பெண் நம் மகள் மெர்ஸியே அல்ல. அது உறுதியாக எனக்குத் தெரியும்!"

"ச்சே... நீ என்ன சொல்கிறாய்? அப்படியானால் அது யார்?"

"அது அன்றைக்கு இறந்து போன அந்தப் பெண்ணின் ஆவி வசிக்கும் உடம்பு."

ஜார்ஜ் செபாஸ்டியன் மேற்புறம் பார்த்தபடி கிடந்தார். மங்கிய நிலா வெளிச்சம் போல் ஒளி சொரியும் பெட்ரூம் லைட்டின் வெளிச்சத்தில் ஃபேன், மிகவும் மெதுவாக அதன் ஒவ்வோர் இலைகளையும் எண்ணத்தக்க விதத்தில் சுழன்று கொண்டிருந்தது

"ரோனி சொன்னதைக் கவனித்தீர்களா? அன்றைய சம்பவத்துடன் தொடர்புள்ள மற்ற எல்லோரும் மரணமடைந்து விட்டனர். அதுவும் எவராலும் கண்டுபிடிக்க முடியாத

சூழ்நிலையில். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்... கடைசியாக யுனிவர்சிட்டி கிளார்க் கோபாலகிருஷ்ணனும் இறந்து போய் விட்டார்."

அப்போது ஜார்ஜ் செபாஸ்டியனின் முகத்தில் சன்னமான சந்தேகத்தின் நிழல் பரவியது.

"கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்: எங்கிருந்து இது ஆரம்பித்தது? இந்த வீட்டுக்குள்ளேயே இரண்டு மரணங்கள் நடக்கவில்லையா? எனக்கு என்னவோ ஒரே பயமாக இருக்கிறது." நான்ஸி ஜார்ஜ், தன் கணவனைக் கட்டிப் பிடித்தாள்.

"பயப்படாதே... நாளைக்குப் பார்க்கலாம். நான் முயற்சி செய்கிறேன். இதுவரை நாம் கைக்கொண்டிருந்த லட்சியங்களுக்கு ஒரு மாற்றம் ஏற்படுத்தலாம்," ஜார்ஜ் செபாஸ்டியன் மனைவிக்கு ஆறுதல் கூறினார்.

தூக்கத்தில் அவ்வப்போது திடுக்கிட்டு விழித்தாலும் நான்ஸி நன்கு உறங்கத் தொடங்கினாள்.

மறுநாள் ஜார்ஜ் செபாஸ்டியன் விடுமுறை எடுத்துக் கொண்டார்.

மதிய நேரம் வரை அவர் வீட்டிலேயே இருந்தார். மெர்ஸி காலையிலேயே மருத்துவமனைக்குக் கிளம்பிச் சென்றாள்.

வார்டில் ரவுண்ட்ஸை முடித்துக் கொண்டு அவள் டியூட்டி ரூமில் வந்து அமர்ந்தபோது வில்சன் வந்தான்.

"பாஸ் இல்லாமல் எப்படி வந்தீர்கள்?" மெர்ஸி கேட்டாள்.

"டாக்டர் மெர்ஸி ஜார்ஜைப் பார்க்க வேண்டும் என்று சொன்னதும் மிகுந்த மரியாதையுடன் வழிவிட்டார்கள்."

"ஓகோ... அந்த அளவுக்கு நான் புகழ்பெற்றுவிட்டேன் என்று சொல்லுங்கள்!"

"அதிலென்ன சந்தேகம்! உங்கள் பெயருக்கு இப்போது அந்த மரியாதை உள்ளது."



"அதெல்லாம் இருக்கட்டும். நான் ஒரு விஷயம் சொல்வதற்காக வந்திருக்கிறேன்." வில்சன் குரல் தாழ்த்திப் பேசினான்.

"உட்காருங்கள் என்று நான் உங்களிடம் சொல்ல வேண்டுமா என்ன? உட்காருங்கள். ம்... சொல்லுங்கள்."

வில்சன் அமர்ந்தான்.

"நாம் திருவனந்தபுரம் போனோம். யுனிவர்சிட்டி கிளார்க்கைச் சந்தித்தோம். இப்போது அவரைக் காணவில்லை என்றும், இறந்துபோய் விட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன. இதனால் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமா?" வில்சனின் முகத்தில் திகைப்பு நிரம்பியிருந்தது.

"நல்லவேளை! எத்தனையோ பேர் பிறக்கிறார்கள்... இறக்கிறார்கள். நீங்கள் கேள்வி கேட்ட முறையில் நம் உறவினர்களோ, தெரிந்தவர்களோ இறந்து போய்விட்டால் நாம் குற்றவாளிகளாகி விடுவோமா என்ன?" மெர்ஸி கேட்டாள்.

"இல்லை... யாருக்காவது ஏதாவது தெரிந்திருக்குமோ என்றுதான்..."

"அது எப்படி என்றுதான் கேட்கிறேன். யுனிவர்சிட்டி அலுவலகத்துக்குள் ஒரு நாள் எத்தனையோ பேர் வந்து போகிறார்கள். அவர்களை எல்லாம் அங்கு இருப்பவர்கள் புகைப்படமா எடுத்து வைத்திருக்கிறார்கள்?"

"மெர்ஸியின் வார்த்தைகள் எனக்கு ஆறுதல் தருகிறது. ஆனால், பேப்பரில் செய்தி வாசித்த விநாடியிலிருந்து நான் உள்ளூர பயந்து கொண்டே இருந்தேன்."

"வில்சன் எதற்காக பயப்பட வேண்டும்? நடக்க வேண்டியதெல்லாம் நடக்கும். அவ்வளவுதான்." என்ற மெர்ஸி மேஜை மீதிருந்த பேப்பர் வெயிட்டைச் சுழற்றிக் கொண்டிருந்தாள். அதற்குள் இருந்த ரோஜாப்பூ, மாறிமாறிக் கூம்பிக் கொண்டும், மலர்ந்து கொண்டும் இருந்தது.

"சரி... அப்படியானால் நான் கிளம்புகிறேன்." வில்சன் எழுந்தான்.

"ஓகோ... பிரசவ வார்டு ஆனதால் இப்படிப் பேசுகிறீர் களா? நீங்களும் ஒருநாள் இங்கு வர வேண்டியிருக்கும்." மெர்ஸி சிரித்தாள்.

"இனி ஒரு போதும் அப்படியொரு சம்பவம் நிகழாது!" வில்சனின் குரலில் வேதனை கலந்திருந்தது.

"நீங்கள் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ள வில்லை?"

"அது ஒரு பழைய கதை. சுமார் பத்து வருடங்களுக்கு முன்னால்... நான் ஒரு பெண்ணை விரும்பினேன். க்வயரில் பாட்டுப் பாடும் ஒரு பெண். அவள் பெயரும் மெர்ஸிதான். நான் அவளைத் திருமணம் செய்து கொள்ளவும் விரும் பினேன். ஆனால், அவள் இன்றுகூட விளங்க முடியாத ஏதோ ஒரு காரணத்தால் தற்கொலை செய்து கொண்டாள்."

"அப்படியொரு சம்பவத்தைப் பற்றி நானும் கேள்விப் பட்டிருக்கிறேன். யாரோ அவளைக் கொலை செய்துவிட்டுத் தூக்கில் தொங்கவிட்டதாகவும் கேள்விப்பட்டேன்!" மெர்ஸி கூறினாள்.

"அந்தச் சம்பவத்துக்குப் பிறகு என் மனம் மரத்துப் போய்விட்டது. அதன் பிறகு நான் மகிழ்ச்சியடைந்த ஒரே கணம் நீங்கள் க்வயரில் பாடியபோதுதான்!"

அதைக் கேட்ட மெர்ஸி, வில்சனின் முகத்தைப் பார்க்கா மல் தலை குனிந்தாள். அவளைப் பொறுத்தவரை அது தாங்க முடியாத ஒரு நிலையாக இருந்தது. 'அதுதான் தான் என்று சொல்லலாமா? சொன்னால் வில்சன் நம்புவாரா?' எனவே தன் நிலையை அவள் வில்சனிடமிருந்து மறைப்பது என்று தீர்மானித்தாள்.



"உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இங்கு வரலாம். என்னை ஒரு நல்ல நண்பராகக் கருதுங்கள்." மெர்ஸி கூறினாள்.

"சரி... நான் வருகிறேன்." வில்சன் அங்கிருந்து எழுந்து நடந்தான்.

ஆஸ்பத்திரி கேட்டைத் தாண்டியபோது எதையோ ஒன்றை, தான் இழந்துவிட்டது போல் அவன் உணர்ந்தான்.

டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் அன்றைக்குத் தன் நண்ப ரும் டாக்டருமான டாக்டர் அப்துல் ஷெரீஃபின் வீட்டுக்குச் சென்றார்.

புகழ்பெற்ற மனோவியல் நிபுணர் அப்துல் ஷெரீஃப், அந்தத் துறையில் தேர்ந்த ஞானம் உள்ளவரும் கூட.

புகழ்பெற்ற டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனின் கார், கேட் டைத் தாண்டி வந்ததும் டாக்டர் ஷெரீஃப் வியப்பு அடைந் தார்.

'அவர் எதற்காகத் தன்னைப் பார்க்க வருகிறார்!'

அவர் தன்னைச் சந்திப்பதே வெகு அபூர்வமாகத்தான். ஏதாவது அவசரத் தேவை என்றால் தொலைபேசியில் தொடர்பு கொள்வார். இன்னொரு விஷயம், இந்த இருவ ருமே அப்படியெல்லாம் பேசிக் கொள்ளும் அளவுக்கு நேரம் இல்லாதவர்கள்.

ஷெரீஃபைச் சந்திப்பதற்கு நோயாளிகள் சிலர் காத்திருந் தார்கள். எனினும் தன்னைச் சந்திக்க வந்த ஜார்ஜை, டாக்டரே வெளியே வந்து வரவேற்றார்.

"ஹலோ..." மகிழ்ச்சியுடன் கை குலுக்கும் மனோநிலை யில் அவர் இல்லை என்பதை உணர்ந்த ஷெரீஃப் வார்த் தையை மட்டும் பயன்படுத்தினார்.

அவர்கள் இருவரும் டாக்டரின் அறைக்குள் நுழைந்தனர்.

"என்ன டாக்டர்?" ஷெரீஃப் கேட்டார்.

"நேரடியாகப் பேச வேண்டிய ஒரு விஷயமானதால் வந்திருக்கிறேன். உங்களுக்குத் தொந்தரவு இல்லையே?" ஜார்ஜ் கேட்டார்.

"அதெல்லாம் பரவாயில்லை... நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்." ஷெரீஃப் வற்புறுத்தினார்.

"விஷயம் என் மகள்தான். அவளிடம் சமீப காலமாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சந்தேகத்துக்கு உரியவையாக இருக்கின்றன."

"எனக்கும் அப்படித் தோன்றியது என்பதுதான் உண்மை."

"அதைப் பற்றி உங்களிடம் பேசுவதற்காக வந்திருக் கிறேன்."

டாக்டர் ஷெரீஃப் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார். 'ஒரு டாக்டரை தான் எப்படி பரிசோதிப்பது? அதுவும் சமீப காலமாக மிகப் புகழ்பெற்றவரும், மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றவருமான ஓர் இளம் டாக்டரை?' எவ்வளவுதான் யோசித்தும் அவருக்கு எதுவும் விளங்கவில்லை.

கடைசியில் டாக்டர் ஷெரீஃப் பேசினார்: "டாக்டர், நீங்கள் ஒரு வேலை செய்யுங்கள். உங்கள் மகளிடம் என்னை வந்து சந்திக்கச் சொல்லுங்கள். நான் விசாரித்ததாகச் சொன்னாலும் போதும். நானும் தொலைபேசியில் மெர்ஸியைத் தொடர்பு கொள்கிறேன்... என்ன சொல்கிறீர்கள்?"

"நான் சொல்ல வந்ததையே முழுசாக முடிக்கவில்லை." டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

"பரவாயில்லை... சொல்லுங்கள். நீங்கள் வந்து ஐந்து நிமிடங்கள்தான் ஆகியிருக்கிறது." டாக்டர் ஷெரீஃப் வற்புறுத்தினார்.



"டாக்டர், உங்களுக்கு பூதம்- பேய்- ஆவி போன்றவற்றில் நம்பிக்கை உள்ளதா?" ஜார்ஜ் செபாஸ்டியன் மிகுந்த தயக்கத்துடன் கேட்டார்.

"என்ன... இப்படிக் கேட்டு விட்டீர்கள்?"

"என் சந்தேகம் முழுவதும் இப்போது இந்தத் திசையில் தான். விஞ்ஞானத்துக்கு விபரீதமாகப் பைசாசிக சக்திகள் ஏதாவது உண்டா என்று எனக்குத் தெரிய வேண்டும். அவை இருக்கின்றனவா, இல்லையா?"

"எப்படி இருந்தாலும் இப்போது மெர்ஸி யார் என்று உங்களுக்குத் தெரிய வேண்டும் இல்லையா?" டாக்டர் ஷெரீஃப் கேட்டார்.

மனோவியலில் தேர்ந்தவரான ஷெரீஃப், ஏறத்தாழ ஜார்ஜ் செபாஸ்டியனின் மனநிலையைப் புரிந்து கொண்டார்.

எனவே, மெர்ஸியை, மனோவியல் ரீதியாக வசியம் செய்து, அவளிடம் அப்படிப்பட்ட தன்மைகள் ஏதாவது இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்று ஷெரீஃப் தீர்மானித்தார்.

"ஆமாம்!" ஜார்ஜ் ஒரே வரியில் பதிலளித்தார்.

"சரி... நான் முயற்சி செய்கிறேன்!" என்ற ஷெரீஃப், உடனேயே அவள் பணி புரியும் மருத்துவமனைக்கு டயல் செய்தார்.

உடனே தொடர்பு கிடைத்தது. மெர்ஸி லைனில் வந்ததும், "ஹலோ... டாக்டர் மெர்ஸிதானே... நான் டாக்டர் ஷெரீஃப் பேசுகிறேன். முடிந்தால் இன்று மாலை நேரத்தில் என் வீட்டுக்கு வர வேண்டும்."

மெர்ஸி வருவதாக ஒப்புக் கொண்டாள்.

"நான் காத்திருப்பேன். எப்போது... மாலை ஐந்தரை மணிக்கா... சரி. மறந்து விடாதீர்கள்." ரிசீவரை கிராடிலில்

வைத்த ஷெரீஃப், ஜார்ஜ் செபாஸ்டியனின் முகத்தைப் பார்த்தார்.

டாக்டர் ஷெரீஃபிடமிருந்து போன் வந்ததும் மெர்ஸி திகைப்பு அடைந்தாள். தன்னைச் சிக்க வைப்பதற்காக மிகவும் கெட்டிக்காரத்தனமாகச் செய்துள்ள ஓர் ஏற்பாடுதான் இது என்பது சட்டென்று அவளுக்கு விளங்கியது.

டாக்டர் ஷெரீஃபைச் சந்தித்தால் கண்டிப்பாகப் பிரச்சினைகள் ஏற்படும் என்று அவளுக்குத் தெரியும். எப்படியும் அவர் உண்மைகளைக் கண்டுபிடித்து விடுவார்.

ஹிப்னாடிச மயக்கத்தில் ஆழ்த்திவிட்டால், எப்படிப்பட்ட வரும் உண்மைகளைச் சொல்லியே தீர வேண்டும். தான், மெர்ஸி ஜான் என்பது வெட்டவெளிச்சமாகும். எனவே, இது தொடர்பாக இதுவரை நடந்துள்ள கொலைகளுக்கும் நாம் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். 'இதிலிருந்து தப்பிக்க என்ன செய்யலாம்?' என்று மெர்ஸி யோசித்தாள்.

கடைசியில் அவளுக்கு ஒரு வழி தட்டுப்பட்டது. அவள் உடனே டாக்டர் ஷெரீஃபுக்கு போன் செய்தாள்.

"டாக்டர் இன்று மாலை நேரத்தில் எனக்கு ஒரு எங்கேஜ் மெண்ட் இருக்கிறது. நான் அதை மறந்து விட்டேன். அதனால் நான் நாளை மாலை ஆறு மணிக்குப் பிறகு வரலாமா?" அவள் கேட்டாள்.

"ம்... செய்யுங்கள். போதும்!" டாக்டர் பதிலளித்தார்.

ஒரு புன்னகையுடன் மெர்ஸி தொலைபேசியின் ரிஸீவரை அதன் இடத்தில் பொருத்தினாள்.

அன்று நைட் டியூட்டி நாள்.

அவ்வப்போது மெர்ஸி இண்டர்காம் மூலமாக சர்ஜரி பிரிவுடன் தொடர்பு கொண்டாள். டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் அன்று ஒரு ஆபரேஷன் நடத்த வேண்டியிருந்தது.



இப்போது அவருக்கு உதவ டாக்டர் ஜயதேவனும் இருக்கிறார். இரவு பதினோரு மணிக்கு ஆபரேஷன் முடிந்து விட்டதாக மெர்ஸிக்குத் தகவல் வந்தது.

தன் இருக்கையிலிருந்து எழுந்தவள் வார்டை ஒரு முறை சுற்றி வந்தாள். அங்கு, எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

அப்போது டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் காரை ஸ்டார்ட் செய்து ஆஸ்பத்திரியை ஒட்டியுள்ள வளைவில் திரும்பினார்.

வேறு வாகனங்கள் எதுவும் தென்படவில்லை.

போலீஸ் ஸ்டேஷனைக் கடந்து கார் முன்புறமாக விரைந்து கொண்டிருந்தது.

அப்போதுதான் ஜார்ஜ் யதேச்சையாகக் கவனித்தார். முன்புற விண்ட் ஷீல்டில் ஏதோ ஒன்று இருப்பதைக் கவனித்தார். சட்டென்று அது முன்புறக் கண்ணாடி மீது பாய்ந்தது.

பாதை தெரியவில்லை. எதுவோ மறைக்கிறது. வண்டியை நிறுத்த முயன்றார். பிரேக்கின் மீது கால் வைத்தார்.

பிரேக் பிடிக்கவில்லை.

இடதுபுறம் இருந்த மரத்தின் நிழல் கடந்தது. காரின் பானெட் மீது யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

தலைமுடியை அவிழ்த்துப் போட்டிருக்கும் ஒரு பெண்ணுருவம்.

டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியன் காரின் உட்புற லைட்டைப் போட்டார். அப்போது ஆளை அடையாளம் தெரிந்தது.

மெர்ஸி ஜார்ஜ்.

அவரால் அதை நம்ப முடியவில்லை! சாலை நேரானதாக இருந்ததால் வண்டியை உத்தேசமாகச் செலுத்திக் கொண்டிருந்தார். அப்படியும் இரண்டு தடவை பிரேக் போட முயன்றார். ஆனால், வண்டி நிற்கவில்லை.

அப்போது முன்புறக் கண்ணாடியைத் துளைத்துக் கொண்டு உட்புறம் வந்தது, கூர்மையான நகங்கள் எழும்பி நிற்கும் இரண்டு கைகள்.

அந்தக் கைகள் நீண்டு வந்து ஜார்ஜ் செபாஸ்டியனின் கழுத்தைப் பிடித்தன.

அப்போது அந்த முகத்தை அவர் நன்றாகக் கவனித்தார். அன்றைய மெர்ஸி ஜான்!

தூக்கில் தொங்கவிட்ட நிலையில் இருந்த அதே மெர்ஸி ஜான்!

தேவாலய ஊழியர் ஜானின் மகள்.

மெதுவாக அந்த முகம் நெருங்கி வந்தது. கண்ணாடி வழியாக ஊடுருவியவாறு உட்புறம் நெருங்கியது.

டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனின் கழுத்து நெரிபட்டுக் கொண்டிருந்தது.

சட்டென்று கார் எதன் மீதோ மோதியது.

ரயில்வே மேம்பாலத்தில் ஒருபுறம் மோதி, கார் நேராகத் தண்டவாளத்தின் மீது விழுந்தது. அதே நேரத்தில் வடக்குத் திசையிலிருந்து பாய்ந்து வந்தது ரயில் வண்டி ஒன்று.

ரயிலின் இன்ஜின் மோதியதும் கார், ஒரு காகிதப் பந்து போல் அந்தரத்தில் விசையுடன் உயர்ந்தது. பிறகு மறுபடியும் தண்டவாளத்தில் விழுந்தது. அதற்குள் கார் சுருண்டு, கசங்கியது போலானது.

மறுநாள் பொழுது விடிந்தபோது தேவாலய ஊழியர் ஜானின் வீட்டுக்குப் பின்னால் உள்ள முந்திரி மரத்தின் கிளையில் மற்றொரு பிணம் தொங்கிக் கொண்டு இருந்தது.



டாக்டர் மெர்ஸி ஜார்ஜின் உடல்!

விசாரணை அறிக்கை தயாரிக்க வந்த போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு அவள் புடவை முந்தானையில் முடிந்திருந்த கடிதம் ஒன்று தட்டுப்பட்டது.

அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.

'இப்போது இங்கு மரணமடைந்திருப்பவள் மெர்ஸி ஜான். நான் ஜானின் மகள் மெர்ஸி. அவளது உடம்பு ஏற்கெனவே இறந்து போனது. ஆனால், அவளின் ஆத்மா மரணமடையவில்லை. இங்கு இல்லாமல் போயிருப்பது- டாக்டர் ஜார்ஜ் செபாஸ்டியனின் மகள், மெர்ஸி ஜார்ஜின் உடம்புதான். என்னுடைய வேலை முடிந்துவிட்டது. என்னுடை சர்ட்டிபிகேட்டுக்காக என்னை அழித்த எல்லோரையும் நான் அழித்துவிட்டேன். அதுதான் என் லட்சியமாக இருந்தது!

உங்களைப் பொறுத்தவரை இது ஒரு புதுமையான சம்பவமாக இருக்கலாம். மேற்கொண்டும் இப்படிப்பட்ட வஞ்சகச் செயல்கள் நடக்குமானால், இதே போன்ற அனுபவங்கள் ஏற்படாது என்று சொல்ல முடியாது.

இப்படிக்கு,
**மெர்ஸி ஜான்...'**

என்று கடைசியில் கையெழுத்துப் போடப்பட்டிருந்தது.

அந்தக் கையெழுத்தும் மெர்ஸி ஜானினுடையதுதான்.

மறுநாள் வில்சனுக்கு ஒரு கடிதம் கிடைத்தது.

'அன்புக்குரிய வில்சன்,

மேற்கொண்டு என்னால் தாக்குப்பிடிக்க முடியாது. கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் நானாகவே இதிலிருந்து

விலகிக் கொள்கிறேன். என்னை நினைத்து நீங்கள் வருத்தப் படக் கூடாது. தேவாலயத்தில் பாட்டுப் பயிற்சிக்குப் போகும் போது என்னை நினைவு கூரவும்.

அன்புள்ள
மெர்ஸி ஜான்.'

வில்சன் அந்தக் கடிதத்தைப் பல முறை வாசித்தான். அவனால் நடந்தவற்றையெல்லாம் இப்போதும் நம்ப முடியவில்லை.